தருமபுர ஆதீன வெளியீடு 132.

உ
சிவமயம்

சேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்த

## திருத்தொண்டர் புராணம்

# திருஞானசம்பந்தநாயனார் புராணம்

[முதல் நூறு பாடல்கள்]

படங்களுடன்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
இருபத்தைந்தாவது மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின்
அருளாதரவில்

கோவை - வழக்கறிஞர், சிவக்கவிமணி
திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B.A., அவர்கள்
தொகுத்தியற்றிய

உரையுடன்

வெளியிடப்பெற்றது

1947

உ

சிவமயம்

பெரிய புராணம் என்னும்

# திருத்தொண்டர் புராணம்

## திருஞானசம்பந்த நாயனுர் புராணம்

(க) பிரமபுரம் பாட்டு 1—100

திருஞானமுண்டருளியது


கோவை வழக்கறிஞர் சிவக்கவிமணி

C. K. சுப்பிரமணிய முதலியார், B. A. அவர்கள்

தொகுத்தியற்றிய உரையுடன்



தருமபுரம் ஆதீனத்துக்குச் சேர்ந்த

சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தான

ஆதரவில் வெளியிடப் பெற்றது

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை - சென்னை



உரிமை ஆசிரியர்க்கே



28-2-1947

விலை ரு. 1—8—0

# பொருளடக்கம்


முன்சேர்க்கை i—ii

1. நான்காம் பகுதியின் முன்னுரையின் முற்பகுதி ... iii—iv
2. நன்றியுரையும் முகப்புப் படமும் ... v
3. திருமுறைகளின் இச்சரிதப் பகுதியின் ஆதரவு ... vi
4. கல்வெட்டுக்களில் இச்சரிதப் பகுதியின் ஆதரவு ... viii

**புராணம் :**

திருஞானசம்பந்த நாயனுர் புராணம் 1 — 100
பாட்டுக்கள் உரையுடன் ... க— ககூ

பின் சேர்க்கை :

1. சரிதச் சுருக்கம் ... கஉ0—கஉஉ
2. தலவிசேடம் ... கஉங—கஉச
3. கற்பனே ... கஉச—கூஉரு
4. பெயர் விளக்கம் ... கஉரு—கஉசா
5. மேற்கோள் நூலகராதி ... கஉஎ
6. அருஞ்சொற்ருெடர் அகராதி ... கஉஅ
7. பாட்டு முதற்குறிப்பு ... கஉஅa-கஉஅb
8. திருத்தங்களுட் சில ... கஉஅc


---

## படங்களின் விவரம்


1. முகப்பு : திருநாரையூர் - ஸ்ரீ பொல்லாப் பிள்ளையார் (1) ; நம்பியாண்டா நம்பிகள் (2) ; அபயகுல சோழர் (3).
2. திருஞானசம்பந்த நாயனுர் (சீகாழியில் உள்ள உற்சவமூர்த்தி)
3. பிரமதீர்த்தமும் திருத்தோணியும்.
4. தோணியப்பர் (1) ; பிரமபுரீசர் (2) ; சட்டைநாதர் (3) ; (குரு, இலிங்கம், சங்கம்) விமானங்கள் சிகரங்களுடன் விளங்கும் காட்சி. கிழக்கிலிருந்து பார்வை.
5. திருமுலைப்பாலுண்டு பதிகம் பாடிய கோலம். (படம் வரைந்தது)
6. ஆளுடைய பிள்ளையார் அவதரித்த திருமாளிகையிடம்;
7. சிவபாத விருதயர் ஆன்மார்த்த வழிபாடு செய்த கோயில்.


---



பொல்லாப்பிள்ளையார்



நம்பியாண்டார் நம்பிகள்
பிள்ளையாரை அமுதூட்டும்
திருக்கோலம்



இராசராசச் சோழர்

(இவை திருநாரையூரில் உள்ளவை)

உ
சிவமயம்

# நான்காம் பகுதியின் முன்னுரையின் முற்பகுதி

“ நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேது மில்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
தாயான வீசற்கே சென்றூதாய் கோத்தும்பீ ”

**திருவாசகம்**

மூன்றும் பகுதி இரண்டாம் பாகம் நிறைவாகி வெளிவந்து சில மாதங்களே ஆயின. அதனுடன் திருநின்ற சருக்கமும், புராணம் - முதற் காண்டமும் நிறைவாயினமை அன்பர்கள் அறிவார்கள். அதன் முன்னுரையில் முதற் காண்டமாவது நிறைவேறி வெளி வருதல் காண்போமா ? என்று ஏங்கி எண்ணமிட்டிருந்த எனது கருத்தை வெளியிட்டெழுதினேன் ; அவ்வளவில் திருவருள்புரிந்த இறைவர் திருவடிகளுக்கு வணக்கமும் செலுத்தினேன் ; இனி, இப்போது அதன்மேல் இரண்டாங் காண்டமும் தொடங்கப்பெற்றுத் திருஞானசம்பந்த நாயனார் புராண முதற் சஞ்சிகை இதனுடன் வெளிவருகின்ற நிலையினையும் கைகூடும்படித் திருவருள் கூடிற்று ; அதற்கு “ மீளா வாளலாற் கைமா றில்லை ” என்றபடி என்றும் மறவாது அடிமைபூண்டு ஆட்செய்வதைத் தவிர வேறு என்செய்ய வல்லேன் ?; இதுபோலவே இப்புராணத்தை அடியேன் முடிக்க எண்ணியுள்ள ஏனை எல்லாச் சஞ்சிகைகளையும் விரைவில் வெளியிடத் திருவருள் துணை செய்யுமாக. அவற்றுக்குரிய கை எழுத்துப் பெரும்பான்மையும் எழுதி அச்சுக்குச் சித்தமாயிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இதனை இருபகுதிகளாக இரண்டு அச்சகங்களில் ஒருசேர அச்சேற்றினால் இந்த ஆண்டு நிறைவுக்குள் ஆளுடைய பிள்ளையார் புராண முழுமையும் வெளிவரக் கண்டுகளிக்கலாம். ஆனால் அதற்கு வேண்டப்படும் அத்தனை அளவு காகிதங்களைப் பெறவோ, அச்சின் நிலைகளை அமைத்து உதவவோ உரிய அன்பர்களைக் காணேன். 1935-ம் ஆண்டில் இத்திருப்பணியின் தொடக்கம் என் மேலதாயிற்று. இப்பொழுது பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவெய்தலாகிய பருவம் ; இதனுள் புராண உரை முழுதும் வெளிவந்திருத்தல் வேண்டும். ஆனால் என்செய்வது ?; பல்லாற்றானும் எனது தகுதியின்மை ஒரு காரணம் ; கருவியின் குறைவு காரியக்கேடு தருமன்றோ ? அறிவின்மை, ஆற்றலின்மை, நோய், மூப்பு, மந்தகுணம், நெடுநீர்மை என்றின்ன பலவும் அடியேன்பால் நிறைவாயினபோது இவ்வளவிலேனும் உரை நிறைவேறிற்றே என்று அன்பர்கள் மகிழவேண்டும். இவ்வெளியீட்டுக்குரிய பொருட்பேறுபற்றி அடியேன் வருந்தவில்லை. ஆனால், முன்குறித்தவாறு மனம் மொழி மெய்களால் இப்பணியில் அடியேனது முயற்சிகளை ஊக்குவித்துத் துணை புரியும் அன்பர்களின் கூட்டுறவாகிய பேறே அடியேன் பெறவிரும்புவது. இடையில் உலகப் பெரும் போரும் அது காரணமாக நேர்ந்த இன்னல்களும் இடையூறுகளும் பல; காகிதப்பஞ்சம், அச்சுக்குரிய பொருள்கள் கிடையாமை, தடைகள் முதலியவை இம்முயற்சியை நலிவுறுத்தின.

இனித் திருஞானசம்பந்த நாயனார் புராணத்தைச் சஞ்சிகை 1-க்கு 100 பாட்டளவில் பன்னிரண்டு சஞ்சிகைகளாக வகுத்து வெளியிட எண்ணியுள்ளேன். அவை சீகாழிப் பன்னிரண்டு திருப் பெயர்களுள் அம்முறையில் வரும் ஒவ்வொரு பெயரால் விளங்கும்; ஒவ்வொரு சஞ்சிகையும் ஒவ்வோர் தனி உட்கிடையைக்கொண்டு விளங்குதல், ஊன்றிப் பார்ப்போருக்கு விளங்காமற் போகாது; இச்சஞ்சிகை தனி வெளியீடாக வருதலின், சரிதச் சுருக்கம், கற்பனை முதலிய அட்டவணைகள் தரப்பட்டுள்ளன.

இனி, இப்புராணம் இவ்வெளியீட்டின் நான்காவது ஐந்தாவது பகுதிகளாக வெளிவருதல் அமைவாகும் என்று நினைக்கின்றேன் ; இதனை அச்சிடத் தொடங்

கும்போது திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரவாதீனம் 25-வது பட்டத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய ஞானசம்பந்த தேசிக பண்டார சந்நிதி அவர்களிடம் இது பற்றிப் பேச நேர்ந்தது ; அவர்களது ஆதீனத் தனி வெளியீடாகத் திருநாவுக்கரசு நாயனார் புராணம் முழுமையும் வெளி வந்தமை அன்பர்கள் அறிவார்கள். திருஞானசம்பந்த நாயனார் புராணத் தொடக்கத்தில் அவ்வாதீனத் தொடர்பு இருத்தல் பொருத்தமும் தகுதியுமாம் என்று அவர்களிடம் விண்ணப்பித்த போது சிறிதும் தாழ்க்காது "முதற் சஞ்சிகை முதற்றிருப்பதிக நிகழ்ச்சி முழுதும் சீகாழிப்பதியின் திருக்கோயில் வெளியீடாக ஆகுக!" என்று கட்டளையிட்டுப் புன்முறுவலுடன் ஆசி புரிந்து ஆவனவற்றை எல்லாம் செய்தருளினார்கள். அவர்கள் புரிந்த கருணைத் திறத்திற்கு அடியேன் கடப்பாடுடைய மனமார்ந்த நன்றி செலுத்துகின்றேன் ; அவர்கள் அதனோடு இதற்குரிய படங்களையும் எடுத்து உதவியருளினார்கள். அவர்களது அருளாணை திருவருட் சம்மதமான பொருத்தமுடைய தென்பது கண் கூடாக யாவரும் தெரியத்தக்கதாகும்.

இனி, இவ்வெளியீட்டிலும், இதற்குமுன் எல்லாவகையாலும் உதவிய எல்லா நண்பர்களும், பெரியார்களும் முன்போல உதவி புரிந்து வருகின்றார்கள், சென்னை. இராவ்பகதூர் திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ. அவர்கள் முன் புரிந்து வந்த உதவிகளோடு ஒரு புருபும் பார்வையிட்டு அவர்களது அரிய ஆராய்ச்சியிற் கண்ட பொருள்களை வரையாது உதவி வருகின்றார்கள். நாயனார் அவதரித்த மனையிடம் - சிவபாதவிருதயர் வழிபட்ட கோயில் இவற்றைப் படம் எடுத்து, சீகாழி - அன்பர் M. T. விசுவநாத செட்டியார் அவர்கள் உதவினர். இவ்வெல்லாப் பெருமக்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

பெரியபுராணவுரை வெளியீட்டுக்கென்று பொதுவாக ரூ. 1000 ஆயிரம் வெண் பொற்காசுகள் மனமுவந்து திருப்பனந்தாள் காசிமடத்தின் அதிபர், காசிவாசி, ஸ்ரீமத் அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் மனமுவந்து அனுப்பியருளி ஆசி புரிந்தருளினார்கள். அதுபற்றியும் அடியேனது நன்றியறிதலுடன் எனது பெருவணக்கத்தினையும் அறிவித்துக்கொள்கின்றேன். பொள்ளாச்சி தாலுக்கா தென்சித்தூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் தருமபரிபாலகர்கள் ரூ. 100 (நூறு) உரைவெளியீட்டுக்கு நன்கொடை அளித்தனர் ; அவர்களுக்கும் எனது நன்றி உரியது. இனித், திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் மகாசந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டார சந்நிதி அவர்கள் இப் புராண வெளியீட்டுக்குப் பலவகையாலும் அவ்வப்போது பேருதவி புரிந்தருளுவதாக அன்புகூர்ந்து வாக்களித்ததுமன்றி, ஒருபாகம் உதவியும் புரிந்து, ஆசி செய்தருளியுள்ளார்கள். "காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்க் கம்பொன், ஆயிரங் கொடுப்பர் போலு மாவடு துறைய னாரே" (தேவா) என்றபடி இஃது அத் திருமரபுக்கு அடிப்படையில் வந்த பெருமையன்றோ? அதுபற்றி அடியேனது நன்றியும் வணக்கமும் தெரிவித்துக்கொள்வதுடன் அடுத்த சஞ்சிகையில் விவரமான அறிவிப்பையும் தெரிவித்துக்கொள்வேன்.

ஒரு தகுதியுமில்லாத அடியேனையும் ஆளாகக் கொண்டு தமது அரும் பெருஞ் சரிதத்தின் பணி புரியத் தண்ணருள் புரிந்த பெருந்தகை திருஞானசம்பந்த நாயனாரது திருவடிகளை வணங்குகின்றேன்.

> "அரும்பின வன்பில்லை ; யர்ச்சனை யில்லை ; யரனடியே
> விரும்பின மாந்தர்க்கு மெய்ப்பணி செய்கிலன் ; பொய்க்கமைந்த
> இரும்பின வுள்ளத்தி னேற்கெங்ங னேவந்து நேர்பட்டதாற்
> கரும்பன நீள்வயல் சூழ்காழி நாடன் கழலடியே"

என்ற நம்பியாண்டார் நம்பிகளது திருவாக்கு எப்போதும் என் நினைவினுள் வருகின்றது.

கோவை,
சேக்கிழார் நிலயம்
7—1—1947

அடியார்க்கடியேன்
C. K. சுப்பிரமணிய முதலியார்

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

இருபத்தைந்தாவது மகா சந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள்**

அருளிய

# ஆசியுரை

செந்தமிழ் மொழியின் சிகரமாய்ச் சிவமணம் கமழ்ந்து, பத்தித்தனித் தேன் பெருக்கெடுத்தூற்றும் தெய்வக்காவியமாய் இலங்குவது திருத்தொண்டர் புராணம். நமது சந்தான முன்னோரான ஸ்ரீ உமாபதி சிவாசாரியார் இப்புராண வரலாறு கூறுமுகத்தால் சேக்கிழார் புராணம் அருளியிருப்பதும், நமது ஆதீன நான்காம் குரவர் தொண்டர் புராணச் செய்யுளொன்றற்கு அநுபவப்பொருள் கூறுக என குமரகுருபரருக்கு ஆணை அருளியதும், நமக்குமுன் விளங்கிய குருமூர்த்திகள் அப்பர் புராணத்தைப் புலவர் மணியாகிய சிவக்கவிமணி C. K. S. அவர்கள் எழுதிய விரிவுரையுடன் ஆதீன வெளியீடாக அச்சிட்டு வழங்கியதும், நமது ஆதீனத்துக்கும் இப்புராணத்திற்கும் பண்டுதொட்டு இன்றளவும் இருந்துவரும் தொடர்பினை விளக்கிநிற்பனவாம். திருஞானசம்பந்த நாயனார் திருவவதாரம் செய்த சிறப்பும், திருமுலைப்பாலுண்ட சிறப்பும் ஒருசேரப்பெற்று விளங்கும் சீகாழிப்பெருந்தலம் நமது ஆதீனபரிபாலனத்திற்குட்பட்டு விளங்குவதும், குமரகுருபர முனிவர் தாம் இயற்றிய குருதோத்திரமாகிய பண்டாரமும்மணிக்கோவையில் "அமண் மாசறுத்த கவுணியர் பெருந்தகை, பிள்ளைமை விடுத்த தள்ளரும் பருவத்து, உள்ளதன் படிவம் உணர்த்துவ கடுப்ப, மானிலத் தமர்ந்த ஞானசம்பந்தன்" என்று போற்றியிருப்பதும் திருஞானசம்பந்தர் புராணம் நமது ஆதீனத்தின் சார்பில் வெளிவருவது சாலச்சிறந்தது என்பதை விளக்குவனவாம்.

இந்நிலையில் சம்பந்தர் புராணத்தில் நாயனார் சிவஞானப் பாலுண்டருளிய அளவுமுள்ள ஒரு பகுதி திரு. முதலியார் அவர்கள் விரிவுரையுடன் சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தான ஆதரவில், சர்வஜித்து ஆண்டு சித்திரைத் திங்கள் ௧௨-ம் நாள் (25-4-47) நடைபெறும் திருமுலைப்பாலுற்சவத்தன்று வெளிவருகிறது. சிவநேசச் செல்வர்கள் யாவரும் பெற்றுப்படித்து உணர்ந்து ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் திருவருளால் நிறைநாளும் நிறைசெல்வமும் சிவஞானமும் எய்தி வாழ்வார்களாக.

## நன்றியுரை

திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 25-வது பட்டத்தில் ஞான பீடத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய ஞானசம்பந்த தேசிக மூர்த்திகள் "இது, சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம் தனி வெளியீடாக ஆகுக!" என்று கட்டளையிட்டருளித் திருநீறு நல்கி ஆசி புரிந்து அதற்காவனவற்றைத் திருவுள்ள முவந்து செய்தருளினார்கள். உரிய படங்கள் பலவற்றை யும் எடுப்பித்தும் தந்தும் உதவியருளினார்கள். அவர்களது திருவடிகளும் திருமரபும் நீடூழி வாழ்க! அவர்களுக்கு எனது அன்பும் பணிவு முள்ள நன்றி செலுத்துகின்றேன். அவர்களது திருவுருவப் படம் முகப்பிற் பதிக்கப்பட் டுள்ளது.

கோவை
சேக்கிழார் நிலையம்
3—2—1947

C. K. சுப்பிரமணிய முதலியார்
பதிப்பாசிரியர்

முன் சேர்க்கை - 3

## திருமுறைகளின் இச்சரிதப்பகுதியின் ஆதரவு

ஆளுடைய பிள்ளையார் புராணம் பற்பல பகுதிகளுக்கும் சைவ தெய்வத் திருமுறைகளின் சரித ஆதரவு காணலாம். அவற்றுள் இப்பகுதியைப் பற்றிய சிலவற்றை, ஈண்டுத் தருகின்றேன். ஏனைய பகுதிகளைப் பற்றியவற்றை ஆங்காங்குக் குறிக்க எண்ணியுள்ளேன்.

**தேவாரம்: —**

"போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்"

—பிள்ளையார் - தேவாரம்

**11ம் திருமுறை :— பட்டினத்துப் பிள்ளையார் :—**

" * * * உலக மூன்றுக்குங் களைக ணாகி,
முதலில் கால மினிதுவீற் றிருந்தழித்
தாதையோடு வந்த வேதியச் சிறுவன்,
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த,
'அன்னா யோ"வென் றழைப்பமுன் னின்று,
ஞான போனகத் தருளட்டிக் குழைத்த
ஆனாத் திருவை யவன்வயி னருள,
வந்தணன் முனிந்து தந்தா ரியா?ரென,
அவனைக் காட்டுவ னப்ப! வானார்
தோடுடைய செவிய னென்றும்
பீடுடைய பெம்மா னென்றுங்
கையிற் சுட்டிக் காட்ட,
ஐயநீ வெளிப்பட் டருளினை யாங்கே."

—திருக்கழுமல மும்மணிக்கோவை (1)

**நம்பியாண்டார் நம்பிகள் :—**

* * * அம்மென் குதலைச் செவ்வாய்,
பைய மிழற்றும் பருவத்துப் பாடப் பருப்பதத்தின்,
றைய லருள்பெற் றனனென்பர் ஞானசம் பந்தனையே.

—திருத்தொண்டர் திருவந்தாதி (33)

" * * * வேதத்தலைவனை மெல் விரலாற்,
றேட்டியல் காத னிவனென்று தாதைக்குச் சூழ்விசும்பிற்,
காட்டிய கன்று......"

—ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி (13

" இருந்தண்புகலி......போனகம்......அரனளித்த,
பெருந்தகை........."

ஷை 40

துளிவந்த கண்பிசைந் தேங்கலு மெங்க ளரன்றுணையாங்
கிளிவந்த சொல்லிபோற் கிண்ணத்தில் ஞான வமுதளித்த"

ஷை 73

" குஞ்சிகூடாப் பருவத்துக் குன்றவில்லி,
பங்குதங்கும் மங்கை தன்னருள் பெற்றவன் "......

—திருச்சண்பை விருத்தம். 2

" ஞானத்திரளையிலே யுண்டனை என்று... "

—ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை - 12

" ......அமுதுண்டு செவ்வா யருவி தூங்க...... " ஷை - 19

" ...எஞ்சாமை, யாதிச் சிவனருளா லம்பொன் செய்வட் டிலினிற்,
கோதி லமுதுநுகர் குஞ்சரத்தை...... "

—ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை.

" ......ஈங்கருளி யெம்போல்வார்க் கிடர்கெடுத்தல் காரணமா
ஓங்குபுகழ்ச் சண்பையெனு மொண்பதியு ளுதித்தனையே
செஞ்சடைவெண் மதியணிந்த சிவனெந்தை திருவருளால்
வஞ்சியன நுண்ணிடையாண் மலையரையன் பொற்பாவை
நற்கண்ணி யளவிறந்த ஞானத்தை யமிர்தாக்கிப்
பொற்கிண்ணத் தருள்புரிந்த போனகமுன் னுகர்ந்தனையே
தோடணிகா தினனென்றுந் தொல்லமரர்க் கெஞ்ஞான்றுந்
தேடரிய பராபரனைச் செழுமறையி னகன்பொருளை
யந்திச்செம் மேனியனை யடையாளம் பலசொல்லி
உந்தைக்குக் காணவர னுவனுமென் றுரைத்தனையே

—ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் (1)

" ...மலைமா துமையொடு மிவனு வானென முன்னு ளுரை
செய்தவன்........." ஷை - (7)

" பண்டமுது செய்துமை நங்கை யருண்மேவு சிவஞானம் "

ஷை - (9)

" பூவார் திருநுதன்மேற் பொற்சுட்டி யிட்டொளிரக்
கோவாக் குதலை சிலம்பரற்ற—வோவா

" தழுவான் பசித்தா"னென் றுங்கிறைவன் காட்டத்
தொழுவான் றுயர்தீர்க்குந் தோகை—வழுவாமே

முப்பத் திரண்டறமுஞ் செய்தாண் முதிராத
செப்பொத்த கொங்கைத் திருநுதலி—யப்பன்

அருளாலே யூட்டுதலு மப்பொழுதே ஞானத்
திரளாகி முன்னின்ற செம்மல்—இருடீர்ந்த

காழி முதல்வன் கவுணியர்தம் போரேறு
" ஊழி முதல்வ னுவ"னென்று காட்டவலான்......"

—ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை.

**குறிப்பு :**—பிள்ளையார் சீகாழிப் பதியில் அவதரித்தமையும், அந்தணர் மரபில் கவுணிய கோத்திரத்தில் வந்தமையும் அவரது பல பதிகங்களிலும் திருமுறைகளிலும் காணத்தக்கன. " கழுமல வூரர்க்கு " (அரசுகள், நேரிசை.) பிறவும் பார்க்க.

முன்சேர்க்கை - 4

## கல்வெட்டுக்களில் இச்சரிதப் பகுதியின் ஆதரவு

1. 1020 - A. D. : இராஜேந்திர சோழர் - 7-ம் ஆண்டு-தஞ்சை-நன்னிலம் - திருவிடைவாய் - கோயில் முன்வாயிற் சுவர் - விடையபுரம் என்ற விருதராச பயங்கர புரத்து வியாபாரிகள், அப்பதியில் சொக்கக் கூத்தர், நாச்சியார், திருஞானம் பெற்ற நம்பி இவர்களது பிரதமைகளைத் தாபித்துப் பூசை நடத்த ஏற்பாடு செய்தது ; இத்தலத்தில் தான் கல்வெட்டில் திருமுறைப் பதிப்புக்களில் முன் கிடைக்காத, ஆளுடைய பிள்ளையாரது "மறியார்கரத்தெந்தை" என்ற பதிகம் கண்டு பிடிக்கப் பட்டது. இது சேக்கிழார் காலத்துக்கு முந்தியது.

2. 1224 A. D. இராசராசர் III-9-வது ஆண்டு - மன்னார்குடி - கோட்டூர்-கொழுந்தீசர் கோயில் - கொழுந்தாண்டார் ஆலயத்தில் திருஞானம் பெற்ற பிள்ளையார் கோயிலுக்கு நாகமங்கலமுடையான் அம்பலவன் கோயில் கொண்டான் பணம் உதவியது 450/1912.

3. 1234 A. D. இராசராசர் III - 18-ம் ஆண்டு-ஷை ஆலயத்தில் தாபிக்கப் பெற்ற திருஞானம் பெற்ற ஆளுடைய பிள்ளையார் சந்நிதிக்குப் பூதானம் - 485-1912.

4. 1267 A. D. (14-2-1267) இராசேந்திரச் சோழர் III-28-ம் ஆண்டு - பட்டுக் கோட்டை - கோவிலூர் என்ற திரு உசாத்தானம் கோயில் ; மும்முடிச் சோழபுரத்து வியாபாரி தாபித்த திருஞானம் பெற்ற பிள்ளையார் நித்தியப் படித் தரத்துக்குப் பூதானம், 161-1908.

5. 22-2-1198 A. D. சடாவர்மன் வீரபாண்டியன் 9-வது ஆண்டு திருஞானம் பெற்ற பிள்ளையாரை எடுப்பித்து நிபந்தங்களுக்குப் பணமும் தேவாரம் ஓதுதற்குப் பணமும் சிவநெறி காட்டினார் தந்தது. (பிரான் மலை 208-24)

6. திருஞானம் - என்ற பெயர் தனியாகவே சில கல்வெட்டுக்களிற் காணப் படுகின்றது.

7. பிள்ளையார் அவதரித்த சீகாழிப் பதியில் அவரது தனிக் கோயிலில் 11 - தான சாசனக் கல் வெட்டுக்கள் உண்டு ; ஆனால் அவை இச்சரிதப் பகுதி பற்றியன வல்ல.

இனிச் சரிதத்தின் ஏனைப் பகுதிகளைப்பற்றிய கல்வெட்டு ஆதரவுகளும், திருமுறை ஆதரவுகளும் அவ்வப் பகுதிகளில் இயன்ற அளவு குறிக்கப்பெறும்.

நம்பியாண்டார் நம்பிகள் அருளிய நூல்களில் ஆளுடைய பிள்ளையார் சரிதத்தின் பற்பல பகுதிகளின் ஆதரவுகள் விளங்குகின்றன. அவை ஆசிரியருக்குப் பேராதரவாயிருந்தன என்பது புராணப் பாயிரத்தாலும் அறியவுள்ளது.

குறிப்பு :—மேலே குறித்த கல்வெட்டு ஆதரவுகள் எனது அரிய நண்பர் திரு, இராவ்பகதூர் C. M. இராமசந்திரன் செட்டியார், B. A., B. L., F. R. G. S., F. M. U. அவர்களால் அன்புடன் உதவப்பட்டன.



திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனம்

உரு-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பெரிய புராணம்

என்னும்

# திருத்தொண்டர் புராணம்

## இரண்டாங் காண்டம்

ஆறுவது

## வம்பறு வரிவண்டுச் சருக்கம்

திருச்சிற்றம்பலம்

வம்பறு வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியே ;
னேயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன் ;
நம்பிரான் றிருமூல னடியார்க்கு மடியே ;
னாட்டமிகு தண்டிக்கு மூர்க்கர்க்கு மடியேன்;
அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியே;
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

திருச்சிற்றம்பலம்

—திருத்தொண்டத்தொகை (ரு)

உ

சிவமயம்

# 28. திருஞானசம்பந்த நாயனார் புராணம்

## தோகை

" வம்பரு வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணு
வெம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியேன்..."

—திருத்தொண்டத்தொகை (ரு)

## வகை

வைய மகிழயாம் வாழ வமணர் வலிதொலைய
ஐயன் பிரம புரத்தரற் கம்மென் குதலைச்செவ்வாய்
பைய மிழற்றும் பருவத்துப் பாடப் பருப்பதத்தின்
தைய லருள்பெற் றனனென்பர் ஞானசம் பந்தனையே. (ருரு)

பந்தார் விரலியர் வேள்செங்கட் சோழன் முருகனல்ல
சந்தா ரகலத்து நீலநக் கன்பெயர் தான்மொழிந்து
கொந்தார் சடையர் பதிகத்தி லிட்டடி யேன்கொடுத்த
வந்தாதி கொண்ட பிரானருட் காழியர் கொற்றவனே. (ருசு)

—திருத்தொண்டர் திருவந்தாதி.

## விரி

1899. வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம். (க)

**இரண்டாம் காண்டம்** :—இப்புராணத்தின் பெரும்பிரிவுக ளிரண்டனுள் இரண்டாம் பிரிவு.

**சருக்கம்** :—இனி கிறுத்தமுறையானே, ஆருவதாகத் திருத்தொண்டத் தொகையினுள் "வம்பருவரிவண்டு" என்று தொடங்கும் திருப்பாட்டிற் றுதிக்கப்பட்ட ஆறு அடியார்களது சரிதம் கூறும் பகுதி. அவர்களாவார்: திருஞானசம்பந்த நாயனார், ஏயர்கோன் கலிக்காம நாயனார், திருமூல நாயனார், தண்டியடிகணாயனார், மூர்க்க நாயனார், சோமாசிமாற நாயனார் என்ற அறுவர்.

**புராணம்**:—அச்சருக்கத்தினுள் முதலாவது திருஞானசம்பந்தநாயனாரது சரித வரலாறும் பண்புங் கூறும் பகுதி. இவ்வாற்றான் முதலாவது திருஞானசம்பந்த நாயனார் சரிதங் கூறத் தொடங்குகின்றார்.

**தோகை** :—வம்பினிடத்து மாறுதிருக்கும் வரிகளையுடைய வண்டுகளுடன் மணம் வீச மலர்த்தும் தேன் பொருந்திய மலராலாகிய நல்ல கொன்றை மாலையை

யணிந்த சிவபெருமானது திருவடிகளை யல்லாது வேறொன்றனையும் பேணாத எம்பிரான் திருஞானசம்பந்த நாயனாருடைய அடியவர்க்கும் நான் அடியேனாவேன்.

**வம்பறு...மலரும்** என்ற அளவும் கொன்றைக்கு அடைமொழிகள். **வம்பறு வரிவண்டு - வம்பு** - மணம்; அதனை உட்கொண்டு விரியும் பருவத்துள்ள மலர் மொட்டுக்கு ஆகுபெயர். மலரும் தருணத்து மதுவுண்ணும் ஆசையினால் வண்டுகள் ஊதி மொட்டுக்களை மலர்த்துதற்கு மொய்த்துக்கொண்டிருக்கும். **மலரும்** - மலர்த்தும். பிறவினை. **மணநாற** - மணநாற்றம் அறிவித்தலினால் வண்டுகள் மது ஊற்றத்தை அறிந்தன என்பது குறிப்பு.

**மதுமலர் நற் கொன்றை-மது**-தேன். தேனை ஊற்றாகத் தரும் கொன்றை மலர். **கொன்றையான்** - கொன்றை மலர் மாலையைத் தமது திருவடையாள மாலையாகக் கொண்ட சிவபெருமான். **அடியலாற்பேணா எம்பிரான் சம்பந்தன்-அடியலாற்பேணா**- எதிர்மறைகள் உறுதிப்பொருள் தந்தன. அடியே பேணுதலால் எமது பரம குருமூர்த்தியாகிய சம்பந்தன் என்று காரணக் குறிப்புடன் நின்றது. திருத்தொண்டத்தொகை உரைக் குறிப்புக்கள் பார்க்க. (முதற் பாகம் பக். ௪௨௨) இறைவரது அருள் முன்னிடவே, அதனாற் குறிக்கொள்ளும் உயிர்கள் வந்து பற்றிச் சூழ, அருளமுதம் பருக வெளிப்பட்டுத் துய்க்கப்படும் என்ற உள்ளுறை காண்க. "காலமுண்டாகவே" என்ற திருவாசகமும், "இம்மலைப் பெருந்தேன் சூழ்ந்து" (750), "மன்றுளாடு மது வின்னசை யாலே" (242) என்பனவற்றில் உரைத்தவையும் இங்குக் கருதத் தக்கன. இறைவ ரருளமுதத்தை இடைவிடாது பருகிக்கொண்டிருப்பவர் ஆளுடைய பிள்ளையார் என்ற உட்குறிப்பும் காண்க. "மறக்குமா றிலாத வென்னை" (தேவா.) "பண்டு திருவடி மறவாப் பான்மையோர்" (புரா. 1952 (1) ),

**வகை** :—வையம் மகிழ - உலகம் மகிழவும்; யாம் வாழ - யாங்கள் வாழவும்; அமணர்வலி தொலைய - அமணர்களது வன்மைகள் தொலையவும்; ஐயன் பிரமபுரத்து அரற்கு - பிரமபுரத்தில் எழுந்தருளிய தோணியப்பரை; பாட - பாடுதற்கு; அம் மென்...பருவத்து - அழகிய மெல்லிய குதலை மொழியைச் செவ்வாயின் மெல்ல மிழற்றும் அச்சிறிய பருவத்தில்; பருப்பதத்தின்......என்பர் - பார்வதியம்மையாருடைய அருளமுதத்தைப் பெற்றவர் என்று சொல்லுவர்; ஞானசம்பந்தனையே - திருஞானசம்பந்த நாயனாரையே. ௩௩

பந்தார் விரலியர் - பந்து பொருந்திய கையினையுடைய மங்கையர்க்கரசியம்மையார்; வேள் - குலச்சிறையார்; செங்கட் சோழன் - கோச் செங்கட் சோழர்; முருகன் - முருகநாயனார்; நல்ல சந்து ஆர் அகலத்து நீலநக்கன் - நல்ல சந்தனம் பொருந்திய மார்பினையுடைய திருநீலநக்க நாயனார்; பெயர் தான் மொழிந்து கொந்து ஆர் சடையர் பதிகத்தில் இட்டு - இவர்களது பெயர்களை மணமுடைய சடையாரைப் பாடிய திருப்பதிகங்களில் மொழிந்து வைத்து; அடியேன் கொடுத்த அந்தாதி கொண்ட பிரான் - அடியேன் விண்ணப்பித்துக்கொண்ட திருவந்தாதியை ஏற்றுக்கொண்ட பெருமான்; அருட் காழியர் கொற்றவனே-அருளுடைய சீகாழித் தலைவராகிய பிள்ளையாரே யாவர். ௩௪

வையம் மகிழ யாம் வாழ அமணர் வலி தொலைய - பாட என்க. இதன் பொருளை "வேத நெறி தழைத் தோங்க" என்ற பாட்டில் விரித்தனர் ஆசிரியர். பிள்ளையார் பாடலினால் இவைகள் பயனாயின என்பதாம். அமணர் வலி தொலைய வேதநெறித் தழைத்தோங்கிற்று; யாம் வாழ என்றது சைவத்துறை விளங்கிய பயன்; வையம் மகிழ என்றது பூதபரம்பரை பொலிவுறுதல் குறித்தது. பாட - பாட்டினால் இப்பயன்கள் போந்தன என்பதாம். இவை பாசநீக்கமும் சிவப்பேறும்

என்ற இரண்டினுள் அடங்கிப் பிறவி நீங்கும் முத்தி சாதனமாகிய ஒன்றினைக் குறிக்கும் என்று "பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத், துறவி யெனுந் தோற்றோணி கண்டோர்......ஞானத் தமிழ்" (ஆ. பிள். மும். கோ-11) என்று பிறிதோரிடத்தில் இவ்வாசிரியர் அருளினார். **சூதலை......பருவம்** - மூன்றாண்டு வயது. **யாம் வாழ** - "எங்களை வாழ முன்னாளேடுவை கையினி விட்டார்" (புரா.) **பருப்பதத்தின் தையல் அருள்பெற்றனன்** - ஞானத்திருமுலைப்பால் தரப் பெற்றனர். ஞானசம்பந்தனை அருள்பெற்றனன் என்பர் என்று கூட்டுக. அமணர் தொலைய என்னாது வலி தொலைய என்றது சைவச் சிறப்பு. தன் அளவுள் நில்லாது மீறிக் கேடு செய்வதைத் தடுப்பதே சைவத்தின் நோக்கமென்க. ௫௫

**விரலியர் - வேள்** - (சிறந்த ஆண்மகன் : இங்குக் குலச்சிறையாரைக் குறித்தது)- செங்கட்சோழன் - முருகன் - நீலநக்கன் (இவர்களின்) பெயர் மொழிந்து - அந்தாதி கொண்ட பிரான் என்று முடிக்க. **பந்தார் விரலியர்** - மங்கையர்க்கரசியம்மையார். "பந்தார் விரன்மடவாள் பாகமா" (பிள். தேவா. நனா.) "பந்தணை விரலாள் பங்க" (திருவா.) "பந்தணை விரலாள் பாண்டிமா தேவி" (பிள். புறநீர்மை. ஆலவாய்.) இவர் பெயரும் குலச்சிறையார் பெயரும் மொழிந்தமை "மங்கையர்க்கரசி" என்ற (புறநீர்மை) திருப்பதிகத்தினுட் காண்க. **செங்கட் சோழன்** - கோச்செங்கட் சோழர். "செம்பியன் கோச்செங்க ணான்செய் கோயிலே" (வைகன் மாடக் கோயில்: 5) முதலியவற்றுள் அவர் பெயர் மொழியப்பெற்றன. திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம் (பியந்தைக் காந்தாரம்), திருச்சாத்தமங்கை (பஞ்சுரம்) இத்திருப்பதிகங்களுள் முறையே முருகநாயனார், திருநீலநக்கர் இவர்களின் பெயர்கள் மொழியப்பட்டன. இனி **வேள்** என்றதனைச் செங்கட்சோழனுக்கு அடையாக்கின் அரசர்-**வேள்**-ஆண்மைமிக்க அரசர் தலைமகன் என்று பொருள் கொள்க. அடையாக்காதவழி, நின்றசீர்நெடுமாறனார், சிறுத்தொண்டர், கண்ணப்பர் இவர்களையும் கொள்ளலாம் என்பாருமுண்டு. **பெயர் மொழிந்து - சடையர்** பதிகத்தில் **இட்டு** - சடையர்மீது பாடிய பதிகத்தில் வைத்துச் சிறப்பித்து. **அந்தாதி** - ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி. (11-ம் திருமுறை) எனவே இத்திருத்தொண்டர் திருவந்தாதி பின்னர் இயற்றப்பட்டதென்பது போதரும். **கொந்தார் சடை** - மணநிறைந்த சடை. "மணங்கமழ் சடை" (பிள். தேவா. சிறுகுடி) ; "வெறிகமழ் சடை" (ஷை ஆமாத்தூர்).

பெயரும் அருட்குருவாம் பெருமையும் தொகைநூல் பேசிற்று. ஊரும், பெயரும், அம்மை திருமுலைப்பாலுண்டு அதனால் ஞானம் பெற்றமையும், அமணர்வலி தொலைத்தமையும், அதனால் உலகை வாழ்வித்தமையும், மங்கையர்க்கரசியம்மையார் - முருக நாயனார் - திருநீலநக்க நாயனார் முதலியோர் தொடர்புபற்றிய சரிதக் குறிப்புக்களையும் வகைநூல் வரலாற்றுமுறையில் வகுத்துக் காட்டிற்று. இவை விரிந்த படியை விரிநூலாகிய மாபுராணத்துள், ஆளுடையபிள்ளையார் புராணத்துள்ளும், பிறண்டும் கண்டுகொள்க. முன்குறித்த ஏனை நாயன்மார் தொடர்புபற்றிய வரலாறுகள் பிள்ளையார் புராணத்துள் ஏற்றபெற்றி சுருக்கியும், அவ்வவர் புராணத்துள் விரித்தும் கூறுவதும் காண்க. அமணர் வலி தொலைய என்றதனாற் பெறப்படும் பரசமய நீக்கம் நாயனாரது அவதார உள்ளுறையாதலின் அதனை முதற்பாட்டில் வைத்தார்; அச்செயலுக்குத் துணையாய் நின்ற அம்மையாரை அடுத்த பாட்டில் வைத்தோதினார். ௫௬

விரி :—1899. (இ - ள்) **வேத...ஓங்க** - வேதத்தின் நெறிகள் தழைத்து ஓங்கவும் ; **மிகு...விளங்க** - அவற்றுள்ளே மிக்க சைவத் துறைகள் விளங்கவும் ; **பூத...பொலிய** - பூதங்களின் தொடர் வழிவழி பொலிவுறவும் ; **புனித...அமுத** - தூய திருவாய் மலர்ந்து அழுதவராகிய ; **சீத...திருஞானசம்பந்தர்** - குளிர்ந்த வள

முடைய வயல்களாற் சூழப்பட்ட புகலி என்னும் சீகாழித் திருத்தலத்தில் அவதரித்த திருஞானசம்பந்த நாயனாருடைய; பாதமலர்......பரவுவாம் - இரண்டு திருவடிகளாகிய மலர்களையும் தலையிலே சூட்டிக்கொண்டு அத்துணையாலே, அவர் செய்த திருத்தொண்டினது திறங்களைப் போற்றப் புகுவோம்.

(வி - ரை) வேதநெறி-வேத விதிதமாகிய வழி. வேதம் - இறைவன் திருவாக்கு. அறிதற்குக் கருவியானது என்பது சொற்பொருள். வேதம் - காண்டல் கருதல்களால் அறியப்படாத பொருளை அறிதற்குக் கருவியாயுள்ள பொருள். நெறி - வழி. நெறி தழைத்தோங்க - தழைத்தல் - வழிச்செல்வோரை வருத்தமுறுத்துகின்ற முள்ளும் கல்லும் குழியும் பிறவும் இல்லாமலிருத்தல்; ஓங்குதல் - அங்கிலே நிலை பெற்றிருத்தலும், வழிச் செல்வோருக்கு உதவிபுரியும் நிழலும் நீரும் முதலியன மிக்கிருத்தலும் குறித்தன. வேதநெறி தழைத்தோங்குதலாவது - வேதங்காட்டும் வழிகளின் பொருள் தூர்வையாகாது பிறழ்வுணர்வுகளால் மயங்கவைக்காது நிற்றலும், நற்பொருள் பெறுதற்கு உதவும் சாதனங்கள் மிகுதலுமாம். நெறி - உவமை யாகுபெயர்.

மிகுசைவத் துறை விளங்க - வேதம் நெறி என்றும், சைவம் துறை என்றும் கூறப்பட்டன. சைவம் - ஆகமம். "சிவாகமங்கள் சித்தாந்தம்" (சித்தி); சேரும் இடம் ஒன்றாக, அதற்குப் பல வழிகள் உளவாம். "ஒன்றது பேரூர் வழியா றதற்குள" (திருமந்). அதுபோல் வேதங்கள் கூறும் வழிகள் பற்பல. அவை பலதிறப்படும். வழியினூற் சென்று குறியிடம் சேரினும் அவ்விடத்துப் புகும் துறைகளும் பல உள வாம். பெரும்பான்மை நீர்நிலைகளிலும், சிறுபான்மை தரையிலும் வானிலும் துறை கள் அறியப்படும். நெறிகள்போலத் துறைகளும் பலதிறப்படும். வழுக்கல்துறை, அழுக்குத்துறை, குளிக்குந்துறை, முதலையுள்ள துறை என்றிவ்வாறு நீர்த்துறை களில் வேற்றுமை காணுமாறு; வேதநெறி காட்டக் கண்டு சென்றடையும் சமயத் துறைகளும் பலப்பல. அவற்றுள்ளே சைவத்துறையே எத்தகைய குறைபாடு மின்றி மிக்கது என்பார் மிகு சைவத்துறை என்றார். உயிர்களின் பக்குவபேதம் நோக்கி பலப்பல துறைகளும் வேண்டப்படுவன; அவை அவ்வாறு தத்தம் அளவில் அமை யாது அதிகரித்து உயிர்களை மயக்கிக் கேடு செய்யுங் காலத்தில் அவற்றை நிராகரித்து அளவுபடுத்தி நெறிகளையும் துறைகளையும் கேடுறுத்தாது செய்தல் இறைவராணையால் வருவது. ஈண்டுத் திருஞானசம்பந்தர் அவ்வாறு நெறியையும் துறையையும் புன் னெறித் துன்மார்க்கங்களாற் றீமையுறாது தூய்மைசெய்து உயிர்களைப் பொலிவுற வருளினர். அதற்காகவே அவதரித்தனர். அவ்வருட் செயல் அவர் அழுததன் காரணமாக ஞானப்பால் உண்டருள உளதாயிற்று என்று காணும்படி ஓங்க - விளங்க - பொலிய - அழுத என்று காரணகாரியமுறை தோன்றவைத்தார்.

வேதநெறி - வேதவிதிப்படி நிகழும் வைதிக ஒழுக்கம்.

சைவத்துறை - சிவாகம விதிப்படி நிகழும் சரியை முதலிய சிவதருமங்கள்.

வேத சிவாகமங்களிரண்டும் சிவன் திருவாக்குக்கள். வேதம் உலகர்க்கும், சிவாகமங்கள் சத்திநிபாதர்க்கும் அருளப்பட்டன; வேதம் பொது; ஆகமம் சிறப்பு. "வேதமொ டாகமம் மெய்யா மிறைவனூல், ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன் னுக" (திருமந்திரம்). "வேதம் பசு, வதன்பால் மெய்யாகமம்" முதலியவை காண்க. வேதம் முடிந்த இடத்தில் சிவாகமம் தொடங்குகிறது. இன்னதென்று காணமுடியாதது என்று சாந்திமொழியுடன் வேதம் இளைத்துநிற்கின்ற இடத்தில் அப் பதிப்பொருள் இன்ன தன்மையுடையது என்று சுட்டிக்காட்டித் தொடங்கு கிறது சிவாகமம். இக்குறிப்புக்களை உள்ளீடாகக் கொண்டு வேதநெறி தழைத்தோங்க என்றும், மிகுசைவத்துறை விளங்க என்றும் கூறினார்.

பூத பரம்பரை பொலிய - உயிர்கள் வழிவழி மேம்பாடடைய. பூதம் - உயிர்கள். பிறவியினுள் தோற்றுவிக்கப்படும் - சிருட்டியினாற்படும் - உயிர்கள். பூ - பகுதி. தோன்றுதல் என்பது பொருள். பொலிதலாவது கன்மத்துக்கீடாகப் பற்பல பிறவிகளிலும் வரும் உயிர்கள் சிருட்டியின் கருத்தாகிய திருவருளினை அவ்வவற்றின் பக்குவத்துக்கேற்பப் பெறுதற்குத் தகுதிபெற்று மேலோங்குதல். இது வேதநெறியாகச் சைவத் துறையில் பெறப்படும் என்பது முன் உரைக்கப்பட்டது. அவ்வாறு பொலிவடைந்தேறும் படிமுறையினைப் "புறச்சமய நெறிநின்றும் அகச் சமயம் புக்கும், புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம, வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து, மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படிந்துஞ், சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேதச் சிரப்பொருளை மிகத் தெளிந்துஞ் சென்றாற் சைவத், திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" (சித்தி. 8-11) என்று அருணந்திசிவாசாரியார் அருளியது காண்க. "ஆதிநூ லநாதி யமலன் றருநூ லிரண்டு மாரண நூல் பொது சைவ மருஞ்சிறப்பு நூலாம், நீதியினா லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு நிகழ்த்தியது நீண்மறையி னொழி பொருள்வே தாந்தத், தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல்சைவம்; பிறநூல், திகழ் பூர்வஞ்; சிவாகமங்கள் சித்தாந்த மாகும்" (ஷெ - 8 - 15) என்று அவ்வாசாரியர் ஞான நூல்களை அளவுபடுத்திக்காட்டியதும் காண்க.

இந்நுட்பங்களை உணராதார் தம்மைச் சித்தாந்த சைவர் என்றும் சொல்லிக் கொண்டு சைவத்தின் முழுமையாய் நிறைந்த உண்மைகளுள் ஒன்றொன்றேனும் சிற்சிலவேனும் இலைமறை காய்போற்கொண்டு மின்மினி விளக்கங்காட்டும் புறச் சமய நூல்களையும் வேத சிவாகமங்களோடொப்ப எண்ணியும், அப் புறச்சமயக் குருமாரை நமது பதிவாழ்விற் பெருமக்களோடொப்ப வாய்கூசாது கூறியும், "குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக், குருடுங் குருடுங் குழிவீழு மாறே" (திருமந்) என்றபடி தாமும் கேடுற்றுப் பிறரையும் கேடுறுத்துகின்றனர். அந்தோ பாவம்! பாவம்! "மூவரென் றேயெம் பிரானொடு மெண்ணிவிண் ணாண்டுமண்மேற், றேவரென் றேயிறு மாந்தென்ன பாவந் திரிதவரே" (திருவாசகம்). "சிவனொடொக் குந்தெய்வந் தேடினு மில்லை; யவனொடொப் பாரிங் கியாவரு மில்லை" (திருமந்). "விரிவிலா வறிவி னார்கள் வேறொரு சமயஞ் செய்தே, யெரிவினாற் சொன்னா ரேனு மெம்பிராற் கேற்றதாகும்" (தேவா); "யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள், வேதனைப் படுமி றக்கும் பிறக்கு மேல் வினையுஞ் செய்யு, மாதலா லிவையி லாதா னறிந்தருள் செய்வ னன்றே" (சித்தி- 2, 25) "செய்வானுஞ் செய்வினையு மதன்பயனுஞ் சேர்ப்பானும், மெய்வகையா னான்காகும் விதித்தபொரு ளெனக்கொண்டே, யிவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லையென, உய்வகையாற் பொருள்சிவனென் றருளாலே யுணர்ந்திருந்தார்" (சாக் - புரா). என்பனவாதி அருட்பெருந் திருவாக்குக்களி னுண்மையினையும் ஓர்கிலார். சமண்புத்தம் முதலிய பரசமயங்களை நிராகரித்துத் திருநீற்றினை வளர்த்த திருஞான சம்பந்த நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள், (பரபக்கமெடுத்துக் கூறி நிராகரித்துச் சைவ சித்தாந்தஞ்செய்த) அருணந்திசிவம் முதலிய பரம ஆசாரியர்களுக்கெல்லாம் இழுக்குப்படப் பேசி ஒழுகிவரும் இவர்கள் கன்மபலன் இருந்தவாறுதான் என்னே? கற்புடைநாயகி தனது நாயகனோடொப்பப் பிறனொருவனை எண்ணுவது கற்புக் கிழுக்காவதாம். அதுபோல எல்லாவுயிர்களுக்கும் உயிர்க்குயிராயிருந்து அருளும் பரமபதியாகிய சிவனையும், அவனை ஐபந்திபெற உய்வகை மண்ணுளோருக் குதவிக் காட்டிய: ஒப்புயர்வற்ற எந்தம் பரமாசாரியர்களாகிய உண்மை நாயன்மார்களையும்

பிறரோடொப்ப எண்ணுவது பாவமாகும். சைவ சித்தாந்தத்திற்காணும் முழு உண்மைத் திறனும், உலக உண்மைகளெல்லாவற்றையும் தன்னகத்தடக்கிக் காட்டும் சோபான முறையும் என்ற இவற்றின் தத்துவங்களை உணராதாரே புறச்சமயங்களைச் சைவத்தோ டொப்பிடுவர். இற்றைநாட் சைவவுலகம் அடைந்து நிற்கும் இப்பரிதாப நிலை வருந்தத் தக்கது. "வைதிக சைவத்துக்கு வழங்கும் பெயர்கள் பலப்பல; அவற்றின் பொருள் ஒன்றே" என்பனவாதி கூற்றுக்கள் மயக்கத்துக் கேதுவாவன. இலக்கணத்தால் வேற்றுமையில்லாதவழி, இலக்கியம் பலவாதல் செல்லாது என்பது அளவைநூல் காட்டும் உண்மை. பூதம் பொலிய என்றது பூத பரம்பரை பொலிய என்றது வழிவழி பக்குவத்துக்கேற்ப உயிர்கள் பொலிவுறுதல் வேண்டும் என்ற கருத்தை உள்ளடக்கியது.

**புனிதவாய் மலர்ந்து அழுத** - புனிதவாய் - அழுது ஞான அமுதம் பெறுதற்கு முன்னும், அத்திருவாய் புனிதமுடையது என்பதாம். திருஞானசம்பந்த நாயனாரது அவதாரம் கன்மத்துக்கீடாக வந்ததன்று. முன்னைநிலையில் அவர் சிவனை மறக்குமாறிலாத பெரியார். உலகுக்கு அருள்புரியும் பொருட்டே அவரைச் சிவபெருமான் உலகில் பிறந்தருளவருளினர் என்பது. "புண்ணியக் கங்கைநீரிற் புனிதமாந் திருவாய் நீரில்" (671) என்றாற்போலக் காண்க. அழுத - பிரமதீர்த்தக் கரையில் நின்று மூன்றுண்டில் திருத்தோணிச் சிகரம்பார்த்து "அம்மே யப்பா" என்றழுததன் காரணம் 1958—1959 பாட்டுக்களிற் காண்க. "அழுதிலகை வாழ்வித்த" (திருப்புகழ் - கதிர்காமம்.)

**சீதவள வயற் புகலி** - பிறவி வெப்பந் தணிக்குந் தட்பம் உடைமை குறிப்பு. **புகலி** - சூரனுக் கஞ்சித் தேவர்கோன் புகலடைந்தமையாற் போந்த பெயர். வழிமொழித் திருவிராகம் முதலியவை பார்க்க. சீகாழிக்கு ஊழிக்கிரமத்திற் போந்த 12 திருப்பெயர்களுள் மூன்றாவது பெயர். அத் திருத்தலம்போலவே திருஞானசம்பந்த நாயனாரது பாதமலர்களும் புகலடைந்தார்க்குப் பிறவி வெப்பந் தீர்க்க வல்லன என்பது குறிப்பு. "பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத், துறவியெனுந் தோற்றோணி கண்டீர்......ஞானத்தமிழ்" (நம்பியாண்டார் நம்பிகள்.)

**திருஞானசம்பந்தர்** - இப் பெயர்போந்த வரலாறு (1966-1967) பாட்டுக்களிற் காண்க.

**பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்** - அவர்தம் திருவடிகளைத் தலைமேற் சூடி அவரது திருத்தொண்டின் வரலாற்றினைத் துதிக்கப் புகுகின்றேன் என்று ஆசிரியர் இப்புராணத்துக்குத் தோற்றுவாய் செய்தனர். முன் சருக்கத் தொடக்கமும் பிறவும் காண்க.

**தொண்டு** - செய்த தொண்டின் வரலாறு. **பரவுதல்** - துதித்தல். அவ்வரலாறு எம்மால் எல்லை கண்டு சொல்லுந் தரமுடையதன்றாதலின் துதித்தமட்டில் இப்புராணம் அமையும் என்றதாம். இங்குத் தொடங்கிய இக்கருத்தையே பற்றி "அருந்தமிழா கரர்சரிதை யடியேனுக் கவர்பாதந், தரும்பரிசா லறிந்தபடி துதிசெய்தேன்" (1254) என்று முடித்துக்காட்டியதும் காண்க.

இப்பாட்டில் நாயனாரது அவதாரத்தின் உள்ளுறையினையும் பயனையும் திருப்பெயரையும் நகரத்தையும் எடுத்துக் கூறியவகையால் சரித முழுமையும் குறிப்பிற் கூறிப்போந்த திறமும் காண்க. 1

1900. சென்னிவளர் மதியணிந்த சிலம்பணிசே வடியார்தம்
மன்னியசை வத்துறையின் வழிவந்த குடிவளவர்

பொன்னிவளந் தருநாடு பொலிவெய்த நிலவியதாற்
கன்னிமதில் மருங்குமுகி னெருங்குகழு மலமூதூர். ௨

(இ - ள்) சென்னி...குடி - வளருந்தன்மை பெறவுள்ள பிறையினைத் தலையிற் சூடிய, சிலம்பணிந்த திருவடியினை யுடையாராகிய சிவபெருமானது நிலைபெற்ற சைவத்துறையில் வழிவழியாக வந்த குடியாகிய; வளவர் - சோழர்களுடைய; பொன்னி...நிலவியது - காவிரியாறு வளஞ்செய்கின்ற நாடு பொலிவுபெறும்படி நிலைபெற்றுள்ளது; கன்னிமதில்...கழுமலமூதூர் - கடியப்படாத மதிலின் பக்கத்தில் முகில்கள் நெருங்குகின்ற திருக்கழுமலம் என்னும் பழம்பதியாகும்.

(வி - ரை) சரிதந் தொடங்குகின்ற ஆசிரியர் இப்பாட்டால் சரிதமுடைய நாயனாரது ஆற்றுவளம் நாட்டுவளம் நகரவளம் கூறித் தொடங்குகின்றார்.

**வளர்மதி சென்னி அணிந்த** - என்க. **வளர்** - வளருந்தன்மை பெற்றுள்ள. **சென்னியும் சேவடியும்** உடையார் என்று தலைமுதல் அடிவரை கூறியபடி. அடியடைந்தாரை உயர்த்துபவர் என்பது குறிப்பு.

**மன்னிய சைவத்துறை** - மன்னுதல் என்றும் அழியாது நிலைபெற்றிருத்தல். புறப்பகை உட்பகைகளால் இடையிடையே வரும் நலிவுகளால் விளக்கம் குன்றுதலன்றி அழிந்துபடுவதில்லை என்பதாம். உண்மை சிலபோது ஓரளவு மறைக்கப்படலாவதன்றி எஞ்ஞான்றும் அழிக்கப்படாதென்க. இப்புராண வரலாற்றுக் குறிப்புமாம். 1916வது பாட்டுப் பார்க்க. சைவத்துறை முன்பாட்டிற் கூறியவை பார்க்க.

**வழிவந்த குடிவளவர்** - **வழிவருதல்** - வழிவழியாக அத்துறையில் வழுவாது வருதல். **குடி** - என்பது அதில் தாங்கள் அரசர் என்றெண்ணாது அடிமை என்ற நினைவு தாங்கி வருதல் குறித்தது. இச்சரிதத்தினுள் வரும் "செய்வகை யிடையே தப்பி"ப் புறச்சமயம் சார்ந்த பாண்டியர் போலன்றி என்ற குறிப்பும் காண்க. **வளவர் - வளம்** - செல்வம். **வளவர்** - செல்வமுடையவர். "வளம்பட வேண்டாதார்" (நாலடி); "வளவனாயினு மளவறிந்துண்" - "வளத்தன்" - "மாவளத்தான்" - "கரிகாற் பெருவளத்தான்" முதலியவையும் காண்க.

**பொன்னிவளம் தரும் நாடு** - காவிரி பாய்ந்து வளத்தைத் தருதற் கிடமாகிய சோழநாடு.

**நாடு பொலி வெய்தக் - கழுமல மூதூர் நிலவியது** - என்க. சோழநாடு பல பெரிய ஊர்களையுடையதாயினும் அதன் பொலிவுக்குப் பெருங் காரணம் சீகாழியைத் தன்னகத் துடைமையேயாம். **பொலிவு** - அருட் சிறப்பு. உலகத்தைத் திருத்திச் சிவனருளிற் சிறக்க உதவிய பிள்ளையாரவதரித்த தலமாதல் குறிப்பு. **நிலவுதல்** - ஊழிகளிலும் அழியாமல் மிதந்திருத்தல். "தேசமெல்லாம் விளக்கிய" (46).

**கன்னி மதில்** - பகைவரால் கடியப்படாமல், அமைத்த நாட்போலவே தன்மை நீடியிருத்தல். மதில் மருங்கு முகில் நெருங்கு என்பது மதிலின் உயர்ச்சி குறித்தது, உயர்வு நவிற்சி. அப்பதியந்தணர் செய்யும் வேள்விப் பயனும் குறிப்பு.

**கழுமலம்** - சீகாழியின் பன்னிரண்டாவது பெயர். **மூதூர்** - பலவூழிகளினும் அழியாதிருத்தல் குறிப்பு. 2

1901. அப்பதிதா னந்தணர்தங் கிடைகளரு மறைமுறையே
செப்புமொலி வளர்பூகச் செழுஞ்சோலை புறஞ்சூழ
ஒப்பினக ரோங்குதலா லுகக்கடைநா ளன்றியே
எப்பொழுதுங் கடன்மேலே மிதப்பதென விசைந்துளதால். ௩

(இ - ள்) அந்தணர் தங்கிடைகள்...ஒலி - மறைச்சிறு மாணவர்களின் கூட்டம் அருமறைகளை ஓதிவந்த முறையிலே சொல்லுகின்ற ஒலியும்; வளர்...புறம் சூழ - வளர்கின்ற கமுகுகளின் செழும் சோலைகள் புறத்திற் சூழாநிற்ப; ஒப்பில் நகர் ஓங்குதலால் - ஒப்பில்லாத அந்த நகரம் மேலே ஓங்குதலினால்; அப்பதிதான் - அந்தக் கழுமலம் என்னும் தலமானது; உகக்கடை நாளன்றியே...இசைந்துளது - ஊழிக் காலத்தில் மிதப்பது மட்டுமேயன்றி எக்காலத்திலும் கடல் மீதிலே மிதப்பதாகும் என்னும்படி தோற்றத்தைப் பொருந்தியுள்ளது.

(வி - ரை) அந்தணர்தம் கிடை - வேத மோதும் மறைச் சிறுவர் கூட்டம். "ஓது கிடை" (1208).

மறை முறையே செப்பும் ஒலி - வேதங்களை ஆசான் பயிற்றும் பதம், கிரமம், சடை, கனம் என்று சொல்லப்படும் முறைகளின்படி பின்பற்றிச் சொல்கின்றதனால் எழும் ஒலி. வேதச் சத்தமாதலின் ஒலி எனப்பட்டது. இது ஊழிக் கடல் ஒலிக்கு உவமிக்கப்பட்டது பெருஞ்சத்தக் கூட்டமாதல் என்னும் ஒரு புடை ஒப்பாகிய பொதுத் தன்மைபற்றி என்க.

பூகச் செழுஞ் சோலை - பூகம் - கமுகு. கமுகுச் சோலைகள் மிக்க பசுமை நிறம் காட்டுதலால் கருநீல நிறங் காட்டும் கடனிறத்துக்கு ஒரு புடை ஒப்பாயிற்று. மறை முழக்கமும் சோலைப் பசுமையும் கடல் ஓசையினையும் கடனிறத்தினையும் காட்டுதலால் அந்நகர் கடல்மேல் மிதப்பது போன்றது என்க.

உகக் கடைநாள் - ஊழியில் நீர் வெள்ளப் பெருக்கு. நீர்ப் பிரளய மென்பர். கடைநாள் என்றார் ஊழியில் நீரினுள் உலக மழிந்துபடுதலின். உகம் - ஊழி. ஊழியிற் பெருவெள்ளத்தில் உலகமெல்லாம் அழிகின்றபோது தான் அழிந்துபடாது தோணியாய் மிதப்பதனால் இது தோணிபுரம் எனப்படும்.

கடைநாள் அன்றியே எப்பொழுதும் கடல்மேலே மிதப்பதென - ஊழியில் மிதப்பதுவே யன்றி எந்நாளும் மிதப்பதென்னும்படி தோற்றம் கொண்டு. இது தல சரிதக் கண்கொண்டு ஆசிரியர் காணும் தெய்வக் காட்சி.

கடல் மேலே - ஒலியும் சோலையும் மேலே கிளம்பித் தோற்றப்படுவதனால் மேலே என்றார். ஓங்குதலால் என்ற கருத்துமிது.

அந்தணர்தம் கிடை முறையே செப்பும் ஒலி - மேல் இந்நகரில் வந்தவதரித்து மறை முறையினைத் தமிழில் விரிக்கும் மறைப் பிள்ளையாரது குறிப்பும், மறையே திருத்தோணியாம் என்ற வரலாற்றுக் குறிப்பும் பட நின்றது.

இசைந்துளது - இசைதல் - ஒத்திருத்தல். 3

1902. அரியயனே முதலமர ரடங்கவெழும் வெள்ளங்கள்
விரிசுடர்மா மணிப்பதண மீதெறிந்த திரைவரைகள்
புரிசைமுதற் புறஞ்சூழ்வ பொங்கோதங் கடைநாளில்
வரியரவ மந்தரஞ்சூழ் வடம்போல வயங்குமால். ௪

(இ - ள்) அரி அயனே......வெள்ளங்கள் - திருமாலும் பிரமனும் முதலாகிய தேவர்கள் அடங்கும்படி மேலே எழுகின்ற பல நீர்ப் பெருக்குக்கள்; விரிசுடர்... வரைகள் - விரிந்து ஒளி வீசும் பெருமணிக ளழுத்திய மேடைகளின்மீது வீசிய அலைகளால் உண்டாகிய கீற்றுக்கள்; புரிசை......சூழ்வ - புறமதிலின் புறத்தில் வரிசை பெறச் சூழ்ந்திருப்பன; பொங்கு ஓதம்......வயங்கும் - பொங்கும் பாற் கடலைக் கடைந்த காலத்தில் மந்தர மலையை வரிவரியாகச் சுற்றிய வாசுகி என்ற பாம்பாகிய வடம்போல விளங்கும்.

(வி - ரை) அமரர் அடங்க எழும் வெள்ளங்கள் - தேவருலகங்களும் அழிந்து பட மேலோங்கி எழுகின்ற ஊழி நீர்ப் பெருக்குக்கள். இவை பலவாதலின் பன்மையாற் கூறினார்.

பதணம் - மதிலின் மேலிடமாகிய மேடைகள்.

வெள்ளங்கள் - திரை எறிந்த வரைகள் சூழ்வ - வடம்போல வயங்கும் என்று கூட்டி முடிக்க.

ஒவ்வோர் ஊழி வெள்ளப் பெருக்குக்கள் ஒன்றன்மேல் ஒன்று உயர; அவ்வெல்லாக் காலத்தும் இந்நகர் அழியாது தோணியாகி மிதத்தலால் வெள்ளங்களின் அலைகள் மேலோங்கியும் கீழ் வற்றியும் நகர் மதிலின்மீது மோதியதனால் ஆய வரைகள் - நீர் நின்ற நிலை காட்டும் கீற்றுக்கள் - உளவாக அவை அவ்வாறு மேல் கீழாக வரிசைப்பட நகரைச் சூழ்ந்த மதிலைச் சுற்றிக் காணப்படுகின்றன. அக்காட்சி திருப்பாற்கடலைக் கடைந்த காலத்து மத்தாக நட்ட மந்தரத்தைச் சூழ்ந்து கயிறாகச் சுற்றிய வாசுகி யரவு சூழ்ந்திருப்பதுபோலத் தோன்றிற்று. மெய்பற்றி வந்த உவமம். நகர், சூழ்ந்த மதில் மந்தர மலையினையும், அதனைச் சுற்றிய கீற்றுக்கள், பாம்பு சுற்றியதனையும் போன்றன. அக்கீற்றுக்கள் வெள்ளப்பெருக்கின் கணக்கினையும் காட்டுதலால் நகரின் தொன்மையைப் போற்றும் குறிப்புமாம். 4

1903. வளம்பயிலும் புறம்பணைப்பால் வாசப்பா சடைமிடைந்த
தளம்பொலியும் புனற்செந்தா மரைச்செவ்வித் தடமலராற்
களம்பயினீர்க் கடன்மலர்வ தொருபரிதி யெனக்கருதி
யிளம்பரிதி பலமலர்ந்தாற் போல்பவுள விலஞ்சிபல. ரு

(இ - ள்) களம்பயில் நீர்க்கடல் மலர்வது ஒரு பரிதியெனக் கருதி - கருமை மிக்க நீர்நிறைந்த கடலினிடத்தே தோன்றுவது ஒரு ஞாயிறேயாம் என்று கருதி; வளம்பயிலும் புறம்பணைப்பால் - வளமிக்க மணமுடைய மருதநிலத்தின் புறம்பணையினிடத்து; வாசப்பாசடை...தடமலரால் - வாசனையுடைய பசிய இலைகளினிடையே நெருங்கிய இதழ்களுடன் விளங்கும் நீர்ப்பூவாகிய செந்தாமரையின் அன்றலர்ந்த பெரும்பூக்களின் பொலிவினால்; இளம்பரிதி பல மலர்ந்தாற்போல்ப - இளஞாயிறு பலவற்றைத் தோற்றினாற்போலும் காட்சியுடையனவாகிய; பல இலஞ்சி உள - நன்னீர்ப் பொய்கைகள் பல உள்ளன.

(வி - ரை) இப்பாட்டுத் தற்குறிப்பேற்ற அணி.

புறம்பணை - மருதநிலத்தின் வெளிப்பக்கம். பாசடை - பசிய இலைகள்; தளம் பொலியும் - இதழ்கள் விளங்கும். தளம் - இதழ். புனல் - தாமரை - நீர்ப்பூக்கள் பலவற்றுள்ளும் தாமரை என்ற வகை.

செந்தாமரை - செம்மை - வெண்டாமரை ஈண்டைக் கேலாமையின் பிறிதினியைபு நீக்கிய விசேடணம்; இளஞாயிற்றினைப் போன்று விளங்குவது செந்தாமரையேயாம்.

செவ்வித் தடமலர் - செவ்வி - சமயம், தருணம். இங்குப் புதிதின் அலரும் பருவம் குறித்தது. தட - பருமை. இலஞ்சி - நன்னீர்ப் பொய்கை.

மலரால் (கடல்) போல்ப என்று கூட்டுக. மலரால்-மலர்-பால்பகா அஃறிணை; மலர்கள், மலரின் காட்சியினால்; மலரின் தோற்றம் ஈண்டுவமைக்குப் பொதுத் தன்மை. இலஞ்சி - கடலுக்கும், செந்தாமரை - இளம் பரிதிக்குமாக மெய்பற்றி வந்த உவமங்கள்.

**கருதி** - இலஞ்சி பலவும் தாம் கடல்போல்வனவாதற்குத் தம்மிடம் பரிதி மலர்தல் வேண்டும்; அவ்வாறு மலரினும் ஒன்று மலர்தல் எனைக் கடல்களுக்கும் ஒத்தலால் சிறப்பின்று; பரிதி பல மலர்தற் கிடமாயின் தனிச் சிறப்புக்காட்டும் என்பது கருதி, இலஞ்சி, பல மலரால் மலர்த்திக் காட்டின என்பது. ஒரு கடலுக்குப் பல கடல்கள் என்ற சிறப்பும் குறிப்பது.

**மலர்வது - மலர்ந்தால்** - மலர்தல் - தோன்றுதல் என்ற பொருளிலும். மலர்ந்தால் - மலர்வித்தால் எனப் பிறவினைப் பொருளிலும் உரைக்க நின்றது.

**களம் பயில் நீர்க்கடல்** - என்றதனால் உவர் நீர்க்கடல் என்றும், இலஞ்சி, அது போலன்றி நன்னீர் உடையன என்றும் குறிப்பித்தபடி.

**இளம் பரிதி** - கடலில் வந்தெழும்போது உள்ள ஞாயிற்றின் தோற்றம், "இள ஞாயிறின் சோதி யன்னான்" (பிள். தேவா. நட்டபாடை - ஆலந்துறை 6). பின்னர், இந்நகரில் வந்தவதரித்து இளஞாயிறுபோல மலரும் பிள்ளையாரது குறிப்பினை இலஞ்சிகள் காட்டின என்பதும் உட்கோள். "சேம வுதயப் பரிதியிற் றிகழ் பிரானை" (1939) என்பது காண்க.

**இலஞ்சி பலவும்** - கடல்போலப் பெருமையுடையன என்பது உவம உள்ளுறை. முன்னிரண்டு பாட்டுக்களினும் தோணிபுரம் ஊழியிற் கடலுள் மிதந்த தன்மை பற்றிக் கூறியதனையே தொடர்ந்து கூறிய தொடர்பில் உவமக் குறிப்பும் காண்க. 1901-ம் திருப்பாட்டில் நகர், மேலே மிதக்கும்படி கடல் சூழ்ந்த தன்மையாலும், 1902-ம் பாட்டில் அவ்வாறு பலமுறை மிதந்து அடங்கிய வரைகளாகிய அடையாளங்களைப் பற்றிய தன்மையாலும், இப்பாட்டில் அவ்வாறு வற்றியடங்கிய பின் முன் ஒரு கடல் சூழ்ந்தது போலன்றி அதனினும் சிறந்த பல கடல்கள் சூழ்ந்துள்ளன என்ற தன்மைபற்றியும் கூறிய நயம் காண்க. ஊழிக் காலத்தில் உலகமழியும்போது நாம் கண்டு பயன்பெற இயலாமையால் நாம் இன்றும் இந்நகரின் நிலை பேறுகிய அத்தெய்வத் தன்மையைக் கண்டு பயன்பெறும்படி விளங்குவதாம் என்று காட்டிய நயமும் கண்டு கொள்க.

**இளம் பரிதி பல** - கடலில் மலரும் பரிதிகள் ஊழியில் அழிவனவாக, அவற்றை அழியாத நிலைமையில் தம்பாற் காட்டுவன என்ற குறிப்பும் காண்க.

மலராக் களம்பயில்—என்பதும் பாடம். 5

1904. உளங்கொண்மறை வேதியர்த மோமதூ மத்திரவும்
கிளர்ந்ததிரு நீற்றொளியிற் கெழுமியநண் பகலுமலர்ந்
தளந்தறியாப் பல்லூழி யாற்றுதலா லகலிடத்து
விளங்கியவம் மூதூர்க்கு வேறிரவும் பகலுமிகை. ௬

(இ - ள்) உளம்......இரவும் - உள்ளத்தில் கொண்ட மறையின் ஒழுக்கத்தினையுடைய வேதியர்கள் செய்யும் ஓமங்களின் புகைப் படலங்களாலாகிய இரவும்; கிளர்ந்த......பகலும் - கிளர்ச்சி பெற்ற திருநீற்றொளியினாற் பொருந்திய நண்பகலுமாக; மலர்ந்து - எப்போதும் மிக்கு விளங்கி; அளந்தறியாப் பல் ஊழி ஆற்றுதலால் - எல்லை கண்டறியப்படாத பல ஊழிகளிலும் செய்வதனால்; அகலிடத்து விளங்கிய அம்மூதூர்க்கு - அகன்ற உலகத்தில் விளங்கிய அந்தப் பழைய ஊரினுக்கு; வேறு இரவும் பகலும் மிகை - வேறே இரவும் பகலும் வேண்டப்படா.

(வி - ரை) **உளங் கொள் மறை - வேதியர்** - எழுதப்படாமல் மனப்பாடமாக வழி வழி வரும் மறையாகிய வேதம். உளங்கோள் - கிரியைக் குரிய பாவனையை மனங்கொள்ளும் என்பாருமுண்டு.

**ஓம தூமத்து இரவு** - வேத வேள்விகளின் புகையாற் செய்யப்பட்ட இருள் சூழ்ந்தமையால் காட்டப்பட்ட இரவுப்பொழுது. **தூமம்** - புகை. **தூமத்து** - தூமத்தினால் உளதாகும்.

**கிளர்ந்த திருநீற்று ஒளியிற் கெழுமிய நண்பகல்** - திருநீற்றின் வெள்ளிய ஒளியினாற் காட்டப்பட்ட நண்பகற்பொழுது. "கடும்பகலின் வேலையே போன் றிலங்கும் வெண்ணீறு" (அற். அக். 65). **கிளர்ந்த** - கிளர்ச்சி பெற்ற. **நீற்றின் கிளர்ந்த ஒளி** என்று கூட்டுக. **கிளர்ந்த** - **நீறு** என்று கூட்டி கிளர நின்ற என்று கொண்டு இப்பதியில் அவதரித்த பிள்ளையாரால் மீளக் கிளர்ச்சி பெற நின்ற நீறு என்ற குறிப்புப்படக் கூறலுமாம். "பூதிசாதன விளக்கம் போற்றல் பெருதொழியக் கண்டு" (1916), "பரசமய நிராகரித்து நீறு ஆக்கும்" (1917), "தூய திருநீற்று நெறி யெண்டிசையுந் தனிநடப்ப" (1921), "சராசரங்க ளெல்லாம் சிவம் பெருக்கும்" (1924); "வெண்ணீற்றின் சோதி மாதிரந் தூய்மை செய்ய" (2756 = திருஞான. புரா. 858), "திருநெறி நடந்த தன்றே" (2758 = ஷை 859) முதலி யவை காண்க.

**மலர்ந்து** மலர்தல் ஈண்டு உண்டாதல் என்னும் பொருளில் வந்தது. இரவும் பகலுமாக மலர்ந்து, இவ்வாறு பல ஊழிகளிலும் ஆற்றுதலால் என்க.

**பல் ஊழி** - இவ்வூர் மிதந்து அழியாதிருக்கும் பலவாகிய பன்னிரண்டு ஊழி களிலும். **அளந்தறியா** - என்றது அவ்வூழிகளிற் சென்ற காலத்தின் அளவினை.

**அகல் இடத்து விளங்கிய** - அகலிடம் - விரிந்த உலகம். **அகல்** - அழிந்த என்று கொண்டு ஏனை உலகம் அழிந்த அவ்விடத்து - அப்போது - அழியாது விளங்கிய என்றலுமாம்.

**வேறு இரவும் பகலும் மிகை** - **வேறு** - தூம இரவும் நீற்றொளிப் பகலுமன்றி இவற்றின் வேறாகிய அஃதாவது சூரியனாற் செய்யப்பட்ட பகலிரவு என்ற நாட் கூறுகள், **மிகை** என்றது. சூரியனும் அவன் செய்யும் காலக்கூறுபாடும் இருந்தும் அதுபற்றி நாட் கழியாமலும் அழியாமலு மிருத்தலாலும், ஊழிதோறும் வரும் பல சூரியர்களைக் கண்டும் வேறுபடாது ஒன்றுபோல விளங்கும் பகல் இரவுகளைக் கொண்டுள்ளமையாலும் **மிகை** என்றார். பகலில் தூமத்திரவும் இரவில் நீற்றொளிப் பகலும் விளங்குதலால் ஒரு பகல் இரவுகள் மிகையாக - அதிகமாக - உள்ளன என் றலுமாம்.

**இரவும் பகலும் மிகை** - முன் பாட்டிற் பரிதி பல என்றும், ஒரு பரிதி என்றும் கூறிய கருத்தைத் தொடர்ந்து அப்பரிதிகள் வரினும் அவற்றால் வரும் நாட்கூறு இதனைத் தாக்காது செல்லுதலின் மிகையாம் என்று கூறிய உள்ளுறையும் காண்க. **இரவும் பகலும்** என்பது அவற்றைச் செய்யும் காலக் கடவுளை உணர்த்தி அக் கடவுளின் தொழிற்பாடு வேண்டப்படுவதின்று, ஈண்டு மாயையைக் கடந்த சிவச் செயலே செயலாக நிகழ்தலான் என்றலுமாம்.

**வேத வேள்வியும் நீற்றொளியும்** - இந்நகருக்கும் அதுபோலவே உயிர்களுக்கும் அழிவில்லாத தன்மையைச் செய்வன என்ற சாத்திர உண்மை விளக்கமும் காண்க. ஒளிப்பெருக்கால் திருக்காளத்தியில் இரவொன்றில்லை (780) என்றும், திருநீற்றொளி யால் இரவு களங்கமின்றி விளங்கும் (1018) என்றும் வந்த கருத்துக்களும் இங்கு நினைவு கூர்தற்பாலன.



1905. பரந்தவிளை வயற்செய்ய பங்கயமாம் பொங்கெரியில்
வரம்பில்வளர் தேமாவின் கனிகிழிந்த மதுநறுநெய்

நிரந்தரநீ ளிலைக்கடையா லொழுகுதலா னெடிதவ்வூர்
மரங்களுமா குதிவேட்குந் தகையவென மணந்துளதால். எ

(இ - ள்) பரந்த......எரியில் - இடமகன்ற விளைவோடு கூடிய வயலில் எழுந்த சிவந்த தாமரை மலராகிய பொங்கும் தீயினில்; வரம்பில்......நெய்-அவ்வயல் வரம்பிலே வளர்கின்ற தேமாமரத்தின் பழம் பிளந்ததனால் வரும் சாறாகிய நறு நெய்யானது; நிரந்தரம்......ஒழுகுதலால் - நீண்ட இலை நுனியின் மூலம் இடைவிடாது ஒழுகுவதனால்; மரங்களும்......தகையவென - உரிய மக்களே யன்றி மரங்களும் ஆகுதிவேட்கும் தன்மையுடையன என்னும்படி; அவ்வூர் மணந்துளதால் - அவ்வூர் பொருந்தியுள்ளது. ஆல் - அசை.

(வி - ரை) இத்திருப்பாட்டுத் தொழில்பற்றிப் போந்த நட்ப வணியினையும் தற்குறிப்பேற்ற வணியினையும் உள்ளுறுத்த முற்றுருவகம்.

**விளை வயல்** - ஆகுதி வேள்விக்களமாகவும், **பங்கயம்** - எரியாகவும்; **மாங்கனிச் சாறு** - எரியிற் பெய்யும் ஓம நெய்யாகவும்; மாவிலை - அந்நெய்யினை எடுத்துப் பெய்யும் ஓமத்துடுப்பாகவும்; மா முதலிய **மரங்கள்** ஆகுதி செய்யும் தலைவர்களாகவும் உருவகிக்கப்பட்டன. **இலைக்கடையால்** - என்றதனால் மரங்களின் கிளைகள் வேள்வியில் நெய் சொரியும் கைகளாகக் கொள்ள நின்றன. பங்கயம் - மலருக்கு ஆகுபெயர்.

**மரங்களும்...தகைய** - வேதியர்களது ஓமதூமம் இடைவிடாது நிற்றல் முன் பாட்டிற் கூறினர்; அதனைத் தொடர்ந்து அவ்வேதியர்களே யன்றி மரங்களும் ஆகுதி வேட்கும் தன்மை தோன்ற நின்றன என்றார். **மரங்களும்** - உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. **வேட்கும்**-வேள்வி செய்யும். விரும்பும் என்ற தற்குறிப்பேற்றமும் காண்க. **தகைய**-தகைமை-தன்மையை-யுடையன; **அவ்வூர் மணந்துளது**-என்று கூட்டி முடித்துக் கொள்க. இவ்வாறே நாடு - நகரம் - ஆறு - மரம்-முதலியவற்றின் இயற்கைவளங்களை அவ்வந் நாயன்மார்களது சரிதக்கண்கொண்டு அத்தன்மையே பெறக்காணும் ஆசிரியரது தெய்வக் கவிநலம்பற்றி முன் 1018-1019 - 1020 - 1042 பாட்டுக்களையும் ஆண்டுரைத்தவற்றையும் பார்க்க. இதுபோன்று மேல்வரும் 1907-ம் பிறவும் காண்க.

**வயற் செய்ய பங்கயம்** - இது நீர்ச் சிறப்பினால் இன்றும் பல இடங்களிற் காணவுள்ளது.

**பங்கயமாம் பொங்கு எரியில்** - ஆம் - ஆக்கச் சொல் உருவகம் குறித்தது. இதனை மது முதலிய ஏனையிடங்களிலும் கொள்க. "செழுநீர்க் கமலங்கள் மேலாலெரிகாட்டும்" (பிள். தேவா. வீழி).

**வரம்பில் வளர் தேமா** - வயலின் பயிர்களுக்கு நிழல் தாக்காதபடி மா முதலியவற்றை வயல் ஓரங்களில் வளர்க்கும் முறையை அறிவிக்க **வரம்பில் வளர்** என்றார். **தேமா** - மாவின் சிறந்த ஒருவகை.

**மது நறு நெய்** - **மது** - என்பது சுவையினையும், **நறு** - மணத்தையும் உணர்த்தின. இவை மாங்கனியின் சாற்றுக்கும் ஓம நெய்யினுக்கும் ஒப்ப உரிய பண்புகள்.

**நிரந்தரம் நீள் இலைக்கடையால் ஒழுகுதலால்** - **நிரந்தரம் ஒழுகுதல்** - வேள்வியில் நெய் சொரியும் பண்பு. மிகுதியாய்ச் சொரிதலும், இடையறுதலும் இன்றி ஒரு தன்மைத்தாய் மெல்லியதாய் ஒழுகவிடுதல் முறை. தைல தாரை என்பர். **நீள் இலைக் கடையால்** - **நீள் இலை** - மாவிலை. தன்மைநவிற்சி. "நெட்டிலை யிருப்பை" என்ற புறப்பாட்டின் சுவையினும் மேம்பட்ட சுவை இம்மாவின் நீளிலையிற் கண்டு கொள்க. மாவிலை கொண்டு ஆகுதி நெய் சொரியும் வழக்கும் காண்க. **ஆல்** - மூன்றனுருபு. நீளிலை-நெய் பெய்யும் துடுப்பாக (சிருக்கு) உருவகம். **ஒழுகுதலால்** - ஒழுக்கு

தலால் என்ற பிறவினைப் பொருளில் வந்தது. இவ்வாறு காணும் ஒழுக்கத்தைக் கொண்டிருத்தலால் என்ற குறிப்புடன் இரட்டுற மொழிந்துகொள்ளவும் நின்றது.

நெடிது - நீண்டகாலம். "அளந்தறியாப் பல்லூழி"யும் (1904).

தன்மை - உவமை - உருவகம் - குறிப்பு - தற்குறிப்பேற்றம் முதலிய பல அணிச் சுவைகளும் கொண்டு விளங்கும் பெருஞ்சிறப்புடைய இத்திருப்பாட்டுப் புலவர்க்குப் பெருவிருந்தாகும்.

தகைமையென - வயங்கியதால் - மலர்ந்துளதால்—என்பனவும் பாடங்கள். 7

1906. வேலையழற் கதிர்படிந்த வியன்கங்குல் வேண்மதியஞ்
சோலைதொறு நுழைந்துபுறப் படும்பொழுது துதைந்தமலர்ப்
பாலணைந்து மதுத்தோய்ந்து தாதளைந்து பயின்றந்தி
மாலையெழுஞ் செவ்வொளிய மதியம்போல் வதியுமால். அ

(இ - ள்) வேலை...கங்குல் - ஞாயிறு கடலினுள் படிந்தபின் உளதாகும் பின் இரவில் விளங்கும் வெள்ளிய மதியம்; சோலை...பொழுது - சோலைகள்தோறும் நுழைந்து நுழைந்து வெளிப்பட்டுத் தோன்றும்பொழுது; துதைந்த...பயின்று - நெருங்கிய மலர்களின் பக்கத்தில் அடைந்து அவற்றின் தேனிலே தோய்ந்தும் மகரந்தங்களை அளாவியும் இவ்வாறு நெடுநேரம் பயின்றதனால்; அந்தி...வதியும் - அந்திமாலைப்போதில் எழுகின்ற செவ்வொளியினையுடைய மதியினைப்போல் (இந்நகரத்தில்) நிலைபெற்று விளங்கும்.

(வி - ரை) கங்குல் வெண்மதியம் - அந்திமாலை எழும் செம்மதியம்போல் வதியும் - என்று கூட்டியுரைக்க. மதி, அந்திமாலையில் உதிக்கும்போது செவ்வொளி காட்டும்; பின்னர் வெண்மதியாய் விளங்கும். இந்நகரத்தில் அவ்வாறன்றி இரவிலும் செவ்வொளியுடன் விளங்கும் என்றபடி; அதன் காரணம், சோலைதொறும் நுழைந்து மலர்த்தேன் றோய்தலும் மகரந்தம் அளாவுதலுமாம் என்பது.

வெண்மதியம் - செவ்வொளிய மதியம்போல் வதியும்-வெண்மதி நுழைந்து - அணைந்து - தோய்ந்து - அளைந்து - பயின்று செம்மதிபோல வதியும் என்றலால் இது தொழில்பற்றி வரும் அதிசய அணி. வினையெச்சங்கள் காரணப்பொருளில் வந்தன.

சோலைதோறும் நுழைந்து - அந்நகரினைச்சூழ்ந்த சோலைகள் பலவும் வானுற நீண்டு வளர்ந்து ஆகாய வெளியை மறைப்பனவாக உள்ள நிலை காட்டப்பட்டது. அழற்கதிரின் வெப்பமாற்றாது பல சோலைதொறும் நுழைந்தது என்று தற்குறிப்பேற்றம்பட உரைத்ததும் காண்க.

நுழைதல் முதலிய தொழில்களை மதியம் செய்யாவிடினும் செய்ததுபோலவும், அதன்பயனுகத் தன்மையும் கோலமும் மாறியதுபோலவும் கூறுதல் அணிநயம்.

அழற்கதிர் - ஞாயிறு. அழல் - வெப்பம். கதிர் - ஒளி. அதனையுடைய ஞாயிற்றுக் காயிற்று. அழற்கதிர் வேலைபடிந்த - என்று கூட்டுக.

வியன் கங்குல் - வியன் - பெரிய; முற்றிய. அந்தி மாலை - கதிர்படிவதற்கு முன் உள்ள நேரம். வியன் கங்குல் - பின்னுள்ள நேரம். (வியன் - வியப்புமாம்.)

நுழைதல் - புறப்படுதல் - அணைதல் - தோய்தல் - அளைதல் - பயிலுதல் என்ற இச்செயல்கள் நில அண்டமும் மதி யண்டமும் என்ற இவற்றின் சுழல்கையினால் ஆவனவேனும் இவை மதியின் செயல்களாகத் தோற்றப்படுதலின் மதியின் மேலேற்றிக் கூறினர். கதிர்படிதலும் அவ்வாறு மலர்ப்பால் அணைதலும் மதுத் தோய்தலும் தாது அளைதலும் என்ற இவை அவ்வவற்றின் வழியாக மதியின் கதிர்கள் பலநிறக் கண்ணாடிமூலம் காண்பது காட்சிப்படும்போது உள்ள தோற்றம் குறித்தன.

இவை இயற்கையிற்காணும் தன்மையணிப்பாற்படுவன என்க. அந்தி மாலையில் மலர்கள் மலரும் இயல்பும் காண்க.

சேவ்வொளிய மதியம்போல் - மாலை எழுந்தபின் நெடுநேரம் கழியவும் எழுந்த போது உள்ளபடியே விளங்கச்செய்யவல்லது இந்நகரத்தின் தொடர்பு என்றதனால் காலத்தால் கழிந்துபடாது நிலைபேறு பெறுவிக்கும் சிவத்தன்மை பெற்றது இந்நகரம் என்றது குறிப்பு. வெண் மதியம் - மூப்பால் வரும் நரைத்தன்மையினையும், சேவ்வொளி - மாறுநிலையாகிய செம்மை என்னும் சிவத்தன்மையினையும் குறிப்பாலுணர்த்தின. முன் 1903 - 1904 பாட்டுக்களில் ஞாயிறுபற்றி இத்தன்மை குறிப்பித்தபடி இங்குத் திங்கள்பற்றியும் அதனைக் குறிப்பித்த நயமும் கண்டுகொள்க.

சோலை - இந்நகரில் இந்திரன் நந்தவனம் வைத்து வழிபட்ட கந்தபுராண வரலாற்றுக் குறிப்பும் காண்க.

சேயொளிய—என்பதும் பாடம். 8

1907. காமர்திருப் பதியதன்கண் வேதியர்போற் கடிகமழுந்
தாமரையும் புல்லிதழுந் தயங்கியநா லுந்தாங்கித்
தூமருநுண் கேளணிந்து துளிவருகண் ணீர்ததும்பித்
தேமருமென் சுரும்பிசையாற் செழுஞ்சாமம் பாடுமால். கூ

(இ - ள்) காமர் திருப்பதி அதன்கண் - அழகிய அத்திருநகரிடத்து; கடிகமழும் தாமரையும் - மணங்கமழும் தாமரையும்; வேதியர்போல் - வேதியர்களைப்போல; புல்லிதழும்....தாங்கி - புறவிதழ்களையும் விளங்கும் நூலையும் தாங்கிக்கொண்டு; தூமரு நுண் துகள் அணிந்து - தூய்மை பொருந்திய நுண்ணிய துகள்களை அணிந்து; துளி வரு கண்ணீர் ததும்பி - துளித்துவரும் கண்ணீர் ததும்பி; தேமரு...பாடும் - தேம் பொருந்தவரும் வண்டினிசைபோல இனிய சாமகீதத்தைப் பாடும்.

(வி - ரை) இத்திருப்பாட்டினால் சிலேடை வகையினால் தாமரையும் வேதியர் போன்றன என்று கூறியபடி. சொற் சிலேடையை உள்ளுறுத்த தொழிலும் மெய்யும்பற்றி வந்த உவமையணி.

வேதியர்போல் - தாமரையும் - தாமரை வேதியர்க்குரிய அடையாள மாலை. இவ்வித் தன்மையால் ஒப்புமைபற்றி அத்தகுதிபெற்றதென்ற உள்ளுறையும் காண்க.

புல்லிதழும் நாலும் தாங்குதல் - நுண்துகள் அணிதல் - கண்ணீர் ததும்புதல் - இசையாற் சாமம் பாடுதல் என்ற இவை ஒப்புமைப் பண்புகள்.

தாமரைபற்றிக் கொள்ளும்போது, புல்லிதழ் - புறவிதழ்; தயங்கிய நால் - தண்டின் உள்ள நூல்; நுண்துகள்-பூந்தாது; கண்ணீர்-தேனாகிய நீர் (கள் - தேன்); பாடுதல் - வண்டினிசையால் சாமம் இசைத்தல் - சாமம் இசைப்பொது எனவும்;

வேதியர்பற்றிக் கொள்ளும்போது, புல்லிதழ் - (புல்-தருப்பை) தருப்பை இதழ்களாலாகிய பவித்திரம்; நூல் - பூணூல்; நுண்துகள் - திருநீறு; கண்ணீர் - அன்பு மிகுதியினால் துளித்துவரும் ஆனந்தக் கண்ணீர்; சுரும்பிசையால் சாமம் பாடுதல் - வண்டின் இசைச் சுரம்போலப் பல சுரங்களும் பொருந்தச் சாம வேத கீதம் பாடுதல்; எனவும் கொள்க. புல்லிதழ் - முஞ்சி நாண் என்றும், புல் ஆடை என்று முரைப்பாருமுண்டு.

தூமரு நுண்துகள் - தேமரு (மென்) சுரும்பிசை - வேதியர் பாற்கொள்ளும் போது தூய்மை செய்வது திருநீறு என்றதும், (தே - தெய்வத் தன்மை) தெய்வத் தன்மைபற்றி எழுதுவது வேத நாத இசை என்றதும் குறிப்பு.

முன்னர், மரங்களும் ஆகுதி வேட்கும் தகைய (1905) என்றதனையே தொடர்ந்து ஆண்டு வேள்விச் சாதனங்களாகிய எரி - நெய் - துடுப்பு முதலியவைப்பற்றிக் கண்ட காட்சி நிலையிற் கூறிய ஆசிரியர், ஈண்டு வேள்வி வேட்போரது காட்சியையும் தாவரங்களிற் கண்டு காட்டுகின்ருர். முன் உரைத்தவை யெல்லாம் ஈண்டும் கொள்க.

சேழும் சாமம் - செழுமையாவது எல்லாச் சுரங்களும் பொருந்தும் சிறப்பு. வேதியர்பாற் கூறும்போது சுரும்பு இசையால் என்றது சுரும்பின் (இரீங்காரம்) இசை போன்ற ஒலி பெற என்க. இசையால் - ஆல் - உவம உருபு. 9

1908. புனைவார்பொற் குழையசையப் பூந்தானை பின்போக்கி
வினைவாய்ந்த தழல்வேதி மெழுக்குறவெண் சுதையொழுக்கும்
கனைவான முகிற்கூந்தற் கதிர்செய்வட மீன்கற்பின்
மனைவாழ்க்கைக் குலமகளிர் வளம்பொலிவ மாடங்கள். க0

(இ - ள்) புனை......அசைய - அணியும் நீண்ட பொன்னுலாகிய குழைகள் காதில் அசைய; பூந்தானை பின் போக்கி - அழகிய பட்டுடையின் தானையினைப் பின் புறமாகச் செருகி, வினைவாய்ந்த......ஒழுக்கும் - செயல் வாய்க்கப் பெற்ற தீ வளர்க்கும் வேதிகையினை மெழுக்குப் பொருந்தச் செய்து வெண் சுண்ணக் கோலம் இடுகின்ற; கனைவான முகில் கூந்தல் - ஒலியினைப் பொருந்திய வானில் எழும் மேகம் போன்ற கூந்தலினையுடைய; கதிர் செய்வடமீன் கற்பின் - ஒளி செய்யும் வடமீன் என்னும் அருந்ததியின் கற்பு வாய்க்கப் பெற்ற; மனை வாழ்க்கை...மாடங்கள் - இல் வாழ்க்கைத் துணையாய் விளங்கும் குலமகளிர் நிரம்பிய வளங்களால் மாடங்கள் விளக்கம் பெறுவன.

(வி - ரை) குழை யசைய - தானை பின் போக்கி - என்பனவற்றல் மகளிரின் அணி நலன், ஆடை நலன்களையும், வேதி மெழுக்குற வெண் சுதை ஒழுக்கும் - என்ற தனுல் தொழில் நலனையும்; முகிற் கூந்தல் - உடல் அழகு அமைப்பு நலனையும்; வடமீன் கற்பின் - என்றதனுல் குண நலனையும்; மனை வாழ்க்கைக் குலமகளிர் - என்றதனுல் உலகியலில் மகளிர்பால் வேண்டப்படும் ஏனை இல்லற நலன்களையும் கூறிய நயம் கண்டுகொள்க.

குலம் - உயர்குடி. வளம் - மேற்கூறிய நலன்களெல்லாவற்றுனும் வரும் பயன்களின் தொகுதி. வளம் - வளங்களால் என்க.

மாடங்கள் வளங்களாற் பொலிவ - என்று கூட்டுக. வளம் மாடங்களிற் பொலிவன என்றலுமாம். வளம் - என்றதனுல் வாழ்க்கைத் துணைநலம் என்ற பகுதியிலும், மனைவாழ்க்கை - என்றதனுல் இல்வாழ்க்கை என்ற பகுதியிலும், திருவள்ளுவனுர் கூறும் நலன்கள் எல்லாவற்றையும் வைத்துக் கண்டுகொள்க.

வார் பொற் குழை அசைய - குழை - காதணி - அசையும்படி நீண்ட காதுடைமை முன்னுள் அணி நலமாகக் கொள்ளப்பட்டது. இந்நாளில் காது நீளாது அணி குழை மட்டும் நீண்டு தொங்குதல் அணியாகக் கொள்ளப்படும் வழக்குக் காண்க.

பூந்தானை பின் போக்கி - தானை - ஆடையின் நுனி. முன் தானை என்பர். அதனைப் பின்புறமாகச் செருகுதல் முன்னுள் வழக்கு. முன்புறம் செருகுதல் பிற் கால வழக்கு. பின் செருகுதல் வினை செய்யும் வசதிக்கும் உதவுவதாம்.

வேதி மெழுக்குறச் சுதை ஒழுக்குதல் - வேதியர் குலமகளிர் செய்யத்தக்க கடமைகள் பலவற்றுள்ளும் தலைமையாகிய சிறப்புப்பற்றி இதனை எடுத்துக் கூறினுர்; இதனுல் ஏனைய எல்லாமடக்கிக் கொள்ளப்படும். வேதியர் வேதவேள்விச் செயல் பற்றி முன் 1904 - 1905 - 1907 பாட்டுக்களிற் கூறினுராதலின் அதற்கேற்ப அவர்

மகளிரும் தத்தம் கணவருடன் கலந்து வேள்விக்காவன முறை புரிகின்றனர் என்று கூறியபடி. மனைவேள்விகள் கணவன் மனைவி இருவரும் கூடிச் செய்யற்பாலது என்பது விதி.

**சுதை ஒழுக்கும்** - வெண் சுண்ணக்கோலம் (மாக்கோலம் என்பது இந்நாள் வழக்கு) ஒழுக்கி யிடுதற்பாலது.

**கனை வானம்** - கனைத்தல் - சத்தித்தல்; வானம், ஒலி என்ற ஒரே குண முடையது.

**முகிற் கூந்தல்** - உருப் பற்றி வந்த உவமம். "மஞ்சு தழைத்தென வளர்ந்த மலர்க் கூந்தல்" (894) என்ற விடத்திற் போலப் பயனுவமுமாம்.

**வட மீன்** - அருந்ததி; கற்புக்கிலக்கியமாகக் கூறப்படும் வான மீன். **கதிர் செய்தல்** - ஒளியால் விளங்குதல். இப்பாட்டால் அந்நகர் மாடங்களின் சிறப்பும் இல்வாழ்க்கை நலமுடைய மறையோர் மகளிர் சிறப்பும் கூறப்பட்டன. முன் பாட்டுக்களிற் புறநகர்ச் சிறப்புக் கூறிவந்த ஆசிரியர், இனி, உண்ணகரச் சிறப்புப் பற்றிக் கூறப்புகுகின்றார். 10

1909. வேள்விபுரி சடங்கதனை விளையாட்டுப் பண்ணைதோறும்
பூழியுற வகுத்தமைத்துப் பொன்புனைகிண் கிணியொலிப்ப
ஆழிமணிச் சிறுதேரூர்ந் தவ்விரதப் பொடியாடும்
வாழிவளர் மறைச்சிறார் நெருங்கியுள மணிமறுகு. கக

(இ - ள்) **வேள்வி புரி சடங்கதனை** - வேள்விகளிற் செய்யும் சடங்குகளை; **விளையாட்டு...அமைத்து** - தாம் விளையாடும் இடங்களிலெல்லாம் மண்ணின் புழுதி பொருந்தும்படி வகுத்து அமையச் செய்து; **பொன் புனை...ஊர்ந்து** - பொன்னாலியன்ற கிண்கிணிகள் சத்திக்கும்படிச் சக்கரம் பூட்டிய அழகிய சிறு தேர்களை ஊர்ந்து; **அவ்விரதப் பொடி ஆடும்** - அந்தத் தேரூர்தலினால் கிளம்பிய மண் துகள் படிய விளையாடுகின்ற; **வாழி வளர்...மறுகு** - வாழும்படி வளர்கின்ற மறைச் சிறுவர் நெருங்கியுள்ளன அழகிய தெருக்கள்.

(வி - ரை) வேதியர்களையும் அவரது மகளிர்களையும் முன்னர் வேள்வி பற்றிச் சிறப்பித்துக் கூறிய ஆசிரியர், அதனையே தொடர்ந்து அவர்தஞ் சிறார்களது சிறப்பினையும் அத்தன்மை பற்றியே கூறுகின்றார். பெற்றோரது வாழ்க்கையின் இயல்பினைக் கண்டு அதனையே பின் பற்றுவது அவ்வச்சிறாரினியல்பாகும் என்ற உண்மையும் காண்க.

**வேள்வி புரி சடங்கு அதனை** - வேள்விக்கண் புரியும் என ஏழனுருபு விரிக்க. புரி சடங்கு - பெரியோர்கள் புரியும். **சடங்கு** - சடங்குகள். பால்பகா அஃறிணை. **அது** - பகுதிப்பொருள் விகுதி.

**விளையாட்டுப் பண்ணை** - விளையாடும் இடம்; ஆடிடம்; பண்ணை - இடம் என்ற பொருளில் வந்தது என்பர். பண்ணை - கூட்டம் என்று கொண்டு விளையாடும் கூட்டந்தோறும் என்றலுமாம்.

**பூழியுற வகுத்து அமைத்து** - **பூழி** - புழுதி - மண்; யாகசாலை, வேதிகை முதலிய வற்றை ஆடிடத்தில் மண்ணால் வகுத்தலும் அமைத்தலும் செய்து. **வகுத்தல்** - இடம் அளவு படுத்தல். **அமைத்தல்** - அதனுள் வேதிகை முதலியவற்றைக் கூறிட்டு நிறுவுதல். **சிறு தேர் ஊர்ந்து** - இதனால் அவ்வாறு ஆடும் சிறாரின் பருவங் கூறப் பட்டது, 3-வது மாதம் முதல் ஒற்றைப்பட 21-வது மாதம் முடியப் பத்துப்

பருவங்களும் வரும். (அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் பார்க்க.) இப்புராணத்தில் 51, 52-வது பாடல்களும் பார்க்க. சிறு தேர்ப் பருவம் 20, 21-வது மாதங்களில் நிகழ்வது.

**அவ்விரதப் போடி ஆடும்** - தாம் ஊர்ந்த அந்தச் சிறு தேரின் உருளையினால் கிளம்பிய மண் புழுதி படிய விளையாடுகின்ற. **அகரம்** - தாம் ஊர்ந்த அந்த என முன்னறி சுட்டு. **இரதப் போடி** - இரத மூர்ந்ததனால் உளதாகும் பொடி.

**வாழி வளர் மறைச்சிறார்** - சிறுவர்களைப் பற்றிச் சிறப்புக் கூறியது, முன்னர்க் கூறிய இல்வாழ்க்கையின் மங்கலமாவது நன் மக்கட் பேறே என்று திருவள்ளுவர் இல்வாழ்க்கையினை அடுத்து மக்கட்பேறு என்ற அதிகாரத்தினை வகுத்த குறிப்புத் தருவதாம்.

**வாழிவளர் மறைச்சிறார்** - இச்சிறுவர் கூட்டத்தினுள் இனி ஆளுடைய பிள்ளையாரும் கூடி விளையாடி வருவாராதலின் அதன் பொருட்டு **வாழிவளர்** என்று வாழ்த்திய குறிப்புமாம். வேத வேள்வியை நிந்தனை செய்துழலும் அமண்டேரர்களை வாதில் வென்றழித்து மறைவழக்க மெடுக்க இங்கு மறையவர்குலத்து வந்து அவதரிப்பவர் பிள்ளையாராதலான், இந்நகரச் சிறப்புக்களையெல்லாம், அக்குல நலமுடைய வேள்விச்சிறப்புப்பற்றியே கூறுகின்றார். (1904-1905-1907-1908-1909); பிள்ளையார் சிறுவர்களுடன் விளையாடும் சிறப்பு "குறுவியர்ப்புத் துளியரும்பக் கொழும்பொடியாடியகோல, மறுகிடைப்பே ரொளிபரப்ப வந்துவளர்ந் தருளு நாள்" (1950) என்பது முதலியவற்றாற் காண்க.

**சிறுதேர் ஊர்ந்து** - யாக முடிவில் பெரியோர் "அவபிருதஸ்நானம்" செய்து, நீறு பூசித், தேர்ஊர்ந்து, நகர்வலம் வந்து, வீடு புகுவதுபோலச், சிறுவரும் இரதப்பொடியாடிச் சிறுதேர் ஊர்ந்து மனை செல்வர் என, முற்றுவமக் குறிப்பும் காண்க. 11

1910. விடுசுடர்நீண் மணிமறுகின் வெண்சுதைமா ளிகைமேகந்
தொடுகுடுமி நாசிதொறுந் தொடுத்தகொடி சூழ்கங்குல்
உடுவெனுநாண் மலரலர வுறுபகலிற் பலநிறத்தால்
நெடுவிசும்பு தளிர்ப்பதென நெருங்கியுள மருங்கெல்லாம். கஉ

(இ - ள்) **விடுசுடர் நீள்மணி மறுகின் மாளிகை** - சுடர்விடுகின்ற நீண்ட மணிகள் அழுத்திய வீதிகளின் வெள்ளிய சுண்ணச் சாந்தினால் இயன்ற மாளிகைகள்; **மேகம்...தொடுத்த கொடி** - மேக மண்டலத்தைத் தொடுவதுபோல நீண்ட சிகர நாசிகள்தோறும் கட்டப்பட்ட கொடிகளால்; **சூழ்கங்குல்** - இருள்பரவிய இராப்போதிலே; **உடுவெனும் நாள் மலர் அலர** - விண் மீன்கள் என்னும் புதிய பூக்கள் அலர்தற்கு; **உறுபகலில்** - உற்றபகற் போதிலே; **பல நிறத்தால் நெடுவிசும்பு தளிர்ப்பதென** - பல நிறங்களுடன் நீண்ட வானத்தில் தளிர்ப்பது போன்று; **மருங்கெல்லாம் நெருங்கியுள** - பக்கங்களிலெல்லாம் நெருங்கியுள்ளன.

(வி-ரை) **மாளிகைக் குடுமி மணி நாசிதோறும்** என்க. மாளிகைளின் சிகரங்களின் மணிகள் இழைத்த வாய்தல்கள்தோறும். **நாசி** - முன்புறம் நீண்ட வாயில்கள், "காமர் மணி நாசிகையின் மருங்கு" (1172) என்பதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. மாளிகைகள் பளிங்கு முதலிய மணிகளைக் கொண்டு வானத்தில் ஓங்கி விளங்கும் தன்மை பற்றி 1167 முதல் 1174 வரை பாட்டுக்களும் "பாங்குமணிப் பலவெயிலுஞ் சுலவெயிலுமுள மாடம்" (870) என்றதும், பிறவும் பார்க்க. **நாசி** - மாளிகைகளிற் கொடி நடுவதற்குற்ற ஓர் உறுப்பு; நாடி என்றும் கூறப்படும்.

**வெண்சுதை மாளிகை...கோடி** - மாளிகைகள் மேகமண்டலத்தை அளாவ வுயர்ந்தன ; அவற்றின் உயர்ந்த சிகரத்தின் முன்பு நீண்ட நாசிகைகள் தோறும் வரிசைபெறக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன என்றதாம்.

**மணி வெண்சுதை மாளிகைக் - கோடி - கந்தல் - உடுவேனும் - மலர் அலராப் - பகலில் விசும்பு தளிர்ப்பதேன - நெருங்கியுள** - என்றது வெண்சுதையா லியன்று உயர்குடிகளில் மணிகள் பதித்த மாளிகைகளில் நாசிகைதொறும் பலநிறக் கொடிகள் வரிசைபெறக் கட்டப்பட்டுள்ளன ; வெண்சுதை மணிமாளிகை நெருக்கம் பகல் செய்தது ; மணிகள் சூழ் இரவினிடத்து உடுக்களாகிய மலர்கள் அலர்வன போன்றன ; மணிமாளிகைகள் சுதைப்பகலாகிய ஒளியிடத்து இரவில் உடுக்களாகிய மலர்கள் தம்மிடம் அவர்தற்பொருட்டுப் பகலில் கொடிகளால் பல நிறத்தால் விசும்பில் தளிர்ப்பனபோல அக்கொடிகளின் சூழல் விளங்கிற்று. இவ்வாறுள்ள வெண்சுதை மணிமாளிகைகளும் அவற்றிற் கொடிகளும் மருங்கெல்லாம் நெருங்கியுள என்பதாம். **மறுகின் - வெண்சுதை - மணிமாளிகை - கோடி - நெருங்கியுள** - என்று கூட்டுக. தற்குறிப்பேற்றம்.

**மறுகின்** - முன்பாட்டில் நெருங்கியுள மணிமறுகு என்ற அந்த மறுகு என முன்னறி சுட்டு விரித்துக்கொள்க. இவற்றின் தன்மை முன்விரித்தபடியால் அடை மொழியாற் சுருக்கிக் கூறினர். அந்த மறுகின் மாளிகை - கொடி - என்க.

**மாளிகை - கந்தல் - உடு - அலராப் - பகலில் விசும்பு தளிர்ப்பதேன நெருங்கியுள** - ஓமதூமத்திரவும், நீற்றின் பகலும் ஆற்றுதலால் வேறு இரவும் பகலுமிகையாக அம்மூதூர் விளங்கியதனால், அதன் மறுகுகளின் வெண் சுதை மணி மாடங்களும் கொடிகளும் இரவினும் பகலினும் உள்ள செயல் தம்மிடத்தே தோன்ற விளங்கின என்றதாம். அலரா - அலர்தற்கு ; காரணப் பொருளில் வந்தது.

**கந்துல் - உடு என்னும் நாண் மலர் அலராப், பகலில் விசும்பு பல நிறத்தால் தளிர்ப்பது என** - தாவரங்கள் பகலில் ஞாயிற்றின் உதவியால் தளிர்ப்பன ; இரவிற் பல மலர்கள் அலர்வன என்ற தாவரநூற் கருத்தும்பட வருதல் காண்க. **பல நிறத்தால் தளிர்ப்பன** என்றது தளிர்களின் பல நிறங்களை. இவை கொடிகளின் பல நிறங் களுக்கு உவமிக்கப்பட்டன. ஞாயிற்றின் கதிர் எழு நிறங்கள் பொருந்திய சேர்க்கை என்றும், அவற்றுள் ஒவ்வொன்றின் செயல் மிகுதியும் குறைவும்பற்றித் தாவரங்களில் தளிர், இலை, மலர் முதலியவை பல நிறம் பெறுவன என்றும் வரும் கலைஞானப் பகுதி யும் குறிப்பு. **நாண் மலர்** - என்றது புதிதின் அலர்தல் குறித்தது. **கோடி** - பூக் கொடி எனவும் தொனிப்படுமாதலின் அதற்கேற்ப, மலரும் தளிரும் கூறப்பட்ட நயமும் காண்க.

மணிமாளிகை - கொடி - சூழ்கங்குல் உடுவெனு மலரலரப் - பகலில் - **விசும்பு** தளிர்ப்பதேன - மருங்கெல்லாம் நெருங்கியுள என்று கூட்டி முடித்துக் கொள்க.

12

1911\. மடையெங்கு மணிக்குப்பை; வயலெங்குங் கயல்வெள்ளம்;
புடையெங்கு மலர்ப்பிறங்கல்; புறமெங்கு மகப்பொலிவு;
கிடையெங்குங் கலைச்சூழல்; கிளர்வெங்கு முரலளிகள்;
இடையெங்கு முனிவர்குழா; மெயிலெங்கும் பயிலெழிலி. கஙு

(இ - ள்) வெளிப்படை. (அத்திருநகரில்) மடைகளிலெங்கும் மணிகளின் குவி யல்கள் உள்ளன; வயல்களில் எங்கும் நீர் வெள்ளத்துடன் கயல் மீன்களின் கூட்டம்

உள்ளன ; அவ்வயல்களின் பக்கங்களிலெங்கும் பூக்குவியல்கள் உள்ளன ; அவற்றின் புறத்தில் எங்கும் யாகங்களின் பொலிவு நிறைந்துள்ளது ; வேதம் ஓதும் கிடைகளில் எங்கும் கலைகளின் சூழல்கள் விளங்கியுள்ளன ; கிளர்வாகிய சோலைகளில் எங்கும் முரலுகின்ற வண்டுகளின் கூட்டங்கள் உள்ளன ; இச்சோலைகளினிடை எங்கும் மறை முனிவர்களின் கூட்டம் உள்ளன ; மதில்களில் எங்கும் தவழ்கின்ற மேகங்கள் உள்ளன.

(வி - ரை) **எங்கும் எங்கும்** - இவை யிவை காட்சிப்பட உள்ளன என்று முற்று வினை விரித்துக்கொள்க. வினை (கன்மம்) விரிவுபடாது மறையும் நகரமாதல் குறிப்பு. முற்று வினை விரித்துக் கூறுதலினும், இவ்வாறு எங்கும் எங்கும் என்று அடுக்கித் தொக வைத்துக் கூறுதல் இசையின்பமும் பொருட்செறிவும் பொருந்துதல் காண்க. இது ஆசிரியரது கவிநலச் சிறப்புக்களுள் ஒன்று. 77—83 பாட்டுக்களும், பிறவும் பார்க்க.

**மடை** - வயல்களில் நீர் பாயும் மடைகள், குப்பை - பயன் படாது, விலக்கப் படுவது என்பது குறிப்பு. "அலகிடும் குப்பை யாக்கும்" (திருவிளை - புரா - பாயி).

**மணி** - மடைகளின் வழி நீர்ச்செலவிற்குத் தடையிராமல் ஒதுக்கப்படுவனவும், நீரால் ஒதுக்கப்படுவனவுமாகிய முத்து முதலிய மணிகள். இவை காவிரி நீருடன் வருவன.

**வெள்ளக் கயல் என்க** - நீர்ப் பெருக்குடன் கயல்கள் நிறைவன என்பது. கய லுடன் கூடிய வெள்ளம். கயலின் கூட்டம் என்பாருமுண்டு. "மடையில் வாளை பாய" (பிள் - தேவா - திருக்கோலக்கா.)

**புடை எங்கும் மலர்ப்பிறங்கல்** - வயல் வரம்பிலும் ஓரங்களிலும் உழத்தியர்கள் களைகட்டலாலும் உழவர் அரிந்து குவித்தலாலும் உளவாகிய தாமரை நீலம் ஆம்பல் முதலிய நீர்ப்பூக்களின் குவியல். பிறங்கல், மலை; மிகுதி பற்றிக் கூறியது. "முத்தின் சுடர்ப்பெரும் பொருப்பு" "மலர்க் கற்றை வேரி பொழிந்திழி வெற்பு" என்றதும், (73) பிறவும் பார்க்க.

**புறம்** - அவ்வயல்களின் புறமாகிய புறம்பணை. "பெரும் பெயர்ச்சாலை" (77) **மகம்** - சிவ வேள்வி : மக - சிறார் என்று கொண்டு அங்கு விளையாடும் மகவுகளின் கூட்டம் என்றுரைத்தலுமாம்.

**கிடை** - சிறுவர்க்கு வேத மோதுவிக்கும் பள்ளிகள். 1208 - 1222-பார்க்க.

**கலைச்சூழல்** - வேதம் வேதாங்க முதலிய கலைகள் கற்பிக்கப்படுகின்ற முழக்கம் இடையறாது கிடைகளின் பல பக்கமும் அலை போல முழங்கிச் சூழ்வதனால் சூழல் என்றார். சூழல் - கலைகள் தம்முட்பட்டாரைச் சூழ்ந்து புறம் போகவிடாது பிணிக் கும் தன்மையும் குறிப்பு. "இசைச் சூழல் புக்கோ" (திருக்கோவை).

**கிளர்வு எங்கும் முரல் அளிகள்** - **கிளர்வு** - சிறார் வேதம் ஓதிப் பயிலும் ஒலிக் கிளர்ச்சி. அஃது ஆகு பெயராய் அஃது உளதாகும் இடத்தைக் குறித்தது. **கிளர்வு** - சோலை என்றலுமாம். இவை வண்டுகள் முரலும் ஓசை போல்வன ஆதலின் கிடை களின் பக்கமுள்ள சோலைகளின் வண்டுகள் முரலும் ஓசை இவற்றின் எதிரொலி போல்வன என்பது குறிப்பு. "சுரும்பிசையாற் செழுஞ்சாமம் பாடமோல்" (1907) என்றதனைத் தொடர்ந்து கொள்க.

**இடை** - வண்டுகள் முரலும் சோலைகளினிடையே. **முனிவர் குழாம்** - மறை முனிவர் கூட்டம். "போகமும் பொலிவு மெங்கும் புண்ணிய முனிவ ரெங்கும்" (81):

எயில் - மதில். முன் கூறிய இடங்கள் புற நகர்; அதனை அடுத்து உண்ணகரைச் சூழ்ந்துள்ளது எயில்.

**பயில் எழிலி** - மகச் சாலைகளின் பயனாய் வருவன மேகந்தளாதலின் அக்குறிப்புப்பட மகப் பொலிவு என்றதனை அடுத்து எழிலி பயில்வதனைக் கூறினார். மதிலின் உயர்ச்சி கூறியபடியுமாம். "மேகமும் களிறு மெங்கும் வேதமுங் கிடையு மெங்கும், யாகமுஞ் சடங்குமெங்கும்" (81) "மங்குரேய் மாடச்சாலை மருங்கிறை யொதுங்கு மஞ்சும்" (836) என்று காரியகாரணக் குறிப்புப்பட முன் கூறியனவும், பிறவும் காண்க.

மடைகளின் புறம் வயலும், அவற்றின் புறத்துப் புறம்பணையும், அதனை யடுத்துக் கிடையும் சோலையும், அவை கழிய உண்ணகர் மதிலும் என்றிவ்வாறு முறையேபுறத்தினின்று உட் செல்லும் ஆறு கண்டு கொள்க. முன் கூறிய பாட்டுக்களின் வைப்பு முறையும் இவ்வாறே அமைதிப் படுத்திக்கொள்ளத் தக்கது. மேல் வரும் பாட்டில் இவ்வாறு கண்ட மதிலின் உள்ளே விளங்கும் திருநகரத்தின் பெயர்களை வரிசை பெறக் கூறும் வகையாற் சிறப்புக் கூறி, மேற் சரிதத்தினுட் புகுகின்ற அமைதியும் காண்க.

**கலை ஒலிகள்** - என்பதும் பாடம். 13

1912. பிரமபுரம் வேணுபுரம் புகலிபெரு வெங்குருநீர்ப்
பொருவிறிருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கோச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால். கச

(இ - ள்) வெளிப்படை. (அத் திருநகரம்) பிரமபுரம் என்றும்; வேணுபுரம் என்றும், புகலி என்றும், பெரிய வெங்குரு என்றும், நீரினுள் ஒப்பில்லாது விளங்கும் திருத் தோணிபுரம் என்றும், பூந்தராய் என்றும், சிரபுரம் என்றும், முன் வரும் புறவம் என்றும், சண்பைநகர் என்றும், வளரும் காழி என்றும், கொச்சைவயம் என்றும், போற்றும் திருக்கழுமலம் என்றும் இவ்வாறு ஆகி வருகின்ற பன்னிரண்டு திருப்பெயர்களை யுடையது.

(வி - ரை) இத்திருப் பாட்டினாற் சீகாழி நகரச் சிறப்பினை அதன் பன்னிரண்டு பெயர்களாலும் போற்றி அறிவித்தபடி; என்னை? இவை ஒவ்வோர் ஊழிகளிலும் ஒவ்வோர் காரணம்பற்றிப் போந்தபடியால் இதன்பழஞ்சரிதமும், ஊழியிலும் அழியாத நிலையும் அறிவிக்கப் பட்டவாறு; இவ்வரிசை காலக்கிரமத்திற் போந்த வரிசைப்படி அமைந்துள்ளது; ஆதலின் இவ்வரிசையிற் போற்றுதல் வேண்டுமென்று ஆசிரியர் அறிவித்தபடியும் காண்க.

இதுபற்றி முன் 257-ம் திருப்பாட்டின் கீழ் உரைத்தவையும், பிறவும் பார்க்க. "கமழ்காழி யென்று கருதப் படுபொரு ளாறு நாலு முளதாக வைத்த பதி" (பிள் - தேவா, பியந்தைக் காந். நனி பள்ளி. 11) என்றதில் **காழி** என்பது 10-வது பெயராக வைக்கத் தக்கதென்றும், "ஒன்றி ரண்டொரு மூன்றொடு சேர்பதி - பூந்தராய்" (காந் தார பஞ் - 2. பூந்தராய்.) என்றதில் **பூந்தராய்** என்பது 6-வது பெயராக வைக்கத் தக்கதென்றும், வகுத்தருளியவாற்றால் ஆளுடைய பிள்ளையார் இவ்வரிசைப்பாடு அவ்வாறே வைத்து ஓதத்தகுவது என்று காட்டியருளியது காண்க.

(1) **பிரமபுரம்**-பிரமன் பூசித்த காரணத்தாற் போந்த பெயர். "எடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த வருள்செய்த...பிரமாபுரம்" (நட்ட பாடை - 1); "நாவியலு மங்கையொடு நான்முகன்றான் வழிபட்ட நலங்கொள் கோயில்" (கழுமலம் - மேகராகுறி - 1); "சுருதி சிரவுரையினாற், பிரமனுய ரரனெழில்கொள் சரணவிணை பரவ வளர் பிரமபுரமே" (பிரமபுரம் - சாதாரி - 1) முதலியவை பார்க்க.

(2) **வேணுபுரம்** - சூரபதுமனுக் கஞ்சி இந்திரன் பூசித்தபோது இறைவர் வேணு (மூங்கில்) வாய் முளைத்தருளினர் என்றும், ஆசாரியனைப் பிழைத்த பழியும் விருத்திராசுரனைக் கொன்ற பழியும் போக்கும்படி இந்திரன் வேணு வழியாய் அடைந்தனன் என்றும் வரும் காரணத்தாற் போந்த பெயர்.

(3) **புகலி** - சூரபதுமனல் வந்த துன்பம் பொறுக்க லாற்ருது முருகப் பெருமானைத் தந்தருளும்படி தவங்கிடந்த தேவர்கள் புகலடைந்ததனுற் போந்த பெயர். "பகைகளையும் வகையிலறு முகவிறையை மிகவருள நிகரிலிமையோர் புக...புகலி" (ஷை 3).

(4) **பெரு வெங்குரு** - பிரமனல் இகழப்பட்ட அசுரகுருவாகிய சுக்கிரன் நாரதருடைய உபதேசத்தின்படி வந்து பூசித்துத் தேவ குருவுக்கு இணையாகப் பெற்றனன்; நரகர் தன்னைக் கொடியன் என்று இகழும் பழி நீங்க இயமன் பூசித்து முன்னுணர்ச்சி பெற்று மௌன நிலை பெற்றனன்; இவற்ருல் இப்பெயர் போந்தது. "எதிர் பொங்கெரி புலன்கள் களைவோர், வெங்குரு விளங்கியுமை பங்கர்சர ணங்கள்பணி வெங்குரு" (ஷை 4); "செங்கோ னடாவிப் பல்லு யிர்க்குஞ் செய்வினை மெய் தெரிய, வெங்கோத் தருமன் மேவி யாண்ட வெங்குரு" (தக்கேசி - ஷை 4).

(5) **நீர்ப் பொருவில் திருத்தோணிபுரம்** - ஊழி நீர்ப் பெருக்குக்களில் உலகமெல்லாம் அமிழ்ந்தபோது பிரணவமாகிய தோணியாக மிதந்து தன்னகத்துச் சிவபெருமான் அம்மையாருடன் எழுந்தருளப் பெறுவதால் இப்பெயர் பெற்றது. நீர் - பெருநீரினுள்; பொருவில் - ஏனை உலகமெல்லாம் அழியவும் தான் அழியாது மிதத்தலின் ஒப்பற்றது. "அணிநீ ருலக மாகி யெங்கு மாழ்கட லாலழுங்கத், துணிநீர் பணியத் தான்மி தந்த தோணிபுரம்." (தக்கேசி-ஷை 5); பாணியமர் பூண வருள் மாணுபிர மாணியிட மேணி முறையிற், பாணியுல காளமிக வாணின்மலி தோணிநிகர் தோணிபுரம்" (ஷை 5).

(6) **பூந்தராய்**-சங்கநிதி, பதுமநிதி என்னும் இரண்டு நிதிகளின் தெய்வங்களும் பூசித்து மாருது கொடுக்கும் வரம் பெறுவதற்காகப் பூந்தாராய் இருந்து பூசித்தமையாலும், இரணியாக்கனைக் கொல்லத் திருமால் வெள்ளைப்பன்றியாகிச் சென்று கொன்று, பூமியைக் கொம்பிலேற்று வருத்திய பழிபோகப் பூசித்தமையாலும், இப்பெயர் போந்ததென்பர். (1) பூந்தார் - பூமாலை; (2) பூ - பூமி = தாராய் - (கொம்பில் தரித்தவன், "அவர்பூ ணரையர்க் காதி யாய வடன்மன்ன னுள்மண்மேற், றவர்பூம் பதிகளெங்கு மெங்குந் தங்கு தராயவனே" (தக். ஷை 6); "அராமிசை யிராதெழி றராயர பராயண வராக வுருவா, தராயனை விராயெரி பராய்மிகு தராய்மொழி விராய பதியே" (ஷை - 6).

(7) **சிரபுரம்** - தேவருடன் அமுதுண்ண வேற்றுருவுடன் அமர்ந்திருந்த சயிங்கேயன் (சிலம்பன்?) என்னும் அசுரனைச் சூரியன் காட்டத் திருமால் சட்டுவத்தால் வெட்ட அவனது தலை (சிரம்) இராகுவாக நின்று பூசித்த காரணத்தாற் போந்த பெயர். "தலையாய்க் கிடந்திவ் வைய மெல்லாந் தன்னதோ ராணைநடாய்ச், சிலையால் மலிந்த சீர்ச் சிலம்பன் சிரபுரம்" (தக். ஷை 7); "பரவமுது விரவ வுடல் புரளமுறு மரவையரி சிரமரியவச், சிரமரன சரணமவை பரவவிரு கிரகமமர் சிரபுரமதே" (ஷை 7).

(8) **புறவம்** - இந்திரன் பருந்தாகவும் தீக்கடவுள் புருவாகவும் யாகத்தில் பரிசோதிக்கவரச், சிபிச்சக்கிரவர்த்தி புருவின் எடைக்குத் தன் தசையரிந்திடவும் போதாமை கண்டு துலையேறித் தன் புகழ் நிறுத்திட, அப்பாவம் போகப் புருவாகிய தீக்கடவுள் பூசித்தமையாற் போந்த பெயர். "குறைவின்மிக நிறைதையுழி மறை

யமரர் நிறையருள முறையொடுவரும், புறவனெதிர் நிறைநிலவு பொறையனுடல் பெறவருளு புறவமதுவே" (ஷை 8).

கோதம முனிவனது சாபத்தால் புறு வடிவம் பெற்ற பிரசாபதி முனிவன் புறுவாயிருந்து பூசித்துச் சாபநீக்கம் பெற்றதனாலும் போந்தபெயர் என்பதும்வரலாறு.

(9) சண்பை-கபில முனிவர் சாபத்தால் தமது குலத்தினன் வயிற்றுதித்த பிள்ளை யாகிய இருப்புலக்கையைப் பொடியாக்கிக் கொட்டிய தூள், சண்பைப் புல்லாக முளைக்க, அவற்றையேஆயுதமாகக்கொண்டு போர்செய்து யாதவகுமரர்மடிய, அப்பழி போகும்படி கண்ணனும் அம்முனிவனும் பூசித்த காரணத்தால் இப்பெயர் போந்தது. முனிவர் துருவாச முனிவர் என்ற வரலாறுமுண்டு. "மண்பரியு மொண்பொழிய நுண்புசகர் புண்பயில விண்படரவச், சண்பைமொழி பண்பமுனி கண்பழிசெய் பண்புகளை சண்பைநகரே" (ஷை 9).

(10) வளர் காழி - காளிதன் என்னும் பாம்பும், நடனத்தில் தோல்வியுற்ற காளி யும் பூசித்ததனால் இப்பெயர் பெற்றது. "கீழிசைகொள் மேலுலகில் வாழரசு சூழரசு வாழவரனுக், காழியசில் காழிசெய வேழுலகி லூழிவளர் காழிநகரே" (ஷை 10); "அழலா யுலகங் கவ்வை தீர வைந்தலை நீண்முடிய, கடலு கரையன் காவ லாகக் காழி யமர்ந்தவனே" (தக் - ஷை 10); வரத்தால் இப்பெயரே மலிந்து வழங்கு தலால் வளர் காழி என்றார்.

(11) கொச்சைவயம் - பராசரர் ஆற்றிடையில் மச்சகந்தியைப் புணர்ந்ததனால் உண்டாகிய கெட்ட நாற்றமும் பழியும் ஏனைய முனிவர்களது இகழ்வும் நீங்கும்படி பூசித்து வரம் பெற்றமையால் இப்பெயர் போந்தது. "மச்சமத நச்சிமத மச்சிறுமி யைச்செய்தவ வச்சவிரகக், கொச்சைமுர வச்சர்பணி யச்சுரர்கள் நச்சிமிடை கொச்சை நகரே" (ஷை 11). கொச்சை - தீ நாற்றம். வயம் - சயம்; போக்குதல் குறித்தது.

(12) கழுமலம் - உரோமச முனிவர் அடைந்து பூசித்ததனால் ஞானோபதேசம் பெற்று உலகில் உயிர்களது மலங்கழுவும் வரம் பெற்றனர். பெயர் அதனாற் போந்தது. "ஒழுகலரி தழிகலியி லுழியுலகு பழிபெருகு வழியை நினையா, முழுதுடலி லெழு மயிர்க டழுவுமுனி குழுவினொடு கெழுவுசிவனைத், தொழுதுலகி லிழுகுமல மழியும் வகை கழுவுமுரை கழுமல நகர்" (ஷை 12).

திருப் பெயர்த்து - இப்பெயர்கள் ஒவ்வொன்றும் சிவனருள் விளைவைக் காட்டி நிற்றலால் திருப்பெயர் என்றார். இப்பெயர்களை மந்திரங்களாகச் சொல்லிப்போற்று தல் சிவனருள் பெறுதற்குச் சாதனமாம் என்பது.

பரவு திருக்கழுமலம் - பரவு - திரு - என்ற இரண்டு அடைமொழிகள், இப் பெயர் கால வரிசையிற் கடைசியாய்ப் போந்ததென்றும், அதனால் அதுவே மேல்வரும் ஊழி வரையில் உயிர்கள் போற்ற நின்றதென்றும், மலம் கழுவப்பெற்றுச் சிவத்தை யடைவதே உயிர்கள் பெறும் பேறுதலின் அதனைச்செய்யும் கருத்துடன் பரவ நின்ற சிறப்புடையதென்றும் குறிக்கின்றன.

பெரும்புகலி வேந்துரு—என்பதும் பாடம். 14

1913. அப்பதியி னந்தணர்தங் குடிமுதல்வ ராசின்மறை
கைப்படுத்த சீலத்துக் கவுணியர்கோத் திரம்விளங்கச்
செப்புநெறி வழிவந்தார் ; சிவபாத விருதயரென்
றிப்புவிவா ழத்தவஞ்சே யியல்பினு ; ருளரானார். — கஙு

குடி - கோத்திரம் - பிதா

**(இ - ள்)** அப்பதியின்...முதல்வர் - அத்தலத்தில் அந்தணர்களுடைய குடியில் வந்த முதன்மை பெற்றவர்; ஆசில் மறை...வழி வந்தார் - குற்ற நீக்கும் வேதங்களிற் கூறியபடி ஒழுகிய சீலத்தையுடைய கவுணியர் கோத்திரம் விளங்கும்படி செப்பும் சூத்திரத்தின் (உட்பிரிவு) வழியிலே வந்தவர்; சிவபாத விருதயர்...இயல்பினர். சிவபாதவிருதயர் என்று இந்த உலகம் வாழும் பொருட்டுத் தவஞ்செய்யும் இயல்பை யுடையவர்; உளரானார் - உள்ளவரானார்.

**(வி - ரை)** இதுவரை நாயனாரது நாடு நகர முதலிய சிறப்புக்களைக் கூறி வந்த ஆசிரியர், இனி, வரன்முறையே அவர் அவதரித்த மரபு முதலியனவும், அவரைப் பெற்றோரியல்பும், அவர் அவதரிக்க நேர்ந்த வரலாறும் கூறத்தொடங்குகின்றார்.

இப்பாட்டினால், அந்தணர் என்று குடிமரபும், கவுணியர் கோத்திரம் என்று அதனுட்பிரிவாகிய கோத்திரமும் (குலமும்), செப்பு நெறி வழி என்று அதனுட் பிரிவுகளாகிய சூத்திரம் பிரவரம் முதலியனவும், சிவபாதவிருதயர் என்று தந்தையார் பெயரும், தவஞ்செய் இயல்பினர் என்று அவரது தன்மையும், உளரானார் என்று அவரது பேற்றின் பயனும் கூறியவாறு கண்டுகொள்க.

**அந்தணர் குடி - கவுணியர் கோத்திரம் - செப்பு நெறி வழி** - குடியும் கோத்திரமும் நெறி வழியும் என்றிவை வேண்டத்தக்கன என்பது மனித வாழ்க்கையின் நல் அமைப்புக்களுள் ஒன்று. இதனை ஆசிரியர் பலவிடத்தும் பலவாற்றாலும் காட்டிச்செல்கின்றார். "தருமுறைக் கோத்திரத்தின் தங்குலஞ் செப்பி" எனப் (திருஞான - புரா - 1235) பின்னர்க் கூறுதலும், "குலம் - குடி" (1280) என்றதும், பிறவும் காண்க.

**முதல்வர்** - முதன்மை பெற்ற சிறப்புடையவர். **கைப்படுத்தல்** - கைக்கொண்டொழுகுதல். **ஆசில்மறைச் சீலம்** - என்க. **ஆசு இல்** - குற்றங்களை யில்லையாகச் செய்யும். **மறைச் சீலம்** - மறைகளின் விதித்த ஒழுக்கம். இவை தருமம் சத்தியம் முதலாயின பொது ஒழுக்கங்களாம்; வேள்வி சிவபூசை முதலியனவே சிறப்பொழுக்கங்களாம்.

**கவுணியர் கோத்திரம்** - இப்போது கௌண்டின்ய கோத்திரம் என வழக்கிலுள்ளது. **செப்புநெறி வழி** - அக்கோத்திரத்திற் குரித்தாய் எடுத்துச் சொல்லப்பட்ட சூத்திரம் - பிரவரம் முதலாயின உள் நெறிகள்.

**சிவபாதவிருதயர்** - ஆளுடைய பிள்ளையாரின் தந்தையாரது பெயர். சிவன் திருவடிகளை எப்போதும் கொண்ட மனத்தையுடையவர் என்பது பொருள். காரண இடுகுறியாக இவருக்கு அது பொருந்துவதாம் என்பதனை, "அரவணிந்த சடைமுடியா ரடியலா லறியாது, பரவுதிரு நீற்றன்பு பாலிக்குந் தன்மையர்", (1915) என்று ஆசிரியர் அறிவித்துள்ளார். இவரது அத்தன்மை மேதினிமேற் சமணர் முதலியவர்களது பொய் மிகுத்துப் பூதிசாதன விளக்கம் போற்றல் பெறுதொழியக் கண்டு இடருழந்து தோணியப்பரை நோக்கி அதனை நீக்கும் பிள்ளை வேண்டுமென்று வரங்கிடந்தமையாலும், சிவவேள்வி செய்தற்குப் பிள்ளையாரிடம் பொருள் வேண்டியமையாலும், பலகாலம் பிரிந்திருந்த பின்பு கவலைகொண்டு பிள்ளையாரைக் காணும் விருப்பினுடன் மதுரைக்குச் சென்று சேர்ந்தபோதும் உடனே அவருடைய திருமடத்திற் செல்லாது, திருவாலவாயமர்ந்த நாதனார் திருக்கோயிலுக்குச் சென்று வணங்கிய பின்னரே திருமடத்தை விசாரித்துச் சேர்ந்தமையாலும், பிறவாற்றாலும் நன்கு விளங்கும்.

**இப்புவிவாழத் தவம்செய் இயல்பினர்** - தந்நலங் கருதித் தாம் வாழ எண்ணாது, உலகம் வாழும் பொருட்டுத் தவம் செய்வது என்பதனைச் செயற்கைப் பழக்கத்தாலன்றித் தம்மியல்பாக உடையவர். "தாமென்று மனந்தளராத் தகுதியரா யுலகத்துக்,

காமென்று சரண்புகுந்தார் தமைக்காக்குங் கருணையினன் " (பிள் - பிரமபுரம் - சீகா.) என்று இத்தன்மையையும் அதற்குச் சிவன் அருள் செய்வதனையும் பிள்ளையார் கூறி யருளுகின்றார்.

உளராளுர் - உலகத்துக்காகத் தவஞ்செய்தலின் உள்ளவராயினர். 1281 பார்க்க.

1914. மற்றவர்தந் திருமனையார் வாய்ந்தமறை மரபின்வரு
தாயார் பெற்றியினா ; ரெவ்வுலகும் பெறற்கரிய பெருமையினர் ;
பொற்புடைய பகவதியா ரெனப்போற்றும் பெயருடையார் ;
கற்புமேம் படுசிறப்பிற் கணவனார் கருத்தமைந்தார். கசு

(இ - ள்) - மற்று அவர் தம் திருமனையார் - அவருடைய திருமனைவியார் ; வாய்ந்த...பெற்றியினர் - வாய்ப்புடைய வேதியரது மரபில் வரும் தன்மையுடையவர் ; எவ்வுலகும்...பெருமையினர் - எவ்வுலகமும் பெறுதற்கரிய பெருமையினை யுடையவர் ; பொற்புடைய...பெயரார் - அழகுடைய பகவதியார் என்று போற்றப் படுகின்ற பெயரினையுடையவர் ; கற்பு...கருத்து அமைந்தார் - கற்பினாலே மேம்பாடு பெறும் சிறப்புப்பற்றிக் கணவனாரது கருத்துக் கிசையத் தாம் அமைந்து ஒழுகி வருவாரானர்.

(வி - ரை) இதனால் பிள்ளையாரது திருத்தாயாரின் மரபுநலனும் குணநலனும் கற்புநலனும் கூறப்பட்டன.

வாய்ந்த மறை மரபு - சிவபாத விருதயரது மரபு - குடி - கோத்திரம் முதலிய வற்றுடன் அணைவதற் குரிமைவாய்ந்த மரபு. இது உடல் பற்றிய தன்மை. மேல் "மரபிரண்டுஞ் சைவநெறி வழிவந்த கேண்மை "(1915) என்று இதனைத் தொடர்ந்து உயிரின் தன்மைபற்றிக் கூறுவதும் காண்க.

எவ்வுலகும் பெறற்கு அரிய பெருமை - இது 1940 ல் விளக்கப்பட்டபடி உமை யம்மையாரின் திருமுலை ஞானப்பால் உண்ண உள்ள பிள்ளையாருக்குத் தமது முலைப் பால் ஊட்டிய பெருமை.

பகவதியார் - உமையம்மையாரது பெயர். பகவன் என்ற சிவபெருமானது பெயரின் பெண்பாற் பெயர். கடவுளரின் பெயரை மக்கள் இட்டு வழங்கும் முறை.

போற்றும் பெயர் - யாவரும் போற்றும் பெயர் என்றது உமையம்மை பெய ருக்கும், பிள்ளையாரது திருத்தாயாராதலின் இவ்வம்மையார் பெயருக்கும் பொருந்தும்.

கற்பு...கருந்தமைந்தார் - கற்பின் தன்மை விளக்கப்பட்டது.

சிறப்பாற்—என்பதும் பாடம். 16

1915. மரபிரண்டுஞ் சைவநெறி வழிவந்த கேண்மையராய்
மனை அரவணிந்த சடைமுடியா ரடியலா லறியாது
வாழ்க்கை பரவுதிரு நீற்றன்பு பாலிக்குந் தன்மையராய்
நலம் விரவுமறை மனைவாழ்க்கை வியப்பெய்த மேவுநாள், கஎ

1916. மேதினிமேற் சமண்கையர் சாக்கியர்தம் பொய்ம்மிகுத்தே
சமண் பரவக் ஆதியரு மறைவழக்க மருகியர னடியார்பாற்,
கண்டு இட பூதிசா தனவிளக்கம் போற்றல்பெரு தோழியக்கண்
ருழத்தல் டேதமில்சீர்ச் சிவபாத விருதயர்தா மிடருழந்தார். கஅ

1915. (இ - ள்) மரபு...கேண்மையராய் - இருமரபுகளும் சைவ நெறியில் வழி வழி வந்த கேண்மை பொருந்தியவர்களாய் ; அரவு...அறியாது - பாம்பை அணிந்த

சடை முடியினை யுடைய சிவபெருமானது திருவடிகளையேயன்றி வேறொன்றையும் பொருள் என்று அறியாமல்; பரவு...தன்மையராய் - பரவும் திருநீற்றின் அன்பினையே பாதுகாக்கும் தன்மையுடையவராகி; விரவு...மேவு நாள் - வேத விதியின் வரும் மனைவாழ்க்கைத் திறத்தில் யாவரும் வியப்பெய்தும்படி மேவு நாளிலே; கஎ

1916. (இ - ள்) மேதினி...மிகுத்தே - உலகில் சமணகையர்கள் சாக்கியர்கள் என்றிவர்களுடைய பொய்கள் மிகுதியாக்கப்பட்டே (அதனால்); ஆதி அருமறை வழக்கம் அருகி - ஆதியின் அரிய மறை வழக்கங்கள் சுருங்கி; அடியார்...கண்டு - அடியார்களிடத்துத் திருநீற்றுச் சாதனத்தின் விளக்கமானது போற்றுதல் பெறாமல் மறையக்கண்டு; ஏதமில்...இடருழந்தார் - குற்றமில் சிறப்பினையுடைய சிவபாத விருதயர் தாம் மிகவும் துன்பத்தில் அழுந்தினர். கஅ

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1915. (வி-ரை) பிள்ளையாரது திருத்தந்தையாருடைய சிறப்பைத் (1913) தனி ஒரு பாட்டினாலும், திருத்தாயரின் சிறப்பைத் (1914) தனி மற்றொரு பாட்டினாலும் முன் உரைத்த ஆசிரியர், அவ்விருவரும் கூடிய இகபர சாதனமான இல்வாழ்க்கைத் திறத்தை இவ்வொரு பாட்டிற் சேரக்கூறிய நயம் கண்டுகொள்க.

மரபு இரண்டும்...கேண்மை - மரபு இரண்டு - தனித்தனி சிவபாத விருதயர் பகவதியம்மையார் என்ற இருவரின் மரபுகள். இரண்டாவன தந்தை தாய் என்ற இரு வழி. "இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி" (திருமுருகு) என்று இவ்வந்தணர் மரபுச் சிறப்பைக் கூறுதல் காண்க. சைவ நெறி - சிவனையே முதல்வராகக் கொண்டு செல்லும் நெறி. வழி வந்த கேண்மை - இடையீடின்றி வழி வழி (பரம்பரை)யாகத் தொடர்ந்து வந்த சுற்றத் தொடர்பு. கேண்மை - சுற்றம் என்ற பொருளில் வந்தது. இடையில் வைணவர் முதலிய ஏனை மறையோரது தொடர்பின்றி வந்தவழி என்பது; அவ்வாறு வேற்றுநெறிக் கலப்பு, இந்நாளிற்போலவே, முன்னாளிலும் காணப்பட்டமை திருவிளையாடற் புராணம் (விருத்த குமார பாலரான படலம்), கந்த புராணம் (ததீசிப் படலமும் பிறவும்) முதலியவற்றாற் கருதப்படும்.

அரவணிந்த...தன்மையராய் - முந்தை மரபின் வழிச்சிறப்பு மட்டில் அமைந்து படாது, தாமும் அந்நெறி ஒழுகிய தன்மை. முந்தையோரது பெருமை மட்டிலும் கொண்டு, தாம் அவ்வொழுக்கம் சிறிதும் பேணாமல் குலப்பெருமை கொண்டாடும் இந்நாள் மாக்கள் இதனைச் சிந்திப்பாராக.

அடியலா லறியாது-எதிர் மறை முகத்தாற் கூறினார், ஏனையெதனையும் அறியாத உறுதிப்பொருள் தருதற்கு. "ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை" என்னுஞ் சிவஞானபோதத்துக்கு "எதிர் மறை முகத்தாற் கூறியது ஏனைக்கடவுளரின் உளதாகாமை யாப்புறுத்தற் பொருட்டு" என்றுரைத்ததனை நினைவுகூர்க. இதனால் பிரமன்-மால் - அக்கினி - வாயு முதலிய உபசாரக் கடவுளரை உண்மைப் பரமென்று வழிபட்டுழலும் ஏனை வைதிக ஒழுக்கங்கள் ஒதுக்கப்பட்டமை காண்க.

பரவு திருநீற்று அன்பு பாலிக்கும் தன்மை - பரவு - வேதத்தாற் பரவப்பட்ட; யாவரும் பரவவுள்ள என்றலுமாம். "பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பீர்" (488) என்ற விடத்துரைத்தவை பார்க்க. பாலித்தல் - சோர்வு வாராமற் காத்தல்.

மறை மனை வாழ்க்கை - மறைகளில் விதித்தபடி செலுத்தப்படும் இல்லற நிலை வியப்பெய்த - உலகம் வியக்க.

மேவும் நாள் - சிவபாதவிருதயர் - இடருழந்தார் என வரும்பாட்டுடன் முடிக்க.

கேண்மையினார்—என்பதும் பாடம்.

1916. (வி - ரை) கையர் - கீழ் மக்கள். பொய் மிகுத்தல் - பொய்யாய கட்டுரைகள் வலுப்பட்டு மக்களிடம் மிகுதியாய்ச் செல்லுதல் மிகுத்தலால் என்க.

**ஆதி அருமறை வழக்கம்** - ஆதி -. சிவபெருமான் ; ஆதி சொன்ன மறை வழக்கு. ஆதியாகிய என்றலுமாம்.

**அருகுதல்** - குறைந்து செல்லுதல் ; மெலிவடைதல்.

**பூதி...போற்றல் பெற தொழிய** - திருநீறு போற்றி அணியப்படாமல் ; இதனை இக்கால நிலையினலறியலாம்.

**ஏதமில்** - குற்றத்தை இல்லையாகச் செய்யும். ஏதமாவது சிவனை மறந்த குற்றம். இதனை இல்லையாகச் செய்தமை பிள்ளையாரது அருட் செய்கைகளுட் கண்டுகொள்க.

**இடருழத்தல்** - மனவருத்த மிகுதல். உலகம் சிவநெறியினின்றும் வழுவியது கண்டு மனம் வருந்துதல் உயிர்களின்மேற் கருணைகொள்ளும் உயர்ந்தோர் 18
செயல்.

1917. மனையறத்தி லின்பமுறு மகப்பெறுவான் விரும்புவார்
அனையநிலை தலைநின்றே யாடியசே வடிக்கமல
நினைவுறமுன் பரசமய நிராகரித்து, நீறுக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றுந் தவம்புரிந்தார். ௧௬

சிவபாத விருதயர் தவம்

(இ - ள்) **மனையறத்தின்...விரும்புவார்** - மனை வாழ்க்கையில் இன்பம் செய்யும் மகவைப்பெறும் விருப்பத்தைக் கொள்பவர் ; **அனைய நிலை தலை நின்றே** - அந்நிலையிற் சிறந்து நின்றே ; **ஆடிய சேவடிக்கமலம் நினைவுற** - சிவபெருமானது திருக்கூத்தியற்றும் சேவடிக்கமலங்களை நினைத்து ; **முன் பரசமயம் நிராகரித்து** - முன்னர்ப் பரசமயங்களின் தீமையைப் போக்கி; **நீறு ஆக்கும்** - திருநீற்றின் விளக்கத்தினை மிகுதிப் படுத்தும் ; **புனைமணி...தவம் புரிந்தார்** - அழகிய அணிகளைப் புனையும் திருமகனைப் பெறும் பொருட்டுப் போற்றும் தவத்தைச் செய்தனர்.

(வி - ரை) **மனையறத்தில் இன்பமுறும் மகவு** - "மனைமாட்சி மற்றதன், நன்கலனன்மக்கட் பேறு", "அமிழ்தினு மாற்ற வினிதே", "மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர், சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு" (குறள்) என்பன வாதியாகக் கூறப்பட்ட அறிவறிந்த மக்கட்பேற்றினால் இல்வாழ்க்கையுட் பெறப்படும் இன்பமெல்லாம் கொள்க.

**அனையநிலை தலைநின்றே...பரசமய நிராகரித்து நீறு ஆக்கும் காதலனைப்பெற** என்றது, அவ்வாறு இல்வாழ்க்கையில் தமக்கு இன்பஞ் செய்யும் மகப்பேறு வேண்டும்; அம்மகவே பரசமயம் போக்கியும் சைவத்தை ஆக்கியும் உலகுயிர்க்கு இன்பஞ்செய்யும் அறிவறிந்ததாயிருக்கவும் வேண்டும் என்றபடி ; அனைய நிலை - அத்தன்மையாவது தமக்கு மகப்பேறு வேண்டுதல்.

**ஆடிய சேவடிக்கமலம் நினைவுறப் போற்றும் தவம்** - என்க. ஆடிய சேவடி என்றது ஐந்தொழிற் பெருங்கூத்து ஆடிய சிவன் திருவடி. ஐந்தொழிலினுள் படைப்பு முதலாவதாகக் கணிக்கப்படுதலின் மக்கட்பேற்றினை வேண்டிய அவர் ஆடிய திருவடியை நினைவுறப் போற்றினர் என்க. "தானுடைய படைப்பென்னுந் தொழிற்றன்மை தலைமைபெற" (1923) என்று இக்கருத்தைத் தொடர்ந்து எடுத்துச் சொல்லுதல் காண்க.

**பரசமயம் நிராகரித்து நீறு ஆக்கும்...காதலன்** - **பரசமயம்** - வேத சிவாகம நெறிகளுக்குப் புறமான சமயங்கள். பரம் - அப்பாற்பட்டது - புறமானது. அவற்றை

நிராகரித்தலாவது அவற்றின் பொய்ம்மைகளை வெளிப்படுத்தி அவை பொருளன்றாம் படியினை உலகறியச் செய்தல். சைவம் எல்லாச் சமயங்களையும் ஒவ்வோர் அங்கங் களாகக் கொண்டு எல்லாவற்றையும் தன்னுள் அடக்கித் தான் ஒன்றினு மடங்காது நிற்பது; ஆதலின் நிராகரிப்பது எற்றுக்கெனின்?, அவை முழு உண்மையன்றாம்படி யைக் காட்டுமாற்றால் உலகம் அவற்றுள் அமைந்து மயங்கி நின்றுவிடாமற் செய்தற் கென்க; அன்றியும் அவை தம்மளவில் நில்லாது மிகுத்துச் சைவத் திறத்தைப் பழித் தழிக்க வரின் அதனைத் தடுத்துச் சைவத்தை விளக்கம் செய்தற்குமாம்.

**நீறு ஆக்கும்** - திருநீற்று நெறியினை ஒளி குன்றாமல் ஓங்கி விளங்கச்செய்யும். நீற்று நெறியே சைவ நெறி; சைவ நெறி நீற்று நெறியே; முன், "பூதி சாதன விளக்கம் அரனடியார்பாற் போற்றல் பெறாது" (1916) என்றதும், பின், "சைவ முதல் வைதிகமுந் தழைத் தோங்க" (1920), "தொண்டர்மனங் களிசிறப்பத் தூயதிரு நீற்றுநெறி, யெண்டிசையுந் தனிநடப்ப" (1921) என்பதும், பின்னர்ப் பிள்ளையார் திருநீற்றினாற் சைவம் பெருகச்செய்த வரலாறும், பிறவும் காண்க.

**பரசமய நிராகரித்து நீறாக்கும்** - இதற்கு இவ்வாறன்றிப், பரசமயங்களை அழித் துப் பாழ்படுத்திப் பொடியாக்கும் என்றுரைத்தனர் முன் உரைகாரர்கள். சைவம் எச்சமயத்திடனும் பிணக்கிலதாய், அவை எல்லாம் தனது ஓரிடத்தே காண நிற்ப தொன்றாதலின் எச்சமயத்தையும் அழிவுபடுத்தவும் பொடியாக்கவும் மாட்டாது; உண்மை நிலையை விளக்கஞ்செய்து அவ்வவற்றுக்குரிய நிலைகளைப் படிமுறையால் நிறுவிப், பக்குவத்துக்கு ஏற்றவாறு நிறுத்தியதே சைவ சமய பரமாசாரியர்களாற் செய்தருளப்பட்டது. சைவ நூல்களின் பரபக்கம் விதித்த கருத்துமிஃது. ஆதலின் அவ்வுரைகள் பொருந்தா என்க. பிள்ளையார் திருநீற்றுப் பதிகத்தாற் பரசமய நிராகரிப்பும் சைவ விளக்கமும் செய்தருளிய வரலாறும் ஈண்டுக் குறிக்க.

**புனைமணிப்பூண் காதலனை** - மணிப்பூண்புனை - என்றது பின்னர் மகவுபெற்ற வழி அணி பல புனைந்து பாராட்டும் மகிழ்ச்சிச் செயலை. காதலன் என்றதும் அவ்வாறு அவர் கொண்ட ஆசையினைக் குறித்து நின்றது. இங்குப் பூண்புனைந்த வாறே பிறக்கும் மகவு என்று உரைகொண்டு, முருகப்பெருமானையே தமக்கு மகனா கப் பெறத் தவம் புரிந்தார் என்றுரைத்தாருமுண்டு. அதற்கேற்றவாறே மேல்வரும் பாட்டுக்களிலும் அவர் உரைகொண்டனர். முருகப்பெருமானே ஆளுடைய பிள்ளை யாராய் அவதரித்தார் என்ற கொள்கை பொருத்தமன்றாம்படியினையும் அவ்வுரைகள் பொருந்தாமையையும் ஆசிரியர் திருவாக்கானும், பிள்ளையார் திருவாக்கானும், ஞான நூன் முடிபுகளானும் பின்னர்ப் பலவிடத்தும் காட்டப்படும்; கண்டுகொள்க. **முன்** - நிராகரித்தல் முன்னும், ஆக்குதல் பின்னும் நிகழ என்க; பாச நீக்கமும் சிவப்பேறும் போல ஒருங்கு நிகழுமாயினும் தொடங்குதல் பற்றி முன் என்றார்.

பெற்றெடுக்கும் தவம்—என்பதும் பாடம். 19

1918. பெருத்தெழுமன் பாற்பெரிய நாச்சியா ருடன்புகலித்
திருத்தோணி வீற்றிருந்தார் சேவடிக்கீழ் வழிபட்டுக்
கருத்துமுடிந் திடப்பரவுங் காதலியார் மணிவயிற்றில்
உருத்தெரிய வரும்பெரும்பே றுலகுய்ய வுளதாக. ௨0

பகவதியார் தவமும், பிள்ளைப் பேறும்

(இ - ள்) பெருத்து எழும் அன்பால் - மேன்மேலும் பெருகி எழுகின்ற அன்பி னாலே; பெரியநாச்சியாருடன்......வழிபட்டு - பெரியநாயகி யம்மையாருடனே புகலியில் திருத்தோணியிலே வீற்றிருந்தாராகிய தோணியப்பருடைய சேவடிகளின்கீழ் வழிபாடு செய்து; கருத்து...வயிற்றில் - கணவனாரது கருத்து முற்றுப்பெறும்படி

பரவும் காதலியாராகிய பகவதியாரது மணிவயிற்றினிடமாக; உருத்தெரிய...... உளதாக - உருவம் தெரியவரும் கருப்பமாகிய பெரும்பிள்ளைப்பேறு உலகமுய்யும்படி உளதாயிற்று; அவ்வாறாகவே.

(வி - ரை) இப்பாட்டினால் கணவனார் புரிந்த தவத்தின் பயன்பெறும் பொருட்டு அவரது கருத்தமைந்த கற்புநெறியில் நின்ற மனைவியார் செய்த வழிபாடும் பயனும் கூறப்பட்டது.

**பெரியநாச்சியார்** - பெரியநாயகியம்மையார். திருத்தோணியில் எழுந்தருளிய அம்மையாரின் திருப்பெயர். இவரே பின்னர்ப் பிள்ளையாரைப் பாலூட்டியவர்.

**வழிபட்டுப் பரவும்** - என்க. சிவபாதவிருதயர் செயலைத் **தவம் புரிந்தார்** என்றும், அது முடியும்படி மனைவியார் செய்த செயலை **வழிபட்டுப் பரவும்** என்றும் கூறியது கணவர் செயலே தமது செயலாகக்கொண்டு அதற்கேற்றபடி ஒழுகும் கற்புநிலையினைக் காட்டுங் கருத்து. "கற்புமேம் படுசிறப்பாற் கணவனார் கருத் தமைந்தார்" (1914) என்றதும் இது.

**திருத்தோணி வீற்றிருந்தார்** - சீகாழியில் இலிங்கம், குரு, சங்கமம் என்ற மூன்று திருமேனிகளிலும் இறைவர் வெளிப்பட்டுத், திருக்கோயிலிற் பிரமபுரீசர் என்றும், தோணியில் தோணியப்பர் என்றும், மேல் விமானத்தில் சட்டைநாதர் என்றும் எழுந் தருளியுள்ளார். அவருள்ளே பகவதியார் வழிபட்டது தோணியப்பரை என்பதாம். பிள்ளையாருக்கு வெளிப்பட் டருள்புரிந்த வரலாறு பின்னர்க் காண்க.

**வயிற்றில் உருத்தெரியவரும் பெரும்பேறு** - உளதாக - வயிற்றினிடமாகப் பிள்ளையாரது திருவுருவம் வெளிப்படும் காரணமான பெரும்பேறாகிய கருப்பம் தரித்த தாக. **பேறு** - பிள்ளைப்பேறு; மக்கட்பேறு - என்ற வழக்கும் காண்க. ஏனைய மக்கட்பேறு போலன்றி இது மக்களையெல்லாம் உய்விக்கவல்லது என்பார் **பெரும் பேறு** என்றார்.

**உலகுய்ய** என்றது அக்கருத்தை விளக்கியதுடன், சிவபாதவிருதயர் வேண்டிய படி அப்பேறு அமைந்ததனையும் குறித்தது. **உருத்தெரிய** - உளதாக என்றதற்குக் கருப்பத் தோற்றம் மட்டும் உளதாயிற்று என்றுரைப்பாருமுளர்.

திருவயிற்றில்—என்பதும் பாடம். 20

*1919. ஆளுடையா ளுடன்றோணி யமர்ந்தபிரா னருள்போற்றி
மூளுமகிழ்ச் சியிற்றங்கள் முதன்மறைநூன் முறைச்சடங்கு
நாளுடைய வீரைந்து திங்களினு நலஞ்சிறப்பக்
கேளிருடன் செயல்புரிந்து பேரின்பங் கிளர்வுறுநாள். உக

பத்துத் திங்களினும் சடங்கு

(இ - ள்) ஆளுடையாளுடன்......போற்றி - ஆளுடைய பிராட்டியோடு திருத் தோணியில் எழுந்தருளிய பெருமானுடைய திருவருளைத் துதித்து; மூளும் மகிழ்ச்சி யின் - பெருகும் மகிழ்ச்சியுடனே; தங்கள்......செயல் புரிந்து - தங்கள் முதன்மை யான வேதங்களின் விதித்த முறைப்படிசெய்யும் உரிய சடங்குகளை யெல்லாம் நாளினை முதலாகவுடைய பத்து மாதங்களிலும் நலம் பெருகும்படி சுற்றத்தா ருடனே கூடிச் செய்து; பேரின்பம் கிளர்வுறும் நாள் - பெரிய இன்பம் கிளர்வுறும் அத்திருநாளிலே.

(வி - ரை) **அருள் போற்றி** - வழிபட்டுப் பரவியபடி அவரது திருவருளினால் பேறு உளதாயிற்றாகலான் அதனை மறவாது போற்றினார்.

**முதன்மறை நூல் முறைச் சடங்கு** - **முதன்மறை** - முதன்மை பெற்ற மறை முதன் மறை - ருக்வேதமென்று கொண்டு, சிவபாத விருதயர் ருக்வேதி யென்று

கூறுவாருமுண்டு. **நூல்முறை** - மறைவழி வந்த கற்பசூத்திரங்களில் விரிக்கப்பட்ட ஒழுங்குப்படி; ஆகம பத்ததிகளிலும் சிவ தீக்கையில் கிரியாமார்க்கம் ஞானமார்க்கம் என இச்சடங்குகள் வகுத்துக் கூறப்படும்.

**நாளுடைய ஈரைந்து திங்களினும்** - கருப்பந்தரித்த நாளை முதலாகக்கொண்டுடைய பத்து மாதங்கள். கருப்பம் முற்றிப் பிள்ளை பிறப்பதற் கிடைப்பட்ட காலம் என்றுரைப்பார் ஆறுமுகத் தம்பிரானார். இக்காலப் பகுதி 280முதல் 300நாள் வரை உள்ளது என்பது உடற்கூற்று நூன் முடிவு. **திங்களினும்** - மாதங்கள் எல்லாவற்றிலும் என உம்மை முற்றும்மை. முப்பதில் மிகுந்தும் குறைந்தும் வரும் அளவு நீக்கி முந்நூறு நாட்கொண்ட மாத அளவு கோடற்கு நாளுடைய என்றார்.

**நலஞ்சிறப்ப** - இச்சடங்குகள் பிள்ளைக்கும் பெற்றோருக்கும் அக்காலத்தில் வரும் தீங்குகள் நீங்கி நன்மைவரும் பொருட்டுச் செய்யத்தக்கன. அக்காலத்தில் மாதந்தோறும் வரும் தீங்குகளை மணிவாசகப் பெருமானார், போற்றித் திருவகவலுள், "மானுடப் பிறப்பினுண் மாதா வுதரத், தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும், ஒருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்தும்" என்பது முதலாக அருளியிருத்தல் காண்க. ஏழாவது எட்டாவது மாதங்களிற் செய்யும் சீமந்தம் முதலிய சடங்குகள் தீங்கு வராமற் குழவியைக் காக்குங் கருத்துடையன என்பது நூன்முறை. உடற்கூற்று நூல்களும் இக்காலத்தில் தாயார் உடல் கவனமாய்ப் பேணத் தக்கதென்று இக்கருத்தை வலியுறுத்துவன. அத்திருவகவலுக்கு வேறு பலவாறு உரைப்பாருமுண்டு.

**கேளிருடன் செயல் புரிந்து** - இச்சடங்குகள் சுற்றத்தார் கூடிச் செய்யத்தக்கன என்பது. ஈண்டுக் கருப்பக் குறிப்புக்கள் மட்டில் உளவாகவும் அவை கண்டு உலகர் கருப்பம் என்று கொண்டு பத்து மாதமும் உரிய சடங்குகளைச் செய்தனர் என்றுரைப்பாரு முண்டு.'

**பேரின்பம் கிளர்வுறு நாள்** - திருவவதாரஞ் செய்தார் (1924) என்று முடிக்க. **நாள்** - காலம் என்ற பொருளில் வந்தது. அவதரித்த திருநாளையும் **பேரின்பம் கிளர்வுறும்** என்ற குறிப்பாலுணர்த்தி நின்றது. பேரின்பமாவது - திருநீற்றொளிப் பெருக்கம் பற்றிய மகிழ்ச்சி.

பேரிதின்பம்—என்பதும் பாடம். 21

1920. அருக்கன்முதற் கோளனைத்து மழகியவுச் சங்களிலே
**திரு** பெருக்கவலி யுடனிற்கப், பேணியநல் லோரையெழத்,
**அவதாரம்** திருக்கிளரு மாதிரைநாட், டிசைவிளங்கப் பரசமயத்
தருக்கொழியச், சைவமுதல் வைதிகமுந் தழைத்தோங்க, ௨௨

1921. தொண்டர்மனங் களிசிறப்பத், தூயதிரு நீற்றுநெறி
எண்டிசையுந் தனிநடப்ப, வேழுலகுங் களிதூங்க,
அண்டர்குல மதிசயிப்ப, வந்தணரா குதிபெருக,
வண்டமிழ்செய் தவநிரம்ப, மாதவத்தோர் செயல்வாய்ப்ப, ௨௩

1922. திசையனைத்தின் பெருமையெலாந் தென்றிசையே வென்றேற,
மிசையுலகும் பிறவுலகு மேதினியே தனிவெல்ல,
அசைவில்செழுந் தமிழ்வழக்கே யயல்வழக்கின் றுறைவெல்ல,
இசைமுழுது மெய்யறிவு மிடங்கொள்ளு நிலைபெருக, ௨௪

1923. தாளுடைய படைப்பென்னுந் தொழிற்றன்மை தலைமைபெற
நாளுடைய நிகழ்கால மெதிர்கால நவைநீங்க,

வாளுடைய மணிவீதி வளர்காழிப் பதிவாழ,
ஆளுடைய திருத்தோணி யமர்ந்தபிரா னருள்பெருக, ௨௫

1924. அவம்பெருக்கும் புல்லறிவி னமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்பட,நல் லூழிதொறுந்
தவம்பெருக்குஞ் சண்பையிலே தவில்சரா சரங்களெலாஞ்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதா ரஞ்செய்தார். ௨௬

1920. (இ - ள்) அருக்கன்......நிற்க - ஞாயிறு முதற்கோள்க ளெல்லாமும் அவ்வவற்றுக்கு நியமமாகிய அழகிய உச்சவிடங்களிலே பெருக்கவும் வலிமையுடனாகவும் நிற்கவும்; பேணிய நல் ஓரை எழ - சோதிட நூலார் விரும்பிய நல்ல வேளை வரவும்; திருக்கிளரும் ஆதிரை நாள் திசை விளங்க - செம்மை மிகும் திருவாதிரைநாள் திசை விளக்கமடையவும்; பரசமயத் தருக்கு ஒழிய - பரசமயங்களின் தருக்கிய செயல்கள் நீங்கவும்; சைவமுதல்...ஓங்க - முதற் சைவத் துறையும் வைதிக நெறியும் தழைத்து ஓங்கியிடவும். ௨௨

1921. (இ - ள்) தொண்டர் மனம் களிசிறப்ப - திருத்தொண்டர்களின் மனங்கள் எல்லாம் களிப்புப் பெருகவும்; தூய...நடப்ப - தூய்மை செய்யும் திருநீற்று நெறி எட்டுத் திக்குக்களினும் தலைசிறந்து செல்லவும்; ஏழ் உலகும் களிதூங்க - ஏழுலகத்துள்ள உயிர்கள் எல்லாம் களிப்பில் மிகுந்திருக்கவும்; அண்டர் குலம் அதிசயிப்ப - தேவர் குலங்கள் அதிசயித்துக் காணவும்; அந்தணர் ஆகுதி பெருக - அந்தணர்களின் வேள்விகள் பெருகவும்; வண் தமிழ் செய் தவம் நிரம்ப - வண்மையுடைய தமிழ் செய்த தவம் முற்றுப் பேறு பெற்று நிரம்பவும்; மாதவத்தோர் செயல்வாய்ப்ப-பெருந்தவஞ்செய்வோர்களின் செயல்கள் பயன்பெறவும்; ௨௩

1922. (இ - ள்) திசையனைத்தின்...ஏற - திசைகள் எல்லாவற்றின் பெருமைகள் எல்லாவற்றையும் தெற்குத் திசையின் பெருமையே வெற்றிகொண்டு மேம்படவும்; மிசையுலகும்...வெல்ல - மேல் உலகமும் பிற உலகமும் என்றிவற்றை நிலவுலகமே சிறப்புப்பெற்று வெல்லவும், அசைவில்......வெல்ல - அசைதல் இல்லாத செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்குக்களின் துறைகளை வெல்லவும்; இசை முழுதும்...பெருக - இசை முழுவதும் மெய்யறிவும் பொருந்தும்நிலை பெருகவும்; ௨௪

1923. (இ - ள்) தாளுடைய......தலைமைபெற - தாளினையுடைய படைப்பு என்னும் தொழிலின் தன்மை தலைமை பெறவும்; நாளுடைய...நவைநீங்க - காலக் கூறுபாட்டில் நிகழ்காலத்தும் எதிர்காலத்தும் வருவனவாகிய குற்றங்கள் வாராது நீங்கவும்; வாளுடைய...வாழ - ஒளி பொருந்திய மணிகளையுடைய வீதிகளுடன் வளரும் தன்மை பெற்ற சீகாழிப்பதி வாழவும்; ஆளுடைய...பெருக - ஆளுடைய திருத்தோணியில் எழுந்தருளிய சிவபெருமானருள் பெருகவும்; ௨௫

1924. (இ - ள்) அவம்...பாழ்பட - அவத்தொழிலே பெருகச் செய்யும் புன்மை அறிவுகொண்ட சமணம் முதலாகிய பரசமயங்களாகிய பிறவி பெருக்கும் குற்றமுடைய நெறிகள் பாழ்படவும்; நல் ஊழிதொறும்...சண்பையிலே - நல்ல ஊழிக் காலங்கள்தோறும் தான் அழியாது மிதந்து நின்று தவநெறியைப் பெருகச் செய்யும் சண்பைமா நகரின்கண்ணே; தாவில்...திருவவதாரம் செய்தார் - குற்றமில்லாத சரம் அசரம் ஆகிய உயிர்களில் எல்லாம் சிவத்தன்மை பெருகச் செய்யும் பிள்ளையார் திரு வவதாரம் செய்தருளினர், ௨௬



(1) திருத்தோணி (குரு); (2) பிரமபுரீசர் (இலிங்கம்); (3) சட்டைநாதர் (சங்கமம்), விமானங்கள் ஒருங்கே காணும் காட்சி —சீகாழி



சிவபாதவிருதயர் ஆன்மார்த்தமாகப்
பூசித்த கோயில் —சீகாழி



திருஞானசம்பந்த நாயனர் அவதரித்த இடம்
(மனை) —சீகாழி

இந்த ஐந்து திருப்பாட்டுக்களும் முன் இரண்டு பாட்டுக்களுடன் கூட்டி ஒரு முடிபுபடுத்தி உரைக்க நின்றன. பொருளியைபின் தொடர்புபற்றி இவ்வைந்தும் தனி யுரைக்கப்பட்டன.

1920. (வி - ரை) **அருக்கன்.. நிற்க** - உச்சங்களில் நிற்றலாவது கோள்கள் தமக்கு மிக்க வலிமையுடைய இராசிகளில் தங்குதல். திருவாதிரை நாள் கொண்டு ஞாயிறு உச்சத்தில் நிற்றலால் பிள்ளையார் அவதரித்தது சித்திரைத் திங்கள் என்று கருதப்படுகின்றது. "ஆளுடைய பிள்ளையா ரவதரித்த நாளு மவரமுது திருஞான மமுது செய்த நாளுஞ், சூளுடையா திரைநாளாஞ் சித்திரை யாதிரைநாள்" (திருத் தொண்டர் புராண வரலாறு - 70) என்ற உமாபதியார் திருவாக்குக் காண்க. ஆயின் அந்நாளுக்கும் திங்களுக்கும் பொருந்த உச்சமாகாத சந்திரன் முதலியன உளவாதலின் எல்லாக் கோள்களும் உச்சம் பெற்று நிற்க என்றுரை கூறுதல் தவறும். உச்சம் பெறுத கோள்கள் ஆட்சி, பார்வை முதலிய வலிமைகளுடன் நின்றன என்க. இதுபற்றியே **அழகிய வுச்சங்களிலே** என்ற ஆசிரியர், **பெருக்கவலியுடன்** என்று பிரித்தோதியருளினார். இவ்வாறுரையாக்கால் சோதிடநூலுடன் மாறுபாடுறுவதோடு **பெருக்க வலியுடன்** என்பது மிகையாம்; உச்சநிலையே வலிமையை எடுத்துக் காட்டுதலால் என்க. கோளும் நாளும் நிற்றல் பிள்ளையாரது அவதாரத்திற் சிவப்பணிகட்குத் துணை நின்று தாந்தாம் பயன் பெறக் கருதியே யன்றி, அவர்க்கு வலிமை தருதற் கன்று என்க. "வேயுறு தோளி பங்கன்" என்ற கோளறு பதிகம் பார்க்க. "கை காட்டு வான்போலக் கதிர்காட்டி யெழும்" (783) என்றதும் கருதுக.

**பேணிய நல் ஓரை எழ** - **பேணிய** - சோதிடநூல் போற்றிய. **ஓரை** - வேளை. முகூர்த்தம் என்பர். இது $3\frac{3}{4}$ நாழிகை கொண்ட நாட் கூறுபாடு; இலக்கினம்; இராசி என்றும் கூறுப. ஓரை - ஹோரா என்ற கிரேக்க கணித மொழியினின்றும் போந்த திசை மொழி. இம்மொழியாட்சி கொண்டு ஓரைக் கணக்குக் கிரேக்கர் கூட்டுறவின் பயனாகத் தமிழரால் அறியப்பட்டதென்று ஆராய்ச்சி செய்யும் சோதிட நூலாராய்ச்சியாளரு முண்டு. வேளை : நற்பொழுது என்பனவும், பிறவும் அப் பொருளைக் குறிக்கும் தமிழ் வழக்குக்களாம். "செங்கை, பற்றுதற் குரிய பண்பிற் பழுதினற் பொழுது நண்ண" (திருஞான புரா. 1237). ஓரை என்பது இராசி - வீடு - என்ற பொருளினும் வழங்கக் காண்டலானும் இவ்வாராய்ச்சி செல்லாமை காண்க. "வானிற், றிகழ்ந்த ஞாயிறு துணைப்புண ரோரையுட் சேர்ந்து, திகழ்ந்த தன்மையின்" (ஷ 384) என்றவிடத்துத், துணைப்புணர் ஓரை - மிதுனராசியைக் குறித்தல் காண்க. "ஓரையு நாளும் துறந்த வொழுக்கம்" (பொரு. கா. 44) என்ற தொல்காப்பியமும் காண்க. ஹோரா சாத்திரம் என்றொரு கணித நூலும் உளது.

**திருக்கிளரும் ஆதிரை நாள்** - சிவபெருமா னுகந்தநாள் திருவாதிரை என்பது. "ஆதிரை நாளுகந்தான்" - "ஆதிரை நன்னாளான்" (தேவா) - "அரனுக் கிசைந்த பேர்வழியி னாளும்" (புராண வரலாறு - 70). **திரு** - சிவத் தன்மை - செம்மை. விண்மீன்களுள் திரு என்ற சிறப்படைமொழி பெற்றது இந்நாள் என்பதும் குறிப்பு. "ஆதிரையா னாதிரையா னென்றே யரற்றுமால், ஊர்திரை வேலி யுலகு" (முத்தொள்ளாயிரம்). **திசை விளங்க** - ஞாயிறு உதித்தாற்போல : "சேமவுத யப்பரிதி யிற்றிகழ்பிரான்" (1939).

**பரசமயத் தருக்கு ஒழிய - சைவமுதல் வைதிகமுந் தழைத்தோங்க** - **தருக்கு** - செருக்கும், அதனாற் பிற சமயங்கட்குச் செய்யும் தீமையும் குறித்தது. சமணர் சைவ சமய அரசரைத் தம்வயமாக்கியும், அத்துணைகொண்டு திருக்கோயில்களுக்கு முட்டுப் பாடு செய்தும், சைவ சமயத்தவரைத் தமது சமயம் சாரச் சூட்சிசெய்தும் வந்த

வரலாறுகள் அந்நாளின் மிக்கிருந்தன என்பது திருநாவுக்கரசு நாயனார் புராணம் - மூர்த்தி நாயனார் புராணம் - நமிநந்தியார் புராணம் முதலியவற்றால் நன்கறியக்கிடக்கும் உண்மை. ஆயினும் அச்சமயங்களை ஒழித்தல் சைவத்தின் கருத்தன்று; அவற்றால் தமக்கு நேர்ந்த தீமையை ஒழித்தலே கருத்து என்பார் பரசமயமொழியவென்னாது, தருக்கொழிய என்றார். புரைநெறிகள் பாழ்பட (1924) என்றது மிக்கருத்து. இங்குக் கூறியது வாதில் வெல்லுதலும், பின்னர்க் கூறுவது தீமையை அழித்தலுமாதலின் கூறியது கூறலன்மை யுணர்க. "பழுதுட னீங்க", "வாதில் வென்றழிக்க" (திருஞான. புரா - 736 - 739) என்ற புராணமும், முறையே அக்கருத்தினைக் கொண்ட "காட்டுமா...வாதுசெயத் திருவுள்ளமே" என்றும், "வேதவேள்வி......வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே" என்றும் வரும் இரண்டு பதிகங்களின் உட்குறிப்பும் காண்க.

ஒழிய...ஓங்க - ஒழிய - ஒழிதலால் ஓங்க என்று காரணப்பொருளில் வந்த வினையெச்சம். பயிர் ஓங்குதற்குக் களை கட்டுதல்போல. களை கட்டல் விளைபயிரின் ஆக்கங் கருதி அதனுட் புகுந்த பிறவற்றைக் களைதல் என்றமட்டேயன்றி, அப் புல் பூண்டு முதலிய சாதியை எங்குமில்லாது தொலைக்கும்பொருட் டன்றென்பது வெளிப்படை. அதுபோல உட்புகுந்த பரசமயத் தருக்கை உயிர் ஓங்குதற்பொருட்டு ஒழித்தல் வேண்டப்படும். "அமணிருள் மாய்ந்த தன்றே" (புரா-858), "பான்மையழி புத்தர்களும் பணிந்து வீழ்ந்தார்" (ஷை - 924).

சைவமுதல் வைதிகமும் தழைத்தோங்க - முதற் சைவமும் வைதிகமும் என்க. "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க" (1899); "பொருட் சமய முதற்சைவ நெறி" (1450) என்பனவும் அங்குரைத்தவையும் பார்க்க. 22

1921. (வி - ரை) தொண்டர் மனங் களிசிறப்ப - பரசமயத் தருக்கினால் திருநீற்றின் விளக்கம் குன்றியது கண்டு சிவபாதவிருதயர்போலவே மனம் வருந்திய தொண்டர் மனமெல்லாம் இவ்வவதாரத்தினால் சைவம் ஓங்கியது கண்டு களிப்ப. "தொண்டர் யாவரும் மகிழ்ச்சி யெய்திப், புண்ணியப் பிள்ளையாரைப் போற்றி" (ஷை புரா - 862).

தூய...தனிநடப்ப - தூய - தூய்மை தருவதாகிய. திருநீற்று நெறி - சைவ நெறி. தனி நடத்தல் - சிறப்பாய் நடைபெறுதல். "தேனலர் கொன்றை யார்தந் திருநெறி நடந்த தன்றே" (புரா - 859); "மேதினி புனித மாக வெண்ணீற்றின் விரிந்த சோதி, மாதிரந் தூய்மை செய்ய வமணிருள் மாய்ந்த தன்றே" (புரா-858); "மன்னனீ றணிந்தா னென்று மற்றவன் மதுரை வாழ்வார், துன்னிநின் றார்க ளெல்லாந் தூயநீ றணிந்து கொண்டார்" (ஷை 857); (புத்தர்களும் "முன்னெழுது விழுந்தெழுந்து சைவ ரானார்" (ஷை புரா - 926).

ஏழுலகும் களி தூங்க - எவ்வுலகத்திலும் உள்ள எல்லாவுயிர்களும் பிள்ளையாரது அருளிப்பாடுகளினாற் சிவனருள் பெருகப் பெற்ற இன்பத்தை அடைந்ததனால் களிப்படைந்தன. "ஆழ்க தீயது; எல்லாம் அரன் நாமமே சூழ்க" என்ற அருளிப்பாட்டின் பயன் "தொல்லுயிர் யாவையும் வாழி யஞ்செழுத் தோதி வளர்கவே" (புரா - 823) என்று ஆசிரியர் விரித்தமை காண்க. துளிர் தூங்க - என்பது பாடமாயின் பிறவிவெப்பத்தி னீங்கிப் பதியின் தண்ணிழலினையடைய என்க.

அண்டர்குலம் அதிசயிப்ப - குலம் - கூட்டம்; பிரமன் - மால் - இந்திரன் - தீக்கடவுள் - நீர்க்கடவுள் - விஞ்சையர் முதலிய பல கடவுளர். "கொளுவும் சுடர் பைய வேசென்று பாண்டியற் காகவே", "எரியிடிலிவை பழுதிலை", "செல்லவுந்துக சிந்தை யார்தொழ, நல்கு மாரரு ணம்பனே", "ஏடுசென் றணைதரும் ஏட

கத் தொருவன்" என்பனவாதி தேவாரத் திருவாக்குக்களும், "தேவரு முனிவர் தாமுந் திருவருட் சிறப்பு நோக்கிப், பூவரு விரைகொண் மாரி பொழிந்தனர்" (புரா-1093), "விஞ்சைய ரியக்கர் சித்தர் கின்னரர் மிடைந்த தேவர்...விசும்பின்மீது மணவணி காணச் சென்றார்" (ஷெ 1204), "நணுகப்பெறு, விண்ணவரு முனிவர்களும் விரிஞ்சனே முதலானார்...எத்தினார்" (ஷெ 1255) முதலிய புராணத் திருவாக்குக் களுங் காண்க.

**அதிசயிப்ப** - பின்னர் வரும் பெருஞ் சிறப்புக்களை எல்லாம் திருஅவதாரத்திலே காணப்பெற்று அதிசயிக்க. "அதிசயம் கண்டாமே" (திருவா). கண்ணப்ப நாயனார் அவதரித்தபோது "தேவ துந்துபியு மார்த்த" (663) என்றும், "உலகமெல்லா மளப்பரும் பெருமை காட்டித், தருங்குறி பலவும் சாற்றுந் தன்மையிற் பொலிந்து தோன்ற" (665) என்றும் கூறியவை இங்கு நினைவுகூர்தற்பாலன.

**அந்தணர் ஆகுதி பெருக** - அந்தணர் ஆகுதி - வேத வேள்வி. "வாழ்க அந்தணர் வானவ ரானினம்" என்ற திருவாக்கு வேள்வியைப் பெருகச்செய்தற் கெழுந்தது என்று ஆசிரியர் விரித்தமை (புரா - 821-822) காண்க.

**வண் தமிழ் செய்தவம் நிரம்ப** - இறைவனது வாக்கில் வந்த வேதம், "இவன் இறைவன்" என்று சுட்டிக்காட்டாது, அன்மைச் சொல்லினாற் றுதித்து இளைத்து நிற்கவும், அவ்வாறன்றிப், "பெம்மானிவன்" என்று இறைவனைச் சுட்டிக்காட்டும் பெருமை பெறும்பொருட்டும், ஏனைய பல பொருள்களையும் சொல்லி மக்களை வீணாள் கழிக்கச் செய்யாது சிவனொருவனையே காட்டியும் சொல்லியும் உயிர்களைப் பாசநீக்கமும் சிவப்பேறும் பெறும்படி செய்விக்க வல்ல தன்மை பெறும்பொருட்டும் தமிழ் தவம் செய்திருந்தது; அது பிள்ளையார் திருவவதாரத்தின் துணையால் நிரம்பப் பெற்றது என்பதாம். "**நான்மறை நாவன் நற்றமிழ்க் கின்றுணை ஞானசம் பந்தன்**" (குறிஞ்சி. இலம்பையங் கோட்டூர் - 11). "இறையனாரகப்பொருள் முதலிய இலக்கணங்களையும், தேவாரம் திருவாசகம்......முதலிய இலக்கியங்களையும் ஓர் பொருளாக எண்ணாது, நன்னூல், சின்னூல், அகப்பொருள்...முதலிய இலக்கணங் களையும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, இராமன்கதை... முதலிய இலக்கியங்களையும் ஓர் பொருளாகவெண்ணி வாணாள் வீணாள் கழிப்பர்" என்று இலக்கணக்கொத்துடையார் சுவாமிநாத தேசிகர் உரைத்தபடி, தமிழ்மொழி தன்னைப் பயில்வார் வீணாள் போக்க உதவியிருந்த தன்மை நீங்கத் தவஞ் செய்திருந்தது; பிள்ளையாரது திருவாக்கினின்றும் போந்தபோது தன்னைப் பயில்வார்க்கு இதுவரை அற முதலிய நான்கினையும் பொதுவகையா லறிவித்தபடியன்றி, நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டி வீட்டுநெறி யொன்றுமே கூறுஞ் சிறப்புடையதாயமையதலால் அத்தவம் நிரம்பிற்று. "நான்கனுள் வீட்டுநூல் சிறப்பு, அறமுதலிய மூன்று நூலும் அத்துணைச் சிறப்பின்று; வீட்டுநூல் நான்கனுள், அறிவு (ஞானம்) நூல் சிறப்பு, சரியை முதலிய மூன்று நூலும் அச்சிறப்பின்று" (இலக்கணக் கொத்து) என்றபடி. பிள்ளையாரது வாக்கில் "ஞானத்தமிழ்" (திருக்கலம்பகம்-11; திருமுறை) என்று தமிழ் சிறப்புப் பெற்றது. "தமிழ்மாலை, பற்றியென் றும்மிசை பாடியமாந்தர் பரமனடி சேர்ந்து, குற்றமின்றி" (நட்டபாடை. புகலூர்); "தமிழ்வல்லவ ரடிபேணுதல் தவமே" (ஷெ அண்ணாமலை). "தமிழ்பத்தும், யாழின்னிசை வல்லார்சொலக் கேட்டாரவ ரெல்லாம், ஊழின்மலி வினைபோயிட வுயர்வானடை வாரே' (ஷெ வீழி) முதலியவை பார்க்க. "திருநெறிய **தமிழ்**"(ஷெ பிரமபுரம்) எனத் தோடங்கிற்று; "**ஒண்டமிழ்** வல்லார்க், கறும் பழிபாவ மவல மிலாரே" (அந்தாளிக்குறிஞ்சி - நல்லூர்ப் பெருமணம்) என்று **வழிதிறந்தது**; "**தமிழ்** ஞான சம்பந் தன்சொல், சிந்தை

யான்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம், பந்தபாச மறுக்கவல் லார்களே" (கௌசிகம், நமச்சிவாயப் பதிகம்) என்று, கேட்டாரை யெல்லாம் ஒருவரொழியாமே முன் வீட்டில் உய்க்கவல்ல தன்மையினைத் தமிழ் பெற்றது; இவ்வாறு தமிழின் தவ நிரம்பப் பெற்றது.

**தமிழ்** - இங்குக் கூறியது தமிழ்மொழி; தமிழ் வழக்கே...வெல்ல (1922) என்று மேற்கூறுவது அத்தமிழ் மொழியாற் பெற்ற வழக்கு. ஆதலின் கூறியது கூற லன்மை யுணர்க.

**மாதவத்தோர் செயல்வாய்ப்ப** - மாதவம் - சரியை கிரியை முதலாகிய சிவ புண்ணியங்கள். செயல் வாய்த்தலாவது குறைநீங்கி நிரம்பப்பெறுதல். திருவோத் தூர் - திருமயிலை முதலியனவாய் வரும் பிள்ளையாரது சரித வரலாறுகள் பார்க்க. "நல்லோர் நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம் பந்தன்" (மேகரா - குறி, கழு மலம்). 23

1922. (வி - ரை) **திசையனைத்தின்...ஏற** - 46-ம் திருப்பாட்டிற் "பேசி லத்திசை யொவ்வா பிறதிசை" என்றும், "மாதவஞ் செய்த தென்றிசை" (35) என்றும் கூறியவை காண்க. "வென்று ஏற" என்றது புறச் சமயங்களை வெற்றி கொண்டு தீமை போக்கி மேம்பாடு செய்தற்கிடமாக என்றதாம். வெல்லுதல் - தீமை போக்குதலும், ஏறுதல் - நன்மை ஆக்குதலும் குறித்தன. பிள்ளையார் சரித வரலாறுகள் பலவும் காண்க.

**மிசை உலகும்...வெல்ல** - மிசை உலகு - விண்ணுலகம். பிறவுலகு - கீழ் உலகம். கீழுலகம் எண்ணவும் சொல்லவும்படா தென்பார் பிற என்ற மரபாற் கூறி னர். "ஞாலமே விண்ணே பிறவே" (5); "வானே நிலனே பிறவே" (6) (திருவெம்) என்ற திருவாசகக் குறிப்புக் காண்க. மேதினியே தனி வெல்ல என்றது மேல் கீழ் உலகத்தவர், அங்குப் பிறவிக்குரிய போகமேயன்றி வீட்டுச் சாதனமின்மை யால், இப்புவனியில் வந்து சிவனுய்யக்கொள்ளும் முறையில் வழிபட்டுய்தற் கிடமாதல் குறித்தது. முன் "அண்டர்குல மதிசயிப்ப" என்றது மற்று அவர்கள்பால் நிகழ்ச்சியை. ஈண்டுக் கூறியது அவ்வாறு வெற்றிகொண்ட இவ்வுலகின் பெருமைபற்றியது.

**அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறை வெல்ல** - தமிழ் வழக்கு - என்றது தமிழ்நாட்டின் தெய்வ வழிபாட்டு வழக்கு. அயல் வழக்கின் துறை என்றது மிக்கருத்து. "அங்கண்வட திசைமேலுங் குடக்கின் மேலு மருந்தமி ழின் வழக்கங்கு நிகழா தாக" (புரா - 1026) என்ற சரித வரலாறு நோக்கற்பாலது. அசைவில் - பிற எவற்றானும் வெல்லப்படாதது.

**இசை முழுதும்......நிலைபெருக** - இசை - தமிழுக்கே சிறப்புரிமையாகிய பண் ணமைதி. முழுதும் - வேற்று இடங்களில் ஒரோர் இசைப்பகுதியே அமைவுற, ஈண்டு முற்றும் அமைந்து உள்ளதென்பது. "ஏழே யேழே நாலே மூன் றியலிசை யிசையியல் பாய்" (தேவா. வியாழக்குறிஞ்சி. தாளச்சதி - கழுமலம் - 11); பண்கள் பலவும் முற்றிய நிலையிற் பிள்ளையார் தேவாரங்களுள் காணப்படுதல் குறிக்க. மெய் யறிவு - உண்மை ஞானம். ஏனை அறிவுகள் எல்லாம் பொய்யாய்க் கழிவன என்பது. மெய் - பிறிதினியைபு நீக்கிய அடை. இசை, வெற்றிசையா யொழியாது ஞானந் தொடுத்த தமிழிசையா யமைதல்வேண்டும் என்பார் இசையும் அறிவுமென இரண்டும் கூட்டி உடன் கூறினர்.

**இடங்கொள்ளும் நிலை** - ஞானமும், அதன் வாயிலாகிய இசையும் பிள்ளையாரது தமிழிற் பொருந்துதல். "நாளு மின்னிசை யாற்றமிழ் பரப்பு

ஞானசம் பந்தனுக்கு" (நம்பிகள் - தக்கேசி - கோலக்கா). பெருக - இன்றும் பயன் தந்து மேன்மேல் வளர.

இப்பாட்டினால், மூவுலகினும் நிலவுலகு வெல்ல, அதனில் தென்திசை வெல்ல, அதனில் தமிழ் வழக்கு வெல்ல, அதனில் இசையும் மெய்யறிவும் பிள்ளையாரது தமிழினாற் பெருக என்று தொடர்ந்துரைக்கப்பட்டது.

**அயல் வழங்கும்**—என்பதும் பாடம். 24

1923. **தாளுடைய......தலைமை பெற - தாளுடைய படைப்பு** - அடியில் - தொடக்கத்தில் - நிற்கும் சிருட்டி; **தலைமை பெற** - தலையாகிய - முதலாகிய - இடம் பெற. இறைவரது ஐந்தொழில்களினுள் படைப்பு அடியிலும் அருள் தலையிலும் உள்ளன. படைப்பு மேற்றொழில்களுக்கு வாயிலாக அருளாவதன்றித் தானே அருளாவதின்று. இங்குப் பிள்ளையாரைத் "தவமறைக் குலத்தோர் வழிபாட்டி னளித்தரு"ளி (1953) அவதரிக்கச் செய்த இறைவரது சிருட்டியே உயிர்களுக்கு "ஈனமாம் பிறவி தீர யாவரும் புகுக" (புரா - 1248) என்று வீடுபேற்றினைச் செய்யு மூலமாயினமையால் அருள் என்னும் தலையிடத்தைப் பெற்றது. "ஆடிய சேவடிக் கமல நினைவுற" (1917) என்ற குறிப்பும் காண்க. **தாள்** - அடியில் நிற்கும் தன்மை. **தலைமை** - முதன்மை. "காலந்தச் சத்தி யருளென்பர் காரணம், பாலொன்று ஞானமே பண்பார் தலையுயிர், காலந்த ஞானத்தைக் காட்டவீ டாகுமே" (8. 304) என்ற திருமந்திரமுங் காண்க. இதற்கு, இவ்வாறன்றி "முயற்சியை யுடைய மக்கட் படைப்பென்னும் பிரமனது தொழிற்குணமானது முதன்மைபெற" என்று உரைத்து "இதுகாறு மில்லாத தலைமை மிக்க பிள்ளையாரது திருவவதாரம் அப்படைப்புத் தொழிலுக்குள் அடங்குதலால் அத்தொழிற்றன்மை தலைமை பெற" என்று விசேடமும் கூறி உரைத்தனர் ஆறுமுகத் தம்பிரானார். "பிரமன் சிருட்டிக்கும் சராசரம் என்னும் உயிர்கள் தீவினை புரிந்து நிரயம் புகாமல் சிவஞானம் பெற்று வீடடைந்து அப்படைப்பின் பிரயோசனம் முதன்மை பெற அவைகட்கு உண்மைஞானமுணர்த்தப் பிள்ளையார் அவதரித்தனர்" என்று பொருள்கூறினர் மற்றோர் உரைகாரர். இவ்விரண்டினையும் மறுத்துத் தாள் - முயற்சி என்றுகொண்டு "சிவனருள்பெறும் முயற்சிகளை உயிர்கள் செய்யும் பொருட்டுச் சிருட்டியை இறைவன் தலைமையாகக் கொள்ள" என்று உரை கூறினர் ஆலால சுந்தரம் பிள்ளை அவர்கள். பிள்ளையாரது அவதாரம் பிரமன் படைப்புக்குள் வந்தது என்பது பிழை. பிள்ளையாரது அவதாரம் வினைக்கீடாக வந்ததன்று; "பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்**பரமர்**; மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டி னளித்தருள; (1853) என்றபடி சிவன் சிருட்டி. 'அரியயனே முதலமர ரடங்கவெழும் வெள்ளங்க'ளுள்ள 'ஊழியு மழியாக் காழி'நகர் தானும் பிரமன் சிருட்டிக்குட்படாமை காண்க. சிவன் சிருட்டித் தொழில் தலைமையாகச் சொல்வதற்கும் ஈண்டுப் பிள்ளையார் திருவவதாரச் சிறப்புக்கும் இயைபு காண உரைத்தலும் வேண்டும். அன்பர்கள் ஆய்ந்து கொள்க.

**நாளுடைய நிகழ்கால மெதிர்காலம் நவை நீங்க - நாள் உடைய** - காலக்கூறுபாட்டின் அமைவுடைய. இறந்தகாலத்துப் போந்த தீமைகள் பிள்ளையார் திருவவதாரத்தால் நீக்கப்படுவதனைத் திசை விளங்க - ஓங்க (1920) என்றும், தூய...பெருக (1921) என்றும் முன் உரைத்தாராதலின், எஞ்சிய நிகழ்காலம் எதிர்காலம் என்றிரண்டுமே இங்குக் கூறினார். **நீங்க** - அணுக வாராது விலக என்ற பொருளில் வந்தது.

**வாளுடைய மணிவீதி** - "விடுசுடர்நீண் மணிமறுகு" (1410); **வாள்** - ஒளி; காழிப்பதியின் வீதிகளில் மணியிலகுதல் 'ஒண்மணி வரன்றி...ஓதவன் றிரைகரைக்

செற்றுங் கழுமலம்" (பிள். தேவா. குறிஞ். 5) என்றதனுலுங் காணலாம். (திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள் குறிப்பு.)

**வளர் காழிப்பதி வாழ - வளர்** - முன்னர் அழியாது நின்று வளர்ச்சி பெற்ற; **வாழ** - அவ்வளர்ச்சியோடமையாது சிவானந்தப் பெருவாழ்வை அளிக்கும் தன்மை பெற்றோங்க; அது திருவருளால் நிகழ்வதென்பார் **அருள் பெருக** என்று மேற் கூறினர்.

**அருள் பெருக** - பெருமானதருள் பிள்ளையார் மூலம் குருவருளாகி உலகிற் பெருகிவிட.

**ஆளுடைய** · **பிரான்** என்று கூட்டுக. 25

**1924.** **(வி - ரை) பவம் பெருக்கும்** - நல்லறிவு பெறும் ஊழில்லாமையால் புல்லறிவு பெருக்கிப் பிறவி மேன்மேற் பெருகி வருவதற் கேதுவாகிய செயலே செய்யும்.

**பரசமயப் புரைநெறிகள் பாழ்பட**-பரசமயம் பாழ்படஎன்னுது இவ்வாறு கூறியதுபற்றி முன் "பரசமயத் தருக்கொழிய" (1920) என்றவிடத் துரைத்தவை பார்க்க.

**ஊழிதோறும் தவம் பெருக்கும்** - ஊழிகள் தோறும் அழியாது நின்று உயிர்களை மேன்மேலும் சிவநெறியிற் செலுத்தும்.

**சரா சரங்களெல்லாம்சிவம் பெருக்கும்**-சரம் அசரம் என்று இருபகுப்புட்பட்ட உயிர்கள் எல்லாமும் ஒன்று போலவே சிவனருள் பெற்றுச் சிவத்தன்மையில் ஓங்கச் செய்யும். அசரங்களும் சிவம் பெருகப் பெற்ற தன்மை, திருவோத்தூர் வரலாற்றில் பனைகளும் பிள்ளையாரது திருவாக்கிற்பட்ட சிறப்பினுற் பாச நீங்கிப் பிறவியொழித்துச் சிவத்தைக் கூடின (புரா - 983) என்றதனல் அறியலாம். சரங்களின் வகையிலே மக்கள் ஒழிந்த ஏனை உயிர்கள் சிவம் பெருகப் பெற்றதிறம் "வண்டரங்கப் புனற்கமலம்" (தோணிபுரம் - பழம்பஞ்சுரம்) என்பது முதலிய பதிகங்களால் அறியப்படும். மக்கள் சிவம் பெருகப் பெற்றமை எண்ணிறந்த திருப்பதிகப் பயன் கூறிய வகையாலும், திருநல்லூர்ப் பெருமண வரலாற்றுலும் இனிது உறுதிபெற விளங்கும்.

**பிள்ளையார்** · **பிள்ளை** - குமாரன்-மகன்; **ஆர்** - சிறப்புணர்த்தும் பலர்பால் விகுதி. யாவர்க்கும் தந்தைதா யாவார்க்குப் பிள்ளையாதலின் பிள்ளையார் என அடைமொழியில்லாது கூறினர். இதனை ஆளுடைய பிள்ளையார் என்ற பெயர்ப்பொருளை விளக்கும் வகையால் ஆசிரியர் மேல் (1967) உணர்த்துதல் காண்க. **சரா சரங்களெல்லாம் - சிவம் பெருக்கும்** - என்ற விடத்து இவர் "ஒரு கூட்டத்தாருக்கோ ஒரு நாட்டார்க்கோ குருவாயிராது உலகுக்கே குருவாயிருத்தலான்" என்று விசேடமுரைப்பாரு முண்டு.

**திருவவதாரம் செய்தார்** - **அவதாரம்** - இறங்குதல்; திருவடி மறவாப் பான்மையோராய் இருந்த இவரை மறைக்குலத்தோர் வழிபாட்டினுல் இறைவர் அளித்தருளினராதலின் அப்பெரு நிலையினின்றும் இறங்கினர் என்க. இது ஏனை உயிர்களது பிறப்புப் போன்றதன்று என்பது குறிக்கத் திரு என்ற செம்மையடை கூட்டி விதந்தோதினர். திருவை உயிர்களுக்குத் தரும் அவதாரம். "தீதகன் றுலக முய்யத் திருவவதாரஞ், செய்தார் - (149); "வந்தயஞ் செய்தார் விசார சருமனர்" (1217); "சீராள தேவரெனுந் திருமைந்த ரவதரித்தார்" (சிறுத். புரா. 17); என்பன வாதியாகக் கூறுவது காண்க. "பிள்ளையார் திருவவதாரஞ் செய்த பெரும்புகலி" (258)

1920 முதல் 1924 வரை இவ்வைந்து பாட்டானும் பிள்ளையாரது திருவவதாரச் சிறப்புக் கூறினர். "தன்னொளி மிக்குயர்ந்த தமிழ்ஞான சம்பந்தன்" (வியாழக்

குறிஞ்சி - பாதாளேச்சுரம் - 11) என்றபடி சிவனடிமறவாத நிலையில் அளவின்றுயர்ந்த சிவமயமாய்ச் சூழ்ந்த சிவவொளியிற்றோன்றும் பிள்ளையாரது சிவத் தன்மைப் பெருக்கினைப்பற்றி ஐந்து பாட்டுக்களிற் கூறியது குறிக்க. இவை ஒவ்வொன்றிலும் திருக்கிளரும் - சைவம் முதல் (1920); தூயதிருநீற்றுநெறி (1921); மெய்யறிவு - நிலை (1922), தோணியமர்ந்த பிரானருள் (1923); சிவம் பெருக்கும் (1924) என்று ஒவ்வோர் தன்மைபற்றி முறையே ஈசான முதலாகச் சதாசிவத்தி னைம்முகங்களின் அருட்டொழிற் குறிப்புப்பெறக் கூறுதலும் காண்க. "ஈசான: சர்வ வித்யா நாம்" (வேதம்) என்றபடி "சைவமுதல் வைதிகமும்" என எல்லா வித்தைகளையும் அடக்கி ஈசான முகத்தன்மையும்; அஞ்ஞானம் போக்கி ஞானமளிக்கு முறைபற்றி மூன்மு வதில் மெய்யறிவு வெல்ல என்று ஞானம் தரும் அகோரமுகத் தன்மையும் விளங்கு வதாம்; இவ்வாறே பிறவும் கண்டு கொள்க. பரசமயத் தருக்கொழிய (1920) என்பது முதல் "பவம் பெருக்கும் புரை நெறிகள் பாழ்பட" (1924) என்பது வரை உள்ள பத்தொன்பது வகைப்பயன்களும் விதையின் மரம் அடங்கித் தோற்றுதல் போலப் பிள்ளையாரது சரித விளைவுகளாகிய முழுதும் திருவவதாரத்திலே தோன்ற நின்ற குறிப்புப்படக் கூறியதும் காண்க. 26

**வேறு**

1925. அப்பொழுது பொற்புறு திருக்கழு மலத்தோர்
எப்பெயரி னோருமய லெய்துமிடை யின்றி
மெய்ப்படு மயிர்ப்புளக மேவியறி யாமே
யொப்பில்களி கூர்வதோ ருவப்புற வுரைப்பார்; ௨௭

(திருவவதார நன்னிமித் தங்கள்)

1926. "சிவனரு ளெனப்பெருகு சித்தமகிழ் தன்மை
யிவணிது நமக்குவர வெய்தியதென்?" னென்பார்
"கவுணியர் குலத்திலொரு காதல னுதித்தான்
அவன்வரு நிமித்தமிது" வென்றதி சயித்தார். ௨௮

1925 - (இ - ள்) அப்பொழுது...எப்பெயரினோரும் - அப்பொழுது அழகிய திருக்கழுமல நகரில் உள்ளவர்களாகிய எவ்வகைப்பட்டவர்களும்; அயலெய்து மிடையின்றி - பக்கங்களில் வேறு பொருந்தும் இடமின்றி; மெய்ப்படும்...உவப்புற - உடம்பிற் கூடும் மயிர்ப்புளகம் பொருந்தித் தம்மையறியாமலே ஒப்பற்ற மகிழ்ச்சி மிகுவதாகிய ஒரு உவகை தோன்ற; உரைப்பார் - சொல்வாராயினர்; ௨௭

1826 - (இ - ள்) சிவனருள்...என்பார் - சிவபெருமான்றிருவருளைப் போலவே பெருகும் மனமகிழ்கின்றதன்மை இங்கு இவ்வாறு நமக்கு வந்த தென்னை? என்று வினவுவார்; கவுணியர்...அதிசயித்தார் - கவுணியர் கோத்திரத்தில் ஒரு காதலன் உதித்தான்; அவ்வாறு அவன் உதித்த நிமித்தம் இது" என்று தெளிந்து கொண்டு அதிசய மடைந்தனர். ௨௮

இந்த இரண்டுபாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிவு கொண்டுரைக்க நின்றன.

1925. (வி - ரை) - **எப்பெயரினோரும்** - எப்பெயரினலும் சிவநெறியில் ஒழுகியவர்கள். "அறுவகை விளங்குஞ் சைவத் தளவிலா விரதஞ் சாரு, நெறிவழி நின்ற வேட நீடிய தவத்தி னுள்ளோர்" (புரா. 1203); "ஆறுவகைச் சமயத்தி லருந்தவரு மடியவருங், கூறுமறை முனிவர்களும்" (ஷை 1252); "பம்புசடைத் திருமுனிவர் கபாலக் கையர் பலவேடச் சைவர்" (ஷை 1018) முதலாகப் பிள்ளையாரது திருமணத்திலுடன் சேர்வோரும், பிள்ளையாரை எதிர்கொள்வோரும் ஆகிய பலவகைப் பெயரின் உள்ள சிவநெறிக் கூட்டத்தார், இதற்குப் பல வருணத்தார்

களும் என்றும், சாதி மதம் முதலிய வேற்றுமையின்றி எல்லோரும் என்றும் உரைப் பாருமுண்டு. எவ்வகையானுஞ் சிவநெறிமுயல்வோர்க்கே தம்மை அறியாது அருள் விளக்கமாகிய அடையாளங்கள் தோன்றுமெனக.

அயல் எய்து மிடையின்றி - புளகம் மேவி என்க. உடம்பில் எங்கும் மெய்ம் முழுதும் மயிர்ப் புளகம் பொருந்த இடையின்றி மேவுதல்; உடல் முழுதும் இடையில்லாது புளகம் பொருந்துதல். இதற்கு இடம் பெறாது நெருங்கிக் கூடி என் றுரைப்பாரு முண்டு.

மயிர்ப்புளகம் மேவி...அறியாமே களிகூர்வதோர் உவப்புற - மயிர்ப்புளகம் புற உடல் நிகழ்ச்சியாகிய மெய்ப்பாடு; உவப்பு - உள் நிகழ்ச்சி; அறியாமே-உவகை யும் புளகமும் முன் அறிந்த ஒரோர் காரணம்பற்றி நிகழ்வன; இங்கு இயல்பு அறி யாமே வருதலால் வினவுவாராயினர்.

ஒப்பில் களிகூர்வதோர் உவப்பு - இதுவரை தாம் கொண்டிராத களிப்பை உள்ளெழுவிக்கும் உவகை. 27

1926. (வி - ரை) சிவனருள் என...தன்மை-சிவனருள் வெளிப்பாடு நிகழும் போது அது சிவானந்த நிறைவாக உருப்பட்டு அச்சிவத்தினிறைவுள்ள உயிர்கள் தோறும் தாக்கும்; அப்போது அவ்வுயிர்களில் தம்மையறியாமல் ஒப்பற்ற ஆனந்தந் தோன்றும்; இவ்வாறு ஆனந்தம் விளையவே அது சிவனருள் காரணமாக வந்ததென்று கருதலளவையால் ஆய்ந்தனர் என்க. வாகீசர் இறைவரது நிறைவுக்குள் கலந்தபோது "யோனிகள் ஆயின எல்லாம் உண்ணிறைந்த பெருமகிழ்ச்சி தானிறைந்த" (1963) வரலாறும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. ஆண்டுச் சிவனருளில் அருணிறைந்த உயிர் கலந்த போது உண்டாகிய ஆனந்த நிலை; ஈண்டு அச் சிவனருணிறைவில் கலந்திருந்த உயிர் அவனருளால் அந்நிலையினின்றும்போந்து வெளிப்பாடுற்ற ஆனந்த நிலை.

எய்தியது என் என்பார் - என்ன காரணம் என்று வினவி ஆராய்வாராய்; என்பார் - என்பாராகி - முற்றெச்சம். என்பார் - என்று - துணிந்து என்னும் வினை யெச்சத்துடன் கூட்டுக.

கவுணியர்......இது - சிவநெறி யொழுக்கத்தில் நின்றாராதலின் இந்நிகழ்ச்சி யாகிய நிமித்தம் கண்டு அதன் காரணத்தைத் துணிந்தனர். நிமித்தம் - பின்வரும் நன்மையும் தீமையும் முன்காட்டும் வெளித் தோற்றங்களாகிய அறிகுறிகள். "விளங்குநன் னிமித்தம்" (புரா - 642); "துன்னிமித் தங்க ளங்கு நிகழ்ந்தன" (புரா - 631). சிவபாதவிருதயரும் பகவதியாரும் உலகுய்யச் செய்த தவமும், அது காரணமாக ஒரு காதலனுதித்தமையும் அறிந்தாராதலின் இந்நன்னிமித்தத்தின் காா ணம் இதுவே என்று துணிந்தனர். வரும் நிமித்தம் இது - வருதலை அறிவிக்கும் நிமித்தமாக இது நிகழ்ந்தது என்க.

கவுணியர் குலத்தில் - உதித்தான் - பிள்ளையார் திருப்பதிகங்களுட் பலவிடத் தும் இக்குலம்பற்றித் தம்மை அறிவித்தருளுதல் காண்க.

காதலன் - பலநாளும் காதல் செய்ததன் பயனாக வந்தவர் என்றும், உல குயிர்கள் காதலித்து வழிபடவுள்ளவர் என்றும் குறிக்க இப்பெயரால் கூறினர். ஒரு - ஒப்பற்ற. 28

1927. பூமுகை யவிழ்ந்துமண மேவுபொழி லெங்குந்
தேமருவு தாதொடு துதைந்ததிசை யெல்லாந்
தூமருவு சோதிவிரி யத்துக ளடக்கி
மாமலைய மாருதமும் வந்தசையு மன்றே.

**(இ - ள்)** பூமுகை......திசை எல்லாம் - பூக்கள் மொட்டலர்தலால் மணம் பொருந்திய சோலைகளிலெங்கும் தேன் பொருந்திய மகரந்தங்கள் பரவுதலினால் நிறைந்த திசைகளில் எல்லாம்; தூமருவு......அடக்கி - தூய்மையுள்ள ஒளி விரியும் படி அத் துகளை அடக்கி; மாமலைய......அசையும் - பெருமையுடைய பொதியமலையி னின்றும் வரும் மாருதமாகிய தென்றலும் வந்து மெல்லிதாய் அசையும்; அன்றே - அப்போதே.

**(வி - ரை)** சோலைகளின் பூக்கள் விரிந்து மணமுடைய பூந்தாதுக்களை திசை யெங்கும் பரப்பி மணமும் குணமும் செய்தன; அதனால் ஒளி குறையவே, மலய மாருதம் வந்து அசைந்து துகள் அடக்கிச் சோதி விரியச் செய்தது என்பது.

**பொழில்** - இந்நகரைச் சூழ்ந்துள்ள சோலைகள். "சோலை தொறும்" (1906) "கிளர் வெங்கு முரலளிகள்" (1911); இந்திரன் உண்டாக்கி வழிபட்ட நந்தவனமும் ஈண்டுக் கருதுக. எங்கும் உள்ள தாதோடு என்க. **தேமருவு தாது** - தேனிற்றோய்ந்த பூந்துகள்.

**தாதோடு துதைதலால் இருள் பரந்த திசை** - என்பது குறிப்பு.

**தூமருவு சோதி** - தூய்மை செய்யும் ஒளி. தாது சூழ்தலால் மணமும் இனிய சுவையும் பரந்தாலும் அவை சுகக்கேடு விளைப்பன. அதனைத் தூய்மை செய்து சுகங் கொடுப்பது ஒளி.

**விரிய** - விரியும்படி. **துகளடக்கி** - துகளை மேலெழுந்து பரவாமல் அடக்கி ஒடுக்கி. சோதி விரியத் துகள் அடக்கி என்ற நயமும் காண்க.

**மாமலைய மாருதமும் வந்து** - உம்மை உயர்வு சிறப்பு. **வந்து** - மாமலையத்தினின் றும் வந்து; "பொங்குதமிழ்ப் பொதியமலைப் பிறந்துபூஞ் சந்தனத்தின், கொங் கணைந்து குளிர்சார லிடைவளர்ந்த கொழுந்தென்றல், அங்கணைய" (ஏயர்·புரா-270); **வந்து அடக்கி** - அசையும் என்க. அடக்கி என்றதனால் பொதிகைச் சந்தனமணமும் சாரற்றண்மையும் கொண்டலைதலினால் அத்தாதுக்களின் பயனையும் தந்தது. ஆயின் அவற்றினால் போந்த இருளையும் போக்கி ஒளி விரியச் செய்தது என்பது குறிப்பு. அணிமையில் உள்ள பொழில் இடர் செய்ய, அதனை நீக்கச் சேய்மையினின்றும் விரைந்து போந்து மாருதம் இன்பம் செய்தது என்றதனால் அணிமையினின்றும் துன் பம் செய்வாரும் சேய்மையினின்றும் இன்பஞ் செய்வாரும் உண்டு என்ற குறிப்பும் பெறக் கூறிய நயம் காண்க. மலைய மாருதத்தின் தன்மை மூன்றனுள், அசைய என்றதனால் மென்மை கூறவே, ஏனைத் தண்மையும் மணமும் உபலக்கணம்பற்றிக் கொள்ளப்படும்.

**அசையும்** - கடிதாய் வீசாமல் மென்மையாய் அசைந்து சேவகஞ் செய்யும். "பவனன் பணிசெய" (1428).

**துகள் அடக்கி** - மாருதம் வீசுங்கால் துகளை எழுப்பு மியல்பு நீங்கித் துகளை அடக்கி வீசியது ஓர் நற்சகுனக் குறிப்பு என்பர் இராமநாதச் செட்டியார். அவ்வாறே மேல்வரும் பாட்டுக்களினு முரைப்பர். **துகள் அடக்கி** - சமணர்களது குற்ற நிறைந்த கொள்கைகளை அடக்குவதற்கும்; **சோதி விரிய** - திருவெண்ணீற்றின் ஒளிபரப்பு தற்கும்; **மலையமாருதம் வந்து** - அவற்றிற்குக் காரணராகிய பிள்ளையாரது வருகைக் கும் உள்ளுறை உவமமாய் விளங்குவன - என்பது திரு. வ. சு. செங்கல்வராய 29
பிள்ளையவர்கள் குறிப்பு.

1928. மேலையிமை யோர்களும் விருப்பொடு கரப்பில்
சோலைமலர் போலமலர் மாமழை சொரிந்தே

ஞாலமிசை வந்துவளர் காழிநகர் மேவுஞ்
சீலமறை யோர்களுட ேனாமவினை செய்தார். ௩௰

(இ - ள்) மேலை யிமையோர்களும்...சொரிந்தே - மேலுலகத்தவர்களாகிய தேவர்களும் விருப்பினுடன் கரத்திலில்லாது, சோலைமலர்களைப்போலக், கற்பக முதலிய தேவதரு மலர்களை மழையாகப் பொழிந்தே; ஞாலமிசை வந்து - நிலவுலகத்தின் கண் வந்து; வளர்...செய்தார் - வளரும் காழிப் பதியிற் பொருந்திய சீலமுடைய வேதியர்களுடன்கூடி வேள்வித் தொழில்களைச் செய்தனர்.

(வி - ரை) மேலை - மேல் உலகத்துள்ள; தம்மை மேலோர்கள் என்று எண்ணிக் கொள்கின்ற என்றலுமாம். இமையோர்களும் - உம்மை உயர்வு சிறப்பு.

கரப்பில் மலர் - என்று கூட்டுக. மலர் - இங்குத் தேவதரு மலர்களைக் குறித்து நின்றது. கரப்பில் சோலை என்று கூட்டி உரைத்தலுமாம்.

சொரிந்தே - வந்து - செய்தார் என்று முடிக்க. 'சொரிந்தே - வானுலகத்தினின்று சொரிந்துகொண்டே.

மறையோர்களுடன் ஓமவினை செய்தார் - ஓமவினை - வேள்வித் தொழில். இவ் வேள்வி, மகப் பெற்ற பின்னர்ச் செய்யப்படுவது. வேள்வியில் தேவர்களுக்குரிய இடங்களில் அமர்ந்து தமக்கு உரிய அத்தொழிலிற் கலந்துகொண்டனர் என்பதாம். வேள்வியில் உரிய தேவர்களை எண்ணும்போது அங்கு வெளிப்பட்டு வந்து உரிய தொழில் செய்தனர் என்க. ஏனை எல்லா வேள்வியிலும் வருவாரேனும் அங்கங்கு மந்திரங்களுள் அமைந்துபடுவர். ஈண்டுச் சிறப்புடன் வெளிப்பட்டமர்ந்தனர் என்க. நேரே பூசுரர்களாய்க் கோலங்கொண்டு வந்தனர் என்பாருமுண்டு. 30

1929. பூதகண நாதர்புவி வாழவருள் செய்த
நாதனரு ளின்பெருமை கண்டுநல முய்ப்பார்;
ஓதுமறை யோர்பிறி துரைத்திடினு மோவா
வேதமொழி யாலொலி விளங்கியெழு மெங்கும். ௩௧

(இ - ள்) பூதகண நாதர்...உய்ப்பார் - சிவபூதகணத் தலைவர்கள், உலகமெல்லாம் வாழும் பொருட்டுச் சிவபெருமான் பிள்ளையாரைத் தந்தருளிய திருவருளின் பெருமையைக் கண்டு அதற்கேற்ற நலங்களைச் செய்வாராயினர்; ஓதும்...உரைத்திடினும் - மறை ஓதுகின்றவர்கள் பிற மொழிகளை உரைத்திடினும்; ஓவா... எங்கும் - இடைவிடாத வேத மந்திரங்களால் வரும் ஒலியாகவே எங்கும் விளங்கி எழும்.

(வி - ரை) இப்பாட்டினுற் சிவபூத கணங்களின் செயலும் வேத ஒலியே எழுந்த செயலும் கூறப்பட்டன.

நலமுய்த்தல் - இமையோர் ஓமவினை செய்ததுபோலப் பூதகணநாதர்கள் உரிய நலஞ் செய்தல். இவை பிள்ளையாரைப் பேணுதல் முதலாயின.

பிறிதுரைத்திடினும் - வேத மொழியால் ஒலி விளங்கி எழுதல் - வேதமொழி முழக்கவுள்ள மறையோர் அது செய்யாது வேறு உரைத்தாலும் வேதவொலி தாமே பெருகி முழங்குதலால் இடைவிடாது அவையே மிக்கன. அருள்பற்றி வேத நாதம் பிறர் சொல்லாமலே முழங்கின என்பதுமாம். இவ்வாறே, " இயற்றபவ ரின்றியும் மங்கல முழக்கொலி மலிந்தன " (1931) என ஓசைபற்றிப் பின் கூறுதல் காண்க.

கொண்டுநலம்—என்பதும் பாடம். 31

1930. பயன்றருவ பஃறருவும் வல்லிகளு மல்கித்
தயங்குபுன லுந்தெளிவு தண்மையுட னண்ணும் ;
வயங்கொளி விசும்புமலி னங்கழியு மாறு
நயம்புரிவ புள்ளொலிக ணல்லதிசை யெல்லாம்.  ௬௨

(இ - ள்) திசை எல்லாம் - எல்லாத் திசைகளிலும்; பயன் தருவ...மல்கி - பலவகையான மரங்களும் கொடிகளும் பெருகித் தத்தம் பயன்களைத் தருவனவாயின; தயங்கு...நண்ணும் - கலக்கமுடைய நீரும் தெளிவுடனும் குளிர்ச்சியோடுமிருந்தன ; வயங்கு...கழியும் - விளங்கும் ஒளிகளையுடைய ஆகாயமும் களங்கம் நீங்கின ; மாறு... புள் ஒலிகள் - மாறுபாடில்லாத நன்மையையே புட்களின் ஒலிகள் செய்வனவாயின ; நல்ல - இவ்வாறு எல்லாம் நல்லவாயின.

(வி - ரை) திசையெல்லாம் என்பதனை எல்லா வினைமுற்றுக்களுடனும் கூட்டுக. நல்ல என்பதனை அடைமொழியாக்கி நல்ல திசை என்று கூட்டியுரைப்பினுமாம்.

பயன்...மல்கி - தரு - பயன் மரங்களையும், வல்லி - பூ, கனி, மூலம் என்றின்ன பயன் தரும் கொடிகளையும் குறித்தன. பயன் தருவ - என்றது காலத்தை எதிர்நோக்காது பலன் தருவனவாயின என்றதாம்.

தயங்கு...நண்ணும் - தயங்குதல் - கலங்குதல் ; தெளிவு, தண்மை என்றின்ன பண்பில்லாத நீரும் அப்பண்புடன் பொருந்துவனவாயின.

வயங்கோளி...கழியும் - ஒளி வயங்கு விசும்பு - என்க. ஒளி - விண்ணொளிகளாகிய மதி - ஞாயிறு - விண்மீன் முதலியவை. மலினம் - வானத்தை மறைக்குங் களங்கங்களாகிய மேகம், புயற்காற்று முதலாயின.

மாறு...ஒலிகள் - மாறு - மாறுபடாத - தீமை செய்யாத ; புள்ளொலிகளான் வரும் மாறுபாடாவன - "கூகையோ டாந்தை தீய புள்ளின மான தம்மிற் பூசலிட் டழிவு சாற்று"தல் (புரா - 632) முதலியவை. மாறு நயம் என்று கூட்டியுரைப்பினு மமையும். ஒலிகள் தீமையின்றி மங்கலத்தையே காட்டின என்பது. ஒரு பொருள் பற்றிக் கொள்ளப்படுதலால் ஓசை என்னாது ஒலி என்றார்.  32

*1931. அங்கண்விழ விற்பெருகு சண்பையகன் மூதூர்ச்
சங்கபட கங்கருவி தாரைமுத லான
வெங்கணு மியற்றுபவ ரின்றியு மியம்பும்
மங்கல முழக்கொலி மலிந்தமறு கெல்லாம்.  ௬௩

(இ - ள்) அங்கண்...மூதூர் - அங்கண் விழாவின் மங்கலங்களாற் பெருகுகின்ற சீகாழி என்னும் பழைய ஊரில் உள்ள ; சங்கம் படகம் கருவி தாரை முதலான - சங்கங்கள், ஒருகட்பறை, வேறு நரப்புக் கருவிகளும், தாரை சின்னம் முதலாயின இசைக் கருவிகளும் ; எங்கணும்...இயம்பும்-எங்கும் ஒலிக்கச் செய்பவர்களின்றியும் சத்திக்கின்ற ; மங்கல முழக்கொலி மறுகு எல்லாம் மலிந்த - மறுகுகளில் எல்லாம் மங்கலமாகிய பேரொலி மலிந்தன

(வி - ரை) அங்கண் - திசையெல்லாம் என முன்பாட்டிற் கூறிய திசைகளுள் வைத்து அவ்விடத்தே. அழகிய இடங்கள் தோறும் என்றலுமாம்.

விழா - மங்கலமாகிய சகுனங்களும் கொண்டாட்டம் முதலியனவும்.

**படகம்** - பேரி முதலிய ஒருமுகப் பறையும், முழவு முதலிய இருமுகப் பறைகளும். **கருவி** - நரம்புக் கருவி, துளைக்கருவி முதலியன. **தாரை** - இனம்பற்றிக் காளம் - சின்னம் முதலியனவும் கொள்க.

**இயற்றுபவரின்றியும் இயம்பும் மங்கல முழக்கு ஒலி** - என்றது அருள்வெளிப் பாட்டின் பயனாக எழுந்த காற்று ஒலியலைகள் இவற்றை இயக்க, அவ்வவையும் அவ்வாறே மங்கல முழக்காக ஒலித்தன. "வேத வொலியால்" என முன் பாட்டிற் கூறியவாறே இதனையும் கொள்க. சில நற்காலங்களில் காற்றினியக்கத்தால் வானிற் குழல், யாழ் முதலிய ஓசைகள் கேட்கப்படுதல் கண்கூடு. இங்கும் முன்பாட்டினும் கூறியவை எல்லாம் நற்சகுனமாய்த் தெய்விக மங்கல நிகழ்ச்சியைக் காட்டின.

முழங்கோலி—என்பதும் பாடம். 33

**பத்து நாள் மங்கலச் சடங்குகள்**

1932. இருட்புவன மித்தகைமை யெய்தவவர் தம்மைத்
தருங்குல மறைத்தலைவர் தம்பவன முன்றிற்
பெருங்களி வியப்பொடு பிரானருளி னாலே
அருந்திரு மகப்பெற வணைந்தவணி செய்வார் ; ௩௪

1933. காதல்புரி சிந்தைமகி ழுக்களி சிறப்பார் ;
மீதணியு நெய்யணி விழாவொடு திளைப்பார் ;
சூதநிகழ் மங்கல வினைத்துழனி பொங்கச்
சாதக முறைப்பல சடங்குவினை செய்வார் ; ௩௫

1934. மாமறை விழுக்குல மடந்தையர்க டம்மிற்
றாமுறு மகிழ்ச்சியொடு சாயன்மயி லென்னத்
தூமணி விளக்கொடு சுடர்க்குழைகண் மின்னக்
காமர்திரு மாளிகை கவின்பொலிவு செய்வார் ; ௩௬

1935. சுண்ணமொடு தண்மலர் துதைந்ததுகள் வீசி
உண்ணிறை விருப்பினுட னேகையுரை செய்வார் ;
வெண்முளைய பாலிகைகள் வேதிதோறும் வைப்பார் ;
புண்ணிய நறும்புனல்கோள் பொற்குட நிரைப்பார் ; ௩௭

1936. செம்பொன்முத லானபல தானவினை செய்வார் ;
நம்பரடி யாரமுது செய்யநல முய்ப்பார் ;
வம்பலர் நறுந்தொடையல் வண்டொடு தொடுப்பார் ;
நிம்பமுத லானகடி நீடுவினை செய்வார் ; ௩௮

1937. ஐயவி யுடன்பல வமைத்தபுகை யாலு
நெய்யகி னறுங்குறை நிறைத்தபுகை யாலும்
வெய்யதழ லாகுதி விழுப்புகையி னாலுந்
தெய்வமண நாறவரு செய்தொழில் விளைப்பார் ; ௩௯

1938. ஆயபல செய்தொழில்க ளன்றுமுதல் விண்ணோர்
நாயக னருட்பெருமை கூறுநல மெய்தத்
தூயதிரு மாமறை தொடர்ந்தநடை நூலின்
மேயவிதி யையிரு தினத்தினும் விளைத்தார். ௪0

1932. (இ - ள்) இரும்புவனம்...எய்த - பெரிய புவனம் இந்தத் தன்மை அடைய; அவர் தம்மை...முன்றில் - அத்திருவுடைப்பிள்ளையாரைப் பெற்ற வேதியர் தலைவராகிய சிவபாத விருதயர் தமது திருமனை முன்றிலில்; பெருங்களி...செய்வார் - பெருமகிழ்ச்சியும் வியப்பும் பொருந்தச் சிவபெருமான்றிருவருளினால் அரிய திருமகவினைப் பெறப் பொருந்திய அணிகளைச் செய்வாராகி; ௩௪

1933. (இ - ள்) காதல்...சிறப்பார் - ஆசை கொள்ளும் சிந்தை மகிழப் பெருங்களிப்படைவார்; மீதணியும்...திளைப்பார் - மேலே பூசப்படும் நெய்யாட்டு விழாச் செய்து மகிழ்வார்; சூதநிகழ்...செய்வார் - திருவவதாரத்தாற் பொருந்திய மங்கலச் செயல்களின் ஆரவாரம் பெருகச் சாதகன்மம் முதலிய பல சடங்குகளின் தொழில்களையும் செய்வார்; ௩௫

1934. (இ - ள்) வெளிப்படை - விழுப்பமுடைய வேதியர் மகளிர் தம்மிற் கலந்த பெரு மகிழ்ச்சியோடும், சாயலையுடைய மயிலேபோலத் தூய அழகிய விளக்குகளுடனே ஒளியுடைய குழை முதலிய அணிகள் மின்ன அழகிய அத்திருமாளிகையினை அழகு மேம்படச் செய்வாராகி; ௩௬

1935. (இ - ள்) சுண்ணமொடு...செய்வார் - சுண்ணப்பொடிகளுடனே குளிர்ந்த மலர்த் தாதுக்களை வீசி உள்ளே நிறைந்த விருப்பத்துடன் அத்திருவவதார மகிழ்ச்சிச் செய்தியை எங்கும் சொல்வார்கள்; வெண் முளைய...வைப்பார் - வெண்முளைகளுடன் கூடிய முளைப் பாலிகைகளை மேடைகள்தோறும் வைப்பார்கள்; புண்ணிய...நிரைப்பார்-மணமுடைய புண்ணியப் புதுநீர் கொள்ளப்பெற்ற பொற் குடங்களை வரிசைபெற வைப்பார்கள்; ௩௭

1936. (இ - ள்) செம்பொன்...செய்வார் - செம்பொன் முதலான பலவற்றைத் தானஞ் செய்வார்கள்; நம்பரடியார்...உய்ப்பார் - சிவனடியார்கள் திருவமுது செய்தற்கு வேண்டும் நலங்களை நாடிச் செய்வார்கள்; வம்பலர்...தொடுப்பார்-புதிதின் மலரும் மணமலர் மாலைகளை அவற்றில் மொய்த்திருக்கும் வண்டுகளுடன் சேர்த்துத் தொடுப்பார்கள்; நிம்ப முதலான...செய்வார் - வேம்பு செருகுதல் முதலாகக் காப்புமிக்க தொழில்களைச் செய்வார்கள்; ௩௮

1937. (இ - ள்) ஐயவி...புகையாலும் - வெண்கடுகு முதலான பண்டங்கள் சேர்த்து அமைக்கப்பட்ட புகையினாலும்; நெய் அகில்...புகையாலும் - நெய்யுடன் நல்லமணமுடைய அகிற்றுண்டுகளால் நிறைவித் துண்டாக்கப்பட்ட புகையினாலும்; வெய்ய...புகையினாலும் - விருப்பம் தரும் ஆகுதிகளையுடைய வேள்வித்தீயின் விழுமிய புகையினாலும்; தெய்வமணம்...விளைப்பார் - தெய்வமணங் கமழும்படியாக உள்ள செய்கைகளை விளைப்பார்கள்; ௩௯

1938. (இ - ள்) ஆய பல செய் தொழில்கள் - அவ்வாறாகிய பற்பல செய்கைகளையெல்லாம்; விண்ணோர் நாயகன்...எய்த - தேவர் தலைவராகிய சிவபெருமானுடைய திருவருளின் பெருமைமிகும்படியாகிய நலம் பொருந்துபடி; தூய...விதி - தூய்மை செய்யும் திருமாமறைகளிலும் அவற்றைத் தொடர்ந்த கற்ப சூத்திரம் முதலிய ஒழுக்க நூல்களினும் பொருந்திய விதிமுறையின்படி; அன்று முதல் ஐயிரு தினத்தினும் விளைத்தார் - திருவவதாரம் நிகழ்ந்த நாள் முதலாகப் பத்து நாட்களிலும் விளைத்தனர். ௪௦

இந்த ஏழுபாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன. இவற்றாற் பிள்ளையார் திருவவதாரத் திருநாள் தொடங்கிப் பத்து நாட்களினும் அவரவதரித்த திருமாளிகையில் நடந்த வேத நூல் விதிச் சடங்குகளையும் ஏனைச் சிறப்புக்களையும் தொடர்ந்து கூறினார்.

1932. (வி - ரை) **இரும்புவனம் இத்தகைமை எய்த** - என்றதனால் முன் 1925 முதல் 1931 வரை ஏழு திருப்பாட்டுக்களிலும் கூறியபடி உலகம் பொருந்திய மங்கலச் சகுனம் முதலாகிய தன்மைகள் குறிக்கப்பட்டன. திருவவதாரத்தினால் உலகம் பயன்பெற்றது; சிவபாத விருதயரின் மனைவாழ்க்கையும் பயன் பெற்றது. இவ்விரண்டினையும் ஒருங்கு கருதியே அந்த மறைத் தலைவர் தவஞ் செய்தார்; இவற்றுட் சிறந்தது உலகம் பெற்ற பயன் என்ற குறிப்புப்பெற இந்த இரண்டினையும் பற்றியெழுந்த சிறப்புக்களைத் தனித்தனி ஏழேழு திருப்பாட்டுக்களாற் கூறிய ஆசிரியர் உலகப்பயனை முன் வைத்தோதி, மற்றதனைப் பின்வைத்ததுமன்றி, முன்னதனைப் **புவனம் இத்தசைமை எய்த** என்று பிரித்துங் காட்டினார்.

**அவர் தம்மைத்தரும் குலமறைத் தலைவர்** - சிவபாத விருதயர்.

**பவனம்**-திருமாளிகை. இதனாலும் இனிக் கூறப்படுவன எல்லாம் திருமாளிகையில் நடந்த செயல்கள் என்று முன்னவற்றினின்றும் பிரித்துக் கூறப்பட்ட திறம் காண்க.

**பிரான் - அருளினாலே** - 1917 - 1918-ல் சொல்லிய வழிபாட்டின் பயனாகப் பிரான் செய்த அருள்.

**செய்வார்** - செய்வாராகி : முற்றெச்சம். சிறப்பாராய்த் திளைப்பாராய்ச் செய்வாராகி (1933) ; மடந்தையர்கள் - செய்வார் (1934) ; செய்வார்-வைப்பார்-நிரைப்பாராக (1935) ; ஏனையோருடன் கூடிச் செய்வார் - உய்ப்பார் - தொடுப்பார் - செய்வாராய் (1936) விளைப்பாராகி (1937) இவ்வாறு செய்தொழில் விளைத்தார் - (1938) என்று இந்த ஏழு பாட்டுக்களையும் கூட்டி வினை முடிபு செய்து கொள்க. 34

1933. (வி - ரை) **மீதணியும் நெய்பணி விழா** - மேலே பூசும் நெய் விழா என்பர். நெய்யணி - மகப்பேற்றின் பின் தொடக்குநீங்க நெய் பூசிக் குளித்தல். "கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி, நயந்த கிழவனை" (தொல்-பொ - கற்பி 6) ; இது சுற்றத்தாரும் ஊரவரும் கலந்து கோடற்குரியதாதலின் விழா என்றார். "திருமலிநெய் யாடல்விழாச் செங்காட்டங் குடியெடுப்ப". (சிறுத். புரா - 18) மங்கலஸ்நானம் என்பது வடமொழி வழக்கு.

**சூதம்**-பிறப்பு என்ற பொருள் தருவது ; பிராணிகளின் பிறப்பு என்பது பாணினி சூத்திரம்.

**சாதக முறைப் பல சடங்கு** - ஆண்மகவுக்குரிய 16 சடங்குகளுள் ஒன்று ; **சாதகன்மம்** என்பர். அத்திர மந்திரத்தால் நூறு முறை ஓமஞ் செய்து, வாம மந்திரத்தினால் மகவை முகமெதிர் நோக்கிப், பஞ்சப்பிரம மந்திரத்தால் உச்சிமோந்து, தற்புருடத்தினை வலக்காதிற் செலுத்துதல். இதன் விரிவெல்லாஞ் சிவாகம விதிகளுள்ளும், வேதவழிவரும் மிருதிகளுள்ளும் கண்டுகொள்க. பிறந்த நாட்குறித்து எழுதும் நாட்கோள் நிலைக் குறிப்பைச் சாதகம் என வழங்குவது உலக வழக்கு. **பல** என்றதனால் அது குறித்த எல்லா மடங்கும். 35

1934. (வி - ரை) இப்பாட்டினாலும் மேல் வரும்பாட்டினாலும் அச்சிறப்புக்களுள் குல மகளிர் செய்யும் செயல்கள் கூறப்பட்டன. இவர் கிளைஞர்கள். **குல மகளிர்** - என்றது அக்கருத்து.

**தூமணி விளக்கோடு சுடர்க்குழைகள் மின்ன** - விளக்கேந்திய சடங்குகள் செய்வாராதலின் அவ்விளக்குக்களின் ஒளியசைவினாலும் உடலசைவினாலும் குழைகள் மின்னுவன. **மணி** - அழகிய ; மணிகளிழைத்த என்றலுமாம்.

திருமாளிகை - பிள்ளையார் அவதரிக்கும் பேறு பெற்றமையால் இவ்வாறு கூறினர். "பொன்மாளிகை" "திருமாளிகைப்பத்தி" முதலிடனவாய் இறைவர் எழுந்தருளிய இடங்களுக்கு வழங்கும் வழக்கு இதற்கும் ஒப்பாதல் குறிப்பு.

கவின் பொலிவு செய்வார் - முன்னரே கவின் பெற்றிருந்ததனை மேலும் பொலிவு செய்தனர். மாளிகையின் இயல்பு 1910-ல் உரைத்தவை பார்க்க. "அழகலங்கரித்து வைத்தார்" (புரா. 1223). 36

1935. (வி - ரை) சுண்ணம் - பொற் சுண்ணம்; வாசனைத்தூள்.

ஓகை உரை செய்தல் - திருவவதார நற்செய்தியை அறிவித்துக் கொள்ளுதல்.

வேண்முளைய பாலிகை-வெண்முளைகளையுடைய முளைப்பாலிகைகள். முளைய - முளைகளை உடையனவாகிய. அகாவீற்றுப் பன்மைப் பெயர்.

குடம் நிரைத்தல் - நிறைகுடங்களை வரிசைபெற வைத்தல்; மங்கலங்களுள் ஒன்று. நிரை - வரிசை. புண்ணிய நறும்புனல் - காவிரி முதலிய புண்ணிய தீர்த்தங்கள். 37

1936. (வி - ரை) செம்பொன்...தானவினை - பொன் முதலானவற்றைத் தானமாகக் கொடுத்தல் மகிழ்ச்சிக்குறி. இதனல் சிறு தோடங்கள் நீங்கும் என்று கூறுவர்.

தானவினை என்றும், அமுது செய்ய நலம் என்றும் கூறியவதனல் அடியாரை அமுது செய்வித்தலின் சிறப்பினை எடுத்துக் காட்டியபடி. வைப்பு முறையும் அக்கருத்து.

தோடையல் வண்டோடு தொடுத்தல் - புதிய பூக்களாதலின் அவற்றில் வண்டு மொய்த்தலால் தொடுக்கும்போது அவ்வண்டுகளையும் தொடுத்தல் போலாம் என்பது.

நிம்ப முதலான கடிநீடு வினை - வேப்பிலை செருகுதல், வேம்பிழைத்து இடையிற்கட்டுதல் முதலிய காப்புச் செயல்கள். 38

1937. (வி - ரை) ஐயவி - வெண்கடுகு. இதன்புகை தீமையை விலக்கிக் காக்கும் தன்மை யுடையது. இத்தன்மைபற்றி இதற்குக் கடிப்பகை என்ற காரணப் பெயரும் வழங்கும். "ஐயவிப் புகையு மாட்டி"(676); நெய்யணிந்து ஐயவி யப்புதலு முண்டு. "நெய்யோ டையவி யப்பியை திரைத்து" (முருகு).

உடன் பல அமைத்தலாவது - வெள்ளைக் குங்குலியம், கருப்பூரம் முதலான பல பண்டங்களையும் சேர்த்துத் தூளாக்குதல்.

நறு அகிற்துறை என்க. துறை - துண்டங்கள். குறைத்தலாற் பெறுவது குறை எனப்பட்டது.

வெய்ய - விருப்பத்தைத்தரும். வெம்மை - வேண்டுதல். "வெம்மை வேண்டல்" (தொல் - உரி. 38); வேண்டுவனவற்றைத்தருதல் நோக்கி வேள்வி என்றுயிற்று.

விழுப்புகை - முன்கூறிய இரண்டுவகைப் புகையினின்றும் வேறு பிரிக்க; விழ என்ற அடைமொழி தந்தோதினர். பிறிதினியைபு நீக்கிய விசேடணம். விழுமிய வெல்லாம் தருவதும் வேள்வி என்றதாம்.

தெய்வ மணம் நாற - தெய்வத்தன்மை விளங்கச் சாதனமாகவுள்ள மணம். தெய்வக்காட்சி-தெய்வப் பாட்டு என்பனபோல. இக்கருத்தேபற்றி எழுந்த "தெய்வ மணக்குஞ் செய்யுளெலாம்" என்றது சேக்கிழார் பிள்ளைத்தமிழ் (தால்-5). 39

1938. (வி - ரை) அன்றுமுதல் ஐயீரதினம் - என்க. திருவவதாரம் செய்த அந்நாள் முதலாகவரும் பத்து நாட்கள் அந்த மங்கலச் செயல்கட்குரியவை.

**விண்ணோர் நலம்.....எய்த** - மேற்கூறிய சடங்குகள் முதலிய செய்தொழில்களின் உள்ளுறையும், கருத்தும் கூறியபடி; ஏனையோர் இவ்வகைச் சடங்குகள் தத்தம் உலகநலம் பற்றிச் செய்வர். இங்குத் திருவருள் சிறக்க வேண்டுமென்ற ஒருகருத்துப் பற்றியே செய்தனர் என்பது.

**தூய......விதி** - இதனை மங்களாசௌச ஒழுக்கம் என்பது வடமொழி வழக்கு. **மறை தொடர்ந்த நடைநூல்** - வேதங்களின் வழிவந்த ஒழுக்க நூல்கள்; கற்பசூத்திரங்கள் எனப்படும். 40

**1939.** நாமகர ணத்தழகு நாள்பெற நிறுத்திச்,
சேமவுத யப்பரிதி யிற்றிகழ் பிரானைத்
தாமரை மிசைத்தனி முதற்குழவி யேன்னத்
தூமணி நிரைத்தணிசெய் தோட்டிலமர் வித்தார். சக

**நாமகரணம்; தோட்டி லிடுதல்**

(இ - ள்) நாமகரணத்து...நிறுத்தி - பெயர் இடுதலாகிய அழகிய சடங்கினைத் திருவவதார நாளுக்கு இசையும்படி நிலைபெறச் செய்வித்து; சேம...பிரானை - சேமஞ் செய்ய உதிக்கும் இளஞாயிறு போலத் திகழ்கின்ற பெருமானை; தாமரை...என்ன - தாமரையின்மேல் எழுந்தருளிய தனி முதலாகிய குழவிபோல; தூமணி...அமர்வித்தார் - தூயமணிகள் வரிசைபெற அழுத்தி அணி செய்யப்பட்ட தொட்டிலில் அமரும்படி செய்தனர்.

(வி-ரை) இத்திருப்பாட்டு மிகச் சிறந்த உவமை நலத்தினை விளக்கி உளங்கொளத் தக்க தொன்று. பிள்ளையார் முருகனது அவதாரம் என்று கூறுவோர் கூற்றுப் பொருந்தாமையைக் காட்டுதற்குப் பெருந்துணையாவது இத்திருப்பாட்டு.

**தாமரை மிசைக் குழவி என்னத் தோட்டிலில் பிரானை அமர்வித்தார்** - என்று உவமை கண்டுகொள்க; **தாமரை** - தொட்டிலுக்கும், **குழவி** - பிரானுக்கும் உவமை.

**உதயப் பரிதியிற் றிகழ்**-என்பது உவமான உவமேய மீரிடத்தும் ஒக்கும் பொதுத் தன்மை; "பலர் புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு" (முருகு). அசுரரைவென்று அவர்கள் சிறையிட்ட அமரரை முருகன் மீட்டதுபோலப், பிள்ளையார் அமணரை வென்று அவர்கள் அபகரித்த சைவத்தை மீட்டதும் குறிப்பு.

**நாமகரணத்தழகு** - பெயரிடுதலாகிய சடங்கு.

**நாள்பெற நிறுத்துதல்** - அவதரித்த நாளுக்குப் பொருந்தும்படி நிலை பெறுத்துதல்; **நாள்** - இங்குத் திருவாதிரைமீனைக் குறித்தது. நாளுக்குரிய எழுத்தை முன்னிட்டுப் பெயரிடும் வழக்குக் குறித்தது.

**சேம உதயப் பரிதியின் திகழ் பிரானை** - சேமமாவது ஒளியினாலும் வெப்பத்தினாலும் உலகுக்குப் பலவாற்றாலும் நலஞ்செய்தல். இங்கு இருள் போக்கி ஒளி கொடுக்கும் தன்மை சிறப்பாகக் குறிக்கப்பட்டது. "பூதிசாதன விளக்கம் போற்றல் பெறுது" (1916); "அமணென்னும் வல்லிருள்போய் மாய்வதனுக், கானபெருகொளிப்பரப்பா லண்டமெலாங் கொண்டதொரு, ஞானமணி விளக்கெழுந்து வருவதென" (புரா - 652); "அமணிருள் மாய்ந்த தன்றே" (புரா - 858) முதலிய கருத்துக்கள் காண்க. **உதயப்பரிதி** - கடலினின்றும் தோன்றி முளைத்தெழும் இளஞாயிறு. **இன்** - உவம உருபு. **பரிதியின்**-பரிதிபோல. **பரிதி** - ஞாயிறு. **பிரான்** - தலைவன்; இங்கு ஆளுடைய பிள்ளையாரைக் குறித்து நின்றது.

**தாமரை மிசைத் தனிமுதற் குழவி என்ன** - குழவித் தனிமுதல் என்க. **தனிமுதல்** சிவபெருமான்; "தனிமுதலாம் பரனென்று" (789); சிவபெருமானது சத்தியே

குழவியாய் உருக்கொண்டு முருகன் என வந்தது என்பது கந்தபுராணத்துட்கண்ட உண்மை. "நமது சத்தி யறுமுக னவனும் யாமும், பேதக மன்று னம்போற் பிரிவிலன் யாண்டு நின்றான்" (கந்தபுரா - திருவிளை - பட); தனிமுதற்குழவி - முருகன். தாமரை மிசை - ஈண்டு - அன்பால் நினைப்பவர்களது உள்ளத்தாமரையில் வீற்றிருப்பதுவும், சரவணப் பொய்கையில் எழுந்த தாமரையில் வீற்றிருந்ததுவும் குறித்தது. இதய குகையில் இருக்கை கொள்ளுதலாற் குகன் எனப்படுதலும் காண்க. இதயம் - வடிவத்தாலும், இறைவன் இருக்கும் ஆதனமாதலாலும் தாமரை எனப்படும். தொட்டிலில் அமர்ந்திருந்தபோது பிள்ளையார் தாமரையில் இருந்த முருகனாகிய தனிமுதற் குழவி போன்றார் என்பதாம். "சரவணப்பூங் கட்டில்" என்றவரும் சிலப்பதிகாரக் (குன்றக் குரவை) கருத்தும் சிந்திக்க. முருகனைத் தனிமுதற்குழவி என்றதனாலும், உவமானமாக எடுத்தலானும் பிள்ளையாரே முருகன் என்பார் கூற்றுப் பொருந்தா தொழிதல் காண்க. "தருநிட் டாந்தமுந் தாட்டாந் திகமு, மொருபொரு ளாகி லுவமை பெறாதே" (சங் - கிரா); தாமரைமிசைக் - குழவி - பிரமதேவன் என்றுரைப்பாரு முண்டு. அது பொருந்தாமையறிக.

தூமணி நிரைத்து - குற்றமில்லாத மணிகளை வரிசைபெற அழுத்தி.

இப்பாட்டினால் குழவியைத் தொட்டிலில் இடுதல் என்ற சடங்கு கூறப்பட்டது. 41

1940. பெருமலை பயந்தகொடி பேணுமுலை யின்பால்
பாலூட் அருமறை குழைத்தமுது செய்தருளு வாரைத்
டுதல் தருமறைவி யார்பரமர் தாள்பரவு மன்பே
திருமுலை சுரந்தமுது செய்தருளு வித்தார். சஉ

(இ - ள்) பெருமலை...அருளுவாரை - பெரிய இமயமலையரசன் பெற்ற கொடி போலும் பார்வதியம்மையாரது பேணுகின்ற திருமுலைக்கண்ணதாகிய இனிய பாலுடன் அரிய சிவஞானத்தினைக் குழைத்து அமுதுசெய்தருளவுள்ள பிள்ளையாரை; தரும் மறைவியார்-பெற்றெடுத்த மறைக்குல அம்மையாராகிய பகவதியார்; பரமர்... அமுதுசெய் தருளுவித்தார் - சிவபெருமானது திருவடிகளைப் போற்றும் அன்பே தமது திருமுலையிற் பாலாகச் சுரக்க அதனைத் திருவமுது செய்தருளும்படிப் பாலூட்டினார்.

(வி - ரை) பெருமலை பயந்த கொடி - பெருமலை - இமயமலை. மலை - மலைக்கு அரசனையும், கொடி - கொடிபோன்ற உமையம்மையாரையும் குறித்துநின்றன. மலை - மலையின் அரசனுக்கு வந்தது இலக்கணை; கொடி - உவமை ஆகுபெயர். மலை பெற்ற கொடி என்றதும் அணிநயம்.

பேணுதல் - ஊட்டி வளர்த்தல், ஈண்டு உயிர்களுக்கு அறிவு தந்து அவ்வவர் திறத்துக்கேற்ப வளர்த்தல் குறித்தது.

அருமறை - மறைகளின் முடிந்த முடிபாகிய சிவஞானங் குறித்து நின்றது; அருமை என்ற அடைமொழி அக்குறிப்புத் தருவது.

மறைகுழைத் தமுதுசெய் தருளுவாரை - மேல் 1965-ல் உரைக்கப்படுவது. அமுதுசெய் தருளவுள்ளவரை என்க.

தரும் மறைவியார் - தருதல் - ஈன்றெடுத்தல். மறைவியார் - மறைக்குல அம்மையாகிய பகவதியம்மையார்.

**தாள்பரவும் அன்பே திருமுலை சுரந்து** - அன்பினாலே திருத்தோணி வீற்றிருந்தார் சேவடிக்கீழ் வழிபட்டுக், கருத்து முடிந்திடப் பரவி "ப் (1918) பிள்ளையாரைப் பெற்றாராதலின் அவ்வாறு பரவிய அன்பினையே தாரகமாக அப்பிள்ளையாரை ஊட்டி வளர்க்க வேண்டினர்; அதுவே பற்றாக முலை சுரக்க, அவ்வமுதத்தை அமுது செய்வித்தனர் என்பதாம். உலகில் ஏனைத் தாயர்க்கெல்லாம் குழவி பற்றுக்கோடாக முலை சுரக்கும்; இங்கு, இக்குழவியைப் பரமர்பாற் பெறத் துணைசெய்த அன்பே பற்றுக்கோடாகப் பால் சுரந்ததென்க. "அருளென்னு மன்பீன் குழவி" (குறள்) என்றபடி பின்னர் அருளுருவாகும் பிள்ளையாரை அன்பினையே அமுது செய்விக்கும் தகுதியும் குறிப்பு. ஞானப்பாலுண்ணப் பிறந்தார்க்குப் பகவதியாரின் மாயைப்பாலுண்ணல் கூடாமையின்...அவர் உண்டது பகவதியாரின் பாலையன்று - அஃது ஆண்டவன் அன்புப்பால் என்று ஈண்டு விசேட ஆராய்ச்சி செய்வாருமுண்டு. அன்பினாற் பெற்ற பொருளை அன்புகொண்டு ஊட்டினர் என்பதே பொருளாதலின் அது பொருந்தாமையறிக.

அமுது செய்தருளுவாரைத் தரும் என்றும், **அமுதுசெய் தருளுவாரை** - அமுது செய் தருளுவித்தார் என்றும் கூட்டியுரைக்கநின்றது.

**மறைத்தலைத் தமுதுசெய் தருளுவார்** - பிள்ளையாரை மறையியார் பால் அமுது செய்வித்தலே இங்குக் கூறும் பொருளாயினும், அவர் இங்கு ஊட்டப்பெறப், பின்னரும் ஊட்டப்பெற, இவை இரண்டனுள்ளும் சிறப்புப்பற்றிப் பின்னதனை முன்வைத்து ஈண்டுக் கூறினர்.

**தருமிறைவியார்**—என்பதும் பாடம். 42

1941\. ஆறுலவு செய்யசடை யையரரு ளாலே
காப்பு
பேறுலகி னுக்கென வரும்பெரிய வர்க்கு
வேறுபல காப்புமிகை யென்றவை விரும்பார்
நீறுதிரு நெற்றியினி றுத்திநிறை வித்தார். ௪௨

(இ-ள்) ஆறு உலவு...அருளாலே-கங்கையாறு உலவுதற்கிடமாகிய சிவந்த சடையினையுடைய சிவபெருமானது திருவருளினாலே; பேறு உலகினுக்கு...பெரியவர்க்கு-உலகத்துக்கு அதைக் காக்கும் பேறுவார் இவர் என வந்தவதரித்த பெரியவராகிய பிள்ளையாருக்கு; வேறு...விரும்பார் - வேறு பல காப்புக்கள் மிகையாகும் என்று அவையெவற்றையும் விரும்பாதவராகி; நீறு...நிறைவித்தார் - திருநீற்றினை அவரது திருநெற்றியில் நிலைபெற அணிந்து காப்புச் சடங்கினை நிறைவாக்கினர் (மறையியார்).

(வி - ரை) உலகினைக் காக்கவரும் இவருக்கு வேறு காப்புக்கள் அணிதல் தகாது என்றுகொண்டு இறைவரது காப்பாகிய திருநீற்றுக் காப்பினை அணிந்தார்.

**நீறு** - "இரட்சை" என்று வேதத்தினுள் (உடநிடதம்) பேசப்படுவது. "வேதத்தி லுள்ளது நீறு", "மந்திர மாவது நீறு", "ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு" முதலிய பிள்ளையாரது திருவாக்குக்கள் காண்க.

**நிறைவித்தார்** - மறையியார் என்ற எழுவாய் முன் பாட்டினின்றும் வருவிக்க. **நீறு நிறைவித்தல்** - திருநீற்றுக் காப்பு அணிதல். "இறைவர்திரு நீற்றுக்காப் பேந்தி முன்சென் றீன்றதா யார்சாத்தி" (புரா. 262.) என்று பின்னரும் வருதல் காண்க.

**வேறுபல காப்பு** - வேம்புகோத் தணிதல் முதலாயின. 667-ம் பிறவும் பார்க்க.

**பேறு உலகினுக்கு எனவரும்** - "பரசமய நிராகரித்து நீறாக்கும்" (1917) தன்மையுடன் அருளால் அவதரித்த. "பெரும்பே றுலகுய்ய" (1918).

மிகை - திருநீற்றுக் காப்பின்மேற் சிறந்த காப்பு இல்லை என்பதாம்.

அருளாலே - "அருள் பெருக" (1923); "அருள் போற்றி" (1919). 43

வேறு

1942. தாயர்திரு மடித்தலத்துந் தயங்குமணித் தவிசினிலுந்
தாலாட்டு முதலியன தூயசுடர்த் தொட்டிலினுந் தூங்குமலர்ச் சயனத்துஞ்
சேயபொருட் டிருமறையுந் தீந்தமிழுஞ் சிறக்கவரு
நாயகனைத் தாலாட்டு நலம்பலபா ராட்டினார். சச

(இ - ள்) சேய...நாயகனை - செம்மையுடைய பொருளைத் தரும் வேதங்களும் தீந்தமிழும் சிறப்புப்பெற வந்தவதரித்த நாயகராகிய பிள்ளையாரை; தாயர்...சயனத்தும் - நற்றாயர் முதலியோர் தமது திருமடியினிடத்தும், விளங்கும் மணிகளையுடைய பீடத்தினிலும், தூய ஒளியுடைய தொட்டிலிலும், தூங்கும் மலர்ப் பள்ளியினிலும்; தால்ஆட்டும் நலம்பல பாராட்டினார் - தாலாட்டுதலால் அவர் அவதரிக்க வந்த பல நலங்களையும் பாராட்டிப் பாடினார்.

(வி - ரை) நாயகனைத் தமது மடித்தல முதலியவற்றுள் - தாலாட்டு நலம் பல - தாயர் பாராட்டினார் என்க.

தாயர் - பாராட்டுந் தாய், ஊட்டுந் தாய், நற்றாய், கைத்தாய், செவிலித்தாய் என்னும் ஐவகைத் தாயரையும் குறிக்கத் தாயர் என்றார்.

தாலாட்டு - தாலு - நா. தாலு என்பது ஈற்றுகரந் தொக்குத் தால் எனவரும். தொட்டிலினும் ஏனையிடத்தும் குழவியை வைத்து அசைத்து ஆட்டி நாவசைத்துப் பாடும் பாட்டு. தால் என்னும் ஓசையோடு அசைத்தாட்டும் பாட்டு என்றலுமாம். மடித்தலம் முதலியவை பாராட்டும் இடங்களும் நிலைகளும் நலங்களும் குறித்தன.

தால் ஆட்டுதல் - தாலப் பருவம் என்பர். இஃது எழா மாதத்தில் நிகழ்வது.

தாலாட்டு நலம்பல பாராட்டுதலாவது அவதார நன்மைகளைப் பலவாறும் புகழ்ந்து பாடுதல்.

தாலாட்டு நலம்பல பாராட்டினார் - இவை தாயர் செயல். தாலாட்டும் செயல்களினால் பாராட்டினார் என்க.

சேயபொருள் - செம்மைப் பொருளாவது சிவம் பெருக்கும் முத்திப் பொருள். இதனைத் திருமறைக்கும் தீந்தமிழுக்கும் தனித்தனி கூட்டுக. சேய - கிட்டுதற்கரிய என்றலுமாம். பொருள் சேய்மையிற் காணவுரைக்கும் மறை என்றலுமாம்.

திருமறை - வேதங்கள். "வேதநெறி தழைத்தோங்க" என்ற கருத்து.

தீந்தமிழ் - தெய்வத் தன்மையை இனிமையாய்ப் புகட்டும் தமிழ். "நாளு மின்னிசை யாற்றமிழ் பரப்பு ஞானசம் பந்தன்" (நம்பி. தேவா).

நாயகன் - நடத்துவோன் - ஆசாரியன் - என்ற கருத்து.

மடித்தலம் - தவிசு - தொட்டில் - சயனம் என்ற இந்நான்கும் குழவியை அமர்த்தித் தாலாட்டும் இடங்கள்.

தூய சுடர்த் தொட்டில் - தூய்மை - 1939-ல் கூறிய கருத்து.

தூங்கும் மலர்ச் சயனம் - தூங்கும் - தொங்கும் என்றும், தூங்கச் செய்யும் என்றும் இரு பொருள்பட நின்றது. சயனம் - பள்ளியமரச் செய்யும் அமைப்பு.

மேல்வரும் மூன்று பாட்டுக்களினாலும் அவ்வாறு தாயார் பாராட்டப் பிள்ளையார் பருவந் தோறும் வளர்ந்த சிறப்பு கூறப்படுவன. தாலாட்டு நலம் பல - தாயர் பாராட்டுப் பொதுமைகுறித்து நின்றன. 44

1943. வருமுறைமைப் பருவத்தில் வளர்புகலிப் பிள்ளையார்
அருமறைக டலையெடுப்ப வாண்டதிரு முடியெடுத்துப்,
சேங்கீரை பெருமழுவர் தோண்டல்லாற் பிறிதிசையோ மேன்பார்போற்
றிருமுகமண் டலமசையச் சேங்கீரை யாடினார். சரு

(இ - ள்) வரும்...பிள்ளையார் - முறைமையால் வரும் பருவந்தோறும் உரியவாறு வளர்ச்சிபெறும் பிள்ளையார் ; அருமறைகள்...எடுத்து - அரிய வேதங்கள் தலை எடுக்கும்படி அணையிற் பதிந்த திருமுடியை மேலெடுத்தும் ; பெருமழுவர்...அசைய - பெரிய மழுவினை யேந்திய சிவபெருமானுடைய திருத்தொண்டினையன்றிப் பிறி தொன்றினையும் இசையோம் என்று காட்டுவார்போலத் திருமுகமண்டலம் அசைய ; செங்கீரை ஆடினார் - செங்கீரை யாடியருளினார்.

(வி - ரை) சேங்கீரை ஆடுதல் - குழவி வளர்ச்சியில் வரும் பருவங்களுள் ஒன்று. ஐந்தாவது மாதத்தில் நிகழும். ஐந்துமுதல் ஏழாம்மாத அளவில்நிகழ்வதாமென்பாருமுண்டு. ஒருகாலை மடக்கி, ஒருகாலை நீட்டி இருகைகளையும் நிலத்தில் ஊன்றித் தலைநிமிர்ந்தசைதல் இதன் செயல்; இளங் கீரைத்தண்டு காற்றில் அசைதல் போல என்ப.

திருமுடி எடுத்து - திருமுக மண்டலம் அசைய என்று சிறப்புப்பற்றித் தலை நிமிர்த்தலையும் முகம் அசைத்தலையும் கூறி ஏனையவாகிய கால் கைகளின் செயல்களையும் உடன்கொள்ளவைத்தார்.

மறைகள் தலைஎடுப்ப என்றும், தொண்டல்லாற் பிறிதிசையோம் என்பார் போல் என்றும் கூறியன தற்குறிப்பேற்றச் சுவைபடத் தொழில்பற்றி வந்த தன்மையணி. மேல் வரும் இரண்டு பாட்டுக்களினும், 1948-லும் இவ்வாறே கொள்க.

முறைமை வரும் பருவம் எனவும், வளர் பிள்ளையார் - எனவும் கூட்டுக. வளர் என்பதனைப் புகலி என்பதனுடன் கூட்டி, ஊழிகளிலும் ஆழாது மேல்வளரும் என்றுரைக்கவும் நின்றது.

தலை எடுப்ப - முடி எடுத்து - தலை எடுப்ப என்றதனால் அதற்கு முன் தலை கவிழ்ந்திருந்த என்பது குறிப்பு. "பொய்மிகுத்தே, ஆதியரு மறைவழக்க மருகி" (1916) சேங்கீரை - செவ்விய மொழி தொடங்கல் என்றுரைப்பன பொருந்தா என்பர்.

ஆண்ட - அணையிற் பதிந்த என்பர் இராமநாதச் செட்டியார். அழகிய என்றலுமாம். நம்மை ஆட்கொண்டருளிய என்றனர் முன் உரைகாரர்கள். ஆளுடைய என்புழிப்போலக் கொள்வது மொன்று. எடுத்து - மேலே தூக்கி.

பெருமழுவர் - சிவபெருமான். மழு - பரசு. சிவனுக்குரியது என்பார் பெருமழு என்றார்.

தொண்டல்லாற் பிறிது இசையோம் - எதிர்மறைகள் உறுதி குறித்தன. இசையோம் - பேணமாட்டோம். கைக்கொள்ளோம் என்றலுமாம். "அடியலாற் பேணா" என்ற திருத்தொண்டத்தொகை (5) யும், "கழலலாற் பேணாக் கருத்துடை" (அச்சிறுபா - 11. குறிஞ்சி), "பங்கனை யன்றிமற் றறியோமே" (ஷை நட்டரா - திருமாந்துறை-2) முதலியனவாக வரும் பிள்ளையார் தேவாரங்களும் இங்கு நினைவு கூர்தற்பாலன. முகத்தை அசைத்தல் எதிர்மறைக் குறிப்புக் காட்டுவதாதலின் இவ்வாறு கூறினார். இசையோம் - பேசோம் என்றலுமாம்; 'மற்றோர் பேச்சிலோமே" ஷை - காட்டுப்பள். நட்டபா - 9). 45

1944. "நாமறியோம் பரசமய முலகிலெதிர் நாடாது
போமகல" வென்றங்கை கொட்டுவதும், புனிதன்பாற்
காமருதா ளம்பெறுதற் கோத்துவதுங், காட்டுவபோற்
றாமரைச்செங் கைகளினாற் சப்பாணி கொட்டினார். சச

சப்பாணி

(இ - ள்) நாம் அறியோம்...கொட்டுவதும் - "நாம் சைவமேயன்றிப் பரசமயங்களை அறியமாட்டோம்; (ஆதலின் பரசமயத்தீரே!) இவ்வுலகத்தில் எதிர்ப்பட நாடாது அகலப் போமின்கள்" என்று அங்கைகளைக் கொட்டுவதனையும்; புனிதன் பால்...ஒத்துவதும் - சிவபெருமானிடத்து விருப்பந் தரும் தாளத்தைப் பெறுவதற்காகக் கைகளை ஒத்துவதனையும்; காட்டுவபோல் - காட்டுவனபோல; தாமரை... கொட்டினார் - தாமரைபோன்ற சிவந்த கைகளினால் சப்பாணி கொட்டியருளினார் (புகலிப் பிள்ளையார்).

(வி - ரை) இத்திருப்பாட்டினாற் பிள்ளைப் பருவங்களுட் சப்பாணிப் பருவங் கூறப்பட்டது. இது ஒன்பதாம் மாத அளவில் நிகழ்வது. இரண்டு கைகளையுஞ் சேரக் கொட்டுதல் இதன் செயல். ச - சகிதம் - சேர்ந்தது; பாணி - கை.

பரசமயம் நாம் அறியோம் - பரசமயங்களை அறியமாட்டோம் என்றது, சைவமன்றிப் பரசமயங்களை நாம் பொருளாக மதிக்கமாட்டோம்; ஆதலின் அகலப்போம் என்ற குறிப்புப்பட வந்தது.

"உலகில் எதிர்நாடாது போம் அகல" என்று - இது பரசமயத்தினரை நோக்கிக் கூறுவது. எதிர்நாடுதலாவது - பகையாய் எதிர்த்துநின்று சைவவுண்மை நெறிக்குக் கேடுசூழக் கருதுதல். அகலப் போம் - என்க. தீங்கு செய்யாத தூரத்தே உமக்குரிய இடத்தில் நிற்க என்றதாம். அளவுமீறி வந்து தீங்குபுரியாமல் தடுத்தலேயன்றிப் பரசமயங்களை அழித்தல் சைவத்தின் கருத்தன்று. உலகீர் - என்ற பாடம் தவறு.

அங்கை கொட்டுதல் - கையொடு கைதட்டும் ஓசையினால் விளித்துத் தூரத்தே போகச் செய்தல்; பெரியோர்கள் நச்சுப் பிராணிகளையும் அழிவு செய்யாது அருளினாற் கைத்தட்டி ஓசைகாட்டித் துரத்துதல்போல என்பது குறிப்பு.

காமரு தாளம் பெறுதற்கு ஒத்துவது - காமருதல் - விரும்புதல். இன்னிசைக்குதவியாகித் தமிழ் பரப்புதற்குத் துணையாய் உலகம் விரும்பவுள்ளது என்பது குறிப்பு. காமம் மரு - என்பது காமரு என நின்றது. பெறுதற்கு ஒத்துவது - பெறும்பொருட்டுக் கைகளைத்தட்டி ஒத்தறுத்தல். "கையதனா லொத்தறுத்துக் கலைப் பதிகங் கவுணியர்கோன் பாடுங் காலை" (புரா. 102) என்றபடி அச்செயல் திருக்கோலக்காவில் நிகழவுள்ளதன் முற்குறிப்புப்போல இப்பருவத்தே இது நிகழ்ந்தது என்றதாம்.

ஒத்துவது - கையொடு கை மெல்லச் சேர்த்தலும், தாள ஓசை ஒத்தறுத்தலும் என இரு பொருளும்பட நின்றது.

காட்டுவ - செங்கைகள் என்றது எழுவாய்.

அகலப் போமென்று கொட்டுதல் பரசமய நிராகரிப்பாகிய பாசநீக்கமும், தாளம் பெறுதற்கோத்துதல் சீற ஆக்குதலாகிய சிவப்பேறும் குறிப்பாக உட்கொண்டன. கைகளிரண்டும் கூடிய வழியே ஓசை பிறத்தலால் இரண்டு பயனையும் பெறுதல் கூறினார். ஈண்டு, ஞானம் பெற்றார்க்கு, ஒரு தெய்வமும் ஒரு நெறியுமே தோன்

றும் ; பல தெய்வமும் பல நெறியும் அவர்கட்கு விகாரமாய்த் தோன்றும் - என்பன முதலான ஆராய்ச்சிகள் பொருந்தாமையறிக.

அங்கை தட்டுவதும் - ஒற்றுவதும்—என்பனவும் பாடங்கள். 46

1945. விதிதவறு படும்வேற்றுச் சமயங்க ளிடைவிழுந்து
கதிதவழ, விருவிசும்பு நிறைந்தகடி வார்கங்கை
நதிதவழுஞ் சடைமுடியார் ஞானமளித் திடவுரியார்
மதிதவழ்மா ளிகைமுன்றின் மருங்குதவழ்ந் தருளினர். சஎ

(இ - ள்) விதி...கதிதவழ - இறைவனது வேத விதிகளினின்றும் தவறுபடுகின்ற புறச் சமயங்கள் இடையில் வீழ்ந்து நிலைகுலையும்படி ; இருவிசும்பு...உரியார் - பெரிய ஆகாயத்தில் நிறைந்து அளவாக்கப்பட்டுப் போந்த நெடிய கங்கையாறு தவழ்ந் தோடுதற்கிடமாகிய சடைமுடியினையுடைய சிவபெருமான் ஞானம் கொடுத்தற்குரியவராகும் பிள்ளையார் ; மதிதவழ்...தவழ்ந்தருளினர் - சந்திரன் தவழும் மாளிகையின் முற்றத்தின் பக்கத்தில் தவழ்ந்தருளினர்.

(வி - ரை) விதி...சமயங்கள் - வேத சிவாகமங்களில் விதித்தவற்றினின்றும் வழுவியும், அவற்றை முழுதும் மறுத்தும், சிலவற்றை மறுத்தும், இவ்வாறு நிகழ்ந்து படுகின்றனவும், வைதிக சைவத்துடன் மலைந்துபடுகின்றனவும் ஆகிய புறச்சமயங்களும் அகப்புறச் சமயங்களும் என்றிவையெல்லாம். வேற்றுச் சமயங்கள் என்றமையால் சமண புத்தாதி புறச்சமயங்களே குறிக்கப்பட்டன என்பாருமுண்டு.

இடைவிழுதலாவது - தலை நிமிர்ந்து முன்சென்ற வேகத்தில் முற்றும் செல்லமாட்டாது இடையிலே முறிந்து விழுதல். கதி தவழுதல் - ஓங்கி நடந்தகதி நீங்கி, விழுந்து, எழமாட்டாமல் நகர்ந்து செல்லுதல். இதனால் முற்றும் அழிவுபடுத்தல் சைவக் கருத்தன்று என்பது குறிப்பு. கதிதவற என்ற பாடமுமாம்.

கடி - வார் - கங்கை - ஆயிரமா முகத்தினொடு பாய்ந்த நிலையைக் கடியப்பட்டுப் பனிபோலாக உலகுக்கு வார்க்கப்பட்ட நிலையினைப் பெற்ற கங்கை. "பரந்திழியும் புனற்கங்கை பனிபோ லாகச் செறுத்தானை' (தாண் - வீழி - 10). கடி - வாசனை என்று கொண்டு வார் - சடை என்று கூட்டிச் சடைக்கு அடையாக்கி யுரைத்தனர் முன் உரைகாரர். நதி தவழ்தல் - வேகநீங்கி மெல்ல இறங்குதல்.

சடைமுடியார் ஞானம் அளித்திட உரியார் - "பால்அடிசில்...ஊட்டு" (1964) என்று அருளி அம்மையாரால் ஞானம் அளிப்பித்தாராதலின் முடியார் அளித்திட என்றார். எவுதற் கருத்தா. அன்றியும், தானும் தன் தையலும் குணிகுணமாகப் பிரிப்பின்றி நிற்கும் தாழ்சடையோனாதலின் அவ்வினையபு தோன்றக் கூறியதுமாம்.

உரியார் - ஞானம் பெறும் உரிமை முன்னை நிலையிலே பெற்றவர் என்பதாம். "தவத்தினிலுணர்த்த" (சிவஞானபோதம் - 8 சூத்.) என்றும், "முற்செய் தவத்தான் ஞான நிகழும்" என்றும், "ஆளுடைய பிள்ளையார் முதலாயினார்க்குத் தவமின்றியும் ஞானநிகழ்ந்தவா றென்னையென்னுங் கடாவை விடுத்தற்கு மேற்செய்துழி என ஈண்டும் வலியுறுத்தார்" (சிற்றுரை) என்றும் "ஒரு பணி செய்யாச் சிரபுரச் செல்வரும் ஞானம் பெற்ற நன்மை" (சங். நிரா.) என்றும், வரும் ஞான சாத்திர உண்மைகள் ஈண்டுச் சிந்திக்கற்பாலன. உரியார் - உரிமை - தகுதி - யுடன் தோன்றியவர் என்பது கருத்து.

மதிதவழ் மாளிகை - மாளிகைகளின் உயர்ச்சி குறித்தது (1910 பார்க்க). சிவத் தோற்றக் குறிப்புமாம்.

**தவழ்ந்தருளுதல்** - ஓராண்டு நிறைவுக்கு முன் 10, 11 மாத அளவில் குழவிகள் தவழ்ந்து செல்லும் பருவக் குறிப்பு. பிள்ளைத் தமிழ் நூல்களுள் இதனுள் முத்தப் பருவங் கூறுவர்.

**வேற்றுச் சமயங்கள் - கதிதவழத் - தவழ்ந்தருளினர்** - என்றதுவும்; முன்னர்ப் பிள்ளையார் திருமுடி எடுக்க, மறைகள் தலைஎடுத்தன (1943) என்றும், மேல், "கீழ்மைநெறிச் சமயங்கள், தளர்நடையிட் டறத்தாமுந் தளர்நடையிட் டருளி ஞர்" (1948) என்றும் கூறுவனவும்; மேன்மைக்கு மேன்மையும்; கீழ்மைக்குக் கீழ்மையும் தரவல்லது சிவனருளொன்றே என்னு முண்மையைப் புலப்படுத்தும். 47

1946. சூழவரும் பெருஞ்சுற்றத் தோகையருந் தாதியருங்
"காழியர்தஞ் சீராட்டே! கவுணியர்கற் பகமே!"யென்
வருகை றேழிசையும் பலகலையு மெவ்வுலகுந் தனித்தனியே
வாழவரு மவர்தம்மை "வருக! வரு" கெனவழைப்ப, சஅ

1947. திருநகையா லழைத்தவர்தஞ் செழுமுகங்கண் மலர்வித்தும்,
வருமகிழ்வு தலைசிறப்ப மற்றவர்மேற் செலவுகைத்தும்,
உருகிமனங் கரைந்தலைய வுடனணைந்து தழுவியு,முன்
பெருகியவின் புறவளித்தார் பெரும்புகலிப் பிள்ளையார். சகூ

1946. (இ - ள்) சூழ...தாதியரும் - சூழ்ந்து வருகின்ற பெருகும் சுற்றத்தா ராகிய மறைக்குல மகளிர்களும் தாதிமார்களும்; காழியர்...என்று - காழிநகரார்கள் யாவர்க்கும் சிறப்புச்செய்யும் செல்வமே! கவுணிய குலத்தவர்களின் கற்பகம்போன்ற வரே! என்று கூறி; ஏழிசையும்...அவர் தம்மை - குரல் முதலாகிய ஏழு இசைக ளும், வேத முதலாகிய பல கலைகளும் எல்லா வுலகுயிர்களும் தனித் தனியே வாழும் படி வந்தவதரித்த பிள்ளையாரை; வருக வருகென அழைப்ப - வருக! வருக! என்று அழையா நிற்ப, சஅ

1947. (இ - ள்) திருநகையால்...மலர்வித்தும் - அவ்வாறு அழைத்தவர்களது செழுமுகங்களைத் தமது திருநகைப்பினுல் மலரச் செய்தும்; வருமகிழ்வு......செல வுகைத்தும் - அதனுல் வரும் மகிழ்ச்சி மேலும் பெருகும்படி அவர்கள் மேனி மேல் பொருந்தும்படி உந்தியும்; உருகி...தழுவியும் - மனம் உருகிக் கரைந்து நிலைபெருது இளகும்படி உடன்சேர்ந்து தழுவியும்; முன்...அளித்தார் முன்பு பெருக்கெடுக்கும் இன்பம் பொருந்தும்படி அளித்தருளினர்; பெரும் புகலிப் பிள்ளையார் - பெரிய சீகா ழிப் பதியில் அவதரித்த பிள்ளையார். சகூ

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1946. (வி - ரை) இந்த இரண்டு திருப்பாட்டுக்களாலும் வருகைப் பருவத் தின் நிகழ்ச்சிகள் கூறப்பட்டன. இவை பத்துப் பதினென்றும் மாத அளவில் நிகழும்.

**சூழவரும் பெரும் சுற்றந் தோகையர் - சுற்றம்** - சுற்றிச் சூழ்வதனற் போந்த பெயர். **சூழவரும்** என்பது வேண்டிய காலத்து வேண்டுவன செய்து உதவிச் சூழும் இயல்பு குறித்து நின்று, அவ்வாறு செய்யாது ஒதுங்கும் சுற்றத்தை நீக்கி நிற்றலின், பிறிதினியைபு நீக்கிய விசேடணம். இயற்கையடைமொழி எனினுமமையும்.

**தோகையர்-தோகை** - சினையாகு பெயராய் மயிலை உணர்த்திற்று. **தோகையர்** - மயில் போன்ற சாயலுடையார் என்ன உவமை ஆகு பெயராய்ப் பெண்களை உணர்த்திற்று. இருமடியாகுபெயர்.

**தாதியர்** - பிள்ளைப் பேற்றின்போதும், பிள்ளை வளர்ச்சியிலும் உடனிருந்து உதவுவோர். இவர்களும் ஐவகைத் தாயரில் வைத்துச் செவிலித்தாயர் என்று எண்ணப்படுவார்.

**காழியர் தம் சீராட்டே ! கவுணியர் கற்பகமே ! - சீராட்டு** - சிறப்புக் கொண்டாட்டத்திற்குரிய பொருள்; செல்வம். **கவுணியர் கற்பகம்** - கவுணியர் குலம் தாம் விளங்கவும் உலகம் உய்யவும் பெற்றெடுத்த கற்பகம் போன்றவர். **சீராட்டு**-தொழிலாகு பெயர்; **கற்பகம்**-உவமைஆகு பெயர். "காழியர் தவமே! கவுணியர் தனமே!" (1988) என்று பின்னரும் இக்கருத்தேபற்றி இம்முறையே கூறுதல் காண்க. பொருள்கள் எவற்றாலும் உவமிப்பதற் கரியாராதலின் குணப் பெருமைபற்றி யுவமப்படுத்திக் கூறினார். "ஞானத்தின் திருவுருவை" (புரா - 728) என்ற விடத்தும், பிறண்டும் இவ்வாறே காண்க. காழி நகரார் யாவரும் தத்தம் நிலையிற்பெற்ற உரிமைபற்றிப் பாராட்டுதலாலும், பிள்ளையார் திரு அவதாரத்தில் உலகவர் நலம் பற்றிய உரிமை பெரிதும் குலத்தவர் உரிமை சிறிது மாதலானும் காழியரை முன்வைத்தும், கவுணியர் குலத்தைப் பின்வைத்தும் ஓதினார். முன் 1925 - 1926 பாட்டுக்களினும் இவ்வாறே காண்க.

**ஏழிசையும் பலகலையும் எவ்வுலகும் தனித் தனியே வாழவரும் அவர் - ஏழிசையும் வாழ்வடைதலாவது** - இசைகள் வேறுவேறு அழியுந்தன்மைப் பொருள்களிடத்து இசைந்தொழியாது பிள்ளையாரது தேவாரத்திருவாக்கினுட்பட்டுச் சிவன் புகழ்பாடுந்தன்மையிற் பயன்படுதல். **பலகலையும் வாழ்வடைதல்** - கலைகள்போலப் பல பயன்களையும் காட்டாது சிவன் புகழ்களையே முடிந்த முடிபாகத் தேவாரங்களுட் காட்டுதல்; **எவ்வுலகும்** - உலகு ஈண்டு உலகுயிர்களைக் குறித்தது. **எவ்வுயிர்களும் வாழ்** வடைதலாவது பல திறத்தும் ஈடழிந்து இறத்தல் பிறத்தலுட்படாது பிள்ளையார் அருளிய நெறியிற் பயின்று இறவாத நெறியினிற் படுதல். **ஏழிசை** - குரல் முதலாயின. முன் 221 - ல் உரைத்தவை பார்க்க. இனிய இசையாற் கலைகளின் முடிந்த பொருளை இனிதாகப் புகட்டி உயிர்களை வாழவைக்க வந்தவர் என்று இம் மூன்றும் தொடர் புடைமை காண்க.

**வருக ! வருக ! என அழைப்ப** - இஃது இப்பருவத்தே குழவிகளைக் கைதட்டி அழைக்கும் மரபு. இஃது இருபாலும் அன்பின் வெளிப்பா டாவதன்றியும் குழவிகள் அவ்வழைப்பிற்கிணங்கத் தவழ்ந்து செல்லும் முயற்சியினையும் ஊக்குவித்து உடல் வளர்ச்சிக்குத் துணை செய்யும் திறத்தது என்ப தியற்கைநலம். இதனை ஆசிரியர் அழகுபெற மேல் வரும்பாட்டில் எடுத்துக்கூறும் திறம் கண்டுகொள்க. இப்பருவம் வாரானை (ஆனை - தொழிற்பெயர் விகுதி) என்று பிள்ளைத்தமிழ் நூல்களுள் வழங்கப்பட்டுத், தெய்வங்களின் அருட்டிறனை அருமைப்பாடு பெறத் தோற்றும் வழியாலமையும் பகுதியாகும். **அழைப்ப** - தோகையரும் தாதியரும் அழைக்க. அவ்வாறு அழைத்தவர்களது முகங்களை மலர்வித்தல் முதலியவாற்றால் பிள்ளையார் இன்புற அளித்தார் என மேல் வரும் பாட்டுடன் முடிக்க; தோகையரும் தாதியரும் அழைக்கப் - பிள்ளையார் அளித்தார் என்க. அழைக்க என்ற வினையெச்சம் பிறவினை முதல் வினைகொண்டு முடிந்தது. இவ்வாறன்றி **அழைப்ப** - என்பதனைப் பகரவீற்றுப் பலர்பால் வினை முற்றாகவே கொண்டு அழைப்பார்கள் - அழையா நிற்பார்கள் என்றுரைத்தனர் முன் உரைகாரர்கள்.

**அழைப்ப-அளித்தார்** - முன் 1944-ல் இருகை கொட்டிச் சப்பாணி கொட்டுதற் கேற்ப இருபொருள் கூறியது போல, ஈண்டு அழைப்பாரும் அழைக்கப்படுவாரும் என்றிருதிறத்தவருள், உலகநிலையினின்று அழைத்தார்களது செயலை இப்பாட்டாலும்,

அதிற்கீடாக அழைக்கப்பட்ட பிள்ளையாரது அருட் செயலை வேறாக மேல் வரும் பாட்டாலும் கூறிய தெய்வக் கவிநயமும் காண்க. பெருகிய இன்பு என்றும், அளித்தார் - என்றும் கூறும் சொல்லாற்றற் குறிப்புக்களும் காண்க.

**சுற்றத்தில்** - ஏழுலகும்—என்பனவும் பாடங்கள். 48

1947. (வி - ரை) **திருநகையால் - மலர்வித்தும்** என்க. நகை - அழைத்தவர் களது அழைப்பினை ஏற்ற அருள் வெளிப்பாடாகிய சிரிப்பு. **செழுமுகங்கள் மலர்வித்தும்** - முன்னரே செழிப்புடைய முகங்களை மேலும் இன்பம் மூண்டமையால் மலரச் செய்தும்.

**வரும் மகிழ்வு தலை சிறப்ப** - அவ்வாறு பெற்ற மிகுமகிழ்ச்சி மேலும் மூண்டு எழும்படி.

**மேற் செலவுகைத்தலாவது** மேற்சென்று திருமேனிபட உந்துதல். திருவடி யால் உதைத்தல் என்பாரு முண்டு.

**உருகி மனம் கரைந்து அலைய** - மேற்கூறிய இரண்டுவகையாலும் பெருகிய மகிழ்ச்சி மேலும் மூள்வதனால் மனம் உருகுதலும், கரைதலும், அளவுபடாது அலை தலும் ஆகும்படி.

**உடனணைந்து தழுவியும்** - நகைத்தல் - உகைத்தல் - தழுவுதல் என்ற இவை குழவிகள் தம் செய்கையால் தாயரை இன்பமூட்டும் இயல்பின. "மக்கண்மெய் தீண்ட லுடற்கின்பம்" (குறள்).

**திருநகையால் அழைத்து** - மலர்வித்து என்று கொண்டு நகைப்பினுடன் கூடிய உங்கார ஒலியினால் அவர்களைத் தாமும் எதிர் கூவி அழைத்து என்று உரைத்தலுமாம். இதனை முத்தப் பருவங் குறித்த செயல் என்பர் இராமநாதச் செட்டியார்.

நகையால் முகநோக்குதல், திருவடி சூட்டுதல், மேனி தீண்டுதல் இவை பக்கு ஆன்மாக்களுக்கு நல்லாசாரியர் செய்யும் தீக்கைக் குறிப்புக்களாதலும் காண்க. 49

1948. வளர்பருவ முறையாண்டு வருவதன்முன் மலர்வரிவண்
டுளர்கருமென் சுருட்குஞ்சி யுடனலையச் செங்நின்று,
கிளரொலிகிண் கிணியெடுப்பக் கீழ்மைநெறிச் சமயங்கள்
தளர்நடையிட் டறத்தாமுந் தளர்நடையிட் டருளினார். ருo

(இ - ள்) வளர்...முன் - மேலே சொல்லியபடி வளரும் பருவங்களின் முறை யிலே ஓராண்டு நிறைவு வருவதன் முன்னே; மலர்......செங்நின்று - மலர்களில் வரிவண்டுகள் ஒலிக்கும் கரிய மெல்லிய சுருண்ட குஞ்சியுடன் அசையச் செம்மையாய் நேர் நின்று; கிளர்... எடுப்ப - கிளரும் ஒலியினைக் கிண்கிணிகள் சத்திக்க; கீழ்மை... தளர்நடையிட்டருளினார் - கீழ் நெறிகளைக் காட்டும் சமயங்கள் தள்ளாடி ஒழியும்படி தாமும் தளர்நடை பயின்றருளினார்.

(வி - ரை) இஃது ஓராண்டுநிறைவின்முன் நிகழும் தளர்நடைப்பருவத்தின் நிகழ்ச்சி கூறியபடி.

**வளர் பருவம்** - முன் 1942 முதல் கூறிய முறையில் வளர்ச்சியடையும் பருவங் களின்படி.

**மலர்** - பிள்ளையார் சிரத்திற் குஞ்சியிற் சூடிய மலர்கள். **குஞ்சி** - ஆண்மக்கள் தலைமயிர்; **உடன் அலைய** - திருமேனியசையுந்தோறும் குஞ்சியும் அசைய. அலைதல்- கட்டப்படாமல் அசைதல்.

**செந்நின்று** - தளர் நடையினின்றும் நேரே நிமிர்ந்து நின்று.

**கீழ்மை நெறிச் சமயங்கள்** - இவை புறச் சமயங்கள்.

**தளர்நடையிட்டறுதல்** - தட்டழிந்து மந்தகதியாய்ச் சென்று ஒதுங்குதல்.

**கிண்கிணி கிளர் ஒலி எடுப்ப** - எடுப்ப - எடுத்தலால் அற என்று காரணப் பொருளில்வந்தது. எடுப்ப என்ற குறிப்பு மது. எடுத்தல் - ஒங்குதல். கிண்கிணி - சதங்கை ஒலிக் குறிப்பாற் போந்த பெயர். ஒலி ஓங்க அவை தளர்ந்தன என்க.

**ஒளிக் கிங்கிணி** - **சுடர்க்குஞ்சி** - என்பனவும் பாடங்கள். 50

1949. தாதியர்தங் கைப்பற்றித் தளர்நடையி னசைவொழிந்து
ஓர் ஆண்டு நிறைவு — சோதியணி மணிச்சதங்கை தொடுத்தவடம் புடைசூழ்ந்த
பாதமலர் நிலம்பொருந்தப் பருவமுறை யாண்டொன்றின்
மீதணைய நடந்தருளி விளையாடத் தொடங்கினர். ருக

(இ - ள்) தாதியர்தம்...ஒழிந்து - தாதியர்களுடைய கையைப்பற்றி நடத்தலால் தளர்நடையின் அசைவு தீர்ந்து; சோதி...நிலம் பொருந்த - ஒளியும் அழகும் உடைய மணிகளிழைத்த சதங்கைகள் கட்டிய வடம் பக்கத்தே சுற்றிய பாதமலர்கள் நிலத்திற் பொருந்தும்படி; பருவமுறை...அணைய - பருவங்களின் முறையில் ஓராண்டு நிறைவாகி மேற்செல்ல; நடந்தருளி...தொடங்கினர் - நடந்து சென்றருளவும் விளையாடவும் தொடங்கினர்.

(வி - ரை) இப்பாட்டால் ஓராண்டு நிறைவின்மேல் திருவிளையாட்டுப்பருவ நிகழ்ச்சிகளைக் கூறினர்.

**தாதியர்......ஒழிந்து** - இதனால் தளர் நடையில் செங்கின்று தள்ளாடி நடக்கத் தொடங்கி நடைபயிலும் குழவி அத்தளர் வொழிந்து நடக்கும் திறத்தின் பயிற்சி கூறப்பட்ட திறம் காண்க.

**பருவமுறை ...மீதணைய** - "வளர்பருவ முறையாண்டு வருவதன் முன்" என்று முன்பாட்டிற் கூறியதற் கேற்ப, அவ்வாறு வந்த பருவம் ஓராண்டின் மேற் செல்ல என்றார். **அணைய** - அணைந்த காலத்தில்.

**நடந்தருளி** - முன் தவழ்ந்தருளினர் (1945), நடையிட்டருளினர் (1948) என்றதற்கேற்ப **அருளி** என்றார். "மேல் வளர்ந்தருளுநாள்" (1950) என்பதும் காண்க. பிள்ளையாரது வளர்ச்சிப் பருவச் செயல்கள்யாவும் இறைவரது அருளிப் பாடுகளேயாம் என்பது.

1941 முதல் பத்துப் பாடல்களிலும் காப்புப்பருவம் முதலிய பத்துப்பருவங் களும் அடங்க வைத்து, 3-வதுமாத முதல் 21 மாதம் வரை பத்தையும் முடித்து, இரண்டாவது ஆண்டுடன் **வளர்ந்தருளினர்** என முடித்து, அருட்பேறுபெறும் மூன்று வது ஆண்டைத் தனியே தொடங்கினர் என்பாரும் உளர்; 1951-ல் **வளர்ந்தருளி** என்றது அறுவாதம் என்றும் கொள்வர். 51

1950. சிறுமணித்தேர் தொடர்ந்துருட்டிச், செழுமணற்சிற்றில்களிழை
சிறுதேர் - சிற்றில் — நறுநுதற்பே தையர்மருங்கு நடந்தோடி யடர்ந்தழித்துங், [க்கு
குறுவியர்ப்புத் துளியரும்பக் கொழும்பொடியா டியகோல
மறுகிடைப்பே ரொளிபரப்ப வந்துவளர்ந் தருளுநாள்; ருஉ

1951. மங்கையோ டுடனாகி வளர்தோணி வீற்றிருந்த
மூவாண்டு — திங்கள்சேர் சடைபார்தந் திருவருட்குச் செய்தவத்தின்
அங்குரம்போல் வளர்ந்தருளி, யருமறையோ டுலகுய்ய
எங்கள்பிரா னீராண்டின் மேலோராண் டெய்துதலும்; ருங

1952. நாவாண்ட பலகலையு நாமகளு நலஞ்சிறப்பப்,
பூவாண்ட திருமகளும் புண்ணியமும் பொலிவெய்தச்,
சேவாண்ட கொடியவர்தஞ் சிரபுரத்துச் சிறுவருக்கு
மூவாண்டி னுலகுய்ய நிகழ்ந்ததனை மொழிகின்றேன். ௫௪

1950. (இ - ள்) சிறு...உருட்டி - அழகிய சிறுதேரினைப் பற்றித் தொடர்ந்து உருட்டிச் சென்றும்; செழுமணல்......அழித்தும் - செழுமணலால் சிற்றில்கள் கட்டி விளையாடும் நறிய நெற்றியையுடைய பேதைப் பெண்களிடத்து நடந்தும் ஓடியும் அச்சிற்றில்களைக் காலால் அழித்து விளையாடியும்; குறுவியர்ப்பு...வளர்ந் தருளும் நாள் - சிறு வேர்வைத்துளிகள் திருமேனியில் அரும்ப அதனுடன் திரு நீற்றினைப் பூசிவிளங்கிய திருக்கோலம் அத்திருவீதியிற் பேரொளி பரப்ப வந்து இவ்வாறு வளர்ந்தருளும் நாளிலே, ௫௨

1951. (இ - ள்) மங்கையோடுடனாகி......திருவருட்கு - பெரிய நாயகியா ருடனாகியிருந்து, வளரும் திருத்தோணியில் வீற்றிருந்தருளும் மதி சேர்ந்த சடை யினையுடைய தோணியப்பரது திருவருளாகிய பயனுக்கு; செய்தவத்தின்...வளர்ந் தருளி - செய்யும் தவத்தின் மூலம் உளதாகும் முளையைப் போல வளர்ந்தருளி; அருமறையோடு...எய்துதலும் - அரிய மறைகளினால் உலகம் உய்யும்படி எமது பெருமானாகிய பிள்ளையார் இரண்டு ஆண்டுகளின் நிறைவின்மேல் ஓர் ஆண்டு நிறை யும் பருவத்தினைப் பொருந்தியபோது; ௫௩

1952. (இ - ள்) நாவாண்ட......நலஞ்சிறப்ப - நாவினால் ஓதிப்பயிலும் வேத முதலிய பல கலைகளும், நாவின் கிழத்தியாகிய கலைமகளும் சிறந்த நன்மை பெற்றோங்கவும்; பூவாண்ட... ...பொலிவெய்த - பூவில் இருக்கும் திருமகளும் சிவ புண்ணியமும் பொலிவு பொருந்தவும்; சேவாண்ட...மொழிகின்றேன் - இடபத்தைக் கொடியாகவுடைய சிவபெருமான் எழுந்தருளிய சிரபுரத்தில் அவதரித்த சிறுவராகிய பிள்ளையாருக்கு மூன்றாண்டுப் பருவத்தில் உலகமுய்ய நிகழ்ந்த அருட் செய்கையினை இனி மொழியப் புகுகின்றேன். ௫௪

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1950. (வி - ரை) இப்பாட்டினால் சிற்றிற்பருவமும், சிறுதேர்ப் பருவத் தொடக்கமும் கூறினார். சிற்றிற் பருவச் செயல்கள் மூன்றாண்டு அளவிலும், சிறு தேர்ப்பருவத் தொடக்கச் செயல்கள் மூன்றாண்டு இறுதியிலும் நான்காவதாண்டுத் தொடக்கத்திலும் நிகழ்வன; சிறுதேர்ப் பருவம் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் நூல் களில் கூறப்படும் பத்துப் பருவங்களுள் இறுதியில் வைத்துப் பாராட்டப்படுவது. மூவாண்டு நிறைவெய்தும் பருவம் கூறி உலக நிலையிற் பிள்ளைப் பருவத்தை நிறை வாக்கிக்கொண்டு மேலே தெய்வநிலையில் அருள்ஞானப்பாலுண்டு அருள் ஞானப் பிள்ளையாகும் பருவங்கூறப்புகுகின்றாராதலின் இவ்வாறு முடித்துக் காட்டினார். பிள்ளைப்பருவக் குறிப்புக்கள் கண்ணப்ப நாயனார் புராணத்துக் கூறுவனவும் ஈண்டு நோக்கற்பாலன. இஃது மனையின் புறத்தும் போந்து விளையாடும் பருவம்.

மணற் சிற்றில்கள் இழைக்கும் - பேதையர் - மணலினால் சிறு வீடுகட்டி விளையாடும் இளஞ் சிறுமியர். இது சிறுமியர்க்குரிய விளையாடல். செழுமணல் - ஈரமுடைய நன்மணல்; அது சிறுவீடு கட்டுதற்கு உதவுவது. **பேதையர்** - சிறுமியர் என்ற பொதுமை குறித்தது. ஐந்து வயது முதல் ஏழுவயதுவரை உள்ள பேதை பருவங் குறித்ததென்பதுமாம். சிற்றில் அழித்துக் குறுநடைக்குறும்பு செய்து

விளையாடுதல் சிறுவர்க்குரிய விளையாட்டு. "எயினப் பிள்ளைப் பேதைய ரிழைத்த வண்டல், அடிச்சிறு தளிராத் சிந்தி" (673) என்றதும் காண்க.

அழித்தும் - சிறுபோதில் நிலையழியும் மணற் சிறுவீடு கட்டிச் சிறுமகிழ்வுறும் பேதைகளுக்கு அழியாத பேரானந்தந்தரும் பெருவீட்டினை அளிக்கும் நிலைபெறுவன இத்திருவடிகள் எனக் காட்டுவார்போன்று அச்செயல் விளங்கிற்று என்ற குறிப்பும் காண்க.

கோழம் பொடியாடிய கோலம் - பொடி - திருநீறு. "பொடி நுகருஞ் சிறுத் தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாக" (பிள். தேவா. செங்காட்). புழுதிபடிய விளையாடிய என்றலுமாம். "அவ்விரதப் பொடியாடும் வாழிவளர் மறைச்சிறுர்", (1909) என்ற குறிப்புக் காண்க. பின்னர்த் தாதையார் பின் மனைமூன்றிற் றொடர்ந்து சென்றது இப்பருவ நிலையால் போந்தது. மறுகிடை - வந்து - என்க.

பேரொளி பரப்ப - முழுஞானப் பேருணர்விற் பொலியும் பேரொளி பின்னர்ப் பரப்பும் நிலையினை முன் அறிவிக்கும் இளஞ்சோதி காட்ட.

வந்து - வளர்ந்தருளும் நாள் - எய்துதலும் (1951) - நிகழ்ந்ததனை (1952) என்று மேல் வரும் பாட்டுக்களுடன் கூட்டி முடித்துரைத்துக் கொள்க.

செழுமணிச் சிற்றில்—என்பதும் பாடம். 52

1951. (வி - ரை) திங்கள் சேர் - திங்கள் அபயம் புக்குச் சேர்ந்த - வந்தடைந்த.

மங்கையோடு உடனுகித் தோணி வீற்றிருந்த - சடையார் - அம்மையப்பராகி ஒருங்கு எழுந்தருளிய நிலை. இந்நிலையே ஐயன் வெளிவந்து பிள்ளையார்க்கு ஞான போனகம் அருளவுள்ளதனையும், இவர்களிடத்தே வரங்கிடந்து சிவபாதவிருதயரும் பகவதியாரும் (1918 - 1923) பேறுபெற்றதனையும் குறிக்க இவ்வாறு கூறினர்.

திருவருட்கு - திருவருளாகிய பயன் தருதற்கு.

அங்குரம் - முளை. ஏகதேச வுருவகம். செய்தவத்தின் - சிவபாதவிருதயரும் தேவியாரும் செய்த தவத்தினுற் பெற்ற. அங்குரம் - பிள்ளையார்; அருள் - பயன்.

அங்குரம்போல் வளர்ந்தருளி - அங்குரம் வளர்வதுபோல வளர்ந்து.

அருமறையோடு உலகு உய்ய - அருமறைகளின் உண்மைப் பொருளைப் பெறுதலால் உலகம் உய்வடையும்பொருட்டு. ஒடு - கருவிப் பொருளில் வந்தது. மறையுய்யவும் உலகுய்யவும் என்று பிரித்துரைத்தலுமாம். மறை உய்தலாவது உலகுக்குப் பயன் விளையாதிருந்த நிலை நீங்கிப் பயன் செய்தல்.

ஈராண்டின்மேல் ஓராண்டு எய்துதலும் - ஆண்டாண்டாக வளர்ச்சி கூறுவார் இவ்வாறு கூறினர். "ஆண்டொன்றின்" (1949). ஓர் - நினைக்கத்தக்க என்றதுமாம்.

1952. (வி - ரை) நாவாண்ட பலகலையும் நாமகளும் - நாவினை இடமாகக் கொண்டு பெருகும் வேதமுதலிய கலைகள். நா ஆண்ட - எழுதிப் பயிலாமல் ஓதியே பயிலப்பட்ட. கலையும் நாமகளும் - கலைகளும் அதற்கு உரியதெய்வமாகிய வாணியும். நலஞ்சிறத்தலாவது இதுவரை பயனற்றிருந்ததுபோலன்றி நன்மை தரவல்ல சிறப்புப் பெறுதல். மறைகளை முன்னர்க் (1951) கூறினுராதலின் ஏனைக் கலைகளை இங்குக் கொள்ளவைத்தார். நாமகளை உடன்கூறிய கருத்துமது.

பூவாண்ட திருமகளும் புண்ணியமும் பொலிவெய்த - பூ - தாமரை. திருமகள் - இலக்குமி. ஆண்ட - இருக்கையாக்கொண்டு ஆட்சி செலுத்துகின்ற என்ற பொருளில் வந்தது. புண்ணியம் - சிவபுண்ணியம். திருமகள் - ஈண்டு ஞானமுதல்வி

யாகிய அம்மை - ஞான வாணி - என்றலுமாம். **போலிவேய்துதல்** - ஒங்கி விளங்குதல்.

**சேவாண்ட கொடி** - "சேவேந்து வெல்கொடி", "கோதிலா வேறுங் கொடி" என்றபடி இங்கு இனி உளதாக்கப்பெறும் சிவஞான வெற்றிக் குறிப்புப்படக் கொடியினைத் தேற்றம்பட உயர்த்திக் கூறினார். **கோடியவர்தம் சிரபுரம்** - கொடியுடையார்க் கிடமாகிய சிரபுரம். **சிரபுரம்** - சீகாழியின் ஏழாவது திருப்பெயர். உலகில் சைவம் தலைமை பெற எழுவிப்பதென்பது குறிப்பு. **கோடியவர்தஞ் சிறுவர்** - என்று கூட்டிப் பிள்ளையாரை உணர்த்தியதாகக் கூறுவாரும், அக்குறிப்பினால் அவர் முருகப் பெருமானவர் என்பாருமுளர். அவை பொருந்தாமை முன் உரைக்கப்பட்டது. பின்னரும் உரைக்கப்படும். கடைப்பிடிக்க.

**உலதுய்ய நிகழ்ந்ததனை** - அந்நிகழ்ச்சி அவர் பொருட்டாலன்றி உலகுய்ய நிகழ்ந்ததாம் என்பது. "உலகெலாம்" என்ற அருண்மொழிக் குறிப்புமாம்; "மனையறத்தி லின்பமுறு மகப்" (1917) பேறு தந்த நிகழ்ச்சியினை இதுவரை கூறியபடி, இனிப் "பரசமய நிராகரித்து நீறாக்கும் - காதல" ராகிய பேற்றின் நிகழ்ச்சியினை மேல் உரைக்கின்றாராதலின் அவ்வேறுபாட்டினை இவ்வாறு குறிக்கின்றார்.

**மோழிகின்றேன்** - இனி மொழிவேன்; விரைவுபற்றி நிகழ்காலத்தாற் கூறினார். அன்றியும் இந்நிகழ்ச்சியின் பெருமையும் தெய்வத் தன்மையும் படிப்போரது மனத்திற் படிய வற்புறுத்தும்படித் தொடங்கிக் காட்டியதுமாம். இது ஆசிரியர் மரபு. "நிகழ்ந்தது மொழிவே னுய்ந்தேன்" (173) முதலியவை காண்க. 54

1953. பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர்
மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டி னளித்தருளத்,
தோண்டினிலை தரவருவார் தோடர்ந்தபிரி வுணர்வொருகாற்
கோண்டெழலும் வெருக்கொண்டாற் போலழுவர் குறிப்பயலாய்.

(இ - ள்) பண்டு...தமை - முன்னை நிலையில் திருவடியை மறவாத பான்மையோராய் நின்றவரை; பரமர் - சிவபெருமான்; மண்டு...அளித்தருள - மிக்க தவம் செய்த மறைக்குலத்தோராகிய சிவபாதவிருதயருடைய வழிபாட்டிற்குப் பயனாகக் கொடுத்தருளினாராக; தொண்டின் நிலைதரவருவார்-திருத்தொண்டின் நிலையினை உலகுக்கு அருள்வதற்காக அவதரித்த பிள்ளையார்; தொடர்ந்த...கொண்டெழலும் - சிவனையே தொடர்ந்து கொண்ட நிலையறாது பிரிந்து போந்த பிரிவுணர்வு ஒருகால் மனத்துட் கொண்டு அந்நினைவெழுந்தவுடனே; வெருக்கொண்டாற்போல்...அயலாய் - வெருவுதலைக் கொண்டவர்போல அயலாகியதொரு குறிப்புடன் அழுவார்.

(வி - ரை) இத்திருப்பாட்டுப் பிள்ளையாரது முன்னை நிலையினை நிலைபெறவுணர்வதற்குப் பேருதவி செய்ய ஆசிரியர் அளித்த அருளமுதமாகும். நாயன்மார்களின் முன்னைநிலையை இவ்வாறு குறிப்பாலுணர்த்துவது ஆசிரியரது சிறந்த மரபு. 751-ம் பாட்டின்கீழ் உரைத்தவை பார்க்க.

**பண்டு திருவடி மறவாப் பான்மையோர்தமை** - "சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள் சேர்வார் தாமே தானாகச் செயுமவன்" (பிள். தேவா - கழுமலம் - தாளச்சதி - வியாழக்குறிஞ்சி - 7) என்றபடி பிறவியில் வாரா நிலையில் இறைவரை மறவாதுட்கொண்டு அவனேதானாக ஆனந்தத்தில் இருந்த ஓர் முத்தான்மா என்பது பிள்ளையாரது முன்னை நிலையாம். மறவாமை என்பது அதன் அடிப்படை. "மறவாமை யானமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி" (வாயிலார் - புரா-8); "மறவா திருக்க வரந்தர வேண்டும்" (அரசுகள் தேவா - திருவிருத் - பாதிரிப்புலி);

"மறந்தேயுந் தன்கழனுன் மறவா வண்ண நல்கியவத், திறம்பாடல்" (திருவா-தெள்); " என்றும் மறவாமை வேண்டும் " (1776) முதலிய கருத்துக் காண்க.

பிள்ளையார் இந்நிலை வரப்பெற்றிருந்தவர் என்பது "திருந்தடி, மறக்குமா றிலாத வென்னை மையல் செய்திம் மண்ணின்மேற், பிறக்கு மாறு காட்டினுய் பிணிப்படு முடம்புவிட், டிறக்கு மாறு காட்டினுய்க் கிழுக்கு கின்ற தென்னையே" (பிள். தேவா-திருத்தி - நட்டரா - 5) என்ற அவரது திருவாக்கா லுணரப்படும். ஆசிரியர் கூறும் இச்சரிதப் பகுதிக்கு இது சிறந்த அகச்சான்ருகும்.—திருவடி மறவா என்றதற்குப் பூசித்த என்று கொண்டும், திருச்சேய்ஞலூரிலும், திருச்செந்திலிலும் முருகப்பெருமான் சிவபூசை செய்த வரலாற்றினை உட்கொண்டும் இங்கு அப்பெருமானைக் குறிக்கத் தகாத உரைகொள்வாருமுண்டு. அவ்வரலாறுகள் சிவபூசை செய்து உய்யும்படி உலகுக்கு அறிவுறுத்திக்காட்டும் ஆசாரியத்தன்மைபற்றி எழுந்தனவேயன்றித், தந்நிலையின் ஆன்மாக்கள் உய்திபெறும் அடிமறவா நிலைபற்றியன அல்ல என்பது தேற்றம். " முருகன்னது பெருமைபகர் முதுகுன்றடை வோமே ", " சேயடைந்த சேய்ஞலூரிற் செல்வன்சீர் பரவி " முதலியனவாக முருகப்பெருமானைப் பிள்ளையார் எடுத்துக் கூறும் பகுதிகளின் கருத்தும் உன்னுக. " பண்டுதாம் பிரிந்தெய் துஞ் சேயநன்னெறி குறுகிட " (வெள் - சருக் - 28) என்று ஆளுடையநம்பிகளைப்பற்றிக் கூறும் திறமும் ஈண்டு ஒப்புநோக்கற்பாலது. "தவநெறி வளர்க்க வந்தார் தலைப்படுஞ் சார்பு நோக்கிப், பவமற வென்னை முன்னு ளாண்டவப் பண்பு கூட, நவமலர்ப் பாதங் கூட்டு மென்னு நல் லுணர்வு நல்க" (புரா - 1244) என்றும், " நம்பனே யுன்பாத மெயந்நீழல் சேரும் பருவமீ தென்று பாட" (ஷை 1245) என்றும்வரும் சரிதத் திருவாக்குக்களும் காண்க. இன்னும் இவைபோல ஆண்டாண்டு வருவனவும், முன் உரைத்தனவும் பார்க்க.

பான்மை-தன்மை; திருவடி மறவாப் பான்மையாவது இறைவன் செய்யும் உபகாரத்தை மறத்தற்கேதுவாகிய மலவாசனையுமில்லாத சுத்தநிலையின் றன்மை. சீவன் முத்தி நிலையினும் ஒரோவழி " இங்குளி வாங்குங் கலம்போல " மெல்லிய வாதனை தாக்குதலும் உண்டு. அதுவுமில்லாத முத்தநிலைமையினர் பிள்ளையாரென்க.

**மண்டுதவ மறைக்குலத்தோர்** - சிவபாதவிருதயர். மண்டு - பெரிய. **வழிபாட்டின்** - தவத்தின் பயனுக (1917 - 1918). **தமை - வழிபாட்டினுல் - அருள** - என்க.

**தோண்டின் நிலைதர** - திருத்தொண்டினை நிலைபேறு பெறுவித்து உலகுக்கு விளக்க. **வருவார்** - பிள்ளையார் அவதரித்தது பிறவி தரும் வினைப்பான்மை எதுவும் பற்றியன்று; திருத்தொண்டினை நிறுவுவதற்கேயாம் என்பது. "புண்ணியக்கன் றனையவர்" (1960), " வழிபாட்டி னளித்தருள " என்றது மிக்கருத்து.

**தொடர்ந்த பிரிவுணர்வு** - திருவடியை மறவாது தொடர்ந்தநிலை யுருது பிரிந்து போந்த உணர்ச்சி. பிரிவுணர்வு - பிரிந்தேம் என்ற உணர்ச்சி - நினைவு. **தொடர்ந்த பிரிவு** - தொடர்வற வினைப்பிறவியிற் பிரிந்து செல்வதுபோலாது, தொடர்ச்சியருத பிரிவு; மலத்தால் மறந்து பிரிந்து பிறப்பார்போலல்லாமல், மறவாத தன்மை நழுவாது - மறக்காது - அருளாற் றெண்டினிலைதரப் பிரிந்த பிரிவு; பிரியாத பிரிவு.

**ஒருகாற் கோண்டு எழலும்** - ஒவ்வோர் காலத்தில் மனத்தை இடங்கொண்டு மேல் எழும்புதலும். பிரிவுணர்வு - எழலும் (உலகில் வந்தமைபற்றி) அழுவர் என்க.

**வேரக்கோண்டாற்போல்** - வெருக்கோள்ளுதல் - வெருவுதல். சடுதியிற் றேன்றி மறைவதோர் அச்சம்போன்ற மனநிலை; துணுக்கு என்றலும் பொருந்தும்.

**அயற் குறிப்பாய் அழுவர்** - என்க. அயற்குறிப்பாவது காரணங் காணமுடியாத வேற்றுநிலைக் குறிப்பு. குழவிகள் அழுங்குறிப்பின் காரணத்தால் அவற்றுக்கு வேண்டு

வனவற்றை அறிந்து தாயர் இயற்றுவர். அதுபோல் அறியமுடியாத நிலையில் அழுத லால் அயற்குறிப்பு எனப்பட்டது.

உணர்வோருபால்—என்பதும் பாடம். 55

1954. மேதகைய விந்நாளில் வேறொருநாள் வேதவிதி
நீதிமுறைச் சடங்குநெறி முடிப்பதற்கு நீராடத்
தாதையார் போம்பொழுது, தம்பெருமா னருள்கூடச்
சோதிமணி மனைமுன்றிற் றொடர்ந்தழுது பின்சென்றார். ௫௬

(இ - ள்) மேதகைய...நாள் - (இவ்வாறு) மேம்பட்ட இந்நாள்களில் வேறு மொரு நாளிலே ; வேதவிதி...பொழுது - வேதங்களில் விதிக்கப்பட்ட நியதியின் முறையில் செய்யும் சடங்கு நெறியினை முடிப்பதற்காக முன்னர் நீராடும்பொருட்டுத் தாதையார் போகும்பொழுது ; தம்பெருமான் அருள்கூட - தமது பெருமானது திரு வருள் கைகூடுதலால் ; சோதி...பின்சென்றார் - திருமனையின் ஒளியும் அழகும் உடைய முன்றிலின்கண்ணே பிள்ளையார் தாமும் தாதையாரைத் தொடர்ந்து அழுது கொண்டு பின்னே சென்றனர்.

(வி - ரை) **மேதகைமை** - தொடர்ந்த பிரிவு உணர்வு மேம்பாடு. இறைவரது இடையறாத உணர்வு நீங்க உலகத்திருக்கின்றோமே என்ற நினைவு மேம்பாடுடையது.

**வேறொரு நாள்** - வெருக்கொண்டாற்போலக் குறிப்பயலாய் அழுத பல நாள்க ளும் மேதகைமையுடையன. அவற்றுள் அன்று அழுது தொடர்ந்து பின்சென்ற நாள் வேறாகத் தனிச் சிறப்புடையது என்பதாம். என்னை ? முன், அந்நாள் பலவும் பிரிவுணர்வுகொண்டு அழுத அம்மட்டில் அமைய, இந்நாள், அப்பிரிவு நீங்க இறைவ ரைக் காணக்கூட்டும் சிறப்புத் தரும் நாளாதலின் என்க. **தொடர்ந்து அழுது** - என்ற குறிப்புமது. இனி, இவ்வாறு அழுது சென்ற நாட்கள் முன்னரும் பலவுள வேனும், இஃது அவற்றின் வேறாய் இறைவரது ஞானம்பெறக் கூட்டி முன்னைய உலக நிலையினின் மீளாது, வேறுபட்டுத் திருமனைக்குத் திரும்பும் நாள் என்றலு மாம். "வெவ்வே றியல்பினி லமைத்துக்கொண்டு" (811).

**வேதவிதி...நீராட** - மறைவிதி நியமமாகிய நித்தியகருமங்களைச் செய்து முடித் தற்கண் முன் அங்கமாக நீராடுதல் - குளித்தல் - செய்ய. **நீதி** - நியதி ; **சடங்கு** - சுருதிகளில் விதித்தவை. சிரௌதம் என்ப. இவை (1957) பின் உரைக்கப்படுவன

**தம்பெருமான் அருள்கூடப் - பின்சென்றார்** என்க. கூடுதலால் என்றும், கூடும் பொருட்டு என்றும் உரைக்க நின்றது.

**தொடர்ந்தழுது** - வெருக்கொண்டாற்போல் சடுதியில் அழுது நின்றுவிடாது தொடர்ச்சிபெற அழுது என்ற குறிப்புமாம். தாதையார்பின் பிள்ளையார் பின்சென் றார் என எழுவாய் வருவிக்க. 56

1955. பின்சென்ற பிள்ளையார் தமைநோக்கிப் பெருந்தவத்தோர்
முன்செல்கை தனையொழிந்து முனிவார்போல் விலக்குதலும்,
மின்செய்பொலங் கிண்கிணிக்கால் கோட்டியவர் மீளாமை
"யுன்செய்கை யிதுவாகிற் போ"தென்றங் குடன்சென்றார். ௫௭

(இ - ள்) பின்சென்ற......விலக்குதலும் - தமது பின் தொடர்ந்து சென்ற பிள்ளையாரைப் பெருந்தவத்தோராகிய சிவபாதவிருதயர் நோக்கி, மேற்செல்வதனை நிறுத்தி முனிவுகொள்பவர்போலக் காட்டி, அவர் தமது பின்செல்வதை விலக்குத

லும்; மின்செய்...மீளாமை - ஒளி வீசுகின்ற பொன்னாற் செய்யப்பட்ட கிண்கிணி யணிந்த கால்களைக் கொட்டி இவர் மீளாது நின்றாராக; உன் செய்கை...உடன் சென்றார் - உனது செயல் இதுவானால் போதுவாயாக என்று சொல்லி அவருடனே சென்றனர்.

(வி - ரை) முனிவார்போல் விலக்குதலும் - விலக்கிய செயலை வற்புறுத்தக் கோபக்குறி காட்டினர். போல் - உண்மையிற் சினங்கொள்ளாது சினந்தவர்போலக் காட்டினர் என்க. பின்னர்க் "கைச்சிறிய தொருமாறு கொண்டோச்ச" (1971) என்ற நிகழ்ச்சியும் இக்கருத்து. விலக்குதல் - பின்வருதலைத் தடுத்தல்.

கால் கொட்டுதல் - பெரியோர் தடைசெய்த செயலைத் தம்மிச்சையில் விடாது பற்றும்போது குழந்தைகள் மேற்கொள்ளும் செயல்; இரண்டு கால்களையும் கொட்டி அச்செயலிற் பிடிவாதம் செய்தலாம். இது மிக உயர்வாகிய தன்மைநவிற்சி யணி. மீளாமை - மீளாது நின்றமையால்.

உன்...போது - பிள்ளையார் செயலை உடன்பட்டுத் தாதையார் முனிவுக்குறி நீக்கி அவரை நோக்கிக் கூறியது. உன் செய்கை - முன்னைய தொடர்ந்த செயல் என்றதும் குறிப்பு. போல் - முனிதல் பெரியோரோ மூக்கமன்று என்பதும் குறிப்பு.

அந்த - அவ்விடத்து - அப்போது. இடமும் காலமும் குறித்தது. உடன் சென்றார் - உடன் கொண்டுசென்றனர். 57

1956. கடையுகத்திற் றனிவெள்ளம் பலவிரிக்குங் கருப்பம்போல்
இடையறுப் பெருந்தீர்த்த மேவற்றினுக்கும் பிறப்பிடமாய்
விடையுயர்த்தார் திருத்தோணிப் பற்றுவிடாமேன்மையதாந்
தடமதனிற் றுறையணைந்தார் தருமத்தின் றலைநின்றார். ருஅ

பிரமதீர்த்தச் சிறப்பு

(இ - ள்) கடை உகத்தில்......போல் - ஊழிமுடிவில் வரும் பெருவெள்ளங்கள் பலவற்றையும் தன்னிடத்திலிருந்து விரியும்படி தோற்றுவிக்கும் கருப்பம் போல; இடையறு......பிறப்பிடமாய் - இடையறாது நிற்கும் பெருந்தீர்த்தங்கள் எல்லாவற்றுக்கும் பிறப்பிடமாகி; விடையுயர்த்தார்...தடமதனில்-இடபக்கொடியை உயர்த்திய சிவபெருமான் எழுந்தருளிய திருத்தோணியின் தொடர்ச்சியினை நீங்காத மேன்மையுடையதாகிய தடாகத்தின்; துறை அணைந்தார் - துறையினைச் சென்றணைந்தனர்; தருமத்தின் தலைநின்றார் - அறநெறியிற் றலைநின்றவராகிய சிவபாதவிருதயர்.

(வி - ரை) கடை...கருப்பம் போல் - உகக்கடையில் - என்க. உகம் - ஊழி; தனிவெள்ளம் - பெரு வெள்ளம் - நீர்ப்பெருக்கு. பல - ஒவ்வோர் ஊழியிலும் நீர் பெருகுதலால் பல என்றார். விரிக்கும் கருப்பம் - இதனினின்றும் பெருகி விரிதல் போல உளவாதலால் கருப்பம் போல் என்றார். தொழில் பற்றி வந்த உவமம்.

இடையறுப்.. பிறப்பிடமாய் - இடையறப்பெருந்தீர்த்தம்-இடையே வற்றுதல் இல்லாத புனிதப்பெருநீர்கள். இவை கங்கை, காவிரி முதலாயின. பிறப்பிடமாய் - தோன்றுதற்கிடமாகி. விரிந்த பலவெள்ளங்களுடன் ஒன்றாய்க் கலந்த அப்பெருந் தீர்த்தங்கள், அப்பெருவெள்ளங்கள் மீள இத்தலத்திற் சுருங்கிக், காலத்தில் தாம் முன்போலப் பலவாகப் பரவிநிகழ்தலால் இத்தடம் அவற்றுக்கெல்லாம் பிறப்பிடமாம் என்றார். அவ்வாறு கலந்த போதும், அதன் முன்னரும், மீள முன் போலப் பரவியபோதும் அவை இடையே வற்றுதல் இல்லையாதலின் இடையறு என்றார். பெருவெள்ளமாகிய கடல் எல்லாத் தீர்த்தங்களுக்கும் இருப்பிடமும் பிறப்பிடமுமாதலின் இவ்வாறு கூறினர் எனினுமாம் - பலவுதி⁻ம் - என்ற பாடமுமுண்டு,

**திருத்தோணிப்பற்று விடா மேன்மையதாம்** - சுருங்கித் தடத்தினளவில் அமைந்த காலத்தில் திருத்தோணிச் சிகரக் கோயிலினருகிற் பற்றியிருத்தலானும், பெரு வெள்ளமாகப் பரந்த காலத்திலும் அதன்மேல் மிதந்த திருத்தோணியினைப் பற்றி நிற்றலானும் பற்றுவிடா மேன்மை என்றார். **விடையுயர்த்தார்** - வெள்ளத்தில் தோணி செலுத்தி நிறுத்தும் மீகாமன் போன்றார் என்று விசேடங் காண்பாருமுண்டு.

**தடம் அதனிற் றுறை** - தடம் - பிரமதீர்த்தம் என்று வழங்குவர்; **துறை** - கரை

**தருமத்தின் தலைநின்றார்** - தருமம் - அறநெறி ; ஈண்டு இல்லற நெறியினையும், வேத நெறியினையும், சைவ நெறி விளங்கத் தவஞ்செய்யும் சிவதருமத்தினையும் குறித்தது ; தலைநிற்றல் - சிறத்தல் ; தலை ஏழனுருபு என்றலுமாம். 58

1957. பிள்ளையார் தமைக்கரையில் வைத்துத்தாம் பிரிவஞ்சித்
தெள்ளுநீர் புகமாட்டார், தேவியோடுந் திருத்தோணி
வள்ளலா ரிருந்தாரை யெதிர்வணங்கி, மணிவாவி
யுள்ளிழிந்து புனல்புக்கா ருலகுய்ய மகப்பெற்றார். ௫௯

(இ - ள்) பிள்ளையார்...வைத்து - பிள்ளையாரைத் தீர்த்தக்கரையில் விட்டு ; தாம் பிரிவு அஞ்சி - தாம் பிரிதலை அஞ்சி ; தெள்ளுநீர் புகமாட்டார் - தெளியும் நீரினுள்ளே மூழ்க மாட்டாதவராகி ; தேவியொடும்...புக்கார் - பெரிய நாயகியம்மை யாரோடும் திருத்தோணியில் வள்ளலாராகி எழுந்தருளியிருந்த பெருமானை எதிரில் வணங்கிக்கொண்டு, அழகிய வாவியினுள்ளே இறங்கி நீரினுள் மூழ்கினர் ; உலகுய்ய மகப் பெற்றார் உலகமுய்யும்படி மகவைப்பெற்ற சிவபாத விருதயர்.

(வி - ரை) **தாம் பிரிவு அஞ்சி** பிள்ளையாரைத் தனியே கரையில் வைத்துத்தாம் பிரிந்தால் நீராடிக் கரையேறுமளவும் அவர், துணையும் காவலும் பெறுதிருப்பரே என்று பயந்து. பிள்ளையாரைத் தாம் பிரியமாட்டா தஞ்சி என்றுரைப்பாருமுண்டு. அவரைப் பிரிந்து நீராடிப் போக வந்தாராதலின் அவ்வுரை பொருந்தா தென்க.

**தெள்ளும் நீர்** - உயிரைப் பிணித்த மருளைத் தெளிவிக்கும் தெய்வத் தன்மை யுடையது இந்நீர் என்பது. தெள்ளுதல் - அகற்றுதல் - போக்குதல் என்று கொண்டு, அஞ்ஞானத்தையும் அது காரணமாக வரும் பிறவியையும் போக்கும் என்றலுமாம் "துயர் ஒன்றொழியா வண்ண மெல்லாந் தெள்ளுங் கழல்" (திருவாச - கோத்);

**தேவியோடும்...வணங்கி-வள்ளலார்** - வேண்டுவார் வேண்டுவதே ஈவார்; தாம் வேண்டியபடியே முன் கொடுத்தவர் என்றதைக் கண்டாராதலின், இப்போதும் அவரே காவல் புரிவார் என்பது குறிப்பு. **எதிர்வணங்கி** - கரையில் நின்றபடியே கண்டு வணங்கி ; குழவியைக் காவல்புரிக என்று வணங்கி ; தோணியப்பரையே காவலாக வைத்து என்பதாம். இவருடைய பெருந்தவங் காரணமாக அவ்வாறே தோணியப்பர் காவலாக நின்று வெளிப்பட்டு வந்தருளினமை பின் நிகழ்ச்சியாற் காண்க. "எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார், திண்ணிய ராகப் பெறின்" (குறள்).

**உலகுய்ய மகப் பெற்றார்** - 1917-பார்க்க. சிவபாத விருதயர் வேண்டிய இரு பயன்களுள், இம் மூன்றாண்டுகள் வரையும் பெற்றெடுத்துப் பாலூட்டி வளர்த்தது தமது இல்லற நிலைக்குரிய மகவாகப் பெற்ற நிலை ; இனி, ஞானப்பாலுண்டு மேல் வளரும் நிலை அம்மகவு சிவம் பெருக்கவுளதாகும் நிலை என்பது குறிக்க ஈண்டு உலகுய்ய மகப்பெற்றார் என்றார். பெற்றார் என்பது வினைப்பெயராகவும் வினைமுற் றாகவும் கொண்டு உரைக்க நின்றது. **மணிவாவி** - முத்துமணிகளைக் கரையிற் கொழிக்கும் வாவி என்றலுமாம். 59

1958. நீராடித் தருப்பித்து நியமங்கள் பலசெய்வார்
சீராடுந் திருமகனார் காண்பதன்முன் செய்ததற்பின்
ஆராத விருப்பினு லகமருடம் படியவழி
பேராது மூழ்கினார் பெருங்காவல் பெற்றாராய். ௬௰

(இ - ள்) நீராடி... செய்வார் - நீரினுட் குளித்துத் தருப்பணம் செய்து பின் வேதநியமங்கள் பலவற்றையும் செய்வாராகிய சிவபாத விருதயர்; சீராடும்...செய்த தற்பின் - பலரும் சீராட்டவுள்ள திருமகனார் தம்மைத் தேடிக் காண்பதன்முன் அவற்றையெல்லாம் செய்து முடித்ததன் பின்பு; பெருங்காவல் பெற்றாராய் - மகனாருக்குத் தம்மினும் பெரிய காவலினைப் பெற்றாராகி; ஆராத...மூழ்கினார் - அடங்காத விருப்பத்தினாலே அதன்மேல் அகமருட ஸ்நானஞ் செய்யும் பொருட்டுத் தான் நின்றவிடத்தினின்றும் அடிபெயர்க்காது நீரிற் படிய மூழ்கினார்.

(வி - ரை) தருப்பித்தல் - தருப்பணம் செய்தல்; சூரியன் முதலியோரை எண்ணி உரிய பாவனை மந்திரங்களால் நீரை அள்ளியிறைத்தல். இது குளித்தலுக்குப்பின் அடுத்துச் செய்யப்படுவது.

பலநியமங்கள் - என்க. இவை சந்தியாவந்தனம் - சூக்தபடனம் - மார்ச்சனம் முதலாகத் தீர்த்தத்தினின்று குளித்தலி னங்கமாக அதன்பின் முறையிற் செய்யப் படுவன.

செய்வார் - செய்ததற்பின் - பெற்றாராய்ப் படிய மூழ்கினார் என்று முடிக்க.

அகமருடம் படிய - அகமருடணஸ்நானம் என்னும் நியமத்தினைச் செய்யும் பொருட்டு. அகமருடண ஸ்நானமாவது அகமருடண சூக்தத்தை நீரில் நின்று மூன்று முறை செபித்துக்கொண்டு மூழ்குதல். அகமருஷணசூக்தம் இருக்கு வேதத் திற் பத்தாவது மண்டலத்துள் நூற்றுத் தொண்ணூறாவது சூக்தம் என்ப. அகமர்ஷணம் - என்ற வடசொல் பாவத்தைக் கெடுப்பது என்ற பொருள் தருவது. படிய - மூழ்கினார் என்று கூட்டுக.

சீராடும்...முடித்ததற்பின் - சீராடும் - யாவராலும் சிறப்பிற் கொண்டாடப் பெறும். "காழியர்தஞ் சீராட்டே" (1946); சீராடல் - சிறுபிணக்கு என்ற உலக வழக்கிற் பொருள் கொண்டு தாதையாரைக் காணாது பிணங்கும் என்பாருமுண்டு. காண்பதன்முன் செய்ததற்பின் - பிள்ளையார் தம்மைக்காணாது தேடுவதன் முன்னே முடித்த பின்பு. காண்பது - தேடிக்காண முயற்சிப்பது என்ற பொருளில் வந்தது. "தேடிக்கண்டு கொண்டேன்" (திரு அங்கமாலை). காண்பது தன்முன் மீண்டும் காணும் விருப்பம் கொள்ளுமுன். அடிபேராது - நின்றநிலையினின்றும் அடிபெயர்க் காது. நின்ற அந்நிலையிலே மூழ்கிய நிலையினின்றும் மேற் கிளம்பிப் பிள்ளையாரைக் கவனிக்கு நிலையில்லாது என்பதுமாம். காண்பு அதன்முன் - காண்பு - காட்சி என்று கொண்டு, காட்சியின்முன் - காட்சிப்பட - காணும்படி என்று உரைத்தலு மொன்று; முன்கூறிய நீராடல் முதலிய நியமங்களை மகனார் காணச் செய்ததன்பின் என்றுரைக்கவும் நின்றது. இப்பொருளில் அது பகுதிப் பொருள் விகுதி. இனி நிகழ்வது அவர் காணாமற் செய்வது என்பதாம், "காண்பின் நெடுவரை" (மலைபடு கடாம் - 315); காண்பின் காலை" (புறம் - 119.)

மூழ்கினார் - இங்கு மூழ்குதல், முன்னர் "நீராடி" என்பதனின் வேறு. "மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்னக், கையாற் குடைந்து குடைந்து" (திருவெம். 11) என்றபடி நீராடுதலினும் (குளிப்பதினும்) நீரினுள்ளே மூழ்குதல் வேண்டுமாயினும், இங்கு அகமருடணத்துக்காக மூழ்குதல் அந்நிலை நின்றபடியே

குறித்த எல்லை அளவில் செபித்துக்கொண்டு மூழ்கியிருத்தலாம். முன்னையது உடற் தூய்மையும், பின்னையது உயிர்த்தூய்மையும் பற்றியது. இங்கு மந்திரத்துடனே மூழ்கி நிற்றலை குறித்தது.

பெருங்காவல் பெற்றாய் மூழ்கினார் - மூழ்கி எழுதற்குச் சிறிது காலம் செல்லுமாதலின் அதுவரை பிள்ளையாரைக் காவல்புரியத் தம்மினும் பெரியதொரு காவல் பெற்றதனால் மூழ்கி நின்றார் என்பது குறிப்பு. பிள்ளையாரது காவல் பற்றிய எண்ணம் மனத்துள் நின்றிட்டதாயின், மனம் இருநிலையாப் பிளவுபட்டுச் செபத்தில் முழுநினைவும் செல்லாதாதலின், பெருங்காவலில் பிள்ளையார் இருக்கப்பெற்றார் என்ற நினைவுட்கொண்டுவிட்டமையால் செபத்தில் முழுநினைவும் கொள்ளவல்லராயினர் என்பது குறிப்பு. பேராது என்ற குறிப்புமது. பெற்றாதலின் என்க.

ஆராதவிருப்பு - அகமருட நியதியில் வைத்த அளவில் அடங்காத பெரு விருப்பம்.

சீராரும்—படியநீர் —பெருங்காதல்—என்பனவும் பாடங்கள். 60

1959. மறைமுனிவர் மூழ்குதலு மற்றவர்தம் மைக்காணு
திறைதரியா ரெனுநிலைமை தலைக்கீடா, வீசர்கழல்
முன் உணர்வு முறைபுரிந்த முன்னுணர்வு மூளவழத் தொடங்கினார்
நிறைபுனல்வா விக்கரையி னின்றருளும் பிள்ளையார் சுக

(இ - ள்) மறை முனிவர் மூழ்குதலும் - மறை முனிவராகிய சிவபாத விருதயர் முன்கண்ட அக்கிலையில் மூழ்குதலும்; மற்று அவர்...தலைக்கீடா - மற்று அவரைக் கண்ணெதிரே காணாமல் சிறிது போதும் தரித்திரார் என்ற நிலைகாரணமாகக் காட்டி; ஈசர்...மூள - சிவபெருமானது திருவடிகளை முறையால் மறவாமல் இடைவிடாது நினைந்திருந்த முன்னுணர்வு வந்து மூண்டதனாலே; அழ...பிள்ளையார் - நிறைந்த நீரினையுடைய தடத்தின் கரையில் நின்றருளும் பிள்ளையார் அழத்தொடங்கினார்.

(வி - ரை) அவர் தம்மை...தலைக்கீடா - "தந்தையாரைக்காணாது ஒரு சிறிதும் தரித்திருக்க மாட்டார்" என்பது உலக நிலையிற் குழவிகளிடத்துக் காணும் ஓர்நிலை. இது தாதையார் தம்மிடத்துக் கொண்டிருந்த பேரன்பினுக்கேற்பத் தாமும் எதிர் காட்டுவார்போன்ற நிலை.

தலைக்கீடு - போலிக் காரணம்; வியாஜம்; உண்மைக் காரணம் வேறாக உள்ளது என்பது குறிப்பு. "புள்ளோப்புதல் தலைக் கீடாக" (சிலப் - 7 - 9); சிவபாதவிருதயர் இவரைத் தமது பிள்ளை எனக்கொண்டு ஆதரித்துப் பேரன்பு செய்தனர். ஆயின், பிள்ளையார், அவர் சார்பிலே கண்டு தோணியப்பரையே தமது அப்பராகக் கண்டுகொண்டிருந்தனர் என்பது பின் சரித நிகழ்ச்சியிற் பல இடங்களிலும் காணும் உண்மை. "அவர்சார்வு கண்டருளித் திருத்தோணி யமர்ந்தருளிப், பவபாச மறுத்தவர்தம் பாதங்க ணினைவுற்றார்" (புரா 879), "அருந் தவத்தீர் எனையறியாப் பருவத்தே யெடுத்தாண்ட, பெருந்தகையெம் பெருமாட்டி யுடனிருந்ததே (ஷை - 880) என்று தாதையார் சார்பிலே அம்மையப்பரைக் கண்டு வினவிய நிகழ்ச்சியை ஈண்டுக் கருதுக. ஞானமுண்ணவரும் இந்நாளுக்குமுன் ஓரோர் காலத்துத் தொடர்ந்த பிரிவொருகாற் கொண்டெழும்போது அம்மையப்பரை உட்கொண்டு, ஏனையபோது தாயர் தந்தையரைக் கண்டருளினர். ஞானமுண்டபின் எப்போதும் அம்மையப்பரையே கண்டனர் என்பார் இங்குத் தலைக்கீடா என்றார்.

**முறைபுரிந்த முன் உணர்வு** - *முறை - விதி; முறைப்படி; புரிதல்-இடைவிடாது நினைத்தல் ; "புகழ்புரிந்தார் மாட்டு" (குறள்); 1932 பார்க்க ; முன்உணர்வு - முன்னை நிலையின் நினைவு;* **மூள** - *இங்குவந்து பொருந்த - மிகுந்து தாக்க. "பாலனாயதொண்டு செய்து பண்டுமின்றும்" (பிள். தேவா.)* **ஈசர் கழல் முறை புரிந்த முன்னுணர்வு மூள** - *பிள்ளையார் முருகப்பெருமா னவதார மன்று என்று காட்ட இஃதும் ஒரு நல்ல ஆதரவாம் : " பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் " (1953) என்றதும் ஆண்டுரைத்தவையும் பிறவும் காண்க.*

**மற்றவரை முற்காணாது**—என்பதும் பாடம். 61

1960. கண்மலர்க ணீர்ததும்பக் கைமலர்க ளாற்பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய் மணியதரம் புடைதுடிப்ப,
அழுதல் எண்ணின்மறை யொலிபெருக வெவ்வுயிருங் குதூகலிப்பப்
புண்ணியக்கன் றனையவர்தாம் பொருமியழு தருளினார் ௯௨

**(இ - ள்)** *கண்மலர்கள்...புடைதுடிப்ப - கண்களாகிய மலர்களினின்றும் நீர் ததும்பும்படி கைம் மலர்களாலே அவற்றைப் பிசைந்து, அழகிய தாமரை மலரையும் சிவந்த கொவ்வைக்கனியையும் போன்ற திருவாயின் அழகிய உதடுகள் புடை பெயர்ந்து துடிக்க ; எண்ணில்...குதுகலிப்ப - எண்ணில் மறைகளின் ஒலிபெருகவும் எவ்வுயிர்களும் களிப்படையவும் ; புண்ணியக்கன்று...அழுதருளினார் - புண்ணியக் கன்றுபோன்றவராகிய பிள்ளையார் பொருமிப் பொருமி அழுதருள்வாராயினர்.*

**(வி - ரை) கண்மலர்கள்...துடிப்ப** - *முதலிற் கண்களின் நீர்ததும்ப நிற்றலும், பின்னர்க் கைகளால் கண்களைப் பிசைதலும், அதன்பின் உதடுகள் துடித்தலும், அதன்பின்னர் ஒலிபெருகத் தேம்பி யழுதலும் முறையாக நிகழ்வது குழவிகளிடத்துக் காணும் மெய்ப்பாட்டு நிலைகள். அவற்றை அம்முறையே வைத்துக் கூறித் தன்மை யணிச் சுவைபட உரைத்த கவிநயம் காண்க.*

**கண்மலர்கள் - கைம்மலர்கள் - மலர்ச் செங்கனிவாய்** - *கண்களும் கைகளும் வாயும் எல்லாம் தாமரை மலர்களாகவே உள்ள எழில் கொண்டன. காண்பவர்களது மனமுங் கண்ணும் கவர உள்ள அழகும் பயனும் பற்றி இவ்வாறு உருவகப்படுத்தி அருமைப்பாடு பெறக் கூறினார். பயனாவது சிவத்தன்மையடைதற்குத் தகுதி பெறுவித்தல் : " எவ்வுயிருங் குதுகலிப்ப " என்று பயன் குறித்துரைத்தது காண்க. அஃதெவ்வாறோ எனின், ஆசாரியரது கண்பார்வையானும், கைதலைமிசைவைத்தலானும், உபதேசித்தலானும் பக்குவப்படுத்தும் செயல்களின் குறிப்பு.* **மலர்கள்** *ஈண்டு மலர்களுட்சிறந்த தாமரை மலர்களைக் குறித்தன. " தங்கிய - அங்கை கமல மடி கமல மானோக்கி, கொங்கை கமல முகங்கமலம் " என்ற திருவுலாவும், " திருவளர் தாமரை " என்ற திருக்கோவையும் " கமலமே வதனம் கமலமே நயனம் " என்னுந் திருவிசைப்பாவும் கருதுக.* **கனிவாய்** - *வாயினுக்குக் கனிவிக்கப்பாடும் தன்மை குறிக்கச்* **சேங் கனி** *என்று மேலும் ஒரு சிறப்புக்கூட்டி உரைத்தார்.* **மணிஅதரம்** *என்ற குறிப்பும் அது.*

**எண்ணில் மறை ஒலிபெருக எவ்வுயிருங் குதுகலிப்ப** - *மறை ஒலிபெருகுதலினால் உயிர் குதூகலித்தல் நிகழ என்று காரண காரிய முறைபற்றி வந்ததோர் பயன் கூறியவாறு. முன்னிரண்டடிகளிற் கூறியவை சாதனவகையாலும், இது பயன்வகையாலும் கொள்ளத்தக்கன.* **எண்ணில்** - *அளவு இல்லாத ; எண்ணத்தின் கண் நிலவும் என்றலுமாம்.* **மறைபெருக** - *என்னாது மறைஒலி பெருக என்றது மறை, ஒலியும் பொருளுமாகிய அளவில் தமிழ் மொழியில் வெளிவருவது என்ற கருத்து.*

மறைஒலிபெருகுதல் - வேதசாரமாகிய தேவாரங்கள் உலகிற் பரவுதல்; "தேசமெலாங் குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளும்" என்று இதனை எமது மாதவச் சிவஞான முனிவர் பெருமான் விரித்துரைத்தல் காண்க. இக்கருத்துப் பின்னரும் "எல்லையிலா மறைமுதன்மெய் யுடனெடுத்த வெழுதுமறை, மல்லனெடுந் தமிழாலிம் மாநிலத் தோர்க் குரைசிறப்ப" (1973) என்றதனாலும் விளங்கும். குதூகலம் சிவானந்த மகிழ்ச்சி.

**புண்ணியக்கன்று அனையவர்** - புண்ணியத்தின் இளமைக்கோலம் கன்று எனப் பட்டது; "மொய்த்து வளர் பேரழகு மூத்த வடிவேயோ?" (178) என்புழிப்போல; **புண்ணிய**மாவது சிவனை மறவாது அநுபவித்திருக்கும் நன்மை. வினை காரணமாக இப்பிறவியில் வராதவர் என்பதும் குறிப்பு. 62

**எவ்வுலகும்**—என்பதும் பாடம்.

1961. மெய்ம்மேற்கண் டுளிபனிப்ப வேறெங்கும் பார்த்தழுவார்
தம்மேலைச் சார்புணர்ந்தோ? சாரும்பிள் ளைமைதானோ?
செம்மேனி வெண்ணீற்றார் திருத்தோணிச் சிகரம்பார்த்
"தம்மே! யப்பா! வென்றென்றழுதருளி யழைத்தருள ௬௫

சிகரம் பார்த் தழுதழைத்தல்

1962. அந்நிலையிற் றிருத்தோணி வீற்றிருந்தா ரருணோக்கான்
முன்னிலைமைத் திருத்தொண்டு முன்னியவர்க் கருள்புரிவான்
பொன்மலைவல் லியுந்தாமும் பொருவிடைமே லெழுந்தருளிச்
சென்னியிளம்பிறைதிகழச்செழும்பொய்கை மருங்கணைந்தார்.

இறைவர் வெளி வருதல்

1961. (இ - ள்) மெய்ம்மேல்...அழுவார்-தமது திருமேனியின்மேல் கண்ணீர்த் துளிகள் வீழ வேறு எவ்விடங்களிலும் சுற்றிப்பார்த்து அழும் நிலையில் நின்றவராகிய பிள்ளையார்; தம்மேலை...தானோ? - தமது மேலைச் சார்பினை உணர்ந்தமை காரண மாகவோ? அன்றித் தாம் அப்போது சாரும் பிள்ளைமை காரணமாகவோ? (அறியோம்); செம்மேனி...அழைத்தருள - செம்மேனிமேல் வெண்ணீற்றினையுடைய சிவபெரு மான் எழுந்தருளியுள்ள திருத்தோணிச் சிகரத்தைப்பார்த்து "அம்மே! அப்பா!" என்று அழுதுகொண்டருளியபடியே அழைத்தருளினாராக; ௬௫

1962. (இ - ள்) அந்நிலை...வீற்றிருந்தார் - அந்நிலையின்கண், திருத்தோணியில் வீற்றிருந்தருளும் சிவபெருமான்; அருள் நோக்கால்...அருள்புரிவான் - அருள் நோக்கஞ் செய்தலால், முன்னை நிலைமைத் திருத்தொண்டு நினைந்த அவருக்கு அருள் புரியும் பொருட்டு; பொன்மலை... எழுந்தருளி - பொன்மலை வல்லியாகிய பெரிய நாயகியம்மையாரும் தாமும் போர்விடையின்மேல் ஏறி எழுந்தருளிச் சென்னியிற் சூடிய இளம்பிறை திகழ்ந்து தோன்றச் செழிய பொய்கையின் பக்கத்தில் அணைந் தருளினார். ௬௬

இந்த இரண்டுபாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

1961. (வி - ரை) **வேறு எங்கும் பார்த்து அழுவார்** - தாதையைக்காண வேறு எல்லாவிடங்களிலும் பார்த்துக் காணாது அழத்தக்க நிலையில் நின்றவர். **அழுவார்** - அழும் நிலைநின்றவர். வினைப்பெயர். **அழுவார்** - **அழுது** - **அழைத் தருள** என்று கூட்டிமுடிக்க.

**கண் துளி மெய்ம்மேல் பனிப்ப** என்க. **பனித்தல்** - விடாமழை போலத் துளிக்க. "பனித்த சடையும்" (தேவா).

**தம் மேலைச் சார்பு உணர்ந்தோ ? - சாரும் பிள்ளைமைதானோ ?** - அம்மே அப்பா என்று அழுதழைத்ததற்கு இரண்டுகாரணம் இருக்கக்கூடும்; அவை, மேலைச் சார்பு ஒன்று - பிள்ளைமை மற்றொன்று ; இவற்றுள் ஈண்டைக்குப் பொருந்துவது இன்னதென்று நம்மால் அறியவாராது ; நிகழ்ச்சிபற்றி நீங்கள் கருதலளவையால் உய்த்துணர்ந்து கொள்ளுங்கள் என்பது. இஃது ஆசிரியரது சிறந்த மரபு. "உம்பர் நாயகிக்குமஃ தறியவோ ? பிரியா நங்கைதா னறியாமையோ ? அறியோம்" (407) என்றதும் ஆண்டுரைத்தவையும், " அவர்மாட்டுத் திருவிளையாட் டினைமகிழ்ந்தோ ? வஞ்சியிடைச் சங்கிலியார் வழியடிமைப் பெருமையோ ?" (ஏயர்கோன் - புரா. 250) என்பதும் முதலியன பார்க்க.

**மேலைச் சார்பு** - இறைவர் ; சிவபெருமான்; **உணர்தல்** - உணர்ச்சியுள் வெளிப் படக்காணுதல். "சார்புணர்ந்து" (குறள்). சார்பு என்றலே அமையுமாகலின், மேலை என்ற அடைமொழி, ஈண்டுப்பிள்ளையார் பெற்றனவாகிய சிவபெருமானும் - சிவபாத விருதயரும் என்ற இருசார்புகளுள் பின்னையதான உலகம்பற்றியதாயொழியத்தக்க கீழைச் சார்பினை விலக்க நின்ற பிறதினியைபு நீக்கிய விசேடணம். ஆயினும் அதுவும் சிவச்சார்பாகிய மேலைச் சார்பினைத் தன்னுள் வைத்துக்காண உதவுவதாத லின் **சார்பு** என்று உபசரித்துக் கூறப்படும் ; " தாதையா ரெதிர்தொழுவா, ரவர் சார்வு கண்டருளித் திருத்தோணி யமர்ந்தருளிப், பவபாச மறுத்தவர்தம் பாதங்க ணினை வுற்றூர்" (புரா. - 879); " சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் " என்று திருக்குறளி னுள் விளக்கம்பற்றிக் கூறினாரேனும், மேலைச் சார்புடன் ஈண்டு அதனையும் ஒக்கச் சார்பென்று கூறத்தகாமையானும், கீழை என்றல் சிறப்பின்மையானும், அக்கீழ்ச் சார்பு உணர்வில் வரல் தகாமையானும், மேற்கூறியபடி கீழ்ச்சார்புணர்ந்தோ என்னாது வாளா, " **சாரும் பிள்ளைமைதானோ** ? என்ற மட்டில் அமைத்துக்கூறினார். **சாரும்** என்றது உலகநிலையில் ஏனைக்குழவிகளிடத்தெல்லாம் பொருந்தும் என்றும், ஏனைக் குழவிகள் பொருந்தும் என்றும் பொருள்தந்து நின்றது. **சாரும்** என்றதனுள் உலகச் சார்பு கொள்ளவைத்தமையும் காண்க. **பிள்ளைமை** - குழவிப் பருவச் செயலுடைமை. சிறப்புப்பற்றி **மேலைச்சார்பினை** முன்வைத்தோதினார். ஐயப்பாடாகிய இரண்டு காரணங்களுள் இதுவே துணிபென்று காட்டிய குறிப்புமாம். என்னை ? "கழல் முறை புரிந்த முன்னுணர்வு மூள " (1959) என்று முன்னும், "முன்னிலைமைத் திருத் தொண்டு முன்னியவர்க் கருள்புரிவான் " (1962) என்று பின்னர் வரும்பாட்டிலுமாக முன்னும் பின்னும் வைத்தோதுதல் இம்முடிபைக் குறிப்பிப்பதாம். தாதையார் புனலி னுள் கீழே இறங்கிய நிலையில் அவரைக் காணக் கீழே பார்த்து அழாமல், மேலே சிகரம் பார்த்தழுதலும் இக் கருத்தை உணர்த்துவதாம்.

**திருத்தோணிச் சிகரம் பார்த்து** - **திருத்தோணி** - சீகாழிக் கோயிலினுள் பிரம புரீசர் திருக்கோயிலின் அயலே மலை என்று வழங்குவதாய், மாடமோங்கிய நிலையில், தோணி வடிவாயமைந்த தனிப்பெருந் திருக்கோயில். **சிகரம்** - அதன் விமானத்தின் தூபி எனப்படும் தலையங்கம்; **பார்த்து** - பிரமதீர்த்தக்கரையினின்றும் தோணிச் சிகரத்தை நோக்கிய வண்ணமாய். இவ்வாறன்றிக் கரம் சாரியை என்று கொண்டு **சிகரம்** - சி என்ற எழுத்து என்று பொருள் கொண்டு, இதற்குத், திருத்தோணியில் உள்ள சிகரப் பொருளாகிய சிவபெருமானை உள்ளே பார்த்து என்றுரைக்கநின்ற சிறப்பும் காண்க. திருவைந்தெழுத்தினுள் ' ஈசனரு ளாவி யெழிலார் திரோதமலம், ஆசிலெழுத் தஞ்சினடை வாம்" (உண்மை விளக்கம். 40) என்றபடி சி - சிவனைக்குறிப் பது என்ற ஆகமமும் காண்க. " அம்மே அப்பா என்றழைத்தற்கும் இப்பொருள் அமைவுடைத்தாகும்.

அம்மே! அப்பா! - "தாயுடன் சென்றுபின் தாதையைக் கூடி" (பட்டினத்தார்) என்றபடி தாதையை அறிவித்து அவருடன் கூடுதற் குதவிபுரிதலின் தாயை முற்கூறினார். "அம்மையே அப்பா" என்ற திருவாசகமும் காண்க. தாம் காண விரும்பியது தந்தையாரையேயாயினும் அம்மையே என்று உடன் கூறியதும் இக் கருத்து; இதுபற்றியே பின்னர் நிகழ்ச்சியிலும் அம்மையுடன் போந்து திருமுலைப் பாலுடனே ஞானம் கொடுக்கச் செய்தவரலாறும் காண்க.

அம்மே! அப்பா! - வாயைத்திறத்தலால் அகரம் பிறக்கும்; அவ்வாறு திறந்த வாயின் இதழ்களை மூடுதலால் பகரமும் மகரமும் பிறக்கும்; "மீகீ ழிதழுறப் பம்மப் பிறக்கும்" என்பதிலக்கணம். எனவே இவைதாம் முதலில் குழவிகளின் வாக்கிற் பிறக்கும்; ஆதலின் அம்மே - அப்பா என்ற இச்சொற்கள் மகவுகளின் முதன் மழலைச் சொற்களாதல் இயல்பு. இது தமிழ் மொழியின் இயற்கை நலனையும் உயர்வையும் காட்டுவது; சுத்தமாயை அதிட்டித்து நின்ற சத்தி துணையாக நிற்க, அவற்றிற் கலந்து இறைவர் உலகத்தைத்தோற்றுவிப்பர் என்பது உண்மை நூலுட் கண்டது. ஆகலின் சத்தி சிவமாகிய இவர்களே உலகத்துக்கு அம்மையும் அப்பனுமாவர் - (இவை திரு. க. சதாசிவ செட்டியார் உரைக்குறிப்பு). சிகரம் பார்த்து இவ்வாறு அழைத்தழுதலின் அவரிருவருமே வந்தனர் என்பதாம். சிகரம் அவரிருக்குமிடம் என்பது குறிப்பு. அம்மே! அப்பா! - "உயிர்கட் கெல்லா மறிவைப் பிறப்பிக்கு மம்மையப்பனு மாகி" என்று "அம்மையோ டப்பனுகி" என்ற சிவஞானசித்தியாரின் உரை ஈண்டுக் குறிக்கற்பாலது. ஈண்டு அம்மையப்பர் வந்து தந்தருளும் ஞானம் உயிர்கட்கெல்லாம் ஞானம் தருவதாய் விளைவதும் கருதுக.

அழுவார் - அழுதருள; வீற்றிருந்தார் - அருள்புரிவான் - எழுந்தருளி - அணைந்தார் எனவரும்பாட்டுடன் முடிக்க. அழுதருள என்ற வினையெச்சம் அணைந்தார் என்று பிறவினைமுதல் வினைகொண்டு முடிந்தது. 63

1962. (வி - ரை) அருள் நோக்கால் - அருள் நோக்கம் புரிதலால்; "திருக் கண்ணேக் குற்ற தன்றே" (1772)

முன்நிலைமைத் திருத்தொண்டு முன்னியவர்க்கு அருள்புரிவான் - முன்நிலைமைத் திருத்தொண்டு - "ஈசர்கழல் முறைபுரிந்த முன்னுணர்வு" (1959); "பண்டு திரு வடிமறவாப் பான்மையோர் (1953); என்றவை பார்க்க. முன்னியவர்க்கு - தொண்டின் காரணமாக நினைந்தவர்க்கு என்றும், தொண்டினை (இறைவர்) முன்னி - முன்னிட்டு - அவர்க்கு (பிள்ளையார்க்கு) என்றும் உரைக்கவும் நின்றது.

அருள் புரிவான் - வானீற்று வினையெச்சம் அருள் புரியும் பொருட்டு.

பொன்மலை...பிறைதிகழ...அணைந்தார்-அம்மேஅப்பா என்றழைத்தஅம்முறைக் கேற்ப வல்லியும் தாமும் என்றார். அம்மையும் தாமுமாக விடைமேற்கொண்டு பிறை திகழவந்தார் என்ற இத்திருக்கோலமே பிள்ளையார் தாதையாருக்குக் காட்டிப் பாடியருளியது என்பதற்குத் "தோடுடைய செவியன், விடையேறி, ஓர் தூவெண்மதிசூடி" என்ற அகச்சான்று காண்க. தேவாரப் பதிகப்பாட்டுக் குறிப்புப் பார்க்க.

சேழும் பொய்கை மருங்கு அணைந்தார்-தோணியினின்றும் பொய்கைக் கரையின் பக்கம் பிள்ளையார் நின்றழுத இடத்தில் என்க. பொய்கை-பிரமதீர்த்தம். 64

1963. திருமறைநூல் வேதியர்க்குந் தேவியர்க்குந் தாங்கொடுத்த
பெருகுவர நினைந்தோதான் றம்பெருமைக் கழல்பேணும்
ஒருநெறியில் வருஞானங் கொடுப்பதனுக் குடனிருந்த
அருமறையா ளுடையவனை யளித்தருள வருள்செய்வார், சூடு

1964. அழுகின்ற பிள்ளையார் தமைநோக்கி, யருட்கருணை
யெழுகின்ற திருவுள்ளத் திறையவர்தா மெவ்வுலகுந்
தொழுகின்ற மலைக்கொடியைப் பார்த்தருளித் " துணைமுலைகள்
பொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத் தூட்" டென்ன. ௬௬

1965. ஆரணமு முலகேழு மீன்றருளி யனைத்தினுக்குங்
காரணமாய் வளம்பெருகு கருணை திருவடிவான
சீரணங்கு சிவபெருமா னருளுதலுஞ் சென்றணைந்து
வாரிணங்கு திருமுலைபோன் வள்ளத்துக் கறந்தருளி. ௬௭

1966. எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத்தருளி
"யுண்ணடிசி" லெனவூட்ட வுமையம்மை யெதிர்நோக்குங்
கண்மலர்நீர் துடைத்தருளிக், கையிற்பொற் கிண்ணமளித்,
தண்ணலையங் கழுகைத்தீர்த் தங்கணனு ரருள்புரிந்தார். ௬௮

1963. (இ-ள்) திருமறைநூல்...நினைந்தோ-திருமறை நூல்களின் துறைபோகிய வேதியராகிய சிவபாத விருதயருக்கும் அவரது தேவியராகிய பகவதியாருக்கும் தாம் கொடுத்தருளிய பெருகும் வரத்தினையும் நிறைவாக்க நினைந்தருளி யதனைற்போலும்; தம் பெருமை...கொடுப்பதனுக்கு - தமது பெருமையுடைய திருவடிகளையே பேணுகின்ற ஒருமைப்பாடுற்ற நெறியினில் நிற்க வரும் சிவஞானத்தைக் கொடுப்பதற்காக; உடனிருந்த... அருள் செய்வார் - தம்முடன் இருந்த அருமறைகளைத் தம் உருவாகக் கொண்டு ஆளுகின்ற ஞான முதல்வியாராகிய பெரியநாயகி யம்மையாரை அதனை அளித்தளும்படி அருள் செய்வாராகி, ௬௫

1964. (இ - ள்) அழுகின்ற...நோக்கி-அழுகின்ற பிள்ளையாரை நோக்கி; அருட்கருணை...இறையவர் தாம் - அருளும் கருணையும் எழுகின்ற திருவுள்ளத்தையுடையராய் முழுமுதல்வராகிய சிவபெருமான்; எவ்வுலகும்...என்ன-எல்லா வுலகங்களும் தொழுகின்ற மலையரசன் மகளாராகிய கொடிபோன்ற பெரியநாயகி யம்மையாரைப் பார்த்தருளி "இரண்டு திருமுலைகளும் பொழிகின்ற பாலமுதத்தினைப் பொற்கிண்ணத்தில் இப்பிள்ளையை ஊட்டுக!" என்று அருளிச்செய்ய, ௬௬

1965. (இ - ள்) சிவபெருமான் அருளுதலும் - (மேற்கூறியபடி) சிவபெருமான் அருளிச் செய்யவே; ஆரணமும்...சீரணங்கு - வேதங்களையும் எழுலகங்களையும் பெற்றருளி எல்லா பொருட்கும் மூலகாணமாயும் நிற்கின்றவரும், வளம்பெருகும் கருணையே தமது திருவடிவமாயவரும் ஆகிய சிறப்புடைய அம்மையார்; சென்றணைந்து...கறந்தருளி - பிள்ளையாருகிற் போய் அணைந்து கச்சுப்பொருந்திய தமது திருமுலைப்பாலினைப் பொற்கிண்ணத்திற் கறந்தருளி; ௬௭

1966. (இ - ள்) உமையம்மை - பெரியநாயகி யம்மையார்; எண்ணரிய... குழைத்தருளி - எண்ணுதற்கரிதாகிய சிவஞானமாகிய இனிய அமுதத்தினைப் பாலுடனே குழைத்தருளி; எதிர்நோக்கும்.. அளித்து - தம்மை எதிர்நோக்கிய பிள்ளையாரது கண்மலர்களின் நீரைத் துடைத் தருளி அவரது கையிற் பொற்கிண்ணத்தை அளித்து; "உண் அடிசில்" என ஊட்ட - "பாலமுதத்தினை உண்பாயாக" என்று உண்பிக்க; அண்ணலை...அருள்புரிந்தார் - அண்ணலாராகிய பிள்ளையாரை இவ்வாறு அங்கு அழுகை தீர்த்து அங்கணனுர் அருள் செய்தனர். ௬௮

இந்த நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிவு கொண்டன.

1963. (வி - ரை) திருமறைநூல் - வேதமும் அங்கநூல்களும்; வேதி யர் - என்றலே அமையுமாயினும் மரபு வகையால் மட்டுமன்றிப் பயிற்சியும் ஒழுக்கமும்வல்லர் என்பது குறிக்கத் திருமறை நூல் என்று அடைகொடுத்தோதினார். வேதியர் - சிவபாதவிருதயர். தேவியர் - பகவதியார். தேவி - மனைவி என்ற பொரு ளில் வந்தது; "தேவியை வவ்விய தென்னிலங்கை" (பிள்-காந்தார - இராமே - 2).

பெருதுவரம் - 1917, 1918ல் உரைக்கப்பட்டது. கவுணிய கோத்திரம் விளங்க மகவளித்தமையும், பரசமய நிராகரிப்பும் சைவ விளக்கமும் பெற அளித் தமையும் என்றைக்கும் நீடும் பயன்களாதலின் பெருது என்றார். வரத்தினையும் என்ற இறந்தது தழுவிய எச்சவும்மை தொக்கது.

நினைந்தோதான் - நினைந்துதானே என்று ஒகாரத்தைப் பிரித்துக் கூட்டுக. அழைத் தருளப் (1961) பிள்ளையாருக் கருள்புரிய நினைந்தமை யன்றியும், அவரைப் பெற்ற வேதியர்க்கும் தேவியர்க்கும் கொடுத்த வரத்தினையும் உடனே நிறைவேற்றப்போலும் என்க.

வரம் நினைந்தோதான்-அழைத்த பிள்ளையாருக் கருள்வது மலைவல்லியும் தாமும் எழுந்தருளியவதனலே அமையும்; மேலும் ஞான போனகம் தருதல் அவர்க்கருள்வ தனுடன், வரத்தையும் நிறைவேற்றற்காவது ஆதலின் அதனையும் நினைந்தோ என்றார்; என்னே? ஞானபோனகம் கொடுத்தவதனல் அது தமிழ் மறையாக வெளிப்பட்டுப் பரசமய நீக்கமும் சைவ ஆக்கமும் விளைத்தற் கேதுவாயிற் றென்பதாம். அரு மறையாளுடையவளை - என்ற குறிப்புமது. ஞானமே காரணமாகப் பின் சரித விளைவுகள் எல்லாம் விளைந்தன என்பது "நீடிய ஞானம் பெற்றார் நிறுத்தவும் வல்லர்" (புரா-807) என்றவிடத்தும், பிறாண்டும் விளக்கப்படுதல் காண்க.

கழல்பேணும் ஒரு நெறியில் வருஞானம் - கழல்பேணும் - பண்டு திருவடி மறவாப்பான்மை என்றதும் ஆண்டுரைத்தவையும், திருத்தொண்டத் தொகைப் பதிகப் பாட்டுக் குறிப்பு - "அடியலாற்பேணு" (5) (பக்கம் ௬௨௨ - I) என்ற விடத் துரைத்தவையும் பார்க்க. ஒருநெறி - ஒருமை நெறி. "கழலே பேணும்" (தேவா). பொதுநீக்கி ஒன்றுபட்ட மனத்துடனே செல்கின்ற நெறி. "ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம் பந்தன்" (பிரமபுரம் - 11) என்று இந்த ஞானம் பெற்ற உடனே பிள்ளையார் இதன் தன்மையை அறிவித்தருளினர்.

வருஞானம் - கழல் பேணிய நெறியின் பயனக வருகின்ற ஞானம். கொடுப்பத னுக்கு - கழலே பேணிய ஒரு நெறியின் பயனக இந்த ஞானம் வருமாயினும் அதனை இறைவர் கொடுத்தாலன்றி அது தானே வந்து கூடாது என்ற உண்மை நூற்றுணிபு உணர்த்தப்பட்டது. "செய்வினையும் செய்வானு மதன்பயனுஞ் சேர்ப்பானும்" (சாக் - புரா - 5) என்ற உண்மை காணத்தக்கது. கொடுப்பதனுக்கு - கொடுக்கும் பொருட்டு.

உடனிருந்த - ஒன்றுமல்லாது வேறுமல்லாது உடனுகி நிற்பது தமது அருட்சத்தி என்பதாம்.

அருமறை ஆளுடையவள் - மறைகளே தமது பொது உருவமாயமைந்து அவற் றுள்ளே பொதிந்த ஞானங்களை ஆளும் முதல்வி; வேதரூபி - ஞான முதல்வி. மறை களே ஞானமாம். ஞான முதல்வியே அதனைத் தரத்தக்கவள். அதனைத் தரப்பெற்ற பிள்ளையார் அதனல் பெற்ற ஞான மொழிகளே அவரது தேவாரத் திருவாக்குக்கள் என்பனவெல்லாம் ஈண்டுக் கருதுக.

அருள் செய்வார்(1963);—தமை நோக்கிப் - பார்த்தருளி - "ஊட்டு" என்னச் - (1964); சிவபெருமா னருளுதலும், சீரணங்கு - உமையம்மை - சென்றணைந்து -

கறந்தருளி (1965) ; குழைத்தருளி - குடைத்தருளி - அளித்து - என ஊட்ட - அங்கணனர் - அழுகை தீர்த்து - அருள் புரிந்தார் (1966) என்று இந்த நான்கு பாட்டுக்களையும் தொடர்ந்து வினைமுடிபு கொள்க.

ஒருமைநெறி—அழைத்தருளி யருள்செய்வார்—என்பனவும் பாடங்கள். 65

1964. (வி - ரை) அருட்கருணை எழுகின்ற திருவுள்ளம் - அருளாகிய கருணை எனக் கொள்ளநின்றது. "அருட்கருணை தானய திருவுள்ள முடையதவ வல்லி" (963) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. எழுகின்ற என்றது அருள் பிறக்குமிடம் இறைவர் என்பதாம். அந்த அருளே அம்மையார் என்பது முன் "அருட்கருணை தானய திருவுள்ளம்" என்றதனல் உணர்த்தப்பட்டது. பெத்தநிலையில் அருளும் மறக்கருணை போலாது, முத்தநிலையில் பராசத்தி ரூபமாகிய அறக்கருணை என்றலும் ஆம்.

எவ்வுலகும் தொழுகின்ற மலைக்கோடி - மலைக்கோடி - பார்வதியம்மையார். மலை-இமய மலை ; கோடி - கொடிபோல்வார். உவமையாகுபெயர். இமயமலையரசன் பெற்ற சொடிபோல்வார். எவ்வுருவத்தாலேனும் சத்தியையும் ஞானத்தையும் பெற விரும்பாத உயிர்கள் யாண்டும் இல்லையாதலின் எவ்வுலகும் தொழுகின்ற என்றார்.

துணைமுலைகள் பொழிகின்ற பால் அடிசில் - துணை - இரண்டு. உயிர்கள் ஞானவளர்ச்சி பெற்றுய்தற்கு இன்றியமையாத துணையாகிய என்றலுமாம். துணை முலைகள் - இரண்டு தனங்களாவன பரஞானம் - அபரஞானம் என்ற இரண்டுமேயாம். பால் அடிசில் - பால் என்ற அமுதம். ஞானமாகிய பாலமுது. இதனைப்பற்றி "ஆதி நாயகன் கருணையா யமலமாய்ப் பரம, போத நீரதா யிருந்ததன் கொங்கையிற் பொழிபால்" (சரவணப் படலம் - 23) என்று கந்தபுராணங் கூறுதல் இங்குக் கருதற்பாலது. "போதையார் பொற்கிண்ணத் தடிசில்" (பிள். தேவா.) என்று பிள்ளையார் இதன் ஞானத் தன்மையினைக் கூறியருளினர்.

பொன்வள்ளத்து ஊட்டு என்ன - பொன்வள்ளம் - "பொற்கிண்ணம்". முன் காட்டிய தேவாரத்தினும் "பொற்கிண்ணத் தடிசில்" என்றது காண்க. உமை அம்மையாரது திருமுலை அவர் கறந்து ஊட்டுவதன்றி நேரே வாய்வைத்துண்ணலாகாதது. "உண்ணாமுலை" என்பதாம். "அபீதகுசாம்பா" என்ற வடமொழிப் பெயரும் காண்க. அதுகாரணம்பற்றியே இறைவர் "பாலடிசில் ஊட்டு" என்னது "பொன்வள்ளத்து ஊட்டு" என்றருளினரென்க. சரவணப் பொய்கையினின்றும் கந்தக் கடவுளை எடுத்தணைத்துத் தமது "கொங்கையிற் பொழிபால், எதிலாததோர் குருமணி வள்ளமீ தேற்றுக், காதன் மாமகற் கன்பின லருத்தினள் கவுரி" (சரவணப்படலம் - 23) என்ற வரலாற்றின் உள்ளுறையும் காண்க. பக்குவத்துக்கேற்றவாறு குழவிக்குத் தாய் பாலூட்டுமாறுபோல, ஞானமும் உயிர்களின் பக்குவ நோக்கி உலகமாதாவாகிய ஞானவல்லியினல் இறைவ ராணையின்படி ஊட்டப்படுமென்றும், தாயினல் ஊட்டப்பட்டாலன்றிப் பால் பெருத குழவிபோல உயிர்களும் அவ்வாறு ஞானம் ஊட்டித் தரப்பெற்றாலன்றித் தாமே உண்ணலாகா என்றும் அறிவது கருத்து. இக்கருத்தறியாது, வரலாறும் நோக்காது, முருகப் பெருமான் வாய்வைத்துண்ட திருமுலை என்று உரை கூறுவாருமுளர். 66

1965. (வி - ரை) ஆரணமும் உலகேழும் ஈன்றருளி - ஆரணம் - வேதங்கள் முதலிய நூல்களின் தொகுதி.

உலகேழும் என்றது ஏழுலகங்கள் எனப்படும் புவனத் தொகுதியினையும், அவற்றின் எழுவகைப் பிறப்பில் வரும் உயிர்த் தொகுதியினையும் குறித்து நின்றது. உயிர்

களை ஈன்றருளுதலாவது கேவலத்திற் கட்டுண்டு கிடந்த அவற்றை எடுத்துச் சகலத்தில் வரும்படி உணர்வைப் பிறப்பித்து நடத்துதல்.

**அனைத்தினுக்கும் காரணமாய்** - காரணமாய் என்பது துணைக் காரணமாய், மாயையினின்றுந் தநு கரணம் முதலியவற்றைத் தருபவளாய் அவற்றின்மூலம் உயிர்கள் கன்மபலனை அனுபவித்துக் கழித்து ஈடேறச் செய்பவளாய் என்ற பொருளில் வந்தது.

**வளம்பெருகு கருணை திருவடிவான** - வளம் - போகமும் வீடுமாய செல்வம்; பெருகும் - பெருகுதற்கேதுவாகிய என ஏதுப்பொருளில் வந்த வினைத்தொகை. கருணை - உயிர்களை ஈடேற்றுவதற்கென்றே கொள்ளப்பட்டது என்பார் பெருகு என்றும், வடிவான என்றும் கூறினார்.

**சீர் அணங்கு** - உமையம்மையார். சீரணங்கு என்பது பாடமாயின் மேற்கூறிய பண்பெல்லாம் உடைய என்று சிவபெருமானுக்கு அடையாக்கித் தமது சத்தியின் மூலம் என்று சேர்த்துரைத்துக் கொள்க.

**ஆரணம் ஈன்றருளுதலும், கருணை வடிவாதலும்** உலகின் பொருட்டாதலின் உலகேழும் ஈன்றருளி என்ற தன்மையை இடையில் வைத்தார். "ஐவகையெனும் பூத மாதியை வகுத்ததனு ளசரசர பேத மான யாவையும் வகுத்துநல் லறிவையும் வகுத்து மறையாதி நூலையும் வகுத்து" (தாயுமானார்) என்றதனுள் இக்கருத்து விரித்துரைக்கப்படுதல் காண்க.

**சென்று அணைந்து** - பொய்கையின் மருங்கினின்றும் பிள்ளையார் நின்றழுத இடத்தின்கட்சென்று சேர்ந்து.

வாரணங்கு என்பது பாடமாயின், அணங்குதல் - பொருந்துதல் என்க.

காரணமாம்—திருமுலைப்பால் வள்ளத்து—என்பனவும் பாடங்கள். 67

1966. (வி - ரை) **எண்அரிய சிவஞானத்து இன் அமுதம் குழைத்தருளி** - முன் கூறிய பர அபர ஞானங்கள் அநுபானம்போல் உதவுவன சிவஞானம் அவற்றுக்கு மேலாய், அநுபானத்திற் குழைக்கப்படும் மருந்து(மாத்திரை)போல் உள்ளது. ஆதலின் அவற்றின் மேம்பட்டதென்பார் எண்ணரிய என்றார். "வேத சாத்திர மிருதி புராண கலைஞானம், விரும்பசபை வைகரியா தித்திறங்கள் மேலாம், நாதமுடி வானவெலாம் பாச ஞானம்" (சித்தி-9-2), "திருஞான மிவையெலாங் கடந்த சிவஞானம்" (ஷை 11-2); சிவஞானம் - திருவடி ஞானம் என்றும் ஒளிஞானம் என்றும் பேசப்படுவது. இது பரஞானம் அபர ஞானம் இரண்டினையும் உணர்த்தும். எனவே பிள்ளையாருக்கு அம்மை அளித்த ஞானமும் அம்மையப்பரிருவர் தன்மையும் கொண்டது. இது, பின்னர் இதுகாரணமாக உலக மின்பமுற வெளிப்போந்த தேவாரத் திருவாக்குக்களின் தன்மையால் விளங்கும். என்னை? வேதமுடிபுகளை வேதியருக்குக் கூறியருளிப் பஞ்சாக்கரத் திருப்பதிகம் அருளியமையும், சத்திநிபாதர்க்கு நமச்சிவாயத் திருப்பதிகத்தால் சிவனடிசேர் ஞான முதவிச் சிவனடி சேர்த்தமையும், திருவாக்கிற் பிறத்தலாலே பனைகளும் சிவமே கூடிய திறம் பெற அருளியமையும், பிறவும் காண்க. சிவஞானத்து இன் அமுதம் என்றது மிக்குறிப்பு. அமுதம் - இறவாமையும் பிரவாமையும் செய்யவல்லதென்பது குறிப்பு.

**குழைத்தருளி** - குழைவு செய்து பாலிற் கலந்து. உமையம்மை - குழைத்தருளி - துடைத்தருளி - அளித்து - ஊட்ட என்று கூட்டுக.

**எதிர் நோக்கும் கண்மலர்நீர்** - "கால் கொட்டி" (1955) என்றதுபோல இதுவும் அரியதோர் தன்மைநவிற்சியணி; பால் முதலிய பொருள்களைத் தரின் குழவி

கள், தரும் அவருடைய முகம் நோக்கியே வாங்கும் இயல்பு குறித்தது. 1960-ல் உரைத்தாங்கு ஈண்டும் கண்மலர் என்றார். கண்ணாகிய மலரின் வரும் நீர் என்றும், கண்ணின் மலர்ந்து வரும் நீர் என்றும் உரைக்க நின்றது. **கண்ணீர் துடைத்தல்** - குழவிகளை அழுகை தீர்த்துத் தேற்றுவதன் முதன் முயற்சி; **பொற் கிண்ணம் அளித்தல்** - அதன்பின் செய்யும் செயல். **அளித்து** - அளிக்க என்றுரைத்தலுமாம்.

**அழுகை தீர்த்து** - இவ்வாறாகிய செயல்களை ஏவிச் செய்வித்ததனால் தீர்த்து; ஏவுதற்கருத்தா - சிவனே எல்லாம் பிரேரிப்பவர் - நியந்தா என்ற குறிப்பு. அம்மை முன் சொல்லியபடி உள்ள செயல்களால் அழுகை தீர்ப்பினும், அவை ஐயன் செயல்களேயாம் என்பது. 1963-1964-ன் கருத்துக்களை நோக்குக.

**அங்கணன்** - எல்லா உயிர்களின் மேலும் வைத்த அங்கண்மை - பேரருள் - உடையவன்.

**அண்ணல்** - முன்னரே தவமுற்றிய பெருமையுடையார் என்பது குறிப்பு. **அண்ணல்** - பெருமையுடையோர். 68

1967. யாவர்க்குந் தந்தைதா யெனுமவரிப் படியளித்தார்
**பிள்ளையார் - ஞானசம் பந்தர்** ஆவதனா லாளுடைய பிள்ளையா ராயகில
தேவருக்கு முனிவருக்குந் தெரிவரிய பொருளாகுந்
தாவிறனிச் சிவஞான சம்பந்த ராயினார். ௬௬

**(இ - ள்)** யாவர்க்கும்......ஆளுடைய பிள்ளையாராய் - எல்லா உயிர்களுக்கும் தாயும் தந்தையுமாவார் என்னும் அம்மையப்பர் இவ்வாறு வெளிப்பட்டுத் தாமே அளித்தார்களாதலால் ஆளுடைய பிள்ளையாராகி; அகில......ஆயினார் - எவ்வகைத் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் தெரிவதற்கரிய பொருளாகின்ற ஒப்பற்ற தனிச் சிவஞானமாகிய சிவசத்தி சிவத்தோடு தாதான்மியமாய் நிற்பதுபோல இவரும் அதனுள் அடங்கிச் சிவ தாதான்மிய சம்பந்த விளக்கம் பெற்றவராக ஆயினார்.

**(வி - ரை)** இப்பாட்டினால் ஆளுடைய **பிள்ளையார்** என்றும் **திருஞானசம்பந்தர்** என்றும் வழங்கப்படும் வழக்குக்களின் பொருளை விரித்துரைத்தருளினர் ஆசிரியர்.

**யாவர்க்கும் தந்தைதாய் எனும் அவர்** - **யாவர்க்கும்** - எல்லாவுயிர்களுக்கும். சிறப்புப்பற்றி உயர்திணையிற் கூறினாரேனும் அஃறிணையுயிர்களையும் உடன் கொள்க. **எனும்** - தந்தைதாய் என்பன உபசார வழக்காதலின் **எனும்** என்றார். **அவர்** - சிவன் சத்தி என இருவராகக் காட்டினும் பொருள் ஒன்றே என்பது. உமை - ஊட்ட அங்கணனார் தீர்த்தருள் புரிந்தார் என முன்பாட்டிற் கூறியது காண்க. **இப்படி அளித்தார்** - உமையும் தாமுமாகத் தமது உருவத் திருமேனிகொண் டெழுந்தருளி முன் வந்தும், பால் தந்தும், ஞானமுதவியும் ஆட்கொண்டனர். இது பிரளயாகலருக்கு அருளும் முறை. "கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றும் தாழ்சடையும், வன்மழுவு மானுமுடன் மால்விடைமேன் - மின்னிடத்துப், பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளிவெற்பில், வாய்த்தனைய தெய்வ வடிவாகி - மூத்த, கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள் செய்து" என்ற கந்தர் கலிவெண்பாவும், முதலிருவர்க்கு "நிராதாரமாகிக் கரையிலருட் பரன்றுவிதா சத்திநிபா தத்தாற் கழிப்பன் மலம்" (முதலிருவர் - பிரளயாகலர், விஞ்ஞானகலர்) (சித்தி 8.2) என்ற ஞான சாத்திரமும் காண்க. **இப்படி** என்றது இவ்வாறு முன்னின்றருளும் வகையும் பலவகையுளவாதலின் இங்குச் செய்த அருள் வகையைப் பிரித்துணர்த்திற்று. ஆளுடைய நம்பிகளுக்குத்

திரு வெண்ணெய் நல்லூரில் வைத்துக் கொடுத்த அருளின் வெளிப்பாடும், பிறவும் ஒப்பு நோக்குக.

**ஆவதனால் ஆளுடைய பிள்ளையாராய்** - ஆளுடைய என்ற வழக்கையும், பிள்ளையார் என்ற வழக்கையும் பொருள் விரித்தவாறு. **ஆளுடைய**-இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட - "ஆளுடைய நம்பி" (285); "உடையவரசு" (229); ஆசாரியராக ஆன்மாக்களை ஆளாகக் கொண்டு ஈடேற்றும் தன்மையுடைய என்ற குறிப்புமாம். **பிள்ளையார்** - தாய் தந்தையர்கள் பாலு ஞானமும் கொடுத்து அழுகை தீர்த்தமையாற் பிள்ளை முறைமை பெற்றவர். "அடுத்த தாதை யினியுனக்கு நாமென் றருள"ப் பெற்ற சண்டீச நாயனாரும் அவ்வாறு மகன்மை முறை பெற்றமை பற்றிச் "சேய்ஞலூர்ப் பிள்ளையார்" (1263), "வண்புகலிப் பிள்ளையார் தாமெழுந் தருளிடத் தங்கள் பிள்ளையார்" (புரா. 245) "சண்டீசப் பிள்ளையார்" (ஷை. 248) என்று வழங்கப் படுதல் காண்க. ஆளுடைய என்றது ஆளாகக் - அடிமையாகக் - கொண்ட என்று ஆண்டானடிமைத் தன்மையே குறிப்பிடுகின்றது. "போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத், தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்" (தேவா) என்று இத்தன்மை பற்றியே பிள்ளையார் உரைப்பதும் காண்க. எனவே பொய்கைக் கரையில் அம்மையப்பர் எழுந்தருளி வந்து பொற்கிண்ணத்திற் பால் தந்த அதனாலே சரவணப் பொய்கையில் அவ்வாறு தரப்பெற்ற ஒப்புமைபற்றிக் குமாரக் கடவுளே இவராம் என்று உரை கூறுதல் பொருந்தா தென்க. பிள்ளையாராய் என்றும், ஞான சம்பந்தராயினார் என்றும் கூறிய ஆக்கச் சொற்களின் பொருளையும் ஓர்க. "பகைகளையும் வகையிலறு முகவிறையை மிகவருள நிகரிலிமையோர், புகவுலகு புகழவெழி றிகழநிக ழலர்பெருகு புகலிநகரே" (சாதாரி) என்று குமாரக் கடவுளைக் கூறுவதன் பொருளையும், குமாரக்கடவுளுக்குச் சிவஞானங் குழைத்தூட்டப் பெறுமையும் கருதுக. "அடையும்வகையாற் பரவியரனையடிகூடு சம்பந்தன்" (சாதாரி - மாகறல் 11), "எம்மானையடி சேருமணி காழிநகரான்" (ஷை மாணிகுழி - 11) என்பனவாதியாகத் தம்மைக் கூறுதலும் கருதுக.

**அகில...சிவஞானம்** - சிவஞானம் திருவருளின் வழியே கொடுக்கப் பெற்றாலன்றித் தேவர் முனிவர் முதலியவர் எவர்க்கும் தெரிவரிதாகும் என்பது. **பொருள்** - சிவஞானம். "தெரிவரிய மெய்ஞ்ஞானஞ் சேர்ந்த வாறே சிவம்பிரகா சிக்குமிங்கே சீவன்முத்த ராகும்" (சித்தி - 11. 4). **தாவில் தனி** - **தா** - ஒப்பு; **தனி** - தன்னைப் போன்றது எதுவுமில்லாதது தனிச் சிறப்பு; ஒப்பற்றனவும் பலவிருக்கலாம் போலும் என்ற ஐயம் நீக்குதற்குத் தனி என்றார். இருவகை ஞானமுங் குறிக்க இரண் டடை மொழிகள் தந்தோதினார். **தாவில்** - கேடுபடாத என்றலுமாம்.

**சிவஞான சம்பந்தர் ஆயினார்**-திருஞான சம்பந்தர் என்ற பெயர்போந்த காரணமும் இப்படி அளித்தமையே என்று பின்னும் கூட்டி உரைக்க நின்றது. சிவஞானம் குழைத்து அளித்தமையால் ஞானசம்பந்தராயினார் என்க. **ஆயினார்** - ஈண்டு ஆக்கச் சொல் வெளிப்பாடு என்ற பொருளில் வந்தது. **சிவஞான சம்பந்தர்** - சிவஞான சம்பந்தம் போன்ற சம்பந்தமுடையவர் :

**தெரிவரிய பொருளாகும்...ஆயினார்** - **சிவஞான சம்பந்தம்** - சிவஞானம் கூடியது போன்ற சம்பந்தம் ; **சம்பந்தம்** ; கூட்டு - **சிவஞானம்** - சிவசத்தி ; அது சிவபரம் பொருளோடு தாதான்மியமாய் நிற்பது : (தாதான்மியம் என்னும் சொல் லியல்பு "அது தானாதல்" என்றவாறு ; ஒன்றுதானே ஒருவாற்றான் இருவகைப் பட்டுப் பிரிப்பின்றி நிற்றற் குரித்தாந் தன்மை ; (மாபாடியம் 2. சூ. 4 அ. 2 அதி) ; ஈண்டு, இவரும், அச்சத்திபோல அதனுள் அடங்கிச் சிவதாதான்மியமாகிய அத்துவித

சம்பந்த விளக்கம் பெற்றார் ; தெரிவரிய பொருள் - இச்சம்பந்த முழுவதும் விளங்கப் பெறுவது நின்மலதுரியாதீத நிலையிலன்றிக் கூடாதாதலின் தெரிவரிய என்றார் ; அவ்வதீதநிலையில் நிகழும் பரமானந்தப் பழங்கடலுட் டிளைக்குங்கால் "ஆவி யாக்கை யானென தென்ற" ஞாதிரு ஞான சங்கற்ப ஞானங்களும், சிந்தித்தற் கேதுவாகிய கலை ஞானங்களும் தோன்றா; ஆயின் பின்னர் இருவகை ஞானங்களையும் அந்நிலையில் உணர்ந் தார் எனக் கூறவதென்னையோ ? எனின், உலகம் உய்யவந்தாராதலின் அவற்றை உலகர் பொருட்டு உணர்ந்தார் என்க ; மேற்பாட்டில் மேலும் விளக்கப்படும் ; பதிகத்தில் " என்னுள்ளங் கவர் கள்வன் " என்பது முதலாக அத்துவித சிவாநந்தக் கலவியுண்மை அருளிச்செய்தலும் காண்க; சிவஞான சம்பந்தராயின பின்பே ஞானங் களை உணர்ந்தமைபற்றியும் அவ்வுணர்ச்சி உலகர் பொருட்டென்பது விளங்கும். 69

1968. சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
ஞான பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
முணர்தல் உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானந்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில். எ0

(இ - ள்) சிவனடியே...சிவஞானம் - சிவன் அடிகளையே சிந்தித்தலாகிய செம்மை பெருகச் செய்யும் சிவஞானமாகிய ; உவமையிலாக் கலைஞானம் - ஒப்பற்ற கலைஞானத்தினையும் ; பவமதனை...ஞானம் - பிறவிக் கேதுவாகிய மலவாதனையை வேரறமாற்றும் தெளிதலின் மேலாகி விளங்குஞ் ஞானமாகிய ; உணர்வரிய... மெய்ஞ்ஞானம் - உணர்வரியதாகிய மெஞ்ஞானத்தினையும்; தவமுதல்வர்...அந்நிலையில் - தவமுதல்வராதலிற் றிருஞானசம்பந்தர்தாம் அந்நிலையில் உணர்ந்தார்.

(வி - ரை) சிவனடியே......சிவஞானம் என்பது உவமையிலாக்கலைஞானம் என் றும் ; பவமதனை......ஓங்கியஞானம் என்பது உணர்வரிய மெய்ஞ்ஞானம் என்றும் நிரனிரையாகக் கூட்டி உரைத்துக்கொள்க. இவையே பரோட்சஞானம் எனவும் அபரோட்சஞானம் எனவும் வழங்கப்படுவன.

உவமையிலாக் கலைஞானம் - அபரஞானத்தையும், உணர்வரிய மெய்ஞ்ஞானம் - பரஞானத்தையும் குறித்து நின்றன. சிவனடியே...சிவஞானம் - பவமதனை... ஓங்கிய ஞானம் என்பன முறையே இவற்றை விளக்கும் விசேடணமாகக் கொள்க. இவ்வாறுகொள்வது ஆசிரியர் கருத்தென்பதனை "மேவரு ஞான மிரண்டவற் றொன்று விமலனார் பாததா மரையே, யோவறு மன்பி னுணர்திரு வளிக்கு மொப்பிலா வுயர்-கலை ஞானம், தாவரும் பவத்தை வேரொடுங் களையுந் தக்கமெய்ஞ் ஞானமொன் றிவற்றுற், சாவதும் பிறப்புந் தணப்புறச் சிவத்தைச் சார்ந்தது வாய்நிற்றல் யோகம்" (திருத்தணிகைப் புராணம் - அகத்திய னருள்பெறு படலம் - 353) என்று கச்சியப்ப முனிவர் இத்திருப்பாட்டினை விரிவுரை செய்தருளியவாற்றால் நன்கு புலப்படும். "உயர்ஞான மிரண்டா மாறுமலமகல வகலாத மன்னு போதத், திருவருளொன் றொன் றதனைத் தெளிய வோதுஞ் சிவாகமமென் றுலகறியச் செப்பு நூலே" (பாயிரம் - 10) என்று சிவப்பிரகாசத்தினுள் உமாபதிசிவனார்உபதேசித்தருளியவாற்றாலும்இது தெளிவு படும். (ஈண்டு, அருள் - அருள்ஞானம்; மெய்ஞ்ஞானம்). "சிவனுடைய நிர்மலமான சமவேதமான ஞானசத்தியே ஞானமென்று நூல்களால் உரைக்கப்படும் ; சாத்தம் - அந்த ஞானத்தைக் கருதலள்வையா லுணர்தற்கு ஏதுவாம்" என்ற பௌஷ்ராகமப் பிரமாணமும் காண்க. "சிவஸ்ய சம வேதாய சக்திர் ஞாநாத்மிகமலா; சைவஞான மிதிப்ரோக்தம் சாப்தந்தநுமாமகம் " என்பது பவுட்கராகமம் - (பதிபடலம்)

இங்குச் சிறப்புப்பற்றிச் சாத்நம் என்பது சிவாகமஞானமே என்றும், வேதமும் சிவாகமத்தோ டொற்றுமையுடையதொரு முதனூலாய்த் தத்துவஞானத்தினை விளக்கும் சாதனமாதலின் பொதுவகையால் அதுவும் சாத்நம் என்றதனாற் கொள்ளப்படு மென்றுமுணர்க.

**சிவனடியே...சிவஞானம்** - உவமையிலாக் கலைஞானம் - ஏகாரம் பிரிநிலை; "பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர்" என்றும், "மறக்குமாறிலாத" என்றும் வரும் திருவாக்குக்கள் ஈண்டு நினைவுகூர்தற்பாலன. **திருப்பெருகு** - திருவைப் பெருகச் செய்யும். **சிந்திக்கும் திரு** - சிந்தித்தலாகிய திரு. பெருகுசிவஞானம் - வினைத்தொகை; நோய்தீர் மருந்து என்புழிப்போல ஏதுப் பொருளில் வந்தது. சிந்தித்தலே திருவென்றார்; "நின்முகங் காணுமருந்தினேன் என்னுமால்" என்பது போல நின்றது. திரு - சிவத்தன்மை பயக்கும் முத்தி; அருட்செல்வம் பஞ்சாக்கரம் வேத சிவாகமங்கள்; ஏனைக் கலைஞானங்கள் போலாது சிவனருளைத் தப்பாது விளக்குஞ் சாதனமாகிய செல்வம் என்பது கருத்து.

**உவமையிலாக் கலைஞானம்** - தத்துவ ஞானத்தை உணர்த்தும் சிறப்பினால் ஏனைக் கலைஞானங்களினும் மேம்பட்டு நிற்குந்தன்மை உவமையிலா எனப்பட்டது. வேதாகமங்கள் ஏனைக் கலைஞானங்களுக்கெல்லாம் உவமையாகி - எடுத்துக்காட்டாகி - நிலைபெறுமென்றவாறு. உவமம் "உயர்ந்ததன் மேற்றே" என்ப திலக்கணம். இங்குக் கலைஞானம் என்பது முக்கியப் பொருளினால் முத்தி பஞ்சாக்கரத்தை யுணர்த்துமாயினும் கௌணப் பொருள்பற்றி வேத சிவாகமங்களையும் அவைகளினின்றும் விரிந்த ஏனைக் கலைஞானங்கள் எல்லாவற்றையு முணர்த்தும். அவையெல்லாம் அதன் பரப்பாய் நிற்பனவாகலான் அவ்வாறுணர்த்து மென்பது. **திருப்பெருகு** என்ற கருத்துமிது. "தாவிறனிச் சிவஞான சம்பந்தர்"(1967)என்றதுகாண்க

**சிவஞானமாகிய கலைஞானம்** என்க. சிவஞானமாகிய கலைஞானம் என்பதனால் கேட்டலும், **சிவனடியே சிந்திக்கும் திரு** - என்றதனால் சிந்தித்தலும் என்ற ஞான சாதனங்கள் பெறப்பட்டன. கலைஞானத்தைச் சிவஞானமென்றது உபசாரம்.

**பவமதனை......ஓங்கியஞானம் - உணர்வரிய மெய்ஞ்ஞானம் - பவம்** - பிறவி; ஈண்டுப் பிறவிக் கேதுவாகிய மலவாதனை (வாசனாமலம்) என்ற பொருளில் வந்தது; அதுவும் பற்றறத் தீர்ந்தவழியேபிறவியறுமாதலால். 'பவமற வென்னை முன்னாளாண்டவப் பண்பு கூட, நவமலர்ப் பாதஞ் சூட்டு மென்னுநல் லுணர்வு" (புரா-1244) என்றது ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. **பவம் அதனை** - அது பகுதிப் பொருள் விகுதி. பாங்காக வரும் தெளிவு **பாங்கு** என்று உபசரித்துக் கூறப்பட்டது. பாங்காவது நிட்டை என்னும் அனுபூதி ஞானத்துக்கு அணித்தாயுள்ள தன்மை. **மாற்றும் பாங்கு** - மாற்றுதலே பாங்கு என்க. சிந்திக்கும் திரு என்றதுபோலப்-**பாங்கினில் ஓங்கிய** என்றார். **இல்** - உறழ் பொருளின் வந்த ஐந்தனுருபு. "அறத்தினூஉங் காக்கமும்" என்புழிப் போல. **பவம்** - பிறவி, **மதன்** - அறியாமை என்றுகொண்டு பிறவிக்குக் காரணமாகிய அறியாமை என்னும் மூலமலத்தைப் பாகஞ் செய்யும் என்றலுமாம்; "மதனுடை நோன்றாள்" (முருகு) என்றாற்போல.

**உணர்வரிய** - அருமை - பசுஞான பாசஞானங்களால் அறியப்படாமை குறித்தது. உணர்வரிய மெய்ஞ்ஞானம் - பரஞானமாதலின் அதனை யடைந்தார் தம் உணர்ச்சி தேய்ந்து அதுவாய் நிற்றலால் என்க. **உணர்வரிய** - தமது முதல்வனே குரு வடிவங்கொண்டு வந்து உணர்த்தினாலன்றி வேறு எவ்வாற்றானு முணரமுடியாத (மெய்ஞ்ஞானம்) என்றுரைத்தலும் பொருந்தும். **உணர்வரிய மெய்** - சிவசத்து என்பது குறித்தது.

பவமதனையற மாற்றும் பாங்கு-என்றதனால் தெளிதலும், உணர்வரிய (மெய்ஞ் ஞான) மென்றதனால் நிட்டையும் உள்ளீடாகிய ஞான சாதனங்களாக உணர்த்தப் பட்டன. இவையிரண்டும் பரஞானமாதலின் முன்னது பாச நீக்கமும் பின்னது சிவப்பேறும் பயப்பிப்பனவென்று பவமதனையற மாற்றும் எனவும், உணர்வரிய மெய் - எனவும் தந்த அடைமொழிகளால் உணர்த்தி யருளினார்.

கலைஞானமும் மெய்ஞ்ஞானமுமாகிய அபர பர ஞானங்களிரண்டினையும் உணர்ந்தார் என்று முடிக்க. இரண்டென்னும் செவ்வெண்ணும் முற்றும்மையும் விகாரத்தாற் றொக்கன.

**தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார்** - தவமுதல்வராதலின் - உணர்ந்தார் எனக் காரணப்பொருள்பட உடம்பொடு புணர்த்தி ஓதியருளினார். முன்னைத்தவ விசேடத்தால் திருஞான சம்பந்தராகி விளங்கும் ஆளுடைய பிள்ளையார். "பண்டு திருவடி மறவாப் பான்மையோர்" (1953) என்ற விடத்துரைத்தவை பார்க்க. **முதல்வர்** - வினையெச்சமுற்று. **தாம்** - கட்டுரைச் சுவைபட வந்த உயர்வு குறித்த பன்மைச் சொல். **சம்பந்தர் தாம்** - சம்பந்தராகிய என்று ஆக்கச் சொல் விரிக்க. "**சம்பந்தராயினார்**" என்ற முன்பாட்டினைத் தொடர்ந்து கொண்டு ஆக்கச் சொல்லை ஆயினமையால் என்று காரணப் பொருள்படவு முரைத்துக் கொள்க. இப்படி அளித்தார் - ஆவதனால் - ஆயினார் - (1967)—ஞானம் - உணர்ந்தார் என்று காட்டக் கண்ட தன்மை கூறப்பட்டதுங் காண்க.

**தவமுதல்வர்**-மூன்று கண்ணும், நான்கு தோளும், கருநட்ட கண்டமும் முதலிய உறுப்புக்களுடன் முத்தொழிலும் இயற்றும் தனது இயற்கை வடிவே குருவடிவமாகக் காட்டி முதல்வன் பிரளயாகலர்க்குப்போல முன்னின்று உயர்ஞானம் உணர்த்துதற் கேதுவாகிய பெருந்தவ மென்பது குறிக்கத் **தவமுதல்** என்றார். முதற்றவமாவது பக்குவ முதிர்ச்சியால் வரும் நாலாஞ் சத்திநிபாதம் முற்றியதனாற் பெறப்பட்டுப் பதினாறுவது எல்லையில் நிற்கும் தலைமைச் சிவபுண்ணியம். நாற்சீர்க் கலிவிருத்தத்தாற் கூறியருளியதும் இக்குறிப்புத் தருவதாம்.

**தாம் உணர்ந்தார்** - அரிசி தானேயட்ட தென்றாற்போல எளிதின் உணர்ந்தார் என்றுரைத்தலுமாம். இப்பொருட்குத் தாம் - பெயர்; தேற்றேகாரம் விகாரத் தாற் றொக்கதென்க.

**அந்நிலை** - "சிவஞான சம்பந்தராயின" நிலை. ஞானபோனக முண்டரு ளிய போதே சிவானந்தானுபவம் பெற்ற நின்மல துரியாதீத நிலைபெற்றுச் சிவஞான சம்பந்தரானார்; **அந்நிலையில்** - அந்த நிலையிலே உலகமுய்யும் பொருட்டு இருவகை ஞானங்களும் அவருக்கு விடயமாயின என்க; ஏனையோர்போலச் சாதக நிலையில் அபர - பர ஞானங்களை அவர் பெற்றாரல்லர் என்பது "என்னுள்ளங் கவர் கள்வன்" என்றருளியவாற்றாற் பெறப்படும். முன்பாட்டிலுரைத்தவை பார்க்க.

"கேட்டலுடன் சிந்தித்தல் தெளித னிட்டை கிளத்தலென வீரிரண்டாங் கிளக்கின் ஞானம்" (சித்தி 8-24) என்ற இடத்துக் கூறப்பட்ட கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்ற ஞான சாதனங்கள் நான்கினையும் இவ்வாறு முன் னிரண்டை அபரஞானப் பகுதியினும், பின்னிரண்டைப் பரஞானப் பகுதியினுமாகப் பிரித்து ஈண்டு இரண்டாகப் பிரித்து வைத்தோதியது என்னை? எனின், முன்னைய விரண்டும் நூலும் அருளும் பற்றுக்கோடாக நிகழ்வன; பின்னையவிரண்டும் நூல்வேண் டாது அருளே பற்றுக்கோடாக நிகழ்வன ஆதலின் என்க. இங்குக் கூறிய கேட்டல் முதலிய மூன்றும் முத்தி சாதனமாகிய ஞானத்தைப் பெறுதற்கு உபாயங்களேயாம். கேட்டலால் வருவது, சிந்தித்தலால் வருவது, தெளிதலாற் பெறுவது, நிட்டைகூட

உதவுவது என்ற ஞானம். "உபதேசத்தாற் கேட்டறியலாம்; கேட்டதனை அதற்கனுகூலமான வளவையாற் சிந்தித்து மறியலாம்; சிந்தித்ததனைத் தன்னறிவின்கண்ணே சிவஞானத்தான், மாசறத் தேளிந்துமறியலாம்; அதனாற் பாசக்ஷயம்பண்ணி நிட்டைகூடிச் சிவாநந்தானுபூதியும் பெறலாம்" என்று சிவஞான முனிவர் விளக்கியபடி கேட்டல் முதலிய மூன்றும் முற்றிய ஞானம் பெறவும் அதனால் வீடு பெறவும் வாயில்களாம் என்பது பெறப்படும்.

எனவே ஞானம் என்பது தொகையால் ஒன்றும்; வகையால் பரம் அபரம் என இரண்டாம்; பெறும் வாயில் விரியால் கேட்டல் முதலியவாற்றால் நான்காம். இனி, ஞான வேள்வி என ஐந்தாயும், சரியை முதலிய நிலைபற்றி உண்மை உபாயம் என்ற வேறுபாட்டால் எட்டாயும், தசகாரியம்பற்றிப் பத்தாயும், முன்கூறிய எட்டு நிலைகளும் ஒவ்வொன்று நான்காகு முறைபற்றி முப்பத்திரண்டாயும் இன்னும் பலவாறும் விரிந்து நிற்பது ஞானம் என்பர். அவையெல்லாம் பரம் அபரம் என்ற இருமுதல் ஞானங்களுள் அடங்குமென்க.

தவமுதல்வர்......உணர்ந்தார் - "தாவில் தனிச் சிவஞான சம்பந்த ராயினார்" (1967) என்ற முன் பாட்டினைத் தொடர்ந்துகொண்டு, அவ்வாறு பிள்ளையாருக்குத் "தவமின்றியு ஞான நிகழ்ந்தவாறென்னை ?" என்ற ஆசங்கையை முன்னிட்டு அதனை நீக்குதற் கெழுந்தது இத்திருப்பாட்டு; அதனுடன் அவருணர்ந்த ஞானம் முற்றிய ஞானமென்று கூறி அதன் பாகுபாட்டையு முணர்த்திற்று.

இது, நோக்குறப்புப் பெரிது முடையதாய், மூன்று காலமு நெறியின் ஆற்றிய அறிவனது தேயத்ததாய்ப், பத்துக் குணங்களும் பயின்றதாய், அறத்தின் பயனாகிய வீடு பேற்றுக் குரியதாய் வந்த வாகைப் பாடாண் பாட்டென்பர் உணர்ந்தோர். இனி இதன் அருமைகளை அறிவோர் பல திறத்தானும் உணர்ந்தனுபவிப்பர். மேற்கூறியவை சபாபதி நாவலர் எழுதிய ஞான சூடாமணியின் உரையைப் பெரும் பான்மை தழுவி எழுதப்பட்டன.

இனி, மேற்கூறியபடியன்றிச் சிவஞானமாகிய ஓங்கிய ஞானம் என்றும், கலை ஞானமாகிய மெய்ஞ்ஞானம் என்றும், கூட்டி உரை கூறுவாருமுளர். இது பொருள் பற்றாமை உணரப்படும். இனி, அந்தக் கேட்டல் முதலிய நான்கினையும் இத்திருப் பாட்டிற் கூறிய நான்கு ஞானங்களாகக் கூறுவாருமுளர். அவர், கலைஞானம், சிந்திக்கும் சிவஞானம், ஓங்கிய ஞானம், மெய்ஞ்ஞானம் என்ற ஞானப் பிரயோகங்கள் நான்கும் முறையே கேட்டல் - சிந்தித்தல் - தெளிதல் - நிட்டைகூடல் என்ற நான்கு ஞானங்களையும் கூறுவன என்பர். இந்நான்கும் ஞானம் பெறும் வாயிற் சாதனங்க ளாமாறும் அபர பரஞானங்களுட்பட்டு வருமாறும் முன்உரைக்கப் பட்டன காண்க.* 70

*(கி.பி. 1887-ம் ஆண்டில்) இற்றைக்குச் சற்றேறக்குறைய 60 ஆண்டுகளின் முன் இத்திருப்பாட்டு மேற்கூறியபடி அபரம் பரம் என்னுமிரு ஞானங்களை நுதலிற்று ? அன்றிக் கேட்டல் முதலிய நான்கு ஞானங்களை நுதலிற்று ? என்பது பற்றியதொரு மூண்ட வாதம் (சென்னையிற்) பல புலவர்பெருமக்களிடை நிலவிற்று. காசிவாசி - செந்தி நாதையர், சபாபதி நாவலர் - மயிலைத் தணிகாசல முதலியார் - சுப்பராய முதலியார் - சிவாநந்த முதலியார் - வல்லை சண்முக சுந்தர முதலியார் முதலியவர்க ளொருபுறமும், சூளை சோமசுந்தர நாயகர் - சூளை சுப்பராய நாயகர் மற்றொரு புறமுமாக அதிற் கலந்து கொண்டனர். ஞானபேத விளக்கச் சூறாவளி, விபரீத ஞான நிக்ரஹம் ஆகிய ஞான பேதத் தெளிவு, ஞான சூடாமணி, துர்வாத நிக்ரஹம் ஆகிய ஞானபேதத் துணிவு, ஞானபேத விளக்க மறுப்பு, நியாயபேத

1869. எப்பொருளு "மாக்குவா னீசனே" யெனுமுணர்வும்,
"அப்பொருடா னுளுடையா ரடியார்க" ளெனுமறிவும்,
இப்படியா; லிதுவன்றித் தம்மிசைவு கொண்டியலுந்
துப்புரவில் லார்துணிவு துகளாகச் சூழ்ந்தெழுந்தார். எக

(இ - ள்) எப்பொருளும்...உணர்வும் - எல்லாப் பொருள்களையும் இயக்குபவன் ஈசனே என்கின்ற உணர்ச்சியும்; அப்பொருள்தான்...அறிவும் - அந்தப் பொருளாவது அவ்வாறு ஆளுடையாரும் அவரது அடியார்களுமேயாவர் என்னும் அறிவும்; இப்படியால் - இதுவே நெறியாக; இதுவன்றி...எழுவார் - இவ்வாறன்றித் தத்தமது அறிவுக்கேற்றவாறு உட்கொண்டு இயல்கின்ற துப்புரவில்லாரது துணிபுகளையெல்லாம் துகள் படும்படி எண்ணி எழுவாராயினர்.

(வி - ரை) உணர்வும் - அறிவும் - இப்படியாக; இதுவன்றி - இயலும் - துணிவு - துகளாக - எழுந்தார் என்று முடிக்து உரைத்துக் கொள்க,

எப்பொருளும்......உணர்வும் - உணர்வு - முன் பாட்டில் உணர்ந்தார் என்று முடித்த அந்நிலையினைத் தொடர்ந்து மேற்கொண்டபடி. ஞானப்பால் அமுதுண்டனர் பிள்ளையார்; அது உள்ளே புகுந்தது; ஞான உணர்வை விளைத்தது; அவ்வாறு விளைத்த ஞான உணர்வு இரண்டுவகை; இனி, அவ்வுள்ளுணர்வாகிய உணர்ச்சிநிலை ஏனையோர்க்குப்போல அவர்மட்டில் பயன்தந்து அமைந்துபடாது, உலகம் பயன்பெற மேல் எழுந்தது; அவ்வாறெழுந்து மேற் கொள்ளப்பட்ட வகை முன்னர் உட்சென்ற ஞான மிருவகையின் பாலதாய்த் தானு மிரண்டு வகையாய், உணர்வும் அறிவுமாய் எழுந்தது; அவற்றுள் இது, உணர்வு இன்ன தன்மையது என விளக்குகின்றது.

---

விளக்க நியாய ரக்ஷாமணி, ஞான வழக்கு முடிவு என்னும் சிறு நூல்கள் ஒன்றன்மே
லொன்று கண்டனமாக அதிவிரைவில் வெளிவந்தன. இவையேயன்றி, இதோப
தேசம், தோல்வியறிவிப்பு, நன்மதிகூறல் முதலிய தனித்துண்டுத் தாள்களும்
அவ்வாறே வெளிப்போந்தன. அவ்வாறு இதுபற்றித் தமிழ்ப் பெரும் புலவர்களிடையிற்
பெரும் பூசலும் பெரு நிந்தை வழங்கலும் உளவாயின. அவற்றிற் காணப்பெற்ற
பெரும்பாலான நிந்தைத் திரள்களை ஒதுக்கி, உரைக் கோட்பாடுகளை மட்டும் எடுத்து
மேலே தரப்பட்டுள்ளது. அன்பர்கள் ஆய்ந்து மெய்யுரை தெளிவார்களாக. அத்
துண்டு நூல்களையும் தாள்களையும் யாது காரணம் பற்றியோ எனது அருமைத் தந்தை
யார் வித்வான் கந்தசாமி முதலியார் சேர்த்து ஓர் புத்தகமாகக் கட்டி "ஞானபே
விளக்கக் கட்சி" என்று பேரிட்டுத் தமது புத்தக சாலையில் வைத்திருந்தனர். அவ
சிவபதமெய்திய 56 ஆண்டுகளின்பின் இவ்வுரை எழுதும்போது அப்புத்தகத்தை
அடியேன் கண்டு படித்து இதற்குப் பயன்படுத்திக் கொண்டேன். இப்பயனை என்
தந்தையார் சிறிதும் எண்ணியிருத்த லியலாது. திருவருளின் வழிஇப்புராண உரைக்கு
முன் உதவியாய் வைக்கப்பட்ட சேம வைப்பு அது என்று கருதுகிறேன். எனக்கு
"எப்பொருளு மாக்குவா னீசனேயெனு முணர்வு" என்ற மேல்வரும் பாட்டு
இதற்காதரவாமென்பேன். 60 ஆண்டுகளின் முன் சிவஞானத்தைப் பற்றித் தத்த
உயிரும் அவ்வுயிர்க்குயிராகிய சிவனுமே பற்றுக் கோடாகப் பூசலிட்டு வலிந்து
சைவத் திறத்தைப் பற்றிக் கொண்டு நின்ற சென்னைமா நகரம் சைவஞான ஒழுக்க
பற்றி ஒரு சிறிதும் பற்றாது ஞானம் எவ்வாறாயினு மெமக்கென்ன? என்று கவ
யற்றிருப்பதைக் காண்பது காலக் கொடுமை! ஏன்? சென்னைமட்டுமா? நா
முழுதுந்தான்!

" சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் " என்ற உவமையிலாக் கலை ஞானத்தின் விளைவு என்க.

**எப்பொருளும் ஆக்குவான் ஈசனே** - **ஈசனே** - ஈசன் என்றது முழுமுதற் பொருளாய்ப் பதி எனப்படும் சிவபெருமான். ஈசன் - பகவன் - என்பன சிவபெருமானைக் குறிக்கும் என்பது சூடாமணி நிகண்டு. **ஈசனே** - ஏகாரம் தேற்றமும் பிரிநிலையுமாய் வந்தது. **எப்பொருளும்** - என்றதனால் பசு பாசங்களாகிய இருபொருளும் உணர்த்தப்பட்டன. இருவகையும் குறிக்க **எப்பொருளும்** என்றார். **ஆக்குதல்** - பசுக்களைப் பற்றியவழிப் படைத்தலாதிய தொழில்களுள்ளே படும்படி உயிர்களைச் செலுத்துதல் என்றும்; பாசத்தைப் பற்றியவழிக் கன்மபலன் நுகர்வித்தற் பொருட்டு மாயா மலத்தைத் தொழிற்படுத்தி ஆணவத்தை மெலிவித்தல் என்றும் பொருள் கொள்க. எனவே பொருட்டுணிவு பெற்று ஈசனை யடைதல் உறுதிப் பொருள் என்றது **உணர்வு** எனப்பட்டது. இது உவமையிலாக் கலைஞான முடிபாய்த் " தெளிவின் " பாற்பட்டுப் பாச நீக்கப் பயன் குறித்துச் சிவஞானபோதம் பத்தாஞ் சூத்திரக் கருத்துணர்த்தி நின்றது. இதனால் வேறு எல்லாச் சமயவாதங்களும் நிராகரிக்கப்படும் துணிவு பெற்றமை உணர்த்தப்பட்டது.

**அப்பொருள்தான்......அறிவு** - **அறிவு** - முன் பெறப்பட்ட உணர்வின் பயனும், அது முற்றி விளையுமிடமாவன இலிங்கமும் குருவுமாகிய ஆளுடையார் என்ற திருமேனிகளும், சங்கமம் ஆகிய அடியார் திருமேனியும் என்ற இவையிரண்டுமே என்று சிவப்பேறும் வாசனாமல நீக்கமும் ஆகிய உணர்வரிய மெய்ஞ்ஞானப் பயன் குறித்துப் பதினொன்று பன்னிரண்டாஞ் சூத்திரங்களின் முடிபுணர்த்தி நின்றது. இதனால் பரசமய நிராகரித்தவழி " நீறு ஆக்குதல் " என்னும் சைவத்தாபனமாகிய துணிவு உணர்த்தப்பட்டது. **ஆளுடையார்** - இலிங்கமும் குருவுமாகிய திருமேனிகள். **ஆளுடையார்** என்ற பன்மை யிரண்டினையும் குறித்தது. ஆளுடையார்களும் அடியார்களும் தான் அப்பொருளாவார் என்று எண்ணும்மைகள் விரித்துக்கூட்டி முடித்துக் கொள்க. ஈண்டு "மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்" (புரா-1087)என்ற கருத்துச் சிந்திக்கத் தக்கது. **அப்பொருள்** - முன்கூறிய **உணர்வு** என்பதற்குப் பொருளாய் நிற்பன. "அருளே யுலகெலா மாள்விப்ப தீசன், அருளே பிறப்பறுப்ப தானல்-அருளாலே மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையே னெஞ்ஞான்றும், எப்பொருளு மாவ தெனக்கு " (அற் - அந். 9) என்ற அம்மையார் திருவாக்கின் கருத்து ஈண்டுச் சிந்திக்கற்பாலது.

**இப்படியால்** - **இந்தத் தன்மை** - (உண்மை) - ஆயிருக்க.

**இது அன்றி** - **இது** - தொடர்புபட்ட இத்துணிபுகளின் தொகுதி.

**தம் இசைவு கொண்டு** - தாந்தாங்கண்ட துணிபுகளையே முடிபாகக் கொண்டு. **இயலுதல்** - செல்லுதலும் செலுத்துதலும்.

**துப்புரவு** - உண்மை அனுபவம் - மனத்திட்பம்; தூய்மை என்றலுமாம். " துப்புரவொன்றில்லா, வெற்றரையர் " (தேவா).

**துகளாகச் சூழ்ந்து** - நிலையழிவு பெற்றொழிய எண்ணி. " நிராகரித்து " (1917) என்றது கருதுக. 1966 முதல் 1969 வரை நான்கு பாட்டுக்களும் ஞான அமுத முண்ட விளைவாகிய நிலையினைப் படிப்படியாக எடுத்துரைத்தன. அங்கணனார் அருள் புரிந்தார் (1966); அதனால் ஆளுடைய பிள்ளையாராய்ச் சிவஞான சம்பந்தராயினார் (1967); அதனால் உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானம் என்ற அபரபரஞானங்களிரண்டினையும் அந்நிலையில் உணர்ந்தார் (1967); அவ்வுணர்வும் இப்படி; இதுவன்றி இயலுவோர் துணிவு துகளாகும்படி சூழ்ந்து எழுந்தார் (1969)

என்று இந்நான்கு திருப்பாட்டுக்களையும் தொடர்புபடுத்தி உரைத்துக் கொள்க. " உண்ணிறைந்து பொழிந்தெழுந்த " (1972) என்றது கருதுக.

எழுந்தார்-முன்னையதின் மேல்நிலைகொண்டனர். எழுதல்-பேருணர்வில் ஓங்கிப் பொலிதல் ; "பேருணர்விற் பொலிகின்ற" என்றுவரும் பாட்டும், அதன்மேல் "சிறிய பெருந்தகையார் " (1971) என்பதும் பார்க்க.

அப்போதுளும்—என்பதும், ஆளுடையான்—என்பதும் பாடங்கள். 71

1970. சீர்மறையோர் சிவபாத விருதயருஞ் சிறுபொழுதில்
நீர்மருவித் தாஞ்செய்யு நியமங்கண் முடித்தேறிப்
பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார் தமைநோக்கி
" யாரளித்த பாலடிசி லுண்டதுநீ ?" யெனவெகுளா, எஉ

1971. " எச்சின்மயங் கிடவுனக்கீ திட்டாரைக் காட் "டென்று
கைச்சிறிய தொருமாறு கொண்டோச்சக், காலெடுத்தே
யச்சிறிய பெருந்தகையா ரானந்தக் கண்டுளிபெய்
துச்சியினி லெடுத்தருளு மொருதிருக்கை விரற்சுட்டி, எங

1972. விண்ணிறைந்த பெருகொளியால் விளங்குமழ விடைமேலே
பண்ணிறைந்த வருமறைகள் பணிந்தேத்தப் பாவையுடன்
எண்ணிறைந்த கருணையினா னின்றாரை யெதிர்காட்டி
யுண்ணிறைந்து பொழிந்தெழுந்த வுயர்ஞானத் திருமொழியால், எச

1973. எல்லையிலா மறைமுதன்மே யுடனெடுத்த வெழுதுமறை
மல்லனெடுந் தமிழாலிம் மாநிலத்தோர்க் குரைசிறப்பப்
பல்லுயிருங் களிகூரத் தம்பாடல் பரமர்பாற்
செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து, எரு

1974. செம்மைபெற வெடுத்ததிருத் "தோடுடைய செவிய"னெனும்
மெய்ம்மைமொழித் திருப்பதிகம் பிரமபுர மேவினார்
தம்மையடை யாளங்க ளுடன்சாற்றித் தாதையார்க்
"கெம்மையிது செய்தபிரா னிவனன்றே" யெனவிசைத்தார் எசு

1970. (இ - ள்) சீர்மறையோர்...ஏறி - சிறப்புப் பெற்ற மறையவராகிய சிவபாதவிருதயரும் சிறிது பொழுதிலே நீரினுள்ளே பொருந்தித் தாம் செய்யும் நியமங்களை யெல்லாம் முடித்துக்கொண்டு கரையேறி ; பேருணர்வில்......நோக்கி - பேருணர்வினோடும் விளங்குகின்ற பிள்ளையாரை நோக்கி ; யார் அளித்த...வெகுளா - யாவர் அளித்த பாலமுதினை நீ உண்டாய் ? என்று கோபித்து, எஉ

1971. (இ - ள்) எச்சில்...என்று - " எச்சில் பொருந்தும்படி இதனை உனக்கு இட்டவரைக் காட்டு " என்று சொல்லி ; கைச் சிறியது...ஓச்ச - சிறியதாகிய ஒரு கோலினைக் கையில் கொண்டு அடிப்பவர் போன்று ஓச்சினராக ; அச்சிறிய பெருந்தகையார் - அந்தச் சிறிய பெருந்தகையாராகிய பிள்ளையார் ; கால் எடுத்தே - ஒரு காலை எடுத்து நின்று ; கண் ஆனந்தத் துளிபெய்து - கண்களினின்று ஆனந்த மேலீட்டினால் நீர்த்துளிகளைப் பெய்து ; உச்சியினில்...சுட்டி - உச்சியின்மேல் தூக்கியருளிய கையினின் ஒரு திருவிரலினால் சுட்டிக்காட்டி, எங

1972. (இ - ள்) விண்ணிறைந்த...எதிர் காட்டி - ஆகாயத்தில் நிறைந்த பெருகும் ஞான வொளியினல் விளங்குகின்ற இளமையுடைய இடபத்தின்மேல், பண்ணினல் நிறைவுடைய அரிய மறைகள் பணிந்தேத்த உமையம்மையாருடனே எண்ணிறைந்த கருணையினலே நின்ற திருத்தோணிபுரேசரை எதிரிற் காட்டி; உண்ணிறைந்து...திரு மொழியால் - உள்ளே நிறைந்து தேக்கி மேல் எழுந்து பொழிந்த உயர்ந்த ஞானத் திருமொழியினலே, எச

1973. (இ - ள்) எல்லையிலா...எடுத்த - எல்லையிலாத மறைகளின் முதலெழுத்தை மெய்யுடனே தொடங்கிய; எழுதும் மறை - எழுதும் மறையை; மல்லல் நெடுந் தமிழால் - வளப்பமுடைய நீண்டதமிழ் மொழியினல்; இம்மாநிலத்தோர்க்கு உரை சிறப்ப - இந்தப் பெரிய உலகத்தில் உள்ளோர்க்கு உரை சிறந்து பயன் செய்ய; பல்உயிரும் களிகூர - பல உயிர்களும் இன்பம் பெருக; தம்பாடல்... சிறப்பித்து - தமது திருப்பாடல் இறைவரிடம் செல்லும் வகையினைப் பெறும் பொருட்டுத் திருச் செவியினைச் சிறப்பித்துப் போற்றி, எரு

1974. (இ - ள்) செம்மை பெற......திருப் பதிகம் - செம்மை பெறும்படி தொடங்கிய திருத் " தோடுடைய செவியன் " என்ற மெய்ம் மொழியாகிய திருப் பதிகத்தினை; பிரமபுர மேவினர் தம்மை...சாற்றி - திருப் பிரமபுரத்தில் எழுந்தருளிய இறைவரை அடையாளங்களுடனே சொல்லி; தாதையார்க்கு...இசைத்தார் - " எம்மை இது செய்தவன் இப்பெருமானன்றே !" என்று தந்தையாருக்குச் சொல்லியருளினர். எசு

இந்த ஐந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண் டுரைக்கின்றன.

1970. (வி - ரை) சீர்மருவு - " ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றோ னெனக்கேட்ட தாய்" (குறள்) என்றபடி, தவங்கிடந்து அரிதிற்பெற்ற மகப் பேற்றின் சிறந்த பயனை இன்று பெற்றனராதலின் சீர்மருவும் என்றார்.

சிவபாத விருதயரும் - பிள்ளையார் - எழுந்தாராக, அவர் தந்தையாரும் என்று உம்மை இறந்தது தழுவிய எச்சம்.

சிறு பொழுதின் - மேற்கூறியபடி இறைவரால் ஆட்கொள்ளப்பட்டு ஞானம் பெற்றபின் சிறிது நேரத்தில்; சிறுபொழுதின் - முடித்து ஏறி என்க. இவ்வாறன்றி மகனரைக் கரையில் வைத்துப் போனராதலின் விரைந்து கடன் முடித்தார் என்று உரைப்பாருமுண்டு. அது பொருந்தாமை யறிக. சிவபாத விருதயர் என்றும் நியமந்தப்பாத விரத ஒழுக்கமுடையராதல் மேல் (1958) உரைக்கப்பட்டது. ஆதலின் காலம் போக்காது விரைந்து நியம முடித்தார் என்பது அவரது சீலத்துக்கும் தவத்துக்கும் இழுக்காகும். தவம் புரிந்தார் (1917), குலமறைத் தலைவர் (1632), மண்டு தவமறைக் குலத்தோர் (1953), வேதவிதி நீதிமுறைச் சடங்கு நெறிமுடிப்பதற்கு நீராட (1954), மறை முனிவர் (1959), ஈறில் பெருந்தவமுன் செய்து (1983) என்பனவும், பிறவும் அவரது நியமசீலத்தை உணர்த்துவன.

நீர்மருவித் தாம்செய்யும் நியமங்கள் - இவை முன் 1958-ல் உரைக்கப்பட்டன. நீர்மருவி - நீரினுள் நின்று; ஏறி - நீரினின்றும் பொய்கைக்கரையில் மேல் ஒறிவந்து.

பேருணர்விற் பொலிதலாவது - முற்று முணர்ந்த தாவில் தனிச் சிவஞான ஒளியினல் விளங்குதல்; பேருணர்வு - " தாமுணர்ந்தார் " (1968) என்றும், உணர்வும் - அறிவும் - (1969) என்றும் கூறியவற்றின் தொகுதி. "ஈசன்றன்னெளியான" (தேவா); "சூழ்ந்த வொளியிற் ரேன்றினர்" (1260) எனப்படும் அறிவொளி. ஞானம்

வெளித் தோற்றும் ஓர் ஒளியுடைய தென்க. இன் - மூன்றுவதன் சாரியை ; உணர் வினல் என்க. சாரியையுள்வழித் தன்னுருபு தொக்கது.

நோக்கி - கூர்ந்து பார்த்து. நோக்கி - வெகுளா என்க.

உண்டது நீ - முன்பின்னுக மாறியது வெகுட்சிக் குறிப்பு.

யார்......வெகுளா - பாலமுதம் யாவரும் தரப்பெறும் பண்டமா யிருப்பவும் ஈண்டுச் சிவபாத விருதயர் வெகுண்டதென்னேயோ ? எனின், அது, குலமேம்பாட் டெண்ணம்பற்றி எழுந்ததன்று. தாயின் உடற்றன்மை குணத் தன்மைகளின் மாறு பாடுகளாலும், கொள்கலத்தின் தூய்மையின்மையாலும், பிறவாற்ருலும் பால்தானும் யாவரிடத்தும் யாண்டும் பெறுதற்குரித்தன்று என்ப. இனி, இளங் குழவிகளுக்கு ஊட்டப்படும் பால் இன்னும் நுண்ணிதாய்ப் பிரித்து அறியப்படுதல் வேண்டும்; அல்லாவிடின் குழவிகளுக்குப் பிணி தாக்கவும், குணமாறுபாடு முதலியவை உண்டாக வும் காரணமாகும். அன்றியும், பல காரணங்களாலும் நல்லதொரு குழவிக்குக் கேடு சூழ்வாரும் பலருளராவர் என்றபோது, சிவபாதவிருதயர் கொண்ட வெகுளிக்கும் கவலைக்கும் போதிய காரணமுண்டென்க.

வெகுளா - வெகுண்டு; வெகுளா-ஓச்ச என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. முன்னர் "முனிவார்போல்" (1955) என்றவிடத்து முனிவு உண்மையில் எழாமல், எழுந்ததுபோலக் காட்டினர். இங்குத் தீங்கு வருமோ என்று உண்மையில் அஞ்சினு ராதலின் சிறிது வெகுளியே போந்ததென்க. 72

1971. (வி - ரை) எச்சில் மயங்கிட - தீங்கு கலக்கும்படி. எச்சில் - இங்குத் தீங்கு என்ற பொருளில் வந்தது. "கண்ணெச்சில்" (ஞானவுலா) என்பது காண்க. மயக்கம் - வேற்றுப் பொருள் வந்து கூடுதல் ; "திணைமயக்கம்" ; உடனிலை மயக்கம் - வேற்றுநிலை மயக்கம் - என்பவற்றுட்போல மயக்கம் - பொருள் தரல் என்று கொண்டுரைத்தலுமாம்.

உனக்கு ஈது இட்டாரைக் காட்டு - "காட்டு" என்று சிவபாத விருதயர் கேட்ட தன் காரணம் கூறப்பட்டபடி. தீங்கு விளையும் தன்மை உளவாயின் உரிய மாற்றுக் களால் நீக்கிக் கொள்ளுதற் பொருட்டு.

சிறிய தொரு மாறு கொண்டு கை ஓச்ச என்க. மாறு - மெல்லிய கோல். ஓச்சுதல் - உயரத்தூக்கி அடிப்பார் போன்று ஓங்குதல். சிறிய மாறு - என்றதும், ஓச்ச என்றதும், அவர் வெகுண்டாராயினும் அதனல் தங்கிலை தவிர்ந்து பிள்ளையார் பாற்கொண்ட பேரன்பின் திறத்திற்கு மாறுபட்டுச் செயல் செய்திலர் என்பது குறித்தன.

கால் எடுத்து - ஒரு காலைத் தூக்கி. இஃது ஆனந்தானுபவத்திற்குரிய தொரு மெய்ப்பாட்டுச் செயல். "கால் கொட்டி" (1955) என்றவிடத் துரைத்தவை பார்க்க

அச்சிறிய பெருந்தகையார் - அகரம் முன்னறி சுட்டு ; சிறிய பெருந்தகை - உருவத்தாலும் பருவத்தாலும் சிறியவர் ; தன்மையாற் பெரியவர் என்றபடி. முரண் அணி ; தந்தையாரது எண்ணத்தில் அதுபோழ்து சிறிய பிள்ளையாராய் எண்ணப் பட்டவர் ; ஆனல் அவரால் அப்போது அறியப்படாத பெருமை பெற்றவர் என்ற குறிப்புமாம். "நீரோ பெரிய சிறுத்தொண்டர்" (சிறுத். புரா.) என்ற கருத்து இங்கு வைத்து ஒப்பு நோக்குதற்பாலது.

கண் ஆனந்தத் துளிபெய்தலாவது - ஆனந்தம் காரணமாகக் கண்களினின்றும் மழைபெய்தல்போல நீர்த்துளிகள் பொழிதல். "ஆர்வலர் புன்கணீர்" என்புழிப் போலத் துன்பம் காரணமாகவும் கண்ணீர் வருதலுண்டாமாதலின், அதனின் வேறு பிரிக்க ஆனந்தத்துளி என்றார். ஆனந்தம் - ஈண்டுப் பிறிதினியைபு நீக்கிய விசேடணம்.

இனிக் "கண்மலர்க ணீர்ததும்ப" (1960), "மெய்ம்மேற்கண் டுளிபனிப்ப" (1961) என்று முன்னரும் வேறு காரணம் பற்றிக் கண்ணீர் பெய்யப் பிள்ளையார் நின்றாராதலின் அதனின் வேறு பிரித்துக் காட்டியதுமாம்.

**உச்சியினில்......சுட்டி - உச்சியினில் எடுத்தருளும் விரல் சுட்டி** - தாதையார் பிள்ளையாரை வினவுகின்ற அந்நேரத்தில் தோணியப்பர் அவரைப் பாலூட்டி அழுகை தீர்த்து மேலெழுந்தருளிப் பிள்ளையாருக்குக் காட்சியளித்துத் தேவியாருடன் விடைமேல் விண்ணில் நின்றருளினார்; தந்தையார் அவரைக்காணாது பால்தந்த அடையாளம் மட்டில் பிள்ளையார்பாற் கண்டனர்; ஆதலின் யார் அளித்த பால் உண்டனை? என்று கேட்ட தாதையாருக்கு, அவரறியா வண்ணம் மேலே நின்றருளிய இறைவரைச் சுட்டிக் காட்டவேண்டிய நிலையில் பிள்ளையார் நின்றாராதலின், சுட்டு விரலினால் மேலே காட்டவேண்டியவராயினார்; அதனால் உச்சியினில் விரல் எடுத்துச் சுட்டினார். இறைவர் யாண்டு முள்ளவர். அவரை யாண்டும் சுட்டலாமாயினும் இங்கு மேலே உச்சியிற் சுட்டியது, தத்துவப் படிமுறையிற் கீழே நின்ற உயிர்களை உணர்வித்து மேலே உயர்த்துதல் கருத்தாகச் சிவபாத விருதயர்மூலம் திருவுளச் செயல் நிகழ்ந்ததாதலின் என்க.

**இனி, உச்சியினில் எடுத்து அருளும்** - இல் - நான்கனுருபின் பொருளில் வந்ததாகக் கொண்டு தாழ்ந்த உயிர்களை உச்சிக்கு வரும்படி மேலெடுத்து அருள் புரியும் என்றுரைப்பதும் ஒரு குறிப்பு; ஈண்டு உச்சி என்றது அசுத்தம் - சுத்தாசுத்தம், சுத்தம் என்ற நிலம் மூன்றனுள் உச்சியில் நின்ற சுத்தமாகிய சிவபுவனத்தை.

**இனி, உச்சியினில் எடுத்து அருளும்** - இல் - நீக்கப் பொருளில் வந்த ஐந்தனுருபாகக் கொண்டு வேதாகமத் தலையினின்றும் எடுத்து, மெய்ப் பொருளை உலகுக்கு அருளும் என்றுரைப்பதும் ஒரு குறிப்பு. "வேத வாகமச் சென்னியில் விளைபொருள்" (திருவிளை - புரா.).

**ஒரு திருக்கை** என்றும், கை **ஒரு திருவிரல்** என்றும் இருவகையும் கூட்டுக. "அஞ்செழுத்து மெழுதியசெம் பொற்று ளங்கள், வையமெலா முய்யவரு மறைச் சிறுவர் கைத்தலத்து வந்த வன்றே" (புரா-103) என்ற கைகள்; மீனவன் வெப்புத்தீர மேனியில் நீறுபூசும் திருக்கை; சைவந்தழைக்கத் திருமுறையை நிமிர்த்தி எடுத்த திருவேட்டினைத் தீயிலிட்டு மீட்டும் எடுத்து அம்முறையே கோக்கும் அழகிய திருக்கை; "எங்களை வாழ முன்னாள்" ஆற்றினில் ஏடு இட்டு நிலவுந் திருக்கை; புத்தர் முதலியோரும் வாழ நீறுதந் தீடேற்றும் திருக்கை என்றிவ்வாறு வரும் பெருமைகள் பலவும் காண்க.

**ஒரு திருவிரல்** - காட்டுகின்ற உபகாரம் செய்வதாதலின் சுட்டுவிரல் சிறப்புடையது. ஆசாரியலட்சணத்துக்குதவும் சிறப்புப் பெற்ற அங்கம். ஐந்தெழுத்தின் உள்ளீடாக உள்ள சிகாரவாச்சியனாகிய இறைவனை "இவன்" என்று காட்டுதற்கு உதவியது இது. இனி, அவ்வைந்தெழுத்தினுள், அறிவிக்கப்பட்ட பொருளாகிய உயிர் பாசங்களினீங்கி அடிமைத் திறத்தினை அறிந்து இறைவன்றிருவடியை அடைந்து உய்யும் தன்மையை காட்டும் மோன முத்திரையில் பயன்பெற்ற உயிரினைக் காட்ட உதவுவதும் இவ்விரலேயாம். "சுட்டிறந்த ஞானத்தைச் சொல்" என்றபடி சுட்டியுணரப் படுவனவெல்லாம் அசத்து என்ற ஞானநூல் விதிக்கு விலக்காக ஈண்டுச் சத்துப் பொருளாகிய சிவத்தினைச் சுட்டியுணர்த்தியது இந்த ஞானத் திருவிரலின் சிறப்பு. **விரல்** - விரலினால் - விரல் கொண்டு எனக் கருவிப் பொருளில் வரும் மூன்றனுருபு விரிக்க.

73 சிறுமாறு—உச்சியின்மேல்—என்பனவும் பாடங்கள்.

1972. (வி - ரை) விண் நிறைந்த பெருகு ஒளியால்......நின்றார் - ஈண்டு ஒளி என்றது ஞான ஒளி. விண் - ஞானகாயம். எல்லாவுயிர்களிடத்தும் அவ்வவற்றின் பக்குவ பேதத்துக் கேற்றவாறு விளங்கி, அவை அறிவாற் பெருகும் வகை உபகரிப்ப தால் பெருகு ஒளி என்றார். இங்கு இவ்வொளியினைப் பிள்ளையார் கண்டு நின்றார் ஒளியிருந்தும் தாதையார் காணாது நின்றார் ; பின்னர்ப் பிள்ளையார் கூறிச் சுட்டிக் காட்டியருள அவ்வரும் தமிழின் பொருளான குறிப்பு ஓர்ந்தும் (1983) நிகழ்ந்தன கண்டும் (1984) ஒருவாறு கருதித் துணிய நின்றமையும் காண்க.

பண்...ஏத்த - பண் - ஈண்டுச் சுர அமைதி குறித்து நின்றது. "பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்" (நம்பி - குருகாவூர்); "பண்ணின் பயனா மின்னிசையும்" என்றபடி இசை நிறைவாயினும் பயன் கொண்ட முழு நிறைவாந் தன்மை இனிப் பிள்ளையாரது தமிழின் உருவத்துள் நின்றுபெற உள்ளனவாதலின் அருமறைகள் பணிந்து ஏத்த என்றார்.

பாவையுடன்...நின்றாரை - பாவை - உமையம்மை - பாவை போன்றாரைப் பாவை என்றது ஆகுபெயர். பாவையுடன் எண்ணிறைந்த கருணையினால் நின்றார் என்றது பிள்ளையாரை அழுகை தீர்க்க வந்த காரியம் முற்றுப்பெற்ற பின்னரும் வெளிப் பட நின்றதற்கு அவரது அளவற்ற கருணையே காரணம் என்றபடி. எண்ணிறைந்த கருணை - ஈண்டு உயிர்களின் மேல்வைத்த பெருங்கருணை குறித்தது; என்னை ? விடை மேல் பாவையுடன் நின்றமையால் அந்த அடையாளங்களுடன் பிள்ளையார் சுட்டிக் காட்டிப் பாடியருள ஏதுவாயிற்று ; அதனைத் தாதையார் கேட்க அவர்மூலம் உலகத் துயிர்கள் அனைத்தும் கேட்டு ஓதிப் பயன்பெற ஏதுவாயிற்று என்க. எண் - எண்ணம்; எண் நிறைந்த கருணை - உலகுயிர்களினுள்ளே பிறிவறப் பொருந்திய அருள்.

எதிர் காட்டி - காட்டு என்று தாதையார் கேட்டபடி எதிரிலே கண்டு காணும் படி எதிரிற் சுட்டிக்காட்டி.

உள்நிறைந்து......உயர்ஞானத் திருமொழி - உள் - தமது அறிவினுள்ளே; நிறைதலாவது - முற்றும் தனது தன்மையேயாம்படி பெருகுதல். எழுந்து பொழிந்த என்க. எழுதல் - நிறைவாகி மேல் எழுதல் ; பொழிதல் - வழிதல் ; மிக்குப் பெருகு தல்; உயர்ஞானம் - உயர்த்தும் ; உயர்விக்கும் என்க. உயர்வுடைய என்றலுமாம்.

திருமொழி - "தோடுடைய செவியன்" என்னும் தமிழ்த் திருப்பதிகம். திரு மொழியால் - எடுத்த - தமிழால் என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க.

ஓச்சக் - கால் எடுத்தே - சுட்டி (1971) - எதிர்காட்டி - மொழியால் (1972), எடுத்த - தமிழால் - சிறப்பித்து (1973), எடுத்த - திருப்பதிகம் - சாற்றி - இசைத் தார் (1974) என்பது முடிபு.

செல்லுநெறி பெறுவதற்கு—என்பதும் பாடம். 74

1973. (வி - ரை) மறை முதல் - பிரணவத்தின் முதலாகிய ஓகாரம். இது உயிர் ; மெய் - தகர வித்தையைக் குறிக்கும் த் என்ற குறியீடாகிய மெய் எழுத்து. தகரவித்தையாவது சிவசத்தியின் உண்மைநிலை; தகர மெய் காயத்திரி மந்திரங்களின் இறுதி எழுத்தாயுள்ளது ; சாந்தோக்கிய முதலிய உபநிடதங்களில் பிரமப் பொருளைக் குறிக்கும் சொல்லாகக் கூறப்படும். "சத்" என்ற சொல்லின் இறுதி எழுத்தாகிய த் என்பது சிவரூபம் என்று வாயு சங்கிதை கூறும். "சக்திச் சிவச்ச சத் சப்தப்ர கிருதிப் பிரத்திய யோதிதௌ"—(சத்தியும் சிவமும் சத் சொல்லின் முதனிலையும் இறுதி நிலையுமாம் என்பது சுலோகப் பொருள். மறை முதல் மெய்யுடன் எடுத்த - த்+ஓ=தோ என்று தொடங்கிய; எல்லையிலா மறை - அல்லை ஈது - அல்லை ஈது - என்று எல்லாப்பொருள்களையும் நேதிகளைந்து அளவுட்படாது செல்லும் தன்மையுடை

யது எழுதாமறையாகிய வேதம். அது அளவுகாட்டி எழுத உயரும் தன்மை பெறாது ஓதும் தன்மையே பெறுதலின் ஓந்து எனப்படும். இவ்வாறு உயிர்முதலுடன் எடுத்த போது ஓத் எனப்பட்டு, அதுவே முதன்மெய்யுடன் எடுத்தபோது தோ என்றாகித், தேவாரத்தின் முதலாகி எடுத்தபோது எழுதும் மறையாகி, இறைவரை எல்லையுட் படுத்திச் சுட்டிக் காட்டவல்லதாயிற்று என்ற குறிப்புப்பெற எல்லையிலா மறை என்றும், முதன் மெய்யுடன் எடுத்த எழுது மறை என்றும் குறிப்பித்தார். தகரம் என்ற ஞானம் உயிரினுஞ் சிறந்து அதனை உயர்த்துவதாதலின் அச்சிறப்புத் தோன்ற உடன் என்னுஞ் சொல்லுருபை மெய்யுடன் என்று மெய்யோடு புணர்த்தினார் மெய்-என்ற சொற்குறிப்பும் அது. “ ஓகாரம் ஈசுரம் வித்யாது ஜோதிஸ்ஸர்வ பலபிரதம் ”, “ தகாரம் வாஸ்து தைவத்யம் சுவேதம் ஸர்வ ஜயம் பவேது ” (வாதுளம்), “ ஓங்காரம் சிவ தைவத்யம் ஜோதிர்நிர்ப்பய மநுக்ரஹம் ”, “ தகாரம் தநதம் வித்யாது பிரேமைசுவர்ய வர்த்தநம் ”, “ தகாரோ தநபீஜகாம் ” என்னும் வசனங்களால் ஓகார, தகார மாதிருகா வர்ணங்களின் அதிதேவதைகளும், பலனும் அறியப்படும்.

**மல்லல் நெடுந் தமிழ்** - மல்லல் - வளப்பம். வேண்டுவ வேண்டியாங்குதவும் செழுமையும் வண்மையும் குறித்தது. நெடுமை - மெய்ப்பொருளை நிச்சயிக்கும் அளவு கருவி என்ற பொருளில் வந்தது. “ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்” (970) என்றது காண்க.

**தமிழால் இம்மாநிலத்தோர்க்கு உரை சிறப்ப** - தமிழ் இந்நிலவுலகத்தோர்க்கு உபதேசித்து ஈடேற்றும் பொருட்டு ; இங்கு மாநிலத்தோர் என்றது ஆறறிவுடைய மக்களை ; அவர்களே பொதுவிதி பற்றிப் பெரும்பான்மை உரை என்ற வாசக தீக்கையால் பயன் பெறுபவர்களாதலின். “ விட்ட வெம்பரி செவியினிற் புவிமுதல் வேந்தர்தாம் விதியாலே, யிட்ட மாஞ்சிவ மந்திர மோதலி னிருவிசும் பெழப்பாய்ந்து” (வெள். சருக் - 36) என்ற கழறிற்றறிவார் நாயனார் செயலின் தன்மை வேறு ; அது சிவமந்திர வலிமையால் பரியை வானிற் செலுத்திய சித்துவகை. இனி நாரைக் குபதே சித்தது, கரிக் குருவிக் குபதேசித்தது முதலிய இறைவரது திருவிளையாடல்களும், “ தொன்மைக் கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ ”, “ ஏராரிளங் கிளியே ”, “ கீதமினிய குயிலே ” என்று மணிவாசகனாரும், “ சிறையாரு மடக் கிளியே” என்பது முதலாக ஆளுடையபிள்ளையார் முதலாயினாரும் அருளியவைகளும் சிறப்பு விதி பற்றி நிகழ்ந்தன.

**பல்லுயிருங் களிகூர** - உயிர் என்றது இங்கு மக்களொழிந்த ஏனை உயிர்களை.

**திருச்செவியைச் சிறப்பித்து** - மாநிலத்தோர்க்கு உரை சிறக்கவும், பல உயிர்களும் களிகூரவும் தம் பாடல் பரமர்பாற் செல்ல என்றதனால் பிள்ளையார் தமது பாடல்களால் உலகுயிர்கள் துன்ப நீங்கி யின்பமடைதலே பொருளாகக் கொண்டன ரன்றித் தம்பொருட்டுக் கொண்டனரல்லர் என்பதும், அதன் பொருட்டே அப்பாடல்கள் பரமனார் திருச் செவியிற் சேரச் “ செவியன் ” என்று சிறப்பித்தனர் என்பதும் விளங்கும். மாநிலத்தோர்க் குரை சிறத்தல், பஞ்சாக்கரப் பதிகங்கள், திருநீற்றுப் பதிகம், திருப்பாசுரம், கோளறு பதிகம் முதலியவற்றாலும், பல் உயிருங் களிகூர்தல் திருவோத்தூர்த் திருப்பதிகம் முதலியவற்றாலும் அறியப்படுவன.

**பாடல் பரமர்பாற் செல்லும் உரை பெறுவதற்கு** - பாடல் உரை பெறுதலாவது கேட்கப் பெறுதல். “ திருவுலாப்புறம் பாடினேன் ; திருச்செவி சாத்திடப் பெற வேண்டும்”, “அன்பருங் கேட்பித்தார்” (வெள். சருக் - 47); பரமர்பாற் செல்லுதலாவது திருவுளங் கொள்ளுமாறு நிகழ்தல். சேம்மைபெற எடுத்த - என்று மேற் கூறுதலும் காண்க.

திருச் செவியைச் சிறப்பித்தவகை மேல்வரும் பாட்டிற் கூறுவார்; திருவடி முதலிய ஏனைத் திருவங்கங்களாற் கூறாது செவியன் என்றதனாலும், தோடு என்று அருட் சத்தியாகிய அம்மையணியும் அணியைச் சுட்டிய அடைமொழியினாலும், அம்மையைப்பற்றி எடுத்தமையினாலும் இஃது உணரப்படும். செவி - ஓங்காரவடிவ முடையதாதலும் குறிப்பு.

செல்லுமுறை பெறுவதற்கு—என்பதும் பாடம். 75

1974. (வி - ரை) செம்மை பெற...செவியன் எனும் - செம்மை - சிவத் தன்மை. பெற - உயிர்கள் பெறும் பொருட்டு; எடுத்தல் - தொடங்குதல். தோடுடைய செவியன் எனும் - முதற் குறிப்பு; எனும் திருப்பதிகம். முதற்குறிப்பி னாற் பதிகத்துக்குப் பெயர் போந்தது. "வேயுறுதோ ளியையெடுத்து விளம்பி னாரே" (புரா - 616) முதலியவை காண்க.

மெய்ம்மை மொழித் திருப்பதிகம் - மெய்ம்மை மொழி - சத்தாகிய பொருளைக் காட்டி உணர்த்தும் மொழி; சத்தாகிய மொழி; சத்தைப் பயப்பிக்கும் மொழி என்று பலவும் கொள்க. "போதியோ வென்னும் அன்ன மெய்த்திரு வாக்கெனு மமுதம்" (புரா - 1089), "குரும்பை யாண்பனை யீனுமென்னும் வாய்மை" (புரா - 981) "அருளின் வாய்மை" (புரா-984). மெய்ஞ்ஞானமாகிய தகரத்தை முதலிற்கொண்ட மொழி என்ற குறிப்புமாம்.

அடையாளங்கள் - தோடுடைய செவியன்; விடையேறி; மதிசூடி; பொடி பூசி என்பனவாதியாகப் பதிகத்துள் வருவன.

"எம்மை இது செய்தபிரான் இவன் அன்றே" - எம்மை - ஞானச் சிறப்புணர்த் தும் பன்மை. இது - இத்தன்மை; சிவமயமாகச் செய்தது; சிவானந்த வடிவம் அகத் துக் கண்கொண்டு காண்பதாகிய இத்தன்மை; பிரான்-தலைவர்-நாயகர். "பெம்மான் இவன் அன்றே" என்ற தேவாரப் பொருள். இவன் - இதோ முன்னே நிற்கின்ற என்ற அணிமைச் சுட்டு. அன்றே! - உறுதி குறித்தது. ஏகாரம் பிரிநிலை; தாதை யார்க்கு - "காட்டு" என்று கேட்ட தாதையாருக்கு. இப்பாட்டினால் பதிகக் குறிப்பும் பதிகப் பாட்டுக் குறிப்பும் உள்ளுறையும் கூறுமுகத்தால் இத்திருப் பதிகப் பொருள் கண்டு காட்டியவாறு.

இசைத்தார் - விடைகூறினர். இசைத்தல் - பொருந்தச் செய்தல்; ஈண்டுத் தாதையார் கருதியதற்கு வேறாக உண்மை நிலையை இசைவித்தார் என்றலுமாம். 76

1975. மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையிற்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளு மெனக்காட்ட
எண்ணமிலா வல்லரக்க னெடுத்துமுறிந் திசைபாட
வண்ணலவற் கருள்புரிந்த வாக்கப்பா டருள்செய்தார். எஎ

(இ - ள்) மண்ணுலகில்...எனக்காட்ட - நிலவுலகத்தில் வாழும் உயிர்கள் பிழை செய்தாலும் அவை தம்மை வந்து அடைந்தால், நுதற்கண்ணையுடைய சிவபெரு மான் பெருங்கருணையினாலே அவைகளைக் கைகொடுத்தெடுத்து ஆட்கொண்டு ஏற்றரு ளும் என்று காட்டும்பொருட்டு; எண்ணமில்லா...அருள்புரிந்த ஆக்கப்பாடு-எண்ண மில்லாதவனாய் வன்கண்மையுடைய அரக்கனாகிய இராவணன் திருக்கயிலைமலையை எடுத்து உடல் முரிவுபட்டுப் பின்னர் இசையினைப் பாடவே, பெருமையுடைய இறை வர் அவனுக்கும் அருள் செய்த ஆக்கப்பாடுகளை; அருள் செய்தார் - அத்திருப்பதி கத்தினுள் வைத்துப்பாடியருளினர்.

(வி - ரை) திருப்பதிகத்தினுள் எட்டாவது திருப்பாட்டினுள் இராவணனுக்கு இறைவர் செய்த அருளிப் பாட்டைக் கூறியருளியதன் கருத்தை விளக்குவது இத் திருப்பாட்டு ; இவ்வொரு பதிகத்திலன்றிப் பிள்ளையார் இனி அருளும் பதிகங்கள் தோறும் இவ்வாறு வைத்தருளுகின்றாராதலின் ஈண்டு அதன் கருத்தை ஆசிரியர் விளக்குதல் கடனாயிற்று.

இவ்வாறே மேல் ஒன்பதாவது திருப்பாட்டில், ஈண்டும் ஏனைப்பதிகங்களிலும் அயனுக்கும் மாலுக்கும் அருளிய திறத்தினையும், பத்தாவதில் புத்தர் சமணர்களை நிராகரித்தருளிய திறத்தினையும் வைத்தருள்வாராதலின் அவற்றின் கருத்தையும் அவ்வாறே மேல்வரு மிரண்டு பாட்டுக்களால் முறையே விளக்கியருளுகின்றார் ஆசிரியர். இத்திறம் பதிகங்கள்தோறும்வைத் துணர்ந்துகொள்க.

**பிழைத்தாலும் வந்தடையின்** - **கைக்கொள்ளும்**-என்று கூட்டுக. **வந்தடைதல்** - சரண்புகுந்து சார்தல். **கைக்கொள்ளுதல்** - குழியின் வீழ்ந்தாரைக் கைதூக்குதல் போல எடுத்து ஏற்றுக் கொள்ளுதல். **பெருங்கருணை** - கருணையினால். பெருமையாவது இத்திறம் பிறிதெவர்க்கும் அரிதாதல். "பிழையுளன பொறுத்திடுவர்" (நம்பி).

**எண்ணம் இலா** - மலையின் மேலிருப்பவர் பரமபதியாகிய சிவபெருமான் என்றும், அவர் எல்லாம்வல்லவர் என்றும், தனக்கு வரங்கொடுத்தவர் என்றும் எண்ணாது. "வரைந்திய தோள்களை" என்பது இத்தேவாரம்.

**வல் அரக்கன்** - வன்கண்மையுடைய இராவணன். **வலிமை** - ஈண்டுத் தீவினை அஞ்சாத ஆணவச்செருக்காகிய மன வன்கண்மைத் தீக்குணம் குறித்தது. "வன்னெஞ்சக் கள்வன் மனவலியன்" (திருவா. கோத்). "வலி சேற்று"-என்றது இத்தேவாரம்.

**எடுத்து, முறிந்து, இசைபாட** - **எடுத்து** - திருக்கயிலை மலையினை நிலைபெயர்க்கும்படி தூக்க முயன்று; **முறிந்து** - அது காரணமாக இறைவரது திருவடிச் சிறு விரலால் சிறிதே ஊன்றப்பட்டு மலைக்கீழ்ச் சிக்கித் தோள்களும் பிற ஆண்மை நிலைகளும் முறிவுபட்டு ; **இசைபாட** - பலகாலம் ஆற்றாது அழுது புலம்பிப் பின்னர், விரகறிந்து அவரைச் சரணடைந்து சாமகானம்பாட. **பாட** - அருள்புரிந்த - "தசமுகனை விட்டார்தம் பாட்டறிவே" (தக்-பர - 226). **எண்ணம்** - எண் - மதிப்பு என்றலுமாம்.

**அருள்புரிந்த ஆக்கப்பாடு** - **அருள்புரிதல்** - பிழை பொறுத்து ஏற்றருளுதல். **கைக்கொள்ளும்** என்றது. **ஆக்கப்பாடு** - நாளும் வாளும் தருதல்.

**கண்ணுதலான்** - கருணைக் கண்ணோட்ட முடையான் என்றது குறிப்பு. நுதற்கண்ணால் எரித்தாரேனும், பின்னர் அதனாலே அருள் நோக்கமும் செய்தார் என்ற வரலாறும் குறிப்பு. **மண்ணுலகில்**-"இந்தப்பூமி சிவனுய்யக் கொள்கின்ற வாறு" (திருவா). 77

1976. தொழுவார்க்கே யருளுவது சிவபெருமா னெனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாகுங் கருவிலங்கும் பறவையுமா யெய்தாமை
விழுவார்க ளஞ்சேழுத்துந் துதித்துய்ந்த படிவிரித்தார். ௭௮

(இ - ள்) **தொழுவார்க்கே...என** - தொழும் அவர்களுக்கே அருளும் இயல்புடையவர் சிவபெருமான் என்று தெரிந்து ; **தொழார்** - தொழாதாராகி ; **வழுவான மனத்தாலே மாலாய**-தவறு செய்த மனத்தினால் மயக்க மடைந்த ; **மால் அயனும்... விழுவார்கள்** - திருமாலும் அயனும் இழிவாகிய பன்றியும் அன்னப் பறவையுமாகக்

கீழும் மேலும் சென்று காணமாட்டாது விழுவார்கள்; அஞ்செழுத்தும்...விரித் தார் - திருவைந்தெழுத்தினையும் துதித்து உய்வுபெற்ற தன்மையை மேலே விரித் தருளினர்.

(வி - ரை) இஃது பதிகத்துள் ஒன்பதாவது திருபபாட்டின் கருத்துணர்த்திற்று.

சிவபெருமான் அருளுவது தொழுவார்க்கே என்க. ஈண்டு அருளுவது என்பது உண்மை விளங்க வைத்து விரைய ஈடேறத் துணைசெய்தல் என்ற அளவில் வந்தது. ஏகாரம் பிரிநிலை. ஆயின், தொழாதார்க்குச் சிவபெருமான் அருளுகின்றதில்லையோ? எனின் அற்றன்று; அவர்க்கும் அவ்வவரது அறியாமை நோய்க்குத் தக்கவாறு தண்ட முதலியவாற்ருல் வெளிப்படுப்பர் என்க. அவையும் அவ்வாற்ருல் அருளேயாம். "சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனுய்ச் - சார்ந்தடியார், தாந்தானுச் செய்துபிறர் தங் கள்வினை தான்கொடுத்தல்" (போதம் - 10); அறக்கருணை மறக்கருணை பற்றியு முணர்க; "தொழுவார்க் கிரங்கி" (அரசு).

எனத் தொழார் - என்று தெளிந்து தொழாதவர்களாகி. தொழார் - வழுவான மனத்தாலே - எய்தாமை விழுவார்கள் - துதித்து உய்ந்தபடி என்று கூட்டுக.

மாலாய - ஈண்டு மால் - மயக்கம். நாம் காண்பேம் என்ற தற்போத முனைப்புக் குறித்தது. வழுவான மானத்தால் என்பதும் பாடம்; இதற்கு, மானம் - பெருமை; தவருன மானம் (vanity) என்க.

கரு விலங்கு - பன்றி. இழிவாதும் என்றதனைப் பறவைக்கும் கூட்டுக. விலங் குக்குக் கூட்டும்போது இழிவு - அளற்றிற்படுதலும் மலந்தின்னுதலும் முதலாயின; பறவைக்குக் கூட்டும்போது இழிவு ஆதும் - என்பது அவ்வரலாற்றின்படி பொய் கூறி அபசாரப்படும் இழிவு குறித்தது. ஆய் - அவ்வுருவெடுத்து.

எய்தாமை விழவார்கள்-அடையமாட்டாது கீழேதவறினவர்கள். "எய்யாமையே அறியாமையே" (தொல்).

அஞ்செழுத்து - சிவன்திருநாமம். இத் தேவாரத்தினுள் "தாணுதல் செய்து இறைகாணிய" என்றருளியது குறிப்பு.

முன்பாட்டு "மண்ணுலகில் வாழ்வார்களுக்கு" உபதேசித்தது. இத்திருப் பாட்டு விண்ணுலகத்தார் நலம்பெற உபதேசித்தது.

முன்பாட்டில் "எடுத்து - முறிந்து - இசைபாட அருள்புரிந்த ஆக்கப்பாடு" என்பன முறையே வினையும், வினைப்பயன் நுகர்ச்சியும், அதன் தீர்வும் இன்பம் பெறவுற்ற சாதனமும், அதனுற் போந்த பயனும் என்ற நால்வகையும் குறித்தது போலவே இப்பாட்டில் வழுவான மனத்தாலே - விழுவார்கள் - அஞ்செழுத்தும் துதித்து - உய்ந்தபடி என்று அந்நான்கு உண்மைப் பொருள்களையே எடுத்து உபதேசித்தமை காண்க. 78

1977\. வேதகா ரணராய வெண்பிறைசேர் செய்யசடை
நாதர்நெறி யறிந்துய்யார் தம்மிலே, நலங்கொள்ளும்
போதமிலாச் சமண்கையர் புத்தர்வழி பழியாக்கும்
ஏதமே யெனமொழிந்தா ரெங்கள்பிரான் சம்பந்தர் எகசு

(இ - ள்) வேதகாரணராய...தம்மிலே-வேதங்களுக்குக் காரணராகிய வெள்ளிய பிறை சேர்ந்த சிவந்த சடையினையுடைய சிவபெருமானது நெறியினை அறிந்து அடைந்து உய்தி பெருதவர்களாகிய புறச்சமயத்தவர்களுள்ளே; நலங்கொள்ளும்...

வழி - நன்மைகொள்ளும் ஞானமில்லாத சமணர்களும் புத்தர்களும் ஆகிய இவர்கள் கூறும் நெறிகள் ; பழியாக்கும் ஏதமே என - பழியை விளைக்கும் கேடுகளே யாவன என்று ; எங்கள் பிரான் சம்பந்தர் மொழிந்தார் - எங்கள் பெருமானாகிய திருஞான சம்பந்தர் மொழிந்தருளினர்.

(வி - ரை) இத்திருப்பாட்டால் பதிகப் பத்தாவது பாட்டின் கருத்துக் கூறப் பட்டது. சமண சாக்கியராதி பரசமயத்தாரது கேடுகளை நிராகரித்தலும், திரு நீற்று விளக்கத்தினைப் பெருக்குதலும் என்றிவையிரண்டுமே பிள்ளையாரின் திருவவதார உள்ளுறையாதலின், அவற்றுட் பெரும் பகுதியான முன்னையது இதன் கருத்தாய்த் திருவவதாரச் செய்திப் பயன் இம்முதற் பதிகத்தினின்றே தொடங்கி நிகழ்வதா யினமை காண்க. அச்சிறப்புப்பற்றிப் பிள்ளையார் திருப்பதிகங்களில் பத்தாவது திருப் பாட்டுச் "சமண் பாட்டு" என்று பெயர் வழங்கப் பெறும். "எடுத்த பாட்டினில் வடிவுபெற் றிருநான்கு திருப்பாட், டடுத்த வம்முறைப் பன்னிரண் டாண்டள வணைந்து, தொடுத்த வேஞ்சமண் பாட்டினிற் றேன்றிடக் கண்டு" (புரா - 1091) என்றது காண்க. இக்கருத்தினைப் பின்னர் "நானில மூய்ய, வேனை வெஞ்சமண் சாக் கிய மிழித்தழித் ததுவும்" (புரா - 1037) என்றவிடத்துக் காட்டப்படுதல் காண்க.

சிவநெறிச் சாதனமாகிய திருவைந்தெழுத்து முதலியவற்றை முன்னிரண்டு பாட்டானுணர்த்திய ஆசாரியர்பெருந்தகை, அவசாதனமாய் விலக்குதற்குரிய வற்றை ஈண்டு வற்புறுத்தியருளினமையும் அதனானே, பாட்டுவைப்பு முறையும் கண்டுகொள்க. முன்னவற்றை அருள் செய்தார் - விரித்தார் என்றதும் இதனை மொழிந்தார் என்றதும் இக்குறிப்பு.

**வேதகாரணர்** - வேதங்களை அருளிய முதல்வர். வேதங்களாற் சொல்லப்பட்ட உலக நிமித்த காரணர் - முதல்வர் - என்றலுமாம்.

**நாதர்நெறி** - சிவநெறி ; சரியையாதி நான்கும், சிவாகமங்களின் முடிபுகளும்.

**உய்யார் தம்மிலே** - சமண்கையர் புத்தர் - வழி - என்க. உய்யார் - சிவநெறி சார்ந்துய்யும் நல்லூழ் பெறாது உழலும் புறச்சமயிகளின் தொகுதி.

**உய்யார் தம்மிலே நலங்கொள்ளும்** - என்பதற்கு உய்யாராகித் தம் அறிவாற் படைத்து மொழிந்தவற்றைத் தாமே பாராட்டுகின்ற சமண்கையர் புத்தர் வழி எனக் கூறலுமொன்று. இப்பொருட்கு நலங்கொள்ளும் சமண்கையர், போதமிலாச் சமண் கையர் எனப் பெயரெச்ச அடுக்குச் சமண்கையர் புத்தர் என்னும் பெயர்கொண்டு முடிந்தது.

**நலங்கொள்ளும் போதம்** - நன்மையைப் பெறும் அறிவு. சிவஞான உணர்வு.

**வழி** - கூறும் நெறி - செல்லும் நெறி.

**பழி ஆக்கும் ஏதமே** - பழியினை விளைக்கும் கெடுதியே. ஏகாரம் பிரிநிலை. தேற்றமுமாம். ஆக்குதல் - விளைத்தல். பழி-இறைவர், நன்மைக்கு வகுத்த அறிவைத் தீர்நெறியிற் செலுத்தும் நம்பிக்கைத் துரோகமாகிய பழிப்பு.

**எங்கள் பிரான் சம்பந்தர்** - அருள் செய்தார் (1975) ; விரித்தார் (1976) ; மொழிந்தார் என்ற மூன்றுக்கும் எழுவாய், பதிகப்பாட்டு நிறைவாதல் குறித்தலும் உறுதியும்பற்றி இறுதியில் வைக்கப்பட்டது. சிறிய பெருந்தகையர் (1971) இசைத் தார் (1974) என்று பதிகத் தொடக்கத்து வைத்ததும், ஈண்டுப் பதிகப்பாட்டுப் பற்றிய இறுதியில் அவ்வாறே வைத்ததும் கருதுக. எங்கள் பிரான் - சைவ சமய பரம ஆசாரியராகிய உரிமைக் குறிப்பு. ஆசிரியருக்குப் பிள்ளையார்பாலுள்ள உரிமை யன்பின் குறிப்புமாம் : "எங்கள் பிரான்" (மங்கை - புரா - 1).

1978. திருப்பதிக நிறைவித்துத் திருக்கடைக்காப் புச்சாத்தி
யிருக்குமொழிப் பிள்ளையா ரெதிர்தொழுது நின்றருள,
வருட்கருணைத் திருவாள னருள்கண் டமரரெலாம்
பெருக்கவிசும் பினிலார்த்துப் பிரசமலர் மழைபொழிந்தார். அ௦

(இ - ள்) திருப்பதிகம்...நின்றருள - திருப்பதிகத்தினை நிறைவாக்கித் திருக்கடைக்காப்பினைச் சாத்தியருளி, இருக்கு மொழிப் பிள்ளையார் எதிரில் தொழுது நின்றாராக; அருட்கருணை...கண்டு - அருட்கருணையுடைய திருவாளராகிய சிவபெருமானது நிறைந்த அருளினைக் கண்டு; அமரரெலாம்...பொழிந்தவர் - தேவர்கள் எல்லாம் பெருக்கெடுத்த ஆகாயத்தில் ஆரவாரித்துத் தேன் ததும்பும் தெய்வமலர்களை மழையாகப் பொழிந்தனர்.

(வி - ரை) திருப்பதிக நிறைவித்து - பத்தாவது பாட்டாகிய சமண் பாட்டினுடன் பதிகத்தை நிறைவாக்கி; பதிகம் - பத்துப் பாட்டுக் கொண்ட சொன்மாலை என்ற காரணப்பெயர். இது பெரும்பான்மை. சிறுபான்மை இந்த அளவிறந்தும் வரும். திருவங்கமாலை - வழிமொழித் திருவிராகம், முதலியவை பார்க்க. "பதிகப் பாட்டான பத்தும் பாடனிரம் பியபின்னும்" (புரா - 582)

திருக்கடைக் காப்புச் சாத்தி - பதிகம் நிரம்பியபின் அதனை முடித்துக் காட்டும் வகையால் தமது பெயரும் பதிகப்பயனும் முதலாகிய முத்திரைகளைப் பொறித்துக் கூறும் (பதினொராவது) திருப்பாட்டாக அருளிச் செய்யும் பாடலை திருக்கடைக்காப்பு என்று வழங்குவர். பலசுருதி என்றும், திருநாமப் பாட்டென்றும் கூறுவர். சாத்தி - அணிந்து; ஆரத்தினை இணைத்துக் கூட்டி விளங்கும் முகமணிபோல என்பது குறிப்பு.

இருக்கு மொழி - இருக்கு - வேதப் பொதுமை குறித்தது. பிள்ளையார் மொழி வேதமே என்பதாம். இறைவர் மொழியே இவரது திருவாக்கில் இங்ஙனம் போந்ததென்பது முன்னரும் "எழுதுமறை மல்லனெடுந் தமிழ்" (1973) என்றதனால் விளக்கினர். "எனதுரை தனதுரையாக" (இலம்பையங் கோட்டூர்) என்பது பிள்ளையாரது திருவாக்கு. இருக்கும் மொழி - எந்நாளும் அழிவில்லாது நிலைபெற்றிருக்கும் மொழி என்றும், இருத்தும் எனப் பிறவினையாகக் கொண்டு பயில்வோரைச் சிவலோகத்தில் இருக்கச் செய்யும் அருள்மொழி என்றும் உரைக்க நின்ற குறிப்பும் காண்க. பிள்ளையார் தேவாரம் "ருக்வேத சாரம்" என்பர். பிள்ளையாரது திருவாக்கினை, "ஆகமவேத புராணநூல்", "சுருதித் தமிழ்க்கவி", "ஆரணகீத கவிதை", "உபநிடமதுர கவிதை" என்று பலபடத் திருப்புகழினுட் பாராட்டுவர் அருணகிரியார்.

எதிர் தொழுது - விண்ணிலே கருணையினுனின்றாரை எதிரே தொழுது.

அருட்கருணைத் திருவாளன் - சிவபெருமான் அம்மையப்பராய் நின்றமையால் அருள் - கருணை என்று ஒருபொருட் பன்மொழியாற் கூறினர். அவ்வாறிரண்டாயினும் பொருண்மையால் ஒருவரே என்பார் திருவாளன் என்றார். திருவாளன் - முத்தித்திருவை ஆள்பவன். திரு - முத்தித்திரு. இப்பெயர் சிவபெருமானுக்கும் அவனேயாகிய தன்மைபெற்ற பெரியோருக்குமே உரித்தாய் வரும். "தேசமுய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்", "உயிரளித்த திருவாளன்" (வெள். சருக் - 12).

மலர் - கற்பகம், மந்தாரம் முதலிய தெய்வமரப் பூக்கள். பிரசம் - தேன். 80

1979. வந்தெழுமங் கலமான வானதுந் துபிமுழக்கும்,
கந்தருவர் கின்னரர்கள் கானவொலிக் கடன்முழக்கும்;
இந்திரனே முதற்றேவ ரெடுத்தேத்து மிசைமுழக்கும்,
அந்தமில்பல் கணநாத "ரர"வெனுமோ சைபினடங்க. அக

(இ - ள்) அந்தமில்......அடங்க - அழிவில்லாத பல சிவகணநாதர்கள் முழக்கும் "அரகர" என்னும் ஓசையினுள் அடங்கும்படி; மங்கலமான...இசை முழக்கும்- மங்கலமாகிய வானதுந்துபி முழக்கமும், கந்தருவர்கள், கின்னரர்கள் முதலிய தேவச் சாதியர்களின் கானவொலியினது கடல்போன்றெழும் முழக்கமும், இந்திரனே முதலாகிய தேவர்கள் எடுத்துத் துதிக்கின்ற இசைகளின் முழக்கமும் ஆகிய இவ்வகை ஓசைகளின் தொகுதி ; வந்து எழும் - இங்குவந்து எழுந்து முழங்குவதாகும்

(வி - ரை) ஓசையின் அடங்க - முழக்கும் - முழக்கும் - முழக்கும் - வந்து - எழும் - என்று கொண்டு கூட்டி முடிபு கொள்க.

மங்கலமான வானதுந்துபி - பெருமங்கலநிகழ்ச்சிக்குறியாக வானகத்தில் ஐந்துதுந்துபி என்னும் தேவமுழக்கம் தானே நிகழ்வதாமென்ப. "விண்ணுலகின் மேனிறைந்த வைந்து பேரிய வொலியும்" (1693), "கடவுண்மால் வரையி னுச்சியதிர்தரு மோசை யைந்து மார்கலி முழக்கங் காட்ட" (750).

கந்தருவர் - கின்னரர்கள் - இசைவல்ல தேவச் சாதியர். 1614 பார்க்க.

கானவோலிக் கடல் முழக்கு - பலரும் ஒலித்த கானமாகிய ஒலிகளின் தொகுதி கடல்போல முழங்கிற்று என்க. கடல் - கடல் போன்றதைக் கடல் என்றுபசரித்தார். முன்னைய துந்துபி முழக்கு இயக்குபவரின்றியும் தானுய்ச் சத்திப்பது; இவை பிறர் முழக்கச் சத்திப்பன. ஒலி - ஓசை என்னாது ஒலி என்றார், களிப்பாகியதோர் உட்குறிப்பைப் புலப்படுத்தி நிற்றலால்.

இந்திரனே முதல் தேவர் - ஏகாரம் எண்ணின்கண் வந்தது. முதற்றேவர் - பிரமன் - விட்டுணு முதலிய தேவர்கள். ஏத்தும் இசை - சிவன் புகழ்பாடும் கீதம்.

அந்தம் இல் பல்கணநாதர் - சிவ கணநாதர்கள். சிவத்தன்மை பெற்று ஊழியிலும் அழிவுபெறாது சிவன் திருநடங்கண்டு நிற்போர். அந்தமில் என்ற அடைமொழியால் முன்கூறிய ஏனையோர் அந்தம் உடையராய் ஊழி முடிவில் அழிவு பெறுவர் என்பது குறித்தார். கணநாதர்களை இறுதியில் வைத்தார் சிறப்புணர்த்தற்கு.

அரவேனும் ஓசையின் அடங்க - அரவெனும் ஓசை இனத்தாலும் தன்மையாலும் பயனாலும் பெரியது ; ஏனயவை எவ்வாற்றானும் அதனிற்றாழ்வுடையனவாய் அதனுள் அடங்குவன என்பது குறிப்பு. முழக்கு - மூன்று கூறி, அர என்பதொன்று கூறியதும் அக்குறிப்பு. அடங்க - முன்கூறிய மூவகை முழக்கங்களும் கணநாதர் அர என்ற ஓசையினுள் அடங்கி ஒடுங்கின. அடங்க - எழும் - முழங்கி எழுவனவாயினும் அர என்பதனுள் அடங்குவனவே.

இவ்வாறு தெய்வச் சாதியர்களும் ஆர்த்தது தமது வானுலகமுட்பட எல்லா உலகங்களும் சைவ விளக்கம் பெற்று இன்பமடைதற் பயன்கருதி என்க. "மண்ணுலகமேயன்றி வானுலகுஞ் செய்தபெரும், புண்ணியத்தின் படையெழுச்சி போலெய்தும் பொலிவெய்த" (புரா. 650).

அந்தமில்சீர்—என்பதும் பாடம். 81

திருப்பிரமபுரம் திருச்சிற்றம்பலம் பண். நட்டபாடை

தோடுடை யசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடை யசுட லைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன்

ஏடுடை யமல ரான்முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடுடை யபிர மாபுர மேவிய பெம்மா"னிவ"னன்றே ! 1

அருநெ றியமறை வல்ல முனியகன் பொய்கை யலர்மேய
பெருநெ றியபிர மாபுர மேவிய பெம்மா னிவன்றன்னை
யொருநெ றியமனம் வைத்துணர் ஞானசம் பந்த னுரைசெய்த
திருநெ றியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்த லெளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

**பதிகக் குறிப்பு**:—"எச்சில் மயங்கிடப் பால் இட்டாரைக்காட்டு" என்றுகேட்ட தாதையார்க்கு "எம்மை இதுசெய்த பிரான் இவன்" என்று அவரை அடையாளங்களுடன் சுட்டிக்காட்டியருளியது. ஆன்மாக்களுக்கு இறைவரையும் அவரை அடையும் வழிகளையும் அறிவித்து, அவர்கள் வினை நீங்கி இன்பமடையும்படி செய்வது ஆசாரியரியல்பு என்ற தன்மைக் குறிப்புமாம். "பெம்மான் இவனன்றே !" இவ் இறைவனைப் பாடவல்லவர் தொல்வினை தீர்தல் எளிது ! என்றது காண்க.

**பதிகப் பாட்டுக் குறிப்பு**—(1) இம் முதற்றிருப்பாடலில் அளவிறந்த அரும் பொருள்களைக் காண்பர் பெரியோர். அவையெல்லாம் அனுபவமுள்ள ஞானதேசிகர்கள்பால் முறையால் உணர்தற்பாலன.

**தோடு** - பெண்கள் காதணி. **செவியன்** - அன் - ஆண்பால் விகுதி; பெண்ணும் ஆணுமாகக்கூடிவந்து, அருளி நிற்கும் இவன். குழவிகள் அன்னையை முன் உணரும்; பின்னரே அத்தன்றன்னை உணரும். ஈண்டுப் பிள்ளையார் முதலில் கண்டு-பால் ஊட்ட உண்டு - அழுகை தீர்க்கப் பெற்றதற்குப் பொருளாவர் உமையம்மையார். இக் கருத்துப்பற்றியே பிள்ளையாரது சீகாழிப் பதிகப் பாட்டுக்களுட் பெரும்பான்மையும் அம்மையாரைச் சுட்டி உடன்கூறுவதும் காண்க. இருள் போக்குதலில் ஞாயிற்றின் கதிர் முன்னர்ப் போந்துவர அதன் பின்னே ஞாயிறு வருதல்போல - அம்மையின் அருள் முன்வைக்கப்பட்டது. **செவி** - அருள் நோக்கம் பெறுபவன் கண்வளத்தினையும், கொடை பெறுபவன் கைவளத்தினையும் சிறப்பித்துக் கூறுதல்போல ஈண்டுச் செவியால் நன்மை பெறக் கருதிச் செவியைச் சிறப்பித்தார். "தம்பாடல் பரமர்பாற் செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து" (1973) என்று ஆசிரியர் எடுத்துக்காட்டியருளினர். இது தமிழ்ச் சுருதி என்பதும், முதல்வர் சொல்லியருளக் குருபரம்பரையில் செவிவழியாக வழி வழி கேட்டுவர வழங்குவது என்பதும் குறிப்பு. **ஏறி - சூடி - பூசி** - என்பன எச்சங்கள். ஏறியும் சூடியும் பூசியும் கவர் என்க. **தூ - வெண்** - தூய்மை - அகத்தும், வெண்மை - புறத்தும் சிறப்பு. **காடு உடைய சுடலை** - உலகம் சங்கரிக்கப்பட்டவிலை. **பொடி** - திருநீறு. **உள்ளம்** - உயிருணர்வு - ஆன்மா என்றலுமாம். **மலரான்** - பிரமன்; மலர் - தாமரை; பிரமன் பூசித்த காரணத்தாற் பிரமபுரமெனப் பெற்ற பெயர்க் காரணத்தைக் குறிப்பித்தபடி. **மலரான்-ஆன்**-கருவிப்பொருளில் வந்த மூன்றனுருபு எனக்கொண்டு காயத்தாலும், **பணிந்து** என்றதனால் மனத்தாலும், **ஏத்த** என்றதனால் வாக்காலும் செய்த வழிபாடுகளைக் குறிப்பதாக உரைத்தலும், இதனால் பிள்ளையாரது "முன்னிலைமைத் திருத்தொண்டு" குறித்ததாகக் கொள்வது மொன்று. **பீடு** - குரு லிங்க சங்கமம் என்ற மூன்றும் உடைமைச் சிறப்பு. **குரு** - தோணியப்பர். **பிரமாபுரம்** - ஆன்மாக்கள் மலம்போக்குதற்கு நித்திய முதலியன செய்தற்கு உரிய உறுப்புக்களுடையது. "சிறந்த வன்பால், நாவியலு மங்கையொடு நான்முகன்றான் வழிபட்ட" (தேவா). **அன்றே** - ஏகாரம் பிரிநிலை. **தோடுடைய செவி** - பேரருளுடைமை; **விடையேறி** -




திருஞானசம்பந்த நாயனார் கையிற்
பொற்கிண்ணத்துடன் இறைவரைச்
சுட்டிப்பாடும் திருக்கோலம் —சீகாழி



பிரம்ம தீர்த்தமும் திருத்தோணியும்




ஆளுடைய பிள்ளையார் ஞானப்பாலுண்டு
முதற் பதிகம் பாடிய கோலம்

தன்வயத்தனாதல்; மதிசூடி - முற்றறிவுடைமை; பொடிபூசி - வரம்பிலின்ப முடைமை; உள்ளங்கவர் கள்வன் - இயல்பாகவே பாசங்களினீங்குதல்; இயற்கை யுணர்வு; பிரமபுரம் - அளவிலாற்றலுடைமை என்ற எண்குணங்களாய்ச் சிறப்பியல்பு களாகிய இறைமைத்தன்மை குறிப்பன என்றும்—பிரமாபுரம் - நாடும் ஊரும்; விடையேறி - கொடியும் ஊர்தியும்; பொடிபூசி - முரசும் படையும்; மதிசூடி - மலையும் ஆறும்; தோட்டுச் செவி - தாரும் என்றிவ்வாறு இறைவரது தசாங்கம் குறிப்பாலுணர்த்தி நின்றன என்றும்—விடையேறி - மதிசூடி என்பன உருவம் - பொடிபூசி - பிரமாபுரம் அருவுருவம் - உள்ளங்கவர் கள்வன் - அருவம் என்ற மூவகைத் திருமேனிகளைக் குறிப்பன என்றும்—தோடு - காரியப் பொருள் - அது காரணத்தை அனுமானத்தால் அறிவித்துநிற்றல்போல் கருத்தாவுண்மையை உணர்த்தி நிற்பது என்பது "எப்பொருளு மாக்குவா னீசனே யெனுமுணர்வு" (1969) என்றத னால் ஆசிரியர் அறிவித்தருளினர் என்றும்; "சிவனடியே" (1968)என்ற திருப்பாட்டு, உணர்ச்சி நிகழ்ந்த செயலையும் "எப்பொருளும்" என்றது அவ்வுணர்ச்சியின் பயனையும் உணர்த்தின; பயனாவது உணர்ந்த வழியே ஒழுகுதல்; இஃது அபரஞானப்பயன் - "அப்பொருடா னுளுடையா ரடியார்கள் எனுமறிவு" என்றது பரஞானப்பயன் - "அறிவறிவான் றனையறிய வாக்கை யாக்கி" என்பன காண்க என்றும்—தோடு - பொருட் பிரபஞ்சத்தையும், செவி - சொற்பிரபஞ்சத்தையும் உணர்த்தவே சிவன் இவ்விரண்டிலும் ஐந்தொழில் புரியும் வினைமுதல் என்பார் செவியன் என்றதனால் உபதேசித்தருளினர்; இதனாலும் உடைப்பொருளும், உடையானும், அவன் அதை நடத்து முறையும் உணர்த்தப்பட்டன என்றும்—"அவன்" என்று மறைகள் முறை யிட்டு ஓதியதனை "இவன்" என்று சுட்டியருளுகின்றமையால், தம்மைப்போல அதனைக் காணுதல் பெறாத தந்தையாருக்கும், அவர் மூலம் உலகுக்கும் இலக்கண முணர்த்தி, இதன்பின் இலக்கியமுணர்த்தும் போதனை முறைபற்றி அங்கங்களை அடை யாளங்களுடன் சாற்றி ஓதியருளினர் என்றும்—பொடிபூசி - நோய் தீர்க்கும் மருந் தினைக் குழவிகளின்பொருட்டுத் தாய் உண்பதுபோலத் தாம் திருநீறு அணிவர் என்ற குறிப்பு என்றும்—உள்ளங் கவர்கள்வன் - எஞ்ஞான்றும் எம்மின்வேறாகாது அகத் தினின்று உபகரிக்கும் தமது முதலுபகாரம் உணர்த்தும் குறிப்பு என்றும்—பிரமா புரமேவிய என்றது சதாசிவதத்துவமாகிய தமது உயர் நிலையினின்றும் இறங்கி உயிர்கள் எளிதின் வழிபட வந்த நிலையின் அருட்பெருக்கின் குறிப்பு என்றும்—செவி யன் முதலிய ஆறும் கூறி முடிவில் இவன் என்று கூறுதலால் "அறுவகைச் சமயத் தோர்க்கும்" (சித்தி) என்றபடி ஆறு சமயங்களினும் விரவி மேம்பட்ட முடிபு கூறும் சைவ முதன்மையும் சிவனது முதன்மையும் குறிப்பிடப்பட்டது என்றும்—தோடு முத லிய ஆறும் அங்கங்கும் முடிந்தும் முடிவுபெறாது சென்று முடிக்கும்சொல்லை அவாவி நிற்க, இவன் என்றது ஒன்றனையும் அவாவாமல் முடிபுபெற்று நிற்பதனால், பதமுத்தி கள் பலவோடும் சாயுச்சிய முத்திநிலை குறிக்கப்பட்டது என்றும்—தோடு முதலிய 36 மொழிகளால் ஓதுதலால் 36 தத்துவசொரூபமும் அவை கருவியாமாறும், நான்கு அடிக ளாற் கூறுதலால் சரியையாதி நாற்பாதமும் பயனும், அடிதோறும் ஐஞ்சீரான் ஓதுத லால் ஐவேறு ஐந்தெழுத்தும், காரணக் கடவுளர் ஐவரின் பதங்களும், ஐந்தொழிலும், ஐம்மலங்களும்; 18 எழுத்துக்களால் அமைத்தல் பதினெண்வித்தைகளினியல்பும், குறிக்கப்பட்டன என்றும்—தோடு - விடை என்றவை அஃறிணையும்; செவியன் என்ற உயர்திணையும் இந்த இரண்டுமாய் நிற்பவன் இறைவன் என்ற குறிப்பு என்றும் —பணிந்தேத்த அருள் செய்த என்றதனால் சாதனமும் பயனும் உணர்த்துவது குறிப்பு என்றும்—இவ்வாறு ஞானகாண்டம் ஞானபாதங்களின் துணிபுகள் எல்லாம் குறிப்பி

ஞற்பெறும்படி கொண்டுணர்த்தி உபதேசித்த எழுதும்மறை இதுவாகும். இது பொருட்டன்மையணி. இவன் என்று சுட்டிக் காட்டித் தொடங்கிய முதற்றிருமுறை முதற் பாசுரத்தின்படி இவனதியல்பே திருமுறைகள் முழுதுமாம் என்று இன்னோரன்னவை ஸ்ரீமத் செப்பறைச் சிதம்பர சுவாமிகளின் குறிப்புக்கள்.

இனி, இத்திருப்பாட்டினைப் பிள்ளையார் (1) தம்மை "உனக்கி திட்டாரைக் காட்டு" என்று வினவிய தாதையார்க்கு விடைகூறுமுகத்தானும், (2) தாம்பெற்ற அருள்ஞானத்தின் பொருட்டு இறைவரைத் தாம் எத்தும் துதிமுகத்தானும், (3) உலகுயிர்களுக்கு மெய்ஞ்ஞான நூற்றுணிபினை உபதேசிக்கும் முகத்தானும் என இம்மூன்று பொருளும் நுதலி எடுத்துக்கொண்டனர்;—மறையானது சுரலட்சணங்கள் பொருந்த இசைக்கப் படுவது: சுரங்கள் ஓதுதலிற் பிழைபட்ட வழிப் பயன் தராததுமன்றித் அநர்த்தமாகித் தீமையும் பயக்கும் ; சுரவியல்பான அது எழுத முடியாதது ; ஆதலின் அவ்வாறன்றி இஃது எழுதும் மறையாகி அப்பயன்தரத் தமிழில் இசைக்கப்பட்டது ; இதுபற்றியே தாதையார் கேட்ட கேள்விக்கு மறைச்சிறுவர் மறையினால் விடை கூறாது தமிழினாற் கூறினர் என்பது இருக்குமொழிப் பிள்ளையார் (1978) என்ற குறிப்பு—தோடு பெண்பாகமும், சேவியன் ஆண்பாகமும் குறித்து நின்று " தோலும் துகிலும் " என்ற திருவாசகத்திற் கண்டபடி இறைவரது இருகூறாகி யியைந்த தொன்மைக் கோலத்தைக் குறித்தது;—விடையேறி - சிருட்டி ; சங்காரத்தில் அறக்கடவுள் அழியாது இறைவர்பால் நின்று மீள உலக சிருட்டியில் உளதாதற் குறிப்பு ; மதிசூடி - திதி ; சாபத்தால் அழிந்துபடாமல் சந்திரனைக் காத்த குறிப்பு ; பொடிபூசி - மாசங்காரம் ; கள்வன் - திரோபவம் - மறைப்புக் குறிப்பு ; அருள் செய்த - அனுக்கிரகம் என்ற அருட்குறிப்பு. என்று இவை ஐந்தொழிலும் செய்யும் இவன் என்ற குறிப்பு;—இறைவரைத் தாதைக்கும் அவர்மூலம் உலகர்க்கும் காட்டி உபதேசிக்கும் ஆசாரியராதற் குறிப்பு. இன்னோரன்னவை திரு. கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் குறிப்புக்கள். மேலுங் காண்க.

தோடு - " தோடையா னொருகாதிற் றூயகுழை தாழ " (தேவா), " ஒருபாற் றோடு மொருபாற் குழையும், இருபாற் பட்ட மேனி யெந்தை " (கோயினான் - 36) என்றபடி இறைவர் பெண்ணுறைய பேரருளாளன் என்றும், அசுவதரன் கம்பளன் என்ற இரண்டு கந்தருவர்கள் சிவனைப் பாட வரம்பெற்றுக் காதிலே தோடும் குழையுமாகிய உருவுடன் இருக்கப்பெற்றனராதலின் அதுபோலவே தமது பாடலும் இறைவர் திருச்செவியி லேற்றருள்வர் என்றும் குறிப்புக்கள் காண்க ; ஓர் தூவெண்மதி - தூய்மையும் வெண்மையும் இறைவர் சூடும் சந்திரன் அப்பிராகிருத சந்திரனாவான் என்பது குறிப்பன. சுடலைக் காடு - ஐந்து கலைகளிலுமடங்கிய எல்லாப் புவனங்களையும் சங்கரிக்கும் மாசங்காரத்தில் உளதாவது ; உள்ளங்கவர் கள்வன் - சுத்தநிலையில் அழுந்திய சிவஞானானந்த முதிர்ச்சி ; எழுதும் மறையினைத் தமிழால் ஓத எடுக்கின்றாராதலின் பிரணவம் உரைத்தே வேதம் தொடங்கும் மரபுப்படி தோடு என்ற முதன் மொழியில் ஓகாரம் புணர்த்தி எடுத்தருளினர் ; " மறையெ வற்றிற்கு மாதியி னவில்வான், நின்ற தோர்தனி மொழியைமுன் னோதின னெறியால்" (கந்த. அய. சிறைபுரி பட. - 8) ; அப் பிரணவநாதம் பூதாகாயத்தினன்றிச் சிதாகாயமாகிய தகராகாயத்திற் றோன்றும் சுத்தநாதமாதல் குறிக்கத் தகர மெய்யுடன் கூட்டி உரைத்தருளினர். இவ்வாறு முதற்றிருமுறை - முதற்பதிகம் - முதலடி - முதன்மொழி - முதலெழுத்தாகிய இவ்வோகாரம் பன்னிரண்டாம் திருமுறையின் ஈற்றுச் சருக்கம் - ஈற்றுச் செய்யுள் - ஈற்றடி - ஈற்றுச் சொல் - ஈற்றெழுத்தாகிய மகரத்தோடு புணர்ந்து ஓம் என்று முடிந்து தமிழ்வேதத் திருமுறைகள் யாவும் பிரணவ பீஜத்திற்

ஞேன்றி யடங்கி நிற்கும் தன்மையும் காணத் தக்கது ;—(2) முற்றல் ஆமை - விஷ்ணுவின் கூர்மாவதாரமாகிய முதிர்ந்த ஆமை ஓடு. ஏன முளைக் கொம்பு - விஷ்ணுவின் வராக அவதாரத்திற் கொண்ட முளைபோன்ற கொம்பு. விஷ்ணு, பலகோடி கற்பங்களாகிய ஆயுளுடைமையால் முற்றல் என்றார். பூண்டு - பூணுக அணிந்து ; வற்றல் ஓடு - பிரமனது தசை வற்றிய மண்டை ஓடு. கலன் - பலிப்பாத்திரம். இளநாகம் - சில சதுர்யுகங்களை `ஆயுளாகக்கொண்ட அனந்தன் முதலியவை. உடையாராகிய - பெரியார் என்க. கற்றல் - இறைஞானக் கல்வி கேள்வியால் அவர் தொழுதேத்த என்றார். "கல்லார் நெஞ்சினி னில்லா னீசன்" "கற்றவர் விழுங்கும்"—(3) நீர் - கங்கை. வளை - வளைசோர என்றது ஆன்மாக்களை நாயகிகளாக வைத்தோதும் அகத்துறை பற்றிக் கூறியது. முதலாகிய - ஊழியிலும் அழியாது எஞ்சிய முதன்மைபெற்ற. பேர்-அதனால் வந்த தோணிபுரம் என்ற காரணப் பெயர்—(4) விண்மகிழ்ந்த - மகிழ்ந்த சஞ்சரித்த என்றபொருளில் வந்தது ; மதில் - மதிலையுடைய திரிபுரங்கள். ஆகுபெயர் ; எய்தது - எய்வார்போல நின்று எரித்ததை எய்ததென்றதுபசாரம் ; தேரிய - தேரும் பொருட்டு ; மார்பிற் பெண் மகிழ்ந்த - பெண்ணை ஒரு பாகத்தில் உடைய. மண்மகிழ்ந்த பிரமாபுரம் என்றும், பெண் மகிழ்ந்த பெம்மான் என்றும் கூட்டுக—(5) ஒருமை பெண்மையுடையன் - ஒருபாகத்திற் பெண்ணையுடையவர். ஒருமை என்பதனைச் சடையன் என்றதுடன் கூட்டலுமாம் - அஃதாவது ஒருபுறம் சடை மற்றொருபுறம் குழல் என்க. கருமைபெற்ற - பெற்ற என்றதனால் கருமை அதன் இயல்பாகிய நிறமன்றென்பது.—(6) மறை கலந்த வொலி பாடல் - மறை இறைவர் வாய்மொழி (ஒற். ஒருபாவொ - ஃது - 1.) இறைகலந்த - கையிற் பொருந்திய; இறை - கையிறை; வளைசோர்தல் - ஒன்றொன் றுக் கழன்றுவீழ்தல்; உள்ளங்கவர்தலால் உடல் மெலிவுபட்டு வளைகழன்றன என்பது. சோர - சோரும்படி. கறை - இருள் ; கடி - மணம் ; பொழில் - நந்தனவனங்களை யும், சோலை - ஏனை மரச் சோலைகளையும் குறித்தன. கதிர் சிந்த - பிறை கலந்த - சோலைகளின் செறிவினால் பலபுறமும் கதிர்கள் சிதறும்படி பிறை புகுந்தது போன்ற; இதனை "வெண்மதியஞ் சோலைதொறு நுழைந்துபுறப் படும்பொழுது" (1906) என்று ஆசிரியர் அழகு படுத்துதல் காண்க.—(7) முயங்குதல் - சேர்தல் என்ற பொருளில் வந்த சொற்பொருட் பின்வரு நிலை; புனல் - கங்கை; அனல் - கையில் ஏந்திய தீ ; எரிவீசி - உழிதந்து என்று கூட்டுக ; சதிர்வு - அழகு ; உடைமுயங்கும் - அரவு - புலியுரியுடையின் மேல் கச்சாக வீக்கிய பாம்பு. ஒற்றைக் கோவண உடை யாகச் சேர்ந்த பாம்பு என்றலுமாம். "அற்ற மறைப்பது முன்பணியே" ; கடற்கழிசூழ் பிரமாபுரம் - என்க. "மகர வார்கடல் வந்தண வும்மணற் கானல்வாய்ப், புகலி ஞானசம்பந்தன் " (தேவா) ; கானல் - கடற்கரைச் சோலை. உழிதருதல்- திரிதல்—(8) வியர் - வேர்வை. வியர் இலங்கு - தோள் - என்க. தோள்களை - தோள்களினால். உருபு மயக்கம். துயர் இலங்கும் உலகு - பிறவித் துன்பத்தால் மிகும் இவ்வுலகம். ஊழி - உகமுடிவிற்பேரும் பெருநீர்ப் பெருக்கு என்ற பொருளில் வந்தது. ஊழி தோன்றும் பொழுதெல்லாம் பெயர் இலங்கு - ஒவ்வோர் ஊழியினும் ஏனை உலகம் அழியத் தான் அழியாது நின்று ஒவ்வோர் பெயரும் விளங்கப்பெற்ற. மூலமலம் பக்கு வப்படும் பொருட்டுச் சிருட்டியும், கன்மமலம் மக்குவப்படும் பொருட்டும், உயிர்கள் இளைப்பாறும் பொருட்டும், மாயா மலச்சத்திகள் வலிபெறும்பொருட்டும், சங்காரமும் செய்யப்படுமாதலின், பிறவியை விளைக்கும் மும்மலமும் பக்குவப்படும்படி உலகினை ஒடுக்குதலும் மீளத் தோற்றுவித்தலும் செய்தலின், பல ஊழிகள் தோன்றுவன. தலமாகிய பொருள் அழியாதபோது அதன் பெயராகிய சொல்லும் அழியாது ;

ஆதலின் பெயர் இலங்கும் என்ருர். "முன்ன ணிகழ்ந்த பன்னி ருகத்து, வேறு வேறு பெயரி னூறின் றியன்ற, மையறு சிறப்பிற் றெய்வத் தன்மைப், புகலி" (கழுமல. மும். கோ. 10); "பன்னிரண்டு திருப்பெயர்த்தால்" (1912) என்று இக் கருத்தையும், இப்பாட்டின் கருத்தை 1974-லும் விளக்கினர் ஆசிரியர்—(9) தாள்நுதல் செய்து - திருவடியையும் திருமுடியையும் குறிவைத்து; இறைகாணிய - இறை வரைக் காணும்பொருட்டு; இறுதியைக் (முடிவைக்) காணும்பொருட்டு என்றலுமாம்; நீணுதல்-நீளுதல் என்பது நீணுதல் என மருவிற்று. "நண்ணனல் வேவாத நற்றவர்" (போதம் 10) "நீணுலகெலாம்" (தேவா) என்புழிப்போல. நீணுதல் செய்தலாவது மேன்மேற் பறந்தும் கீழ்க்கீழ் அகழ்ந்தும் செல்லுதல்; சேய்தோழிய - செய்து பயன் பெருது நிற்கும்படி; நிமிர்தல் - அப்பாற்படுதல்; பேணுதல் - காத்தல்; இப்பாட்டின் நுதலிய பொருளை ஆசிரியர் 1975-ல் விரித்தருளினர்—(10) சமண் - சமண் சமயத்தவர். புறங்கூற - புறச்சமயம்பற்றி இகழ்ந்துகூற; நேறிநில்லா உலகம் ஒத்த சோல்ல என்க. நேறி - இறைவனூல்களில் விதித்த நெறி; ஒத்த - அப் புறங் கூற்றுமொழியுடன் ஒத்த; மனம் போனபடிக்கான - பிதற்றுகிய; மத்தயானை - ஓர் அசுரன்; மாயம் இதுவென்ன - தேவர்கள் அஞ்சிவந்து அபயம் புகுந்து கண்மூடித் திறக்குமுன் யானையை உரித்துப் போர்த்து விடுதலின் இது வியப்பாகிய ஒரு மாயமோ என்னும்படி.—(11) அருநேறிய - அரிய நெறிகளை வகுக்கின்ற. முனி - பிரமதேவர். போய்கை - பிரமதீர்த்தம். அலர் மேய - அலர் போய்கைப் பிரமாபுரம் என்க. பேரு நேறிய - முத்தி நெறியை உடைய. பேரு நேறிய - பேம்மான் என்க. இப்பாட்டில் நேறிய என்றவிடம் எல்லாம் அகரம் பெயரெச்ச விகுதி. ஒரு நேறிய மனம் - ஒருமைப்பட்ட மனநிலை. உணர் - உணர்ச்சியிற்றெளிந்த. திருநேறிய தமிழ்-சிவநெறிகாட்டும் தமிழ்; ஏனைய மறையாகிய தேவார திருவாசக முதலிய சைவத் திருமுறைகளுக்கும் பொருந்தும். "தோடு செய்த திருநெறிய செந்தமிழ்" (திருத் தொண்டர் புராணவரலாறு-90); "திருநெறித் தமிழ் வல்லபேர்" (ஷை 67). "மல்ல னெடுந் தமிழ்" (1973) என ஆசிரியர் இதனை விளக்கஞ்செய்தல் காண்க; தோல்வினை தீர்தல்-இனி அனுபவித்துக் கழிக்கும்படி எஞ்சிநிற்கும் பழவினை. இது தீர்ந்தால் மேலைக்குப் பிறவி வித்தாகிய வினையில்லாமையின் பிறவியில்லை என்றும், முத்தியாம் என்றும் கூறியபடி; பதிகப்பயன் கூறியவாறு. உயிர்களின் பிறவித் துன்பநீக்கி முத்திப்பயன் காட்டியருளும் ஆசாரியராகப் பிள்ளையார் அவதரித்தாராதல் குறிப்பு. "இவனன்றே" என்று சுட்டிக்காட்டிய தொடக்கமும், இறுதியில் திருவைந்தெழுத்தை உபதேசித்து முத்தி காட்டி "உறும் பொருளாற் சொன்ன தமிழ் வல்லார்க்கு" "அறும்பழிபாவ மவல மிலாரே" என்றும், அவர் "மேற் பந்த பாச மறுக்க வல்லார்களே" என்றும் முடி பருளியதும் கருதுக. இக்கருத்தே பற்றி "எம்பந்த வல்வினை நோய் தீர்த்திட் டெமை யாளுஞ் சம்பந்தன்" என்று திருவிசைப்பாவினுள் பிள்ளையாரை ஆசாரியராந் தன்மைபற்றியருளியதும், பிறவும் காண்க. பதிகப்பயன் இவ்வாறே பிற பதிகங்களி னும் வருவனவும் அவ்வப்பயன்களை அன்றுமுதல் இன்றளவும் தந்தே நிலவும் உண்மையும் காண்க.

வேறு

1980. மறைகள் கிளர்ந்தொலி வளர முழங்கிட, வானோர்தந்
நிறைமுடி யுந்திய நிரைமணி சிந்திட நீள்வானத்
துறையென வந்துல கடைய நிறைந்திட வோவாமெய்ப்
போறைபேரு குந்தவ முனிவ ரெனுங்கடல் புடைசூழ, அஉ

1981. அணைவுற வந்தெழு மறிவு தோடங்கின வடியார்பால்
இணையில் பவங்கிளர் கடல்க ளிகந்திட விருதாளின்
புணையரு ளங்கணர் பொருவிடை தங்கிய புணர்பாகத்
துணையொ டணைந்தனர் சுருதி தொடர்ந்த பெருந்தோணி. ௮௫

1980. (இ - ள்) மறைகள்...முழங்கிட - வேதங்கள் எழுந்து ஒலிவளரும்படி முழக்கம் செய்யவும், வானோர்...சிந்திட - தேவர்களுடைய நிறைந்த கிரீடங்கள் ஒன்றோடொன்று தாக்கலால் வரிசையாகிய மணிகள் சிந்துதலினாலே; நீள்...நிறைந்திட-அவை நீண்ட ஆகாயத்தினின்றும் வீழும் நீர்த்துளிகள்போல வந்து உலகத்தில் எங்கும் நிறைந்திடவும்; ஓவா...புடைசூழ - இடையறாது மெய்ம்மையும் சாந்தமும் பெருகும் தவமுனிவர்களின் கூட்டமாகிய கடல் பக்கங்களில் சூழவும், ௮௪

1981. (இ - ள்) அணைவுற...அடியார்பால்-தம்மை வந்து அடையும்படி வந்து எழுகின்ற பரிபக்குவப்பட்ட உணர்ச்சி கைகூடிய அடியார்களிடத்தினின்றும்; இணையில்...இகந்திட - ஒப்பற்ற வலிமையுடைய பிறவி பெருகும் கடல்கள் நீங்கும் படி; இருதாளின்...அங்கணர் - தமது இரண்டு பாதங்களாகிய இனிய புணையை அருளும் அங்கண்மையுடைய திருத்தோணியப்பர்; பொருவிடை...தோணி - பொருகின்ற இடபத்தின்மேல் தம்முடனே தங்கிய இணைந்த பாகத்தில் எழுந்தருளிய துணைவியாருடனே வேதங்கள் தொடர்ந்த பெருந்திருத்தோணியில் அணைந்தனர். ௮௫

இந்த இரண்டுபாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1980. (வி - ரை) மறைகள்......முழங்கிட - வேதங்கள் தாமே சத்தித்து மங்கல முறை ஒலிபெருக ஆரவாரித்தன. மறைகளாய் ஒலித்த முன்னை நிலையில் ஆதி அருமறை வழக்கம் அருகிப் பூதிசாதன விளக்கம் போற்றல் பெறாதிருந்தது (1916); இனி, அதுவே எழுதுமறையாகி இத்திருப்பதிகமாகிய மல்ல னெடுந்தமிழ் உருவுபெற்றுப் பிள்ளையார் திருவாக்கினின்றும் போந்தபோது அருகிய மறை வழக்க மிகுந்திடவும், பூதிசாதனம் போற்றல் பெறவும் காரணமுண்டாயிற்றுதலின் அம் மறைகள் ஒலிவளர முழங்கின என்க. ஒலிவளர்தலாவது முன் ஒரு வகையாய் நின்றது இனி இருவகையாலும் ஒலித்தல்.

வானத்து உறை என - வானினின்றும் வீழும் நீர்த்துளிகள்; நீர்த்துளிகள் முத்துக்கள்போல உள்ளமையால் மெய்பற்றிவந்த உவமம். உறை - நீர்த்துளி. மழைத்துளிகள் இப்பியின் வயிற்றிற் புக்கபோது முத்துக்கள் உண்டாவன என்பதும் குறிப்பு.

உலகு அடைய - அடைய - முழுமையும். உலகடைய - உலகை அடையும்படி என்றலுமாம். உலகை அடைதலாவது வானோர் முடியின் மணிகள், அங்கிருத்தலினும் உலகின் கீழ் அடைதல் அடியார் சார்பினாலுளதாகும் சிறப்பினைத்தரும் என்று வந்து அடைந்தனபோல எனத் தற்குறிப்பேற்றக் குறிப்பு.

ஓவா மெய்ப் பொறைபெருகும் - வாய்மையும் பொறையும் இடையறாது பெருக நிகழ்வது தவத்தின் இயல்பு என்பதாம்.

கடல் - முனிவர்கூட்டம் நிறைதல் கடல் என்றுபசரிக்கப்பட்டது. 82

1981. (வி - ரை) அணைவுற வந்தெழு அறிவு தொடங்குதல் - காரணமும், புணை யருளுதல் காரியமுமாம்.

அணைவுற - தாள்களைத் தஞ்சமாக அடையும்படி. அடியார்பால் - அடியாரினின்றும்; பால் - நீக்கப்பொருளது.

**இணையில் பவம்** - பிறவி ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்ந்து மாறி மாறி அகப்படுத்துதலின் இணையில் என்றார். இணையில் - இருதாள் என்று கூட்டியுரைத்தலுமாம்.

**தாளின் புணை** - (பவங்களை) கடல் என்றதற்கேற்பப் புணை என்றார். "அஞ்செழுத்தின் புணை பிடித்து" (திருவா). உருவகம்.

**அங்கணர்** - அடைந்தார்க்கருளும் அருட்கண்ணையுடையார் என்ற குறிப்பு. திருத்தோணியப்பர்.

**பொருவிடை - புணர்பாகத்துணை** - முறையே "பொருவிடைமேல்" என்றும், "பொன்மலை வல்லி" என்றும் முன் (1962) கூறியது காண்க. துணை - துணைவியார்; பெரியநாயகியம்மையார். விடை - "விடையேறி" (தேவா); துணை - "தோடுடைய" (தேவா).

**சுருதி தொடர்ந்த பெருந்தோணி** - தோணியின் வடிவெடுத்து வேதங்கள் இறைவரைத் தொடர்ந்து கொண்டன என்பது குறிப்பு. சுருதிகளாற் றுதிக்கப்பட்ட என்றலுமாம். தோணியின்கண் - என்று ஏழனுருபு விரிக்க. அணைந்தனர் - விண்ணிறைந்த பெருகொளியால் (1972) பொய்கையின்மேல் பிள்ளையாருக்குக் காட்சி தந்து நின்ற அந்நிலையினின்றும் தோணியில் அணைந்தனர்.

**இருதாளின் புணைஅருள்** - ஞானம் கிரியை என்ற இரு தாள்களாகிய புணையினை, அணையும் அறிவு தொடங்கிய அடியார்கள் பற்றும்படி ஆசாரியத்தன்மை அருளித் தந்து பிள்ளையாரது பதிகத்தை அருளிய அங்கணர் என்றதோ ருட்குறிப்பும் காண்க. பிள்ளையாரின் அவதார உள்ளுறை, பரசமய நிராகரிப்பும் திருநீற்றின் ஆக்கமும் ஆம் என்று முன் கூறியது காண்க.

**இப்பொருளில் அணைவுற......அடியார்** - அருள்விளக்கம் கண்டு அறிவு தொடங்கிச் சீகாழியில் வந்தணைந்த அடியார்களும், திருநனிபள்ளி - தலைச்சங்காடு முதலிய தலங்களில் அங்கங்கும் வந்தணைந்தோரும், அணிமுத்தின் சிவிகைமுத லணிதாங்கிச் செல்ல அணைந்தவரும், கொல்லிமழவன் - சிவநேசர் முதலாயினரும், மங்கையர்க்கரசியார் - குலச்சிறையார் - நெடுமாறர் பாண்டிநாட்டவர் முதலாயினோரும், வாதுக்கென அறிவு தொடங்கி வந்தணைந்த புத்தர் முதலாயினோரும், ஓடத்திலேறி உடன் அணைந்த அடியாரும் முதலாகப், பெருமணத்தில் வீடுபெற வந்தணைந்தார் ஈறாக உள்ள எண்ணிறந்த எல்லாரையும் கொள்ளக்கிடத்தல் காண்க.

**தொடங்கிய** - அருளால் தொடங்கப்பெற்ற எனக் கொள்க.

**அறிவு தொடங்கிய...புணையருள்** - அவ்வறிவும் இறைவனே தரப்பெறுதல்வேண்டும். "அவனருளாலே அவன்றாள் வணங்கி" (திருவா); இருதாளின் புணை - "கத்தித் திரிபிறவிச் சாகரத்து ளாழாமே - பத்தித் தனித்தெப்பம் பார்வாழத் தந்தபிரான்" (பிள். திருத்தொகை. 27-28), "பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத், துறவியெனுந் தோற்றோணி கண்டீர், நிறையுலகிற்...சம்பந்தன், றன்மாலை ஞானத் தமிழ்" (பிள். மும். கோவை-11) முதலிய (பதினொராந் திருமுறை) நம்பியாண்டார் நம்பிகள் திருவாக்குக்கள் காண்க. இருதாள் - ஞானக்கிரியா சத்திகளே இரண்டு திருவடியாம் என்பது மரபு.

**அணைந்தனர் - பெருந்தோணி** - ஞானப் பாலூட்டி அழுகைதீர்த் தருள்புரிந்தார் (1966) என்ற அப்போதே இறைவர் வெளிப்பட்டுவந்த செய்தி முற்றியதாயினும், தந்தையார் போந்து முனியவும், பிள்ளையார் சுட்டிக்காட்டிப் பாடி முடிக்கவும் கூடிய இவ்வளவும் அவர் விண்ணிலே கோலங்காட்டி நின்றருளியது அடியார்களுக்கு இருதாளின் புணையாகிய தன்மையை அருளும் பொருட்டேயாம் என்க. என்னை?

பிள்ளையாரது அருட்பேருபதேசமாகிய திருப்பதிகங்களே அப்புணையின் தன்மை வாய்ந்தன வென்பதும், சுட்டிக்காட்டுமளவும் அதற்குத் தாம் பொருளாய் நின்றிருத்தல் வேண்டுமென்பதும் கருதுக. "நிருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தலெளி தாமே" என்று இங்குத் தொடங்கிய பிள்ளையார், "பெறும்பதநல்லூர்ப் பெருமணத் தானை, யுறம்பொருளாற் சொன்ன வொண்டமிழ் வல்லார்க்கு, அறும்பழி பாவ மவல மிலாரே, "தமிழ்ஞான சம்பந்தன்சொல்...வல்லாரெலாம் பந்தபாச மறுக்க வல்லார்களே" என்று முத்திபஞ்சாக்கர உபதேசத்துடன் முடித்தருளுதலும், அவற்றுள் தமிழ்பற்றிக் கூறுதலும், "மல்லனெடுந் தமிழாலிம் மாநிலத்தோர்க் குரைசிறப்ப" (1973) என்றதும், பிறவும் கருதுக. தமிழ்ப் புணையருளுதல் நிகழ்ந்துவிட்டதாதலின் அதன்பொருட்டு அதுகாறும் வெளிப்பாடுற்று நின்றருளிய இறைவர் பெருந்திருத் தோணிக்கு எழுந்தருளினர் என்று காரணகாரிய முணர்த்திய சிறப்பும் கண்டுகொள்க. "புணை" அருளியதனால் அங்கணர் அணைந்தனர் என்க.

இவ்வாறு இச்சரிதம் பற்றிய பெருங்கருத்துக்கள் பலவும் ஊற்றெடுத்துத் தோன்ற நிற்பது இத்திருப்பாட்டின் தெய்வக் கவிநலம். மெல்லிசைச் சந்த வண்ண யாப்பமைதியும் அடியார்க்கெளிவரும் அங்கணரின் அருளின் தன்மை குறிப்பது. 83

1982. அண்ண லணைந்தமை கண்டு தொடர்ந்தெழு மன்பாலே
மண்மிசை நின்ற மறைச்சிறு போதக மன்னுரும்
கண்வழி சென்ற கருத்து விடாது கலந்தேகப்
புண்ணியர் நண்ணிய பூமலி கோயிலி னுட்புக்கார். அச

(இ-ள்) அண்ணல் அணைந்தமை கண்டு - இறைவர் தோணியில் அவ்வாறெழுந்தருளியதனைக்கண்டு; தொடர்ந்தெழும் அன்பாலே - அவரைத் தொடர்ந்தெழுகின்ற அன்பினாலே; கண்வழி...கலந்து ஏக - கண்களின் வழியே சென்ற கருத்து விடாமற் கலந்து ஏகியதனால்; மண்மிசை...அன்னாரும் - பொய்கைக் கரையின்கண் நிலத்தில் நின்றருளிய வேதச் சிறு யானை போன்ற பிள்ளையாரும்; புண்ணியர்...உட்புக்கார் - புண்ணியராகிய சிவபெருமான் அணைந்த அழகிய திருத்தோணிக் கோயிலினுட் சென்று புக்கனர்.

(வி-ரை) அணைந்தமை - "பெருந்தோணியில் அணைந்தனர்" என்று முன் பாட்டிற்கூறிய அதனை; இரண்டனுருபு விரிக்க.

தொடர்ந்து எழும் அன்பாலே - அவரை விடாது தொடர்ந்து அணைய வேண்டுமென்று மேன்மேல் எழுகின்ற அன்புகாரணமாக. அன்பாலே - ஏக - உட்புக்கார் என்று முடிக்க. தொடர்தல் - விடாது பற்றிச் செல்லுதல். முன்னைத் தொடர்புமாம்.

மண்மிசை - நிலத்தின்மேல்; பிரமதீர்த்தப் பொய்கைக் கரையின்கண். இறைவர் காட்சி தந்து விண்மிசை நின்றாராகப், பிள்ளையார் காட்சி கண்டு மண்மிசை நின்றார். மிசை - மேன்மை பெற்று என்ற குறிப்புமாம்.

மறைச் சிறுபோதகம்-வேதியச் சிறுவராகிய யானைக்கன்று; போதகம்-யானைக் கன்று; "வைதிக வாரணம்" என்பர். (தக்கயாகப் பணி - 183; திருவால - புரா - 372; கடம்பவன புரா - லீலாசங்கிர - 37). போதகம் - போதிக்கின்ற - உபதேசிக்கின்ற - பொருளாவார் என்றதும் குறிப்பு. சிவன் சிவம் என வருவதுபோலப் பெருமைபற்றிப் போதகன் என்பது போதகம் என வந்ததென்றலுமாம்.

**கண்வழிசென்ற கருத்துவிடாது கலந்து ஏக** - கண்வழி சென்ற கருத்தாவது "ஐந்துபே றறிவுங் கண்களே கொள்ள" (252) என்ற நிலை; ஆண்டுரைத் தவை ஈண்டைக்குமாம். கலந்து - ஏனைக் கரணங்கள் குணங்கள் செயல்களுடன் ஒத்துக் கலந்து. ஏக - ஏகுதலினால்; காரணப்பொருளில் வந்தது. உட்புகுதலுக்குக் கருத்துக் கலந்தேகுதலும், அவ்வேகுதலுக்குத் தொடர்ந்தெழும் அன்பும் முறையே காரணமாயின.

**புண்ணியர்** - சிவபெருமான்; "புண்ணியப் பொருள்" "புண்ணியா வுன்னடி" (தேவா), "புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே" (சித்தி. 8-31). "போக மீன்ற புண்ணிய னெய்த கனையேபோல்" (சீவக) எனப் பிறருங் கூறுதல் காண்க.

**நண்ணிய** - அணைந்த; எழுந்தருளிய; முன் நண்ணிய - பின் வெளிப்போந்து - பின் சென்று அணைந்த.

**பூமலிகோயில்** - பெருந்தோணிக் கோயில்

**உட்புக்கார்** - பொய்கைக் கரையினின்றும் இறைவரைக் கண்டுகொண்டு அவ்வண்ணமேயாகச் சென்று திருத்தோணிக் கோயிலினுள்ளே பிள்ளையார் புகுந் தனர். 84

1983. ஈறில் பெருந்தவ முன்செய்து தாதை யெனப்பெற்றார்
மாறு விழுந்த மலர்க்கை குவித்து மகிழ்ந்தாடி
வேறு விளைந்த வெருட்சி வியப்பு விருப்போடுங்
கூறு மருந்தமி ழின்பொரு ளான குறிப்போர்வார், ௮௫

1984. தாணுவி னைத்தனி கண்டு தொடர்ந்தவர் தம்மைப்போற்
காணுதல் பெற்றில ரேனு நிகழ்ந்தன கண்டுள்ளார்
தோணி புரத்திறை தன்னரு ளாத றுணிந்தார்வம்
பேணு மனத்தொடு முன்புகு காதலர் பின்சென்றார் ௮௬

1983. (இ - ள்) **ஈறில்...எனப் பெற்றார்** - எல்லையில்லாத பெரிய தவத்தை முன்னேசெய்து (இவர்க்குத்) தந்தை என்று சொல்லும் நிலை பெற்ற சிவபாத விருதயர்; **மாறு...மகிழ்ந்து ஆடி**-(ஓச்சிய) சிறு கோல் கீழே நழுவி விட்ட மலர்க்கைகளைக் கூப்பிக்கொண்டு மகிழ்ந்து ஆனந்தக் கூத்தாடி; **வேறு......விருப்போடும்**-வேறாக விளைந் தனவாகிய வெருட்சியும், வியப்பும், விருப்பும் என்ற இவற்றுடனே கூடியவராய்; **கூறும்...ஓர்வார்** - பிள்ளையார் எடுத்துக்கூறும் அருந்தமிழின் பொருளாகிய குறிப் பினை ஓர்வாராகி, ௮௫

1984. (இ - ள்) **தாணுவினை...பெற்றிலரேனும்** - சிவபெருமானைத் தனி கண்டு தொடர்ந்தவராகிய பிள்ளையாரைப்போல அவரைத் தாம் காணப் பெற்றிலா ராயினும்; **நிகழ்ந்தன கண்டுள்ளார்** - நிகழ்ந்தனவாகிய அடையாளக் குறிப்புக்களையும் திருப்பதிகத் தமிழ்பாடிச் சுட்டிக்காட்டியதனையும் கண்டாராதலின்; **தோணிபுரத்து இறை...துணிந்து** - இது தோணிபுரேசருடைய திருவருள் ஆதலைத் துணிந்துகொண்டு; **ஆர்வம்...பின்சென்றார்** - ஆசை பெருகிய மனத்துடனே முன்சென்று புகும் திரு மகனாரைப் பின்றொடர்ந்து சென்றனர். ௮௬

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

1983. (வி - ரை) **ஈறில் பெருந்தவம் முன்செய்து** - ஈறுஇல் - என்றது தொகையாலும், பெரும் - என்றது வகையாலும் மிகுதி புணர்த்தின; **முன்** - முற் பிறப்பிலும், இப்பிறப்பில் இதற்கு முன்பும். **தவம்** - சிவவழிபாடு.

**தாதை எனப் பெற்றார்** - பிள்ளையார்க்குத் தாதை என்னும் பேறு பெற்றவர். **என** - தாதை என்றநிலை உபசார மாத்திரையளவாய் நிற்கத்தக்கது என்பது குறிப்பு.

**மாறு விழுந்த** - **மாறு** - ஓச்சி எடுத்த சிறுகோல்; "சிறிய தொருமாறு கொண்டோச்ச" (1971); **விழுந்த** - தானே நழுவிய. **மலர்க்கை குவித்து** - மாறு எடுத்த கையும் மற்றைக் கையும் சேர்த்து மேலே கூப்பி. ஓச்ச எடுத்த கை, கும்பிடக் கூப்பியதாயிற்று என்க.

**வேறு விளைந்த வெருட்சி வியப்பு விருப்பு** - **வேறு** - முன் கொண்டிருந்த மனநிலையின் வேறாக; **விளைந்த**-வெருட்சி முதலிய மூன்றும் ஒன்றன்பின் ஒன்றாய் மேன்மேல் வெவ்வேறாகி வருதலின் விளைந்த என்றார். **வெருட்சி** - திருவருள் விளைவறியாது முனிவுகொண்டதன்பொருட்டுப் பயம். **வியப்பு** - தாமொன்று எண்ண அது, எண்ணாத வேறொரு பெருநிலையாய்க் கைவரப் பெற்றது கண்ட மனநிலை. **விருப்பு** - அவ்வாறு கைவந்து கிடைத்த அதனில் எழும் ஆசை. **விருப்போடும் - ஓர்வார்** என்க.

**கூறும் அருந்தமிழின் பொருளான குறிப்பு** - **கூறும்** - "இவன்" என்று சுட்டிக் கூறும்; **அருந்தமிழ்** - திருநெறிய தமிழ் என்றது; தமிழது இனிய பொருள் என்றலுமாம். **தமிழ்** - சொல்லும், **பொருள்** - அதனால் நுதலப்படுபொருளும் என்க. **தமிழின் குறிப்பு** - பொருளின் குறிப்பு என்க. **ஓர்தல்** - கண்டதும் கேட்டதும் கொண்டு கருதலளவையால் அறிதல்; **ஓர்வார்** - ஓர்பவராகி; முற்றெச்சம்; **ஓர்வார் - பின் சென்றார்** என்று மேல் வரும் பாட்டுடன் கூட்டுக. 85

1984. (வி - ரை) **தாணு** - நிலை பெற்றவர். சர்வசங்காரத்தினும் தாம் அழியாது நிலைத்தவர்; பெருமான்.

**தனிகண்டு** - **தனி** - தாமே, வேறெவரும் காணாத, தனியாக; பிள்ளையார் கண்டு தொடர்ந்ததுபோல் முன்னும் பின்னும் வேறெவரும் கண்டாரிலர் என்க.

**கண்டு தொடர்ந்தவர்** - தனி தொடர்ந்து என்று ஈண்டும் கூட்டுக; ஆளுடைய பிள்ளையார். "கண்டு தொடர்ந்தெழு மன்பாலே" (1982) இறைவர் விண்மிசையிலும் தாம் மண்மிசையிலுமாக உள்ளும் புறம்பும் கண்டுகொண்டே இவ்வாறு தொடர்ந்தார் பிறரிலர் என்பதாம்.

**தொடர்ந்தவர் தம்மைப்போல் காணுதல் பெற்றிலரேனும் நிகழ்ந்தன கண்டுள்ளார்** - தமக்கியன்ற வகையாற் கண்டார் என்க. **நிகழ்ந்தன** - பால் உண்ட அடையாளங்களும், திருப்பாட்டும், சுட்டிக்காட்டிய வகையும் முதலியன. **கண்டுள்ளார்** - கண்டாராகிய சிவபாதவிருதயர்; பெயர். **நிகழ்ந்தன கண்டு**, (அதுகொண்டு) காணாத **திருவருளாதலைக்** கருதலளவையாலே **துணிந்து** என்க.

**முன்பு புகாது-பின்சென்றார்** - திருவருளாதல் துணிந்தாராதலின் அருள் பெற்றவரின் முன் செல்லுதல் முறையன்று என்ற மரபினாற் பின்சென்றனர் என்பதாம். **பின்செல்லுதல்** - பின்றொடர்ந்து செல்லுதல்.

**ஆர்வம் பேணும்** - ஆர்வத்தாற்பேணுகின்ற.

அறிந்தார்வம்—முன்புகு காதலர்—என்பனவும் பாடங்கள். 86

1985. அப்பொழு தங்க ணணைந்தது கண்டவ ரல்லாதார்
முப்புரி நூன்மறை யோர்க ளுரோம முகிழ்ப்பெய்தி
"யிப்படி யொப்பதொ ரற்புத மெங்குள?" தென்றென்றே
துப்புறழ் வேணியர் கோயிலின் வாயில் புறஞ்சூழ, அ௭

1986. பொங்கொளி மால்விடை மீது புகுந்தணி பொற்றோணி
தங்கியி ருந்தபெ ருந்திரு வாழ்வு தலைப்பட்டே
" யிங்கெனை யாளுடை யானுமை யோடி ருந்தா "னென்
றங்கெதிர் நின்று புகன்றனர் ஞானத் தமுதுண்டார். ௮௮

1985. (இ - ள்) அப்பொழுது...மறையோர்கள் - அப்பொழுது அங்கு நிகழ்ந்தனவற்றைக் கண்டவர்களும், காணாது கேட்டவர்களும், ஏனையோரில் முப்புரி நூலணிந்த வேதியர்களும்; உரோமம் முகிழ்ப்பெய்தி-மயிர்க்கூச் செய்தி; இப்படி... என்றென்றே - இப்படிப் போல்வதோர் அற்புத நிகழ்ச்சி வேறே எங்கு உள்ளது? என்று தாந்தாம் கூறி; துப்புறழ்...புறஞ்சூழ - பவளம் போன்ற சிவந்த சடையினை யுடைய சிவபெருமானது திருத்தோணிக் கோயிலின் திருவாயிற்புறத்தில் வந்து சூழ்ந்தார்களாக, ௮௭

1986. (இ - ள்) ஞானத்தமுதுண்டார் - ஞானவமுதினை உண்டருளிய பிள்ளையார்; பொங்கொளி...தலைப்பட்டே - பொங்கும் ஒளியுடைய மால் விடையின் மேல் போந்து அழகிய பொன் பொருந்திய தோணியில் எழுந்தருளியிருந்த பெருந் திருவாழ்வினைச் சென்றுகூடி; " இங்கு...இருந்தான் " என்று - என்னையாளுடைய பெருமான் உமையம்மையாருடன் இங்கு எழுந்தருளியிருந்தான் " என்ற கருத்துடன் (அச்சொற் பொருளுடைய திருப்பதிகத்தினை); அங்கு...புகன்றனர் - அவ்விடத்தில் திருமுன்பு நின்று சொல்லித் துதித்தருளினர். ௮௮

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1985. (வி - ரை) அணைந்தது - திருத்தோணியிற் பிள்ளையார் அணைந்ததும், அவரைப் பின்றொடர்ந்து தாதையார் அணைந்ததும்.

**கண்டவரும் அல்லாதாரும் மறையோர்களும்** - உம்மை விரித்துரைத்துக்கொள்க. **அல்லாதார்** - காணாதாராயினும் கேட்டறிந்தோர். மறையோர்களை வேறெடுத்தோதியது தங்குலத் தொருபிள்ளை என்ற தனிக் களிப்பை எடுத்துக்காட்ட.

**உரோம முகிழ்த்தல்** - மயிர்ப் புளகங் கொள்ளுதல். அற்புதம் கொள்ளும் மனநிலையின் மெய்ப்பாடு.

**என்றென்றே** - பலமுறை சொல்வதும், பலவாறு சொல்வதும், பலரும் சொல்வதும் குறிக்க அடுக்கிக் கூறினர்.

**துப்பு உறழ் வேணி-துப்பு** - பவளம்; **உறழ்தல்** - போன்றிருத்தல்; **கோயில்** - திருத்தோணிக் கோயில்.

**புறஞ்சூழ** - உள்ளே பிள்ளையார் எழுந்தருளினாராதலின் ஏனையோர் தகுதிபற்றிப் புறத்திற் சூழ்ந்தனர்.

**வாய்தல்**—என்பதும் பாடம். 87

1986. (வி - ரை) **பொங்கு ஒளி மால் விடை** - விடை, அறத்தின் உருவமாதலின் ஒளி எக்காலத்தும் குறையாது பெருகி விளங்கும் என்க. **மால்** - பெரிய.

**விடைமீது** - ஏறி என்க. **தோணி** - புகுந்து தங்கியிருந்த என்று கூட்டுக.

**பெருந் திருவாழ்வு** - பெருந்திருவாவது திரு வெனப்படுவன வெல்லாவற்றுள்ளும் பெரியதாகிய முத்தித்திரு. வாழ்வுதரும் பொருளை வாழ்வென்றது உபசாரம்.

**தலைப்படுதல்** - கூடப்பெறுதல். "தம்பிரா னுரைத் தலைப்படக் கிடைத்தபின்" (ஏயர். புரா. 91).

இங்கெனை...இருந்தான் - திருப்பதிகத்தின் மகுடமும் கருத்துமாகிய குறிப்பு. புகன்றனர் - போற்றினர் ; எடுத்தோதித் துதித்தனர்.

ஞானத் தமுதுண்டார் - ஞானவமுது தந்தாண்ட தன்மை காரணமாக இவ்வாறு ஆளுடையான் என்று புகன்றனர் என்பது குறிக்க உடம்பொடு புணர்த்தியோதினார்.

மீது புகுந்தோளிர்—நின்று புகுந்தனர்—என்பனவும் பாடங்கள். 88

புறவம் - திருச்சிற்றம்பலம் பண் - தக்கேசி

நறவ நிறைவண் டறைதார்க் கொன்றை நயந்து நயனத்தால்
சுறவஞ் செறிவண் கொடியோ னுடலம் பொடியா விழிசெய்தான்
புறவ முறைவண் பதியா மதியார் புரமூன் றெரிசெய்த
இறைவ னறவ னிமையோ ரேத்த வுமையோ டிருந்தானே. 1

பொன்னார் மாட நீடுஞ் செல்வப் புறவம் பதியாக
மின்னா ரிடையா ளுமையா ளோடு மிருந்த விமலனைத்
தன்னார் வஞ்செய் தமிழின் விரக னுரைத்த தமிழ்மாலை
பன்னாள் பாடி யாடப் பிரியார் பரலோ கந்தானே. திருச்சிற்றம்பலம். 11

பதிகக் குறிப்பு :—பொய்கைக் கரையில் வெளிப்பட வந்து அருளி என்னை ஆளாகக்கொண்ட உடையவர் உமையாளோடும் திருத்தோணியில் இங்கு இருந்தார். ஆசிரியர் இதனை "இங்கெனை யாளுடையா னுமையோடும் இருந்தான்" என்று அங்குப் புகன்றனர் (1886) என்று அறிவித்தமை காண்க. பதிகமுழுதும் "உமையோடிருந்தானே" என்று முடியும் மகுடமும், "எனையாளுடையான்"(4), "என்னையுடையான்"(6), " இருந்த விமலனை " (11) எனவரும் பதிகச் சொற்றொடர்களும் காண்க. இது பிள்ளையார் திருவாக்கினின்றும் போந்தவற்றுள் இரண்டாவது பதிகமும், திருத்தோணிக் கோயிலின் அருளப்பட்டவற்றுள் முதலாவது பதிகமும் ஆகும். எனையாளுடையான் - எனை உடையான் என்றவை திருஅருள் பெற்ற சிறப்பினைக் குறிக்கும் சரித ஆதரவுகளாம். "இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க" (திருவாசகம்) ; " துணிந்தேயுமக் காட்செய்து வாழ லுற்றால் " (திருநா. தேவா) ; " ஆளாயினி யல்லேனென லாமே " (நம்பி - தேவா) ; என இவ்வாறே இறைவர் ஆட்கொண்டவுடன் அவ்வாறு, ஆட்பட்டு உடையானுக்கு ஆளாயின அடிமைத் திறம் பற்றியே அனுபவித்துப் போற்றிய ஆர்வம் காண்க. " தன்னார்வஞ்செய் தமிழின் - மாலை " (பதிகம் - 11) ; " என்னுள்ளங் கவர் கள்வன் " என்றவையும் கருதுக.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) சுறவஞ் செறிவண் கொடியோன் - மீனக்கொடியுடைய மன்மதன் ; சுறவம் - மீனின் பொதுமை யுணர்த்திற்று. கொடியோன் - கொடுமை செய்பவன் என்ற குறிப்புமாம். புறவம் - இத்தலப் பன்னிரு பெயர்களுள் எட்டாவது பெயர். அறவன் - " அறவாழி யந்தணன் " (குறள்) ; " நீதி பலவுந் தன்ன துருவாம் " (பிள். தேவா) ; " அறவா " (1776) : இமையோ ரேத்த - உலகம் நீர்ப் பெருக்கினுள் அழுந்த வரும் வெள்ளத்தில் தோணியாக மிதத்தலின் தேவர்கள் பறவை வடிவுடன் தோணியை ஏந்திப் போற்றியிருந்தனர் என்ற சரிதக் குறிப்பு. " பார்கொண்டு மூடிக் கடல்கொண்ட ஞான்றுநின் பாதமெல்லாம், நாலைந்து புள்ளினமேந்தின வென்பர்" (திருநா. தேவா); பக்கம் ௨௭௪ III பார்க்க. இச்சரிதக் குறிப்பினாலும் இத்திருப்பதிகம் திருத்தோணியின்கண் நின்று அருளியது என்பது கருதப்படும்.

இறைவன்-முழுமுதலாகிய பதிப்பொருள். எம்மை ஆளுடையார் என்பதும் குறிப்பு. இருந்தானே - விண்ணிற் கண்டபடி போந்த பெருமான் இதோ இங்குவந் தெழுந் தருளியிருந்தான் என்ற சரிதக் குறிப்பு. ஏகாரம் - அற்புதக் குறிப்பு; தேற்றம்.—(2) உரவன் - வலிமையுடையவன். "ஒருதா மாகிய உரவோர்" (புற. 184). விகிர்தன் - (கிர்தன்-செய்யப்பட்டவன்; ஆக்கப்பட்டவன்). விகிர்தன் - ஆக்கப்படாதவன் - சுயம்பு என்றபடி. உகிர் - நகம்.—(3) பந்தம் - திருவடி பிரியாத் தொண்டு. கரிகாடு - உலகமழிந்த ஊழியினிடம்.—(4) கனை - கனைத்தல். எனையாளுடையான்-(1986).—(5) செங்கண் - நதுவெண் - முகிழ்வெண் - அடைகள் இயல்பு குறித்தன. முகிழ்த்தல் - முளைத்தல்.—(6) கேழல் எயிறு - பன்றியின் கொம்பு. திருமாலின் வராக அவதாரத்தில் பறிக்கப்பட்ட வென்றிக்குறியாக அணிந்தது. 'ஐயிரு பிறப்பினு மரியருச் சித்தலின்" (அரதத்தாசாரியர் சுலோக பஞ்சக மொழிபெயர்ப்பு). புன்னை - நெய்தனிலக் கருப்பொருள். "கடல்சூழ்ந் தழகார் புறவம்" (3). மடல் - பெரிய இலைகள். என்னையுடையான் - ஆளாக உடையவன் (1986). தோழம்-பேரெண் (எண்ணிறந்த). பொலிய - பொலியும்படி. சாவாது அவரவர் நிலையில் இருந்து விளங்கும்படி. பொலிய - அளித்த என்க. எண் - எண்ணுதல்.—(9) நெடியான் - திருமால். எண்ணும்மை தொக்கது. பொடி-திருநீறு. இடி - இடிபோன்ற ஒலி. "முழவதிர மழையென் றஞ்சி". முழவார் - முழவு - இயங்களின் பொதுமை. முழவார் - முழா முதலியவற்றை ஏந்தியவராய்.—(10) ஆலுதல் - மயிலின் இயற்கை. குழுவும் - தொகுதியாகக் கூடும். தழலும் உடையான் என்று கூட்டுக. தழல்-கையில் ஏந்தியது. எழில் வான் - செவ்வான ஒளி. உம்மை சிறப்பு. ஏலும் வகை - இயன்ற அளவு. "ஒல்லும் வகை"; முற்றும் ஏத்துதல் இமையோர்க்கு மரிது என்ற குறிப்பு.—(11) இருந்த - "தங்கி யிருந்த" (1986). ஆர்வஞ்செய் தமிழின் மாலை - செய் -(அன்பை) விளைக்கும். இன் - இனிய - (1987).

1987. இன்னிசை யேழு மிசைந்த செழுந்தமி ழீசற்கே
சொன்முறை பாடு தொழும்பருள் பெற்ற தொடக்கோடும்
பன்மறை வேதியர் காண விருப்பொடு பானுறும்
பொன்மணி வாயினர் கோயிலி னின்று புறப்பட்டார். அசூ

(இ - ள்) விருப்பொடு...வாயினர் - அன்புடனே ஞானவமுதத்தின் மணங் கமழும் திருவாயினையுடைய பிள்ளையார்; பன்மறை வேதியர் காண - எல்லையில்லாத மறைகளை ஓதும் வேதியர்கள் கண்டுகொண்டிருக்க; இன்னிசை...செழுந் தமிழ் - இனிய ஏழிசைகளும் பொருந்திய செழுந்தமிழ்த் திருப்பதிகங்களை; சொன்முறை ஈசற்கே பாடும் தொழும்பு - சொன்முறையாகச் சிவபெருமானுக்கே பாடுகின்ற திருத்தொண்டாகிய அடிமைத் திறத்தினையும்; அருள்-அருளினையும்; பெற்ற தொடக்கோடும் - பெற்ற தொடக்குடனே; கோயிலினின்று புறப்பட்டார் - திருக்கோயிலினின்றும் வெளியே புறப்பட்டனர்.

(வி - ரை) இன்னிசை ஏழும் இசைந்த - இதுவும் இறைவர் திருவாக்கோடொப்ப மறையேயாதலின் ஏழு இசைகளும் இசைந்து நிறைந்தன என்பது. இசை ஏழு - குத்தம் முதலாகிய ஏழு; சத்த சுரமென்பது வடமொழி. இசைந்த - முயற்சியின்றித் தாமே வந்து கூடிப் பொருந்திய என்பது குறிப்பு. ஏழும் - முற்றுமை.

ஈசற்கே - தமிழ் - பாடும் - என்க. ஏகாரம் பிரிநிலை. "ஈசன் கழலே பேணுஞ் சம்பந்தன்", "கொன்றையா னடியலாற் பேணா, வெம்பிரான் சம்பந்தன்,";

சொன் முறை - மேலே திருப்பதிக அமைப்புப்பற்றிச் சொல்லிய முறையில். 1975 முதல் 1978 வரை பார்க்க. முறை - திருமுறை என்றலும், உயிர்கள் வந்து திருவடியில் விண்ணப்பிக்கும் முறையீடாக என்றலும் குறிப்பு.

தொழும்பு - திருத்தொண்டு. "மீளா வடிமை" (தேவா).

தொழும்பும் அருளும் பெற்ற - என்க. எண்ணும்மைகள் தொக்கன. தொழும்பினை அருளப்பெற்ற என்றும், தொழும்பாகிய அருளினைப் பெற்ற என்றும் உரைப்பாருமுண்டு.

தொடக்கோடும் - புறப்பட்டார் - கோயிலினின்று வெளியே போந்தாராயினும், தொழும்பினாற் பிணைக்கப்பட்டபடியே போந்தனர். தொடக்குண்டே சரித்தனராதலின் புறம்போதல் என்பது உபசார மாத்திரையே என்பதாம்.

விருப்போடு பால் நாறும் - விருப்பு - திருவடியிற்கொண்ட ஆர்வம். "தன்னார்வஞ் செய்தமிழின் மாலை" என்றது காண்க. விருப்புடன் கூடிய ஞான அமுதம்; ஞானமும் அன்பும் கலந்து கமழும் திருவாக்கு என்பதாம். இவ்வாறன்றி விருப்போடு - புறப்பட்டார் என்று கூட்டிப் பின்னரும் மீண்டு வந்து தொழும் விருப்பத்துடன் வெளிப் போந்தனர் என்றுரைத்தலுமாம். "சேவடிக் கமலங் கருத்திலுற விடையருக் காதல் கொண்டு, நாமநெடுங் கதிருதிப்ப நண்ணினார் திருத்தோணி நம்பர் கோயில்" (1997) என்பது கருதுக.

பொன்மணி வாயினர் - பொன் - செம்பொன் போன்ற இதழ்களும், மணி - முத்துப்போன்ற திருமுறுவலும் பெறவைத்த குறிப்பு. பயின்றுரைக், களிம்பு நீங்கிய பொன்போலவும், கடைதலால் ஒளிவிடும் மணிபோலவும் ஆக்கும் தமிழ் பெறும் வாய் என்று இங்கு விசேட உரை காண்பர் திரு. ஆலாலசுந்தரம் பிள்ளை. செழுந்தமிழீசற்கஞ்—என்பதும் பாடம். 89

1988\. பேணிய வற்புத நீடருள் பெற்றபி ரான்முன்னே
நீணிலை யிற்றிகழ் கோபுர வாயிலி னேரெய்தி
வாணில விற்றிகழ் வேணியர் தொண்டர்கள் வாழ்வெய்துந்
தோணிபு ரத்தவர் தாமெதிர் கொண்டுது திக்கின்றார். ௯௦

வேறு

1989\. "காழியர் தவமே! கவுணியர் தனமே! கலைஞானத்
தாழிய கடலே! யதனிடை யமுதே! யடியார்முன்
வாழிய வந்திம் மண்மிசை வானோர் தனிநாதன்
ஏழிசை மொழியா டன்றிரு வருள்பெற் றனை"யென்பார்; ௯௧

1990\. "மறைவளர் திருவே! வைதிக நிலையே! வளர்ஞானப்
பொறையணி முகிலே! புகலியர் புகலே! பொருபொன்னித்
துறைபெறு மணியே! சுருதியி னொளியே! வெளியேவந்
திறையவ னுமையா ளுடனரு டரவெய் தினை"யென்பார்; ௯௨

1991\. "புண்ணிய முதலே! புனைமணி யரைஞா ணொடுபோதுங்
கண்ணிறை கதிரே! கலைவளர் மதியே! கவின்மேவும்
பண்ணியல் கதியே! பருவம தொருமூ வருடத்தே
யெண்ணிய பொருளாய் நின்றவ ரருள்பெற் றனை"யென்பார். ௯௩

1988. (இ - ள்) பேணிய...பிரான் முன்னே - விரும்பிய அற்புதமாகிய நீடிய திருவருளைப் பெற்ற பிள்ளையாரது திருமுன்பு; வாணிலவின்...தொண்டர்கள் - ஒளியுடைய சந்திரனிலும் மிக்கு விளங்குகின்ற சடையினையுடையசிவபெருமானது தொண்டர்களும்; வாழ்வெய்தும் தோணிபுரத்தவர் - வாழ்வடையும் திருத்தோணிபுரத்திலுள்ளவர்களும்; நீள்நிலையின்...நேர் எய்தி - நீண்ட நிலைகளுடன் விளங்குகின்ற திருக்கோபுர வாய்தலின் முன்பாக அடைந்து; தாம் எதிர்கொண்டு துதிக்கின்றார் - தாம் கூடி எதிர்கொண்டு துதிக்கின்றார்; (அவர்கள் துதிக்கின்றமை மேல்வருமாறு). ௧0

1989. (இ - ள்) வெளிப்படை. "காழியர்களுடைய தவப்பயனாக உள்ளவரே!; கவுணியர்களின் குலதனமாக வந்தவரே!; கலைஞான நிறைந்த ஆழ்ந்த கடல் போன்றவரே!; அக்கடலின் அமுதமானவரே!; முன் அடியார்கள் கண்டு வாழும் பொருட்டு இந்த மண் உலகத்தின்மேல், அவதரித்து வந்து தேவர்களது ஒப்பற்ற நாயகராகிய, சிவபெருமானும் ஏழிசைமொழியாளும் என்றிவருடைய திருவருளையும் ஒருங்கே பெற்றருளினீர்" என்பவர்களும்; ௧௧

1990. (இ - ள்) வெளிப்படை. "மறைகளை வளர்க்குந் திருவே!; வைதிகத்தின் நிலைப்பொருளே!; வளரும் ஞானமாகிய சூல் தங்கிய முகிலே!; புகலி நகரார்களுக்குப் புகலிடமே!; மோதியலைக்குங் காவிரித் துறையிற் பெறுமணியே!; சுருதிகளின் விளங்கும் ஒளியே!; இறையவர் உமையம்மையாருடன் வெளிப்பட்டெழுந்தருளி வந்து அருள்தரப் பொருந்தினீர்" என்பவர்களும்; ௧௨

1991. (இ - ள்) வெளிப்படை. "புண்ணியங்களின் முதலே!; மணிபுனைந்த அரைஞாணொடு போந்து காட்சியளிக்கும் கண்ணிறைந்த கதிரே!; கலைகள் வளரும் மதியே!; அழகு பொருந்தும் பண்களுக்கு இயலும் கதியே!; ஒருமூவாண்டாகிய பருவத்திலே, தியானங்கட்கெல்லாம் பொருளாய் நின்றவராகிய சிவபெருமானது திருவருளைப் பெற்றருளினீர்" என்பவர்களு மாயினார்கள். ௧௩

இந்த நான்கு பாட்டுக்களும் ஒருபொருள் பற்றியனவாய் ஒருமுடிபுபடுத்துரைக்க நின்றன.

1988. (வி - ரை) **பேணிய அற்புதம் நீடு அருள்** - **பேணிய** - முன்னை நிலையில் பேணியமை "மறக்குமா றிலாத வென்னை" (பிள். தேவா. திருத்தி) என்றதனாலும், அற்றை நிலையினும் முன் பேணியமை, "தொடர்ந்தபிரி வுணர்வொருகாற் கொண்டெழலும்" (1952) என்றதனாலும், இனியும் என்றும் பேண உள்ளமை, "என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே...வழிபடு மதனாலே" (தேவா) என்றதனாலும், பிறவாற்றானுமறிக. **அற்புதம்** - காணுந்தோறும் புதிது புதிதா யிருத்தல். **நீடுதல்** - எக்காலத்தும் குறையாது மிகுதல்.

**அருள் பெற்ற பிரான்** - ஆளுடைய பிள்ளையார். அருள் பெற்றதனால் எமக்குப் பிரான் (தலைவர்) ஆயினவர்.

**வாள் நிலவில் திகழ் வேணியர்** - நிலவினும் மிக்குச் சடை விளங்கும் என்றது; சூடிய நிலவினைச் செவ்வானம்போன்ற சடை விளங்குதலின்றிச் சடையினால் நிலவு விளங்கும் என்றதாம்.

**தொண்டர்களும் தோணிபுரத்தவர்களும்** - என்று எண்ணும்மை விரிக்க. அருளின் விளக்கம் கேட்டுப் பிள்ளையாரைக் கோபுரவாயிலில் முதலில் எதிர்கொண்டவர் திருத்தொண்டர்கள் என்பது குறிப்பு.

துதிக்கின்றார்களாகி-என்பார் - என்பார் - என்பார் - ஆயினர் என மேல்வரும் மூன்று பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க. 90

1989. (வி - ரை) தவமே - தனமே - கடலே - அழுதே - தவம் முதலிய பொருள்களின் தன்மை மிகுதிப்பாட்டினையே பிள்ளையாராகக் கண்டு துதித்தனர் என்க; " திருவேயென் செல்வமே " (தேவா) என்புழிப்போல. மேல்வரும் இரண்டு பாட்டுக்களினும் இவ்வாறே கொள்க. " ஞானத்தின் திருவுருவை " (புரா-728) என்பதும் காண்க. இனிக் " கால முலகம் " ( தொல் - சொல் - கிளவி 57 ) என்ற விதிப்படிக் காதலும் சிறப்பும் பற்றி, உயர்திணைச் சொல்லாயினும் அஃறிணைப் பாலா யிசைந்தன என்றலுமாம்.

தவம் - தவத்தின் பயன். காழியர் தவம் என்று முதலிற் கூறியது இப்பெரும் பேறு பெறும் வாழ்வு உலகில் ஏனையோர் எவர்க்குமின்றி முதலில் தம்மையுள்ளிட்ட காழிநகரவர்க்கு வந்தது என்ற பெருமிதம்பற்றியது.

கவுணியர் தனம் - தனம் - குலதனம். "கானவர் குலம் விளங்க" (662).

கலைஞானத்து ஆழிய கடல் - கலைஞானம் - அபரஞானத்தின் தொகுதி. " உவமையிலாக் கலைஞானம் " (1967). ஆழிய - ஆழ்ந்த. சிவனருள் பெறாத ஏனை எவர்க்கும் அளவு காண்டலும், அதனுட் பெறு மணிகளைப் பெறுதலும் அரிய என்பது.

அதனிடை அமுது - அமுது - இறத்தல் பிறத்தலை நீக்குவது. " உணர்வரிய மெய்ஞ்ஞானம் " ( ஷை ) என்ற கருத்து : கலைஞானத்தின் பயனை அடைந்தவர் ; அதனின் மேலாகிய திருவருளை அடைந்தவர் ; அதனின் மேலாய் உலக உபகாரமாக அதனை அடைந்தவர் என்க.

அடியார் முன் வாழிய வந்து - வாழிய - வாழும்பொருட்டு. முன் வந்து எனக் கூட்டுக. திருமேனிகொண்டு கண்முன்வரு தியானப் பொருளாகக் கண்டு பயன் பெற வந்து அவதரித்து என்பதாம். முன் வாழிய - அடியார்கள் முன்னே வாழ் வடைய என்றலுமாம். என்னை ? நல்லூர்ப்பெருமணத்தில் " ஈறில்பெருஞ் சோதி யினு ளெல்லாரும் புகச் " செய்து அதன்பின் தாம் புக்கு ஒன்றினாராகும் சரிதக் குறிப்புக் காண்க.

மண்மிசை வந்து என்றும், மண்மிசைப் பெற்றனை என்றும் இருவழியும் கூட்டி உரைக்கநின்றது. வாழியவந்து என்றதனால் வருதலினாற் றமக்கென ஒன்றும் வேண் டுவதில்லாதவர் என்பதாம். முன் பெற்றிருந்ததுபோலவே மண்ணின்மிசையும் அருளப் பெற்றனை என எச்சவும்மை விரிக்க.

தனிநாதன் - மொழியாள் என்றிருவரும் கூடிச் செய்த அருள் என்க. நாதனும் மொழியாளும் கூடிய சிவ சத்தி உருவமாகிய ஒன்றன் அருள் என்பது. தன் என்பது சாரியை : பன்மை யுருபுக்குத் தம் என்பது சாரியை. நாதனும் மொழியாளும் குண குணிகளாகப் பன்மையாற் கூறப்படினும் பொருட்டன்மையால் ( வஸ்து ) ஒன்றேயாதலின் தன் என்ற ஒருமைச் சாரியை புணர்த்தி ஓதினார் ; " தானுந் தன் றையலுந் தாழ்சடையோ ஞண்டிலனேல் " ( திருவா - கோத் - 15 ) ;

தனிநாதன் - முழுமுதல்வன்.

தமதிரு - என்பதும் பாடம். 91

1990. (வி - ரை) மறைவளர் திருவே - மறை வளர் - மறைகளை வளர்க்கும் என்றது " வேதநெறி தழைத்தோங்க " (1899) என்பதுமுதலாகச் சொல்லிய கருத்து. " வேத வேள்வியை " (தேவா) முதலிய திருவாக்குக்களும் காண்க. திரு-

திருப்போன்றவர். மறைகளால் வளர்க்கப்படும் என்றுரைப்பினு மமையும். தருவே என்பது பாடமாயின்(சாகை - உபசாகை) கிளை பக்கக்கிளை என்று மறைகள் வளர்வது போல அதனையே தமிழில் வளர்க்கும் கற்பகமே என்க. "வேதமென்னும் பாதவம்".

வைதிக் நிலை - வேதவொழுக்கம் நிலைபெறத் தங்குமிடம். "தொல்லைமறை விதிச்சடங்கு மறையோர் செய்யத் தோலொடுநூ ருங்கினுர் சுரர்கள் போற்ற" (புரா - 263); "இருநிலத்து மறைவழக்க மெடுத்தீர்நீர்" (ஷை - 1158) முதலியவை காண்க. "வைதிகவாரணம்" (தக் -பர)

ஞானப் போறை அணி முகில் - சிவஞானமாகிய சூல்கொண்டமேகம். போறை- சூல்; கருப்பம். அணிதல் - தாங்குதல். "கார்கோண் முகந்த கமஞ்சூன் மாமழை" (முருகு); போறை - நீரை அருமையாகத் தன்னுட் சுமந்து பருவத்தில் உயிர்கட்கு உதவும் முகில்போல. கமை-போறை. கம - நிறைவு; உரிச்சொல் என்றலுமாம்.

புகல் - புகலிடம்; புகலியர் புகல் - தேவர்கள் தஞ்சமாக அடையுமிடம் புகலியாகவே, அங்குள்ளார் அடையுமிடம் பிள்ளையாராயினர் என்பது. "பூமருவுங் கங்கை முதற் புனிதமாம் பெருந்தீர்த்த, மாமகந்தா னாடுதற்கு வந்தவழி படுங்கோயில்" (புரா- 409) என்புழிப்போன்ற கருத்துக் காண்க.

போன்னித் துறை பெறு மணி - போன்னித் துறை - காவிரி நாடு என்ற பொதுமை யுணர்த்திநின்றது. துறைபெறும் மணி - மணிகள் நீர்த் துறைகளிற் பெறும் வழக்குக்குறித்தது. சீகாழிக்கு வருதல் குறிவைத்தே காவிரி சோழநாட்டுக்கு வந்த வரலாறு காண்க.

சுருதியின் ஒளி - வேத வொளியும் கருத்தும் விளங்கும் இடம் என்பது. ஒளியேயாகியே சிவம் வெளியே வந்து என்று பின் வருவதனுடன் கூட்டியுரைத்தலுமாம்.

வேளியே வந்து - எங்குநிறைந்து மறைந்துள்ள நிலையினின்றும் வெளிப்பட்டுப் போந்து. 92

1991. (வி - ரை) புண்ணிய முதல் - புண்ணியம் சிவபுண்ணியங்களின் தொகுதி. முதல் - முதல்வர்; கற்பிக்கும் குரு. புண்ணியத்திற் றலைசிறந்தவர் என்றலுமாம்.

அரைஞாணேடு...கதிர் - மழவிளங் கோலங் காட்டிக் கண்பெறும் விருந்தாய் நின்ற கதிர். இங்கு, வெப்பத்தினல் உலகை உளதாக்கி நிறுத்தும் ஞாயிற்றின் கதிர் என்றது குறிப்பு.

கலைவளர் மதி - மதி, மிகுந்தும் குறைந்தும் வரும் கலைகளையுடையவன்; இவர் அவ்வாறு குறைவுபடாது வளரும் கலைகளையுடையவர் என்பதும், அமிர்த கலைகளினல் சைவப்பயிரைக் காப்பவர் என்பதும் குறிப்பு. கலை - அபரஞானமாகிய சிவ கலைஞானமுங் குறிப்பு. "மண்ணில் வளர் மதிக்கொழுந்தை" (புரா - 728); "கலைச்செழுந் திங்கள் போலுங் கவுணியர்" (ஷை - 751) முதலியவை பார்க்க. மதி - ஞானம் என்றதும் குறிப்பு.

கவின் மேவும் பண் இயல் கதியே - கவின் - பண்ணின் இனிமை; பண்களுக்கு இயல்பின்நின்ற கதிபோன்றவர். பண்கள் சிறந்த பேறடைய வந்தடையுமிடம் என்க. பண்கள் நடக்கும் மந்த முதலிய கதி என்பாருமுண்டு. கதி - என்றது எல்லாப் பண்களும் அவற்றின் கட்டளைபேத முதலிய பாகுபாடுகளும் பிள்ளையாரது திருவாக்கில் விளக்கம்பெறும் குறிப்பு.

எண்ணிய பொருள் - அறிவோர்களது தியானத்திற்குப் பொருளாய் நிற்கும் சிவபெருமான். " சிவ ஏகோ தியேய: " (சிவன் ஒருவனே தியானிக்கப்படுபவன்) என்பது வேதம்.

நின்றவர் - நின்ற திருத்தாண்டகம், திருவுருத்திரம் முதலிய மறைகளுட்பேசும் நிலை.

இம் மூன்று பாட்டுக்களாலும் பிள்ளையாரது அன்றைய மூவாண்டுமுதல் புண்ணியப் பதினாறாண்டுவரை உள்ள பதினான்கு ஆண்டுகளின் குறிப்பாகப் பதினான்கு வகையாகப் போற்றிய குறிப்பும் காண்க. காழியர் தவமே! கவுணியர் தனமே! என்று தவத்தின்பேறாக வந்தவதரித்தது தொடங்கி, கதியே! என்று திருப்பதிகங்கள் நிறைவுபெற்று உயிர்களுக்கு முத்திக்கதி யருளுதல் இறுதியாகக் கூறிய பிற்சரித விளைவுக் குறிப்பும் காண்க. 93

வேறு

1992. என்றினைய பலகூறி யிருக்குமொழி யந்தணரு
மேனை யோரு
நின்றுதுதி செய்தவர்தா ணீண்முடிக்கண் மேலேந்தி
நிரந்த போது,
சென்றணைந்த தாதையார் சிவபாத விருதயர்தாந்
தெய்வ ஞானக்
கன்றினைமுன் புக்கெடுத்துப் பியலியின்மேற் கொண்டுகளி
கூர்ந்து செல்ல, ௯௪

1993. மாமறையோர் குழாத்தினுடன் மல்குதிருத் தொண்டர்குழா
மருங்கு சூழ்ந்து
தாமறுவை யுத்தரியந் தனிவிசும்பி லெறிந்தார்க்குந்
தன்மை யாலே
பூமருகு சிவானந்தப் பெருக்காறு போதவதன்
மீது பொங்குங்
காமர்நுரைக் குமிழியெழுந் திழிவனபோல் விளங்குபெருங்
காட்சித் தாக; ௯௫

1994. நீடுதிருக் கழுமலத்து நிலத்தேவர் மாளிகைமே
னெருங்கி யங்கண்
மாடுநிறை மடவார்கண் மங்கலமா மொழிகளால்
வாழ்த்தி வாசத்
தோடுமலி நறுமலருஞ் சுண்ணமும்வெண் பொரியினொடுந்
தூவி நிற்பார்
கோடுபயில் குலவரைமேன் மின்குலங்கள் புடைபெயருங்
கொள்கைத் தாக; ௯௬

1995. மங்கலதூ ரியந்துவைப்பார் ; மறைச்சாமம் பாடுவார் ;
மருங்கு வேதிப்
பொங்குமணி விளக்கெடுத்துப் பூரணகும் பமுநிரைப்பார் ;
போற்றி செய்வார் ;
அங்கவர்கண் மனத்தெழுந்த வதிசயமும் பெருவிருப்பு
மன்பும் பொங்கத்
தங்குதிரு மலிவீதிச் சண்பைநகர் வலஞ்செய்து
சாருங் காலே, கூஎ

*1996. தந்திருமா ளிகையின்க ணெழுந்தருளிப் புகும்பொழுது
சங்க நாதம்
அந்தரதுந் துபிமுதலா வளவில்பெரு கொலிதழைப்ப
வணைந்து புக்கார்
சுந்தரப்பொற் றோணிமிசை யிருந்தபிரா னுடனணைந்த
துணைவி யாகும்
பைந்தொடியா டிருமுலையின் பாலறு மதுரமொழிப்
பவள வாயார். கூஅ

1992. (இ - ள்) என்று...கூறி - என்று மேலே கூறியபடி யிவ்வாறு பலவற்றையும் எடுத்துப் போற்றி ; இருக்கு...துதி செய்து - வேதங்கள் பயிலும் அந்தணர்களும் ஏனையோர்களும் நின்று துதித்து ; அவர்தாள்...போது - பிள்ளையாரது திருத்தாள்களை நீண்ட தமது முடியிற் சூட்டி வரிசைபெற நின்றபோது ; தாம்சென்று அணைந்து - தாமே முன்சென்று அணைந்து ; தாதையார் சிவபாதவிருதயர் - தந்தையாராகிய சிவபாதவிருதயர் ; தெய்வ ஞானக்கன்றினை ...செல்ல - தெய்வத்தன்மையுடைய சிவஞானக் குழவியாகிய பிள்ளையாரை முன்பு புகுந்து எடுத்துத் தோளின்மேற்கொண்டு பெரு மகிழ்ச்சியுடன் செல்ல, கூச

1993. (இ - ள்) மாமறையோர்......சூழ்ந்து - பெரிய மறையவர் கூட்டத்தினுடன் பொருந்திய திருத்தொண்டர் கூட்டமும் பக்கத்திற்சூழ்ந்து ; தாம்...தன்மையாலே - தாங்கள் (உடையின்மேற் சுற்றிய) ஆடைகளையும் உத்தரியங்களையும் ஆகாயத்தில் வீசி ஆரவாரிக்கும் தன்மையினாலே ; பூமறுகு - சீகாழியின் அழகிய திருவீதி ; சிவானந்தப் பெருக்காறு போத - சிவானந்தமாகிய பெருக்கெடுத்த ஆறு செல்ல ; அதன்மீது...காட்சித்து ஆக - அதன்மேல் பொங்கும் அழகிய நுரைக்குமிழிகள் மேல் எழுந்தும் கீழ் இறங்கியும் வருவனபோல விளங்கும் காட்சியையுடையது ஆக, கரு

1994. (இ - ள்) நீடு...மடவார்கள் - நீடும் திருக்கழுமலத்தில் பூசுரர்களது திருமாளிகைகளின் மேலே நெருங்கி அவ்விடத்தில் பக்கத்தே நிறைந்த மறையோர் மகளிர்கள் ; கோடுபயில்...கொள்கைத்தாக - உயர்ந்த சிகரங்களையுடைய பெருமலைகளின்மேல் மின்னற் கூட்டங்கள் புடைபெயர்ந்து செல்லும் காட்சியைக்கொண்டது போல ; மங்கல மாமொழிகளால்...தூவி நிற்பார் - மங்கலமாகிய பெருஞ் சொற்களால் வாழ்த்தியும், வாசனையுடைய இதழ்கள் நிறைந்த புதிய குளிர்ந்த பூக்களையும் சுண்ணப் பொடிகளையும் வெண் ணெற்பொரியுடனே தூவி நிற்பாராக ; கசு

1995. (இ - ள்) மங்கல தூரியந் துவைப்பார் - (வேறு சிலர்) மங்கல வாத்தியங்களை முழக்குவார்களாக ; மறைச்சாமம் பாடுவார் - (சிலர்) சாமகானங்களைப் பாடுவார்களாக ; மருங்குவேதி...நிரைப்பார் - (சிலர்) பக்கத்தில் திண்ணைகளிலே பொங்கும் அழகிய விளக்குக்களை ஏந்திப் பூரண கலசங்களையும் வரிசையாக வைப்பார்களாக; போற்றிசெய்வார் - (வேறு சிலர்) துதி செய்வார்களாக ; அங்கு அவர்கள்...பொங்க- இவ்வாறு அங்கு அவர்களது மனத்தில் எழுந்த அதிசயமும் பெரிய விருப்பமும் அன்பும் பொங்கும்படி ; தங்கு...காலை - தங்கிய திரு மலியும் வீதிகளின்வழியே சண்பை நகரை வலமாக வந்து சாரும்போது, கஎ

1996. (இ - ள்) சுந்தரப்பொற் ரேணிமிசை...பவள வாயார்-அழகிய பொன் பூண்ட திருத்தோணியின் மேல் இருந்த இறைவருடனே அணைந்த துணைவியாராகிய பெரியநாயகியம்மையாரது திருமுலையின் பால்மணமருத மதுரமொழியினை யுடைய பவளவாயராகிய பிள்ளையார் ; தம் திருமாளிகையின்கண்...ஒலி தழைப்ப - தமது திருமாளிகையினிடத்து எழுந்தருளிப் புகும் அப்பொழுது சங்கநாதமும், தேவதுந்துபிகளும் முதலாக அளவில்லாத பெருகும் ஒலி தழைப்ப ; அணைந்து புக்கார் - சேர்ந்து உட்புகுந்தருளினர். கஅ

இந்த ஐந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபுகொண் டுரைக்கநின்றன.

1992. (வி - ரை) இருக்கு - வேதப் பொதுமையுணர்த்தியது. இருக்குமொழி அந்தணர் - மறையோர். மரபிற் பிறப்பினளவின்மட்டி லமையாது உரிய ஒழுக்கமும் கொண்டவர் என்பது. இதனை ஆசிரியர் பலவிடத்தும் எடுத்துக்காட்டுதல் காண்க. பிள்ளையார்-அரசுகள் தேவாரங்களும் பார்க்க.

**தாள் - முடிகண் மேலேநீதி** - பாதங்களில் முடி பொருந்தும்படி நிலத்தின் வீழ்ந்து பணிந்து. **நீண்முடி** - என்றது பிள்ளையாரது திருவடிகளில் முதலில் வீழும் பேறுபெற்ற சிறப்பு உணர்த்திற்று.

**நீரந்த** - வரிசைபெற நின்ற.

**தாதையார் சிவபாதவிருதயர்தாம்** - "இவன்றந்தை என்னேற்றான் கொல் ?" என் றுலகுபுகழ வருகிலை அன்றே பெற்ற அவர் என்பதும், அது சிவனடி மறவாது செய்த தவத்தின் பயனாய் வந்தது என்பதும் குறிப்பு.

**தெய்வ ஞானம்** - சிவ ஞானம். **கன்று** - குழவி ; இளமை குறித்த மரபு வழுவமைதி ஆர்வம்பற்றி வந்தது.

**பியலின் மேற்கோண்டு** - " அத்தர் பியன்மே லிருந்து " (நனிபள்ளி) என்பது முதலிய திருவாக்குக்கள் காண்க.

**களி கூர்ந்து** - " மக்கண்மெய் தீண்டல் உடற்கின்பம் " என்றபடி முன் பல நாளும் பிள்ளையாரை எடுத்து இன்புற்ற தந்தையார், நின்மல ஞான உருவத்திருமேனியைத் தீண்டிய நினைவுபெற்று மிக்க மகிழ்ச்சியினைப் பெற்றனர். **கூர்தல்** - உள்ளது சிறத்தல்.

**மேலேந்த**—என்பதும் பாடம். 94

1993. (வி - ரை) குழாம் - சூழ்ந்து - அறுவை உத்தரியம் - விசும்பில் எறிந்து ஆர்க்கும் தன்மையாலே - சிவானந்தப் பெருக்காறு போத - மீது நுரைக் குமிழி எழுந்து - இழிவனபோல் - மறுகு - விளங்கும் - காட்சித்து என்று உவமையைக் கூட்டி உரைத்துக்கொள்க. மறையோர் குழாமும் தொண்டர் குழாமும்

சேர்ந்து மறுகிற் செல்லுதல், சிவமும் ஆனந்தமும் பெருகி வெள்ளமாகச் செல்வதற்கும், அறுவை உத்தரியம் விசும்பில் ஏறுதலால் அவை மேலேபோய்க் கீழிறங்குதல், அப்பெருக்கில் வெண்குமிழி மேல் எழுதல் இறங்குதலுக்கும், ஆர்த்தல் ஆற்றுப் பெருக்கின் இரைச்சலுக்கும் வினையும் உருவும் பயனும்பற்றி வந்த உவமம்

அறுவை-துணி. இது உடையின்மேல் அணியும் துணியைக் குறித்தது. உத்தரியம்-மேலாடை. உத்தரியம் வீசுதல் மகிழ்ச்சிக் குறிப்பு. இவ்வழக்கு இந்நாளினும் மேனாட்டார்பாற் காணப்படும். உத் - மேலே; தரியம் - தரிக்கப்படுவது; காரணக் குறி. ஆர்த்தல் - மகிழ்ச்சிபற்றிய துதிகளையும் வாழ்த்துக்களையும் எடுத்துக்கூறி ஆரவாரித்தல். இதுவும் இந்நாள் வழக்கிற் காணலாம்.

மறுகு - காட்சித்து - ஆக என்று கூட்டுக. மறுகு - வீதி.

காமர் நுரைக் குமிழ் - நீரில் வரும் குமிழிகள் நீர்க்குற்றம் எனப்படும். ஆனால் இங்கு உவமிக்கப்படுவன சிவானந்தப் பெருக்கில் தோற்றுவன ஆதலின் அவ்வாறன்றி விரும்பத்தக்கன என்பார் காமர் என்று விசேடித்தார்.

இப்பாட்டினால் மறுகிற் சென்ற ஆடவர்களின் செயலும் தோற்றமும் கூறப்பட்டன.

காட்சித்தாகும்—என்பதும் பாடம். 95

1994. (வி - ரை) நிலத்தேவர் - பூசுரர் என்ற கருத்து; மறையவர். மாடு - பக்கங்கள்.

நறுமலர் - நறுமை - ஈண்டுப் புதுமையும் தண்மையும் அழகுங் குறித்தது.

பொரி - வெண்ணெற் பொரி. சுண்ணம் - மஞ்சள் கலந்த வாசனைத் தூள். பொற்சுண்ணமென்பர். மலரும், சுண்ணமும், பொரியுங் கலந்து தூவுதல் மங்கலம்புரி செயல்களுள் ஒன்று. இது பெரும்பான்மை பெண்களாற் செய்யப்படுவது.

மாளிகைகளின் மேல் பக்கங்களில் நெருங்கிப் பெண்கள் புடைபெயர்ந்து மலரும் சுண்ணமும் பொரியும் தூவுதல், சிகரங்களையுடைய மலைகளின்மேல் மின்னற் கொடிகள் அசைந்து மழைத்துளிகளைப் பெய்தாற்போலும் என்று முன் பாட்டிற் கண்டவாறே ஈண்டும் வினையும் உருவும் பயனும்பற்றி வந்த உவமம் விரித்துக் கூட்டிக்கொள்க. கோடு பயில் குலவரை என்ற உவமானத்திற்கேற்பச் சிகரிகளையுடைய மாடங்கள் என்று உவமேயத்திலும், மலரும் பொரியும் தூவி என்ற உவமேயத்திற்கேற்ப மழைப்பெயல் தூற்றி என்று உவமானத்திலும் விரித்துக்கொள்க. புடைபெயர்தல் பிள்ளையாரது உலாவிற்கேற்ப அங்கங்கும் காணப் பெண்களும் பல விடத்தும் பெயர்ந்து செல்லுதல் உவமம். மொழிகளால் வாழ்த்தல் - "மின்னுவ தெல்லாம் பின்னுக்கு மழை" என்றபடி மழைப்பெயலின் ஓசை குறிப்பதாம்.

இப்பாட்டாற் பெண்களின் செயல் கூறப்பட்டது. 96

1995. (வி - ரை) இப்பாட்டால் முன்னிரண்டு பாட்டுக்களாற் கூறியவாறன்றி வெவ்வேறு பலவகையினர்களின் செயல்கள் கூறப்பட்டது.

துவைப்பார் - பாடுவார் - நிரைப்பார் - போற்றி செய்வார் - என்ற வினை முற்றெச்சங்களுக்கு வேறு சிலர் என்ற தனித்தனி எழுவாய்கள் தொக்குநின்றன.

தூரியம் - வாத்தியங்கள். துவைத்தல் - முழக்குதல்.

சாமம் - வேதப் பொதுமை குறித்தது.

**வேதி** - திண்ணை. விளக்கு எடுத்தலும், பூரணகும்பம் நிரைத்தலும் மங்கல அணி செய்வகைகள் ; **நிரைத்தல்** - வரிசைபெற வைத்தல்.

**துவைப்பாராகவும், பாடுவாராகவும், நிரைப்பாராகவும், போற்றிசெய்வாராகவும்** இவ்வாறு அதிசயமும் விருப்பும் அன்பும் பொங்க என்க. **பொங்குதல்** - உரிய மெய்ப்பாடுகளால் வெளிப்படுதல்.

**தங்குதிருமலிவீதி** - **திரு** - சைவமெய்த்திரு. **தங்குதல்** - மாறாது நிலைத்திருத்தல். ஊழியினும் அழியாது சிவச்சார்புபெற்று நிற்றலின் குறிப்பு.

**நிறைப்பார்**—என்பதும் பாடம். 97

1996. (வி - ரை) **எழுந்தருளிப்புகும்போழுது** - அத்தர் பியலினின்று கீழே எழுந்தருளி மாளிகையினுட் புகும்போது என்க.

**சங்கநாதம்-அந்நாதுந்துபி** - முன்னது இவ்வுலகத்ததுவும், மற்றது மேலுலகத்ததும் ஆம். இவை திருவருள் பெற்றபின் முதன்முறை தந்திருமாளிகையிற் புகும் மங்கல நிகழ்ச்சியின் குறியாக இசைத்தன. அந்நாதுந்துபி தழைத்தது பிள்ளையார் திருவருள் பெற்ற சிறப்பினால் வானுலகமும் சிவப்பயன்பெற நின்றமையால் என்க. " மண்ணுலக மேயன்றி வானுலகுஞ் செய்தபெரும், புண்ணியத்தின் படையெழுச்சி போலெய்தும் பொலிவெய்த " (புரா - 650).

**பாலறா மதுரமோழி** - பாலின் தன்மையாகிய ஞானம் இடையீடின்றிக் கலந்தெழும் இன்மொழி. அப்போது அணிமையில் பாலுண்டெழுந்தருளியதும் குறிப்பு.

**பிரான் உடன் அணைந்த துணைவி** - " பாலடிசில் - ஊட்டு " (1963) என்று பிரான் அருளத் துணையார் ஊட்டினார் என்ற குறிப்புப்பெற இவ்வாறு கூறினார்.

**துந்துபிநாதம்—உடனமர்ந்த**—என்பனவும் பாடங்கள். 98

1997. தூமணிமா ளிகையின்க ணமர்ந்தருளி, யன்றிரவு
முதல்நாள் தொல்லை நாத
இரவு மாமறைக டிரண்டபெருந் திருத்தோணி மன்னிவீற்
றிருந்தார் செய்ய
காமருசே வடிக்கமலங் கருத்திலுற விடையறாக்
காதல் கோண்டு
நாமநெடுங் கதிருதிப்ப நண்ணினார் திருத்தோணி
நம்பர் கோயில். ௯௯

(இ - ள்) - **தூமணி...அமர்ந்தருளி** - தூய அழகிய திருமாளிகையினிடத்து அமர்ந்தருளி யிருந்து ; **அன்றிரவு** - திருஞானம் அருளப்பெற்ற முதனாளாகிய அன்று இரவில் ; **தொல்லைநாதம்......காதல்கொண்டு** - பழைமையாகிய நாத உருவாகிய பெருமறைகள் திரண்டு உருவெடுத்த திருத்தோணியில் நிலைபெற்று வீற்றிருந்த பெருமானது செய்ய அழகிய திருவடித் தாமரைகள் தமது கருத்தினிற் பொருந்தியதனாலே இடையறாத ஆசைகொண்டவராகி ; **நாமநெடும்...கோயில்** - பெரிய நீண்ட ஞாயிறு உதிக்கும் முன்னேரத்தில் திருத்தோணி நம்பரது திருக்கோயிலைச் சென்று அடைந்தனர்.

(வி - ரை). திருஞானப் பாலுண்டருளிய அன்றிரவு பிள்ளையார் தமது திருமாளிகையில் சரித்த நிலையினையும், பிற்றைநாள் விடிதலுமே ஆர்வங்கொடு முயன்ற திருப்பணியினையும் இப்பாட்டால் அறிவிக்கின்றார் ஆசிரியர். இவ்வாறே பின்னர் வரும் எல்லா நாள்களினும் கொள்க என்பதைக் காட்டியவாறு. " பண்டு திருவடி மறவாப் பான்மையோரா " (1953) யிருந்த பிள்ளையார் இந்நிலையில் வளர்ஞான வமுதுண்டு சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞான முதலியவற்றைப்பெற்றவர் அன்று முதல் இரவுபக லெல்லாக் காலத்தும் சாக்கிரம் முதலிய எல்லா நிலைகளிலும் சிவனடி மறவா நிலையிற் சரித்தனர் என்பது சரிதவிளைவிற் காண்க. புரா - 191 - 205 - 554 - 555 முதலியவை பார்க்க.

தோல்லை நாத மாமறைகள் திரண்ட பெருந் திருத்தோணி - மறைகளே திரண்டு தோணியாக மிதந்து இறைவரைச் சிவமும் சத்தியுமாகத் தமக்குள் வைத்துத் தாங்கி நிற்பன என்பதாம். " சுருதி தொடர்ந்த பெருந்தோணி " (1981)

செய்ய...கருத்திலுற - செய்ய - செம்மை தரும். காமநுதல் - கண்டாரால் விரும்பப்படுதல் ; உற-உறுதலினால்.

இடையறக்காதல் - எப்போதும் பற்றுவிடாத மிக்க அன்பு. 780 - 781 ல் கூறியபடி கண்ணப்ப நாயனார் காதல்கொண்ட கருத்துக்கள் காண்க.

நாமநெடுங்கதிர் - ஞாயிறு. நாம - பெரிய ; அகர வீற்று உரிச்சொல்.

நண்ணினார்-கோயில் - பிள்ளையார் திருமேனி திருக்கோயிலுட் சென்று சார்வதன் முன் அங்கு அவரது திருவுள்ளம் சென்று சார்ந்தது என்ற விரைவும் ஆர்வ மிகுதியும் குறிக்கப் பயனிலையை முன்வைத்துக் கூறினார். 99

## பிள்ளையாரது முதல் யாத்திரை

1998. காதலுட னணைந்துதிருக் கழுமலத்துக் கலந்துவீற்
றிருந்த தங்கள்
தாதையா ரையும்வெளியே தாங்கரிய மெய்ஞ்ஞானந்
தம்பால் வந்து
போதமுலை சுரந்தளித்த புண்ணியத்தா யாரையுமுன்
வணங்கிப் போற்றி
மேதகைய வருள்பெற்றுத் திருக்கோலக் காவிறைஞ்ச
விருப்பிற் சென்றார். க00

(இ - ள்). காதலுடன் அணைந்து - மிக்க அன்புடனே அங்குச் சேர்ந்து ; திருக்கழுமலத்து......போற்றி - திருக்கழுமலம் என்ற அத்திருத்தலத்திலே உடனுறை எழுந்தருளி யிருந்த தமது தந்தையாரையும், தம்மிடத்து வெளிப்பட்டு வந்து யாவராலும் தாங்குதற்கரிய மெய்ஞ்ஞானத்தை ஞானப்பாலாக்கித் திருமுலை சுரந்து தமக்கு அளித்து ஊட்டிய புண்ணிய உருவுடையாராகிய திருத்தாயாரையும் முன்னே தொழுது துதித்து ; மேதகைய அருள்பெற்று - மேன்மையுடைய திருவருளைப்பெற்று ; திருக்கோலக்கா......சென்றார் - திருக்கோலக்கா என்ற திருத்தலத்தை வணங்கும் பொருட்டு விருப்பத்துடனே சென்றருளினர்.

(வி - ரை) திருக்கழுமலத்துக் கலந்து வீற்றிருந்த - கலந்து - சிவமும் சத்தியுமாகப் பிரிக்கமுடியாத சம்பந்தத்தினாலே கூடியிணைந்து. " இளங்கொம் பனாளோ

டிணைந்தும் பிணைந்தும்" (தேவா). "மாதினையு மொருபாகத் தடக்கி" (சித்தி - பாயிரம்). **கழுமலத்துக்கலந்து** - உயிர்களின் மலம் கழுவிச் சிவபோக நுகரச்செய்யும் அருட்செயலின் கண்ணே இவ்வாறும் கலந்துள்ளார் என்றதும் குறிப்பு. "ஐந்தொழிற்கும் வித்தாய்" (சிவப்பிரகாசம் - பாயிரம்).

**கலந்து** - கழுமலத்தில் பிரியாது வீற்றிருந்த என்றலும் பொருள்.

**தங்கள்** - ஞான வமுது தரப்பெற்ற தமது சிறப்புரிமை குறித்தது. மேல் **தந்தையார் தாயார்** - என்பதும் காண்க.

**தாதையாரையும் - தாயாரையும்** - தோணியப்பரையும் பெரியநாயகியம்மையாரையும். சிவபாத விருதயர் - பகவதியார் என்று இதுவரை கொண்டாடிய இருவரையன்றி அவர் சார்வு கண்டு, இனி, இத்தாதையார் தாயாரையே பிள்ளையார் தமது தந்தை தாயாராகக் கொண்டருள்கின்றார் என்பது குறிப்பு - "தவமான நெறியணையுந் தாதையா ரெதிர்தொழுவா, ரவர்சார்வு கண்டருளித் திருத்தோணி யமர்ந்தருளிப், பவபாச மறுத்தவர்தம் பாதங்க ணினைவுற்றார்" (புரா. - 879) ; "அரும றைக்குலத் தாயர்வந் தடிவணங் கிடத்தாமுந், துங்க நீள்பெருந் தோணியிற் றயர்தாண் மனங் கொளத் தொழுவாராய்" (ஷை - 958) என்பவை காண்க.

**போதமுலை சுரந்து** - மெய்ஞ்ஞானம் அளித்த என்று கூட்டுக. "போதையார் பொற்கிண்ணத் தடிசில்" (தேவர்). **போதமுலை** - அபர பர ஞானங்கள் அம்மையாரது திருத்தனங்கள் என்பது மரபு. **முலைசுரந்து** ஞானமளித்தலாவது திருமுலைப்பாலில் எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத்து ஊட்டியது.

**வெளியே...தாயார்** - பாலூட்டிய பண்பும் அருளின் உருவும் ஆகிய சிறப்பும் உணர்த்த அடைமொழிகள் புணர்த்தி ஓதினார். **தாதையார்** என்று முன்வைத்தோதியது "ஊட்டு" என முன் ஆணை தந்த குறிப்புணர்த்தியது.

**புண்ணியத் தாயார்.** சிவபுண்ணியத்தின் விளைவாகியவர் என்பது.

**முன்வணங்கிப்போற்றி - முன் -** திருமுன்பு. எப்போதும் மறவாது கருத்திலுற நின்றாராதலின் வணங்காத நேரமில்லை; ஆதலின் **முன்** என்பது இடங்குறித்து நின்றது. **முன் -** தமது முதலாவது தலயாத்திரை தொடங்கித் திருக்கோலக்கா விறைஞ்சச் செல்வதற்கு **முன்** வணங்கி விடைபெறப் போற்றி என்றலுமாம்.

**அருள்பெற்று** - அருள் விடைபெற்று என்க. தலத்தினின்றும் புறப்படும்போது அத்தல நாயகரின் விடைபெற்றுச் செல்லும் நியதி குறித்தது.

**திருக்கோலக்கா விறைஞ்ச விருப்பிற்சென்றார் - விருப்பாவது** "நாடு நகரமு நற்றிருக் கோயிலுந், தேடித் திரிந்து சிவபெருமா னென்று, பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின், கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே" (திருமந்திரம்) என்றபடி திருக்கோயில் வழிபாடு பற்றிய சரியையினை உள்ளடக்கிய கிரியை நிலையை உலகிற் சரித்துக்காட்டி உலகை வழிப்படுத்த வந்த பரமாசாரியராதலின் அருள்பெற்ற அடுத்தநாள் முதலாகவே தலயாத்திரையைத் தொடங்கிக் காட்டினார் என்பது. **விருப்பம்** - காட்டக் கண்டு உலகுய்ய வைத்தல் வேண்டுமென்பது. "என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே" முதலிய **பிள்ளையாரது** திருவாக்குக்கள்
பார்க்க. 100

## திருஞானசம்பந்த நாயனர் புராணம். [1 - 100 பாட்டு வரை]

சரிதச் சுருக்கம்:—சென்னிவளர் மதியணிந்த சிவபெருமானது நிலைபெற்ற சைவத்துறையிற் றவருது வழிவழி வந்த குடியாகிய சோழ அரசர்களால் ஆட்சி செய்யப்பட்டுக், காவிரியாறு பாய்ந்து வளஞ்செய்யும் சோழநாட்டினை அணிசெய்து நிலைத்துள்ளது கழுமலம் என்ற பெயரையுடைய பழைய ஊர்; அது மிக்க செழிப்பும் சிறப்புமுடையபதி; மறையவர்களது பழங்குடிகள் சிறந்து விளங்குவன அவ்வூரின் அழகிய தெருக்கள்; பன்னிரண்டு ஊழிகளிலும் வந்த நீர்ப்பெருக்கில் ஆழாது மேலே மிதந்தமையால் பன்னிரண்டு பெயரும் பெற்றுள்ளது அப்பழம்பதி. அப்பெயர்களாவன - பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி கொச்சைவயம், கழுமலம் என்பன. "துயரிலங்கும் முலகிற் பலவூழிகள் தோன்றும் பொழுதெல்லாம், பெயரிலங்கு பிரமாபுரம்" (தேவா.)

ஆறு - நாடு - நகர்

அத்திருப்பதியிலே, அந்தணர் மரபிலே, கவுணியர் கோத்திரத்திலே, இவ்வுலகம் வாழும் பொருட்டுத் தவஞ்செய்யும் தன்மையுடைய சிவபாத விருதயர் என்ற பெரியார் உளரானர்; அவரது திருமனைவியார் வாய்ந்த மரபில் வந்தவரும் பெறுதற்கரியபெருமையுடையவருமாகிய பகவதியார் என்பவர். கற்பு மேம்படு சிறப்பினலே கணவனரது கருத்தமைந்தாராய் இல்வாழ்க்கை நிலையிலே சிறக்க ஒழுகிவந்தனர். இவ்விருவரது மரபுகளும் வழிவழியாகச் சைவ நெறியிலே வந்தன. இவர்கள் சிவபெருமானது திருவடிகளையன்றி வேறென்றினையும் பற்றுக அறியாது மனைவாழ்க்கை நடத்தி வந்தனர்.

மரபு - குலம் - பெற்றோர்

அந்நாளில் உலகிலே சமணர் புத்தர்களது பொய்ந்நெறிகள் மிகப் பரவின. அதனல் ஆதியாகிய சைவநெறியின் திருநீற்று விளக்கம் போற்றப்படாது அருகியது. இதனைக்கண்டு சிவபாத விருதயர் மிகவும் துன்பமடைந்தனர். அதனேடு அவர் தமக்கு இல்வாழ்க்கையின் இன்பம் பயக்கும் மகப்பேறு வேண்டப்படுவதாயிற்று: அவ்வாறு தாம் வேண்டும் மகவு பரசமயங்களை நிராகரிக்கவும், திருநீற்றினை ஆக்கம் செய்யவும் வல்லதாயிருத்தல் வேண்டும் என்று எண்ணிச் சிவபாதவிருதயர் அத்தகை மகவைப் பெறும் பொருட்டுத் திருத்தோணியில் எழுந்தருளிய பெரிய நாயகியம்மையார் தோணியப்பர் இவர்களது திருவடிகளில் வழிபட்டு வரங்கிடந்தனர். இறைவரது அருளால் பகவதியம்மையாரது திருவயிற்றில் கருப்பப்பேறு உலகமுய்ய உளதாயிற்று. திருவருளைப்போற்றி உரிய மறைநூல்விதிச் சடங்குகளை யெல்லாம் பத்துமாதங்களிலும் சிறக்கச்செய்து சுற்றத்தாருடன் பேரின்பந் திளர்ந்து மகிழ்ந்தனர் சிவபாதவிருதயர்.

சமண்சாக்கியம் மிகுதல் பற்றி வருந்துதல்

வரங்கிடந்தல்

அருக்கன் முதலாகிய கோள்கள் எல்லாமும் அழகிய உச்சநிலைகளிலேயும் பெருகும் வலிய நிலைகளிலும் நிற்க, நல்ல ஓரை எழ, திருமிகும் திருவாதிரை நாளிலே பரசமயத் தருக்கு ஒழிய, சைவ முதலாகிய வைதிகம் தழைத்து ஓங்கத், திருநீற்றுநெறி யெங்கும் ஒப்பற்றுச் சிறந்து செல்ல, தமிழ்செய் தவம் நிரம்ப, திசையனைத்தின் பெருமையும் தென்றிசையே வெல்ல, மேல்கீழ் உலகங்களை நிலவுலகம் வெல்ல, நிகழ்கால எதிர்காலக் குற்றங்கள் நீங்க, அமண் முதலாய பரசமயநெறிகள் பாழ்படச் சிவம் பெருக்கும் பிள்ளையார் சீகாழிப் பதியில் திருவவதாரம் செய்தார். அப்பொழுது சீகாழிப்பதியவர்கள் அனைவர்க்கும் அவரறியாமே களிபெருகிற்று; எங்கும் நன்னிமித்தங்களும் சுபசகுனங்களும் நிகழ்ந்தன;

திருவவதாரம்

பிள்ளையாரது திருமாளிகையினை அழகிய மங்கலஞ் செய்து சூத நல்வினைகள் செய்வாராய்ச் சாதக முறைப்பல சடங்குகள் பத்து நாட்களினும் செய்தனர் ; நாமகரணச் சடங்கு உரியநாளிற் செய்தனர்; தாமரையிற் றனிமுதற் குழவிபோலே, உதய ஞாயிறு போன்ற பிரானைத் தொட்டில் அமர்வித்தார் ; பால் ஊட்டி நீற்றுக்காப்பு மணிவித்தார்கள் ; இவ்வாறு தால், செங்கீரை, சப்பாணி முதலாகிய பருவப் பாராட்டுடன் ஓராண்டு வளர்ந்து பிள்ளையார் தளர்நடைப்பருவமடைந்தனர் ; அவர்க்கு மேல் மூவாண்டு எய்தும்போது ஒரு சிறப்பு நிகழ்ந்தது. முன்னை நிலையில் திருவடி மறவாத்

**பிரமதீர்த்தக் கரை**

தன்மை பெற்றிருந்தவரை இறைவர் சிவபாதவிருதயரது தவத்திற் கிரங்கிப் பிள்ளையாராக அளித்தருளினாராதலின், தமக்கென ஒன்றும் வேண்டும் காரியமின்றித் திருத்தொண்டின் நிலைமையினை உலகுக்குத் தரும்பொருட்டே இங்கு வந்து அவதரித்த பிள்ளையார், முன்னை நிலையில் இறைவரைத்தொடர்ந்துநின்ற தன்மையினின்றும் பிரிந்து போந்த உணர்வு ஓரோர்கால் திருவுள்ளத்திற்கொண்டு மேல் எழுதலும், அதனால் உடனே வெருவு கொண்டாற்போல அயலாகிய குறிப்புடனே அழுவார். இவ்வாறாகிய மேம்பட்ட நாட்களிலே வேறொரு நாளில், தமது நியதியாகிய வேதவிதி முடிப்பதற்காகத் தாதையார் குளிப்பதற்குச் செல்லும்போது தமது பெருமானது திருவருள் கூடியதனாலே அழுது அவரைத் தொடர்ந்து பின் சென்றார் ; அது கண்டு முனிவார் போலத் தாதையார் விலக்கவும் விடாது கிங்கிணியணிந்த சீறடிகளைக் கொட்டிப் பிள்ளையார் மீளாது தொடரவே "உனது செய்கை யிதுவாகில் உடன் போதுக !" என்று அவரும் உடன் அழைத்துச் சென்றனர். பிரம தீர்த்தக்கரையினை அடைந்து பிள்ளையாரைக் கரையினில் வைத்துத், தாம் பிரிவஞ்சித் தோணியப்பரை வணங்கித் தாதையார் வாவியினுட் புகுந்து நீராடியபின் நியமங்கள் பலவும் செய்து அகமருடணம் படிவதற்கு நீரினுள் மூழ்கினார். அவரைக் காணாது சிறிதளவும் தரிக்கலாற்றார் என்பது காரணமாகக் காட்டி, இறைவரது திருவடிகளை முறைமையால் இடைவிடாது நினைந்திருந்த முன்னை உணர்வு வந்து மூண்டமையாலே, கரையில்நின்ற பிள்ளையார் கண்ணீர் ததும்பக் கைகளால் கண்பிசைந்து உதடுகள் துடிக்கப் பொருமி உலகுய்ய அழத்தொடங்கினார் ; கண்கள் நீர்த்துளி பெருக, வேறெங்கும் பார்த்து அழாது தமது மேலைச்சார்பு உணர்ந்ததனாலோ ? அன்றிப் பிள்ளைமையினாலோ ? ஆளுடைய இறைவரது திருத் தோணிச் சிகரத்தைப் பார்த்து "அம்மே ! அப்பா !" என்று அழைத்தருளி அழுதருளினார். அந்நிலையிலே திருத்தோணியப்பர் அவரது முன்னைநிலைத் திருத்தொண்டு முன்னி அவர்க்கு அருள்புரியும் பொருட்டுத் தேவியாரும் தாமும் விடையின்மேல் எழுந்தருளி வந்து பொய்கையின் கரையில் எழுந்தருளினார். சிவபாதவிருதயர்க்கும் பகவதியம்மையாருக்கும் தாம் கொடுத்த பெருகுவரத்தை நினைந்தோ ? தமது திருவடியே பேணும் ஒரு நெறியில் வரும் சிவஞானம் கொடுப்பதற்காக அம்மையாரை நோக்கித் "திருமுலைப்பாலினைப் பொன் வள்ளத்துக் கறந்து சிவஞானங் குழைத்து ஊட்டுக" என்றருளினர் ; அவ்வாறே அம்மையாரும் முன் அணைந்து, கண்ணீர் துடைத்துக் கையிலேசிவஞானங்குழைத்த திருமுலைப்பால் நிறைந்த பொற்கிண்ணத்தைக்கொடுத்து, "அடிசில் உண்க !" என ஊட்டியருளிப் பிள்ளையாரை அழுகை தீர்த்தருளினர்.

எல்லாருக்கும் தந்தையும் தாயுமாகிய அவர் இவ்வாறு ஞானப்பாலூட்டி அருளியமையால் இப்பிள்ளையார் **ஆளுடைய பிள்ளையா ராயினார்** ; அதனோடு எல்லாத்

**ஆளுடைய பிள்ளையார் - சிவ ஞான சம்பந்தர்**

தேவர் முனிவர்களுக்கும் தெரியவரிய பொருளாகிய ஒப்பற்ற **சிவ ஞானசம்பந்தருமாயினார்** ; அபர பர ஞானங்களாகிய "உவமையிலாக் கலை ஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம்" என்ற இருவகை முழு ஞானங்களையும் தவ முதல்வராகிய பிள்ளையார் அந்நிலையில் உணர்ந்தார். இறைவரும் அடியார்களுமே மெய்ப்பொருளாவார் என்றும்,

இத் துணிவு பெறுத பரசமயத்தாரது கொள்கை அழிவுபெறத் தக்கன என்றும் சூழ்ந் தெழுவாராயினர். நீர்மூழ்கிய சிவபாதவிருதயரும் சிறுபோதிலே தமது நியமங்களை முடித்து ஏறிக் கரையில் வந்தனர்; பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார் தமைக் கண்டனர்; "யார் அளித்த பாலடிசில் நீ உண்டனை ?" என்று முனிந்து, "எச்சில் மயங்கிட உனக்கு இதனை இட்டாரைக் காட்டு !" என்று கையில் சிறியதொரு மாறு கொண்டோச்சினர் : சிறிய பெருந்தகையாராகிய பிள்ளையார் ஆனந்தக் கண்ணீர் பெருக, உச்சியின்மேல் எடுத்த திருக்கையின் ஒரு விரலாலே சுட்டி, நிறைந்த ஞான ஒளியோடும் விண்ணிலே விடையின்மேல் அம்மையாரோடும் கருணையின் னின்றுரை, எதிர்காட்டி, உள்ளே நிறைந்து வழிந்த உயர் ஞானத் திருமொழியினலே, "தோடுடைய செவியன்" என்று எடுத்த மெய்ம்மை மொழித் திருப்பதிகத்தினை ஓதியருளித், தோணியப்பரை அடையாளங்களுடன் கூறி, "எம்மை இது செய்த பிரான் இவனன்றே" என்று அருளிச்செயதனர். அப்பதிகத்தினுள்ளே உலகினர் பிழைசெய்திடினும் வந்தடைந் தால் இறைவர் கைக்கொண்டு அருள்புரிவர் என்று காட்ட இராவணனுக் கருளிய திறத்தினை வைத்தருளினர்; அகங்காரத்தாற் காணமுயலாது பணிந்து தொழுவார்க்கே சிவபெருமான் அருள்புரிவர் என்று காட்ட அயனு மரியும் துதித் துய்ந்தபடியினை விரித்தருளினர்; சமணர் புத்தர்களது வழிகள் பழியாக்கும் புன் னெறிகளேயாம் என்றும் போதித்தருளினர். இவ்வாறு திருப்பதிகத்தினை நிறை வாக்கித் திருக்கடைக்காப்பும் சாத்திப் பிள்ளையார் நின்றருளினர். இறைவரது அருள்கண்டு தேவர்கள் வானில் பூமழை பொழிந்தனர்; வான துந்துபிகள் முழங் கின; கணநாதர்கள் அர வோசை செய்தார்த்தனர். அடியார்களுக்குப் பிறவிக்கடல் நீந்தும் புணையருள் அங்கணரும் அம்மையுடனே விண் ஆறுகத் திருத்தோணியில் எழுந்தருளினர்.

"தோடுடைய செவியன்"

இறைவர் எழுந்தருளியது கண்ட பிள்ளையாரும் அவரைத் தொடர்ந்து நடந்து திருத்தோணிக்குச் சென்றருளினர். தாதையார் கைகுவித்து மகிழ்ந்து ஆடினர்; பதிகத் தமிழின் குறிப்பினை ஓர்ந்தனர்; இறைவரைத் தனி கண்டு தொடர்ந்த பிள்ளையாரைப் போலத் தாம் காணராயினும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளினலே "இது தோணிபுரேசரின் அருளே யாம்" என்று துணிந்து தாதையார் அவரைப் பின்றொடர்ந்து சென்று திருத்தோணியிற் சேர்ந்தனர். இவ்வற்புத நிகழ்ச்சி கண்டோரும் கேட்டோரும் மறையோரும் கோயில் வாயிலில் வந்து கூடினர்; பிள்ளையார் திருத் தோணியில் அம்மையப்பரைக் கண்டு "இங்கெனை யாளுடையா னுமையோடு மிருந்தான்" என்று பதிகம் பாடித் தொழுது அங்கு நின்றும் புறப்பட்டனர். கோபுர வாயிலிற் கூடியவர்களும் தொண்டர்களும் அவரது திருவடிகளைத் தலைமேற் கொண்டு வணங்கிப் பலபடியும் துதித்து மகிழ்ந்தனர். தாதையார் பிள்ளையாரைத் தோளின்மேற் றரித்து ஏனையோர் சூழ நகர்வலமாகத் திருமாளிகைக்கு வந்தனர். அப்பொழுது சங்கநாதம் துந்துபி முதலிய மங்கல இயங்கள் ஒலித்தன. அன்று திருமாளிகையில் எழுந்தருளியிருந்து இரவும் திருத் தோணியில் சென்று அம்மையப்பரை வணங்கி யருளி, மறுநாள் அவ்வாறே சென்று இறைஞ்சித் திருக்கோலக்காவினை வணங்கப் பிள்ளையார் சென்றருளுவாராயினர்.

தோணி

---

சீகாழி - தலவிசேடம் :—

காவிரி வடகரையில் 14 - வது பதி; தலச் சிறப்புப்பற்றி முன் I - பக் நூல் 257 - ம் பாட்டின் கீழும், IV - பக் உரை - ல் 1912 - ம் பாட்டின் கீழும் உரைத்தவை பார்க்க. பர சமய நெறிகளை நிராகரித்துத் திருநீற்று நெறியினை ஆக்கம் செய்ய இப்பதியில் **திருஞானசம்பந்த நாயனார்** அவதரித்து மூவாண்டளவில் பிரம தீர்த்தக் கரையில் அம்மையப்பரால் ஞானப் பாலூட்டப் பெற்று உலகம் விளங்க ஞானப்பாடல்கள் அருளிய வரலாறு புராணத்துட் காண்க. **திருநாவுக்கரசு நாயனார்** பிள்ளையாரது பெருமை கேட்டவுடனே எழுந்தருளி வந்து, அவரை வணங்கி அவரது நட்புப் பெற்ற பெருமையுடைய பதி; **திருவாரூர் நம்பிகள்,** பிள்ளையாரவதரித்த பதி என்று இதனை மிதிக்க அஞ்சி நகர்ப்புறத்தே நின்று பாட, இறைவர் அங்குக் காட்சிதரக் கண்ட பெருமைபெற்றது; **திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார்** வந்து, பிள்ளையாரை வணங்கி அவரது பதிகங்களை யாழிலிட்டு வாசித்து அவருடனே இருக்கும் பேறு பெற்ற தலம்; **கணநாத நாயனார்** இங்கு அவதரித்து அடியார்களைப் பல திறத்துத் திருத்தொண்டுகளிலும் பயிற்றித் தொண்டர்களை ஆக்கியும், திருஞானசம்பந்த நாயனாரது திருவடி மறவாதேத்தியும் பணி செய்து முத்தி பெற்றுக் கணநாயகராகும் பேறு பெற்ற பதி; இவரது சந்நிதி தனிக் கோயிலாகப் பிரம தீர்த்தத்தின் மேல்புறம் வெளிச்சுற்றில் உள்ளது; பிரமபுரேசர் என்ற இலிங்கமாகிய திருமேனியும், தோணியப்பர் என்ற குருவாகிய திருமேனியும், சட்டைநாதர் என்ற சங்கமமாகிய திருமேனியுமாக மூவகைத் திருமேனிகளுள்ளும் விளங்கச் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பெருமையுடைய பதி; இரணியனைச் சங்கரித் தெழுந்த நரசிம்மத்தைத் தடிந்து அதன் தோலைச் சட்டையாக அணிந்த **சட்டை நாதர். 'ஆபத் துத்தாரணர்'** என்ற திருப்பெயருடன் இங்கு மிக அழகிய திருமேனியுடன் வரப்பிரசாதியாய் வீற்றிருந்தருளுதல் இத்தலச் சிறப்பு; அவர் கையில் கொண்டிருப்பது அகங்கரித்தெழுந்த வாமனரைத் தடிந்து அவரது முதுகெலும்பைத் தண்டாக ஆக்கிய படை; பிரதி வெள்ளிக் கிழமையிலும் நள்ளிரவில் இவருக்கு மிக நியமமாகிய சிறப்பு வழிபாடு நடைபெறுகின்றது.

விரேதன், காலவர், சந்திரன், முருகவேள், ஆதிசேடன், கேது, இவர்களும், தேவராதியரும் பூசித்துப் பேறு பெற்ற பதி; சூரனுதியோர்க்குப் பயந்து இந்திரன் வந்து புகலடைந்து வழிபட்டமை கந்தபுராணத்துட் பேசப்படுகின்றது; சிவபூசைக்காக இந்திரனமைத்த நந்தவனம் பற்றியும், அதன்பொருட்டு விநாயகக் கடவுள் அகத்தியரது கமண்டலத்தினின்ற காவிரியை இங்கு வரத் தந்தருளியமை பற்றியும் ஆண்டுக் காண்க; இந்திர நந்தவனம் என்பது இன்றும் வழக்கில் உள்ளது;

பிரமபுரத்தில் சுவாமி - **பிரமபுரீசர்**; அம்மை - **திருநிலை நாயகி**; திருத்தோணியில் சுவாமி - **தோணியப்பர்** - அம்மை - **பெரிய நாயகி**; தோணிச் சிகரத்தில் தென் முகத்தின் முகமாய்ச், **சட்டை நாதர்**; தீர்த்தம் கோயிலினுள் வடகிழக்கில் **பிரமதீர்த்தம்**; இன்னும் - சூல தீர்த்தம், ஆனந்த தீர்த்தம், காணித் தீர்த்தம், இராகு தீர்த்தம், வயிணவ தீர்த்தம், ஆழி தீர்த்தம், சங்க தீர்த்தம், சுக்ர தீர்த்தம், பராசர கூவம், அகத்தியர் தீர்த்தம், கௌதம தீர்த்தம், கழுமல நதி, புறுநதி முதலிய பற்பல தீர்த்தங்களும் உண்டு; பதிகங்கள் 71. மூவர் பதிகங்களும், மணிவாசகர் அரு

ளிய திருவாசகமும் (பிடித்த பத்து), பதினொராந் திருமுறையில் பூட்டினத்தடிகள் அருளிய திருக்கழுமல மும்மணிக்கோவையும், ஆளுடைய பிள்ளையாரைப் பற்றி நம்பியாண்டார் நம்பிகளருளிய நூல்களும் உண்டு. (அணிமையில் இயற்றப்பட்ட தல புராணமும் பிறவும் உண்டு; அவை தல வரலாறுகள் பலவற்றை விளக்குவன; ஆளுடைய பிள்ளையார் வரலாற்றினளவில் அவற்றுள் திருமுறைகளுடன் மாறுபடும் பகுதிகள் திருமுறைகளுக்குட்பட்டுக் கொள்ளத்தக்கன.)

**குறிப்பு :** சீகாழிப் பன்னிரு பெயர்களுக்கும் பன்னிரண்டு தனிக் கோயில்கள் உண்டு. அவற்றுள், தோணிபுரம் என்றதற்குரிய திருத்தோணிக்கோயில் சிறந்து விளங்கவுள்ளது; ஏனையவற்றுள் ஒன்றிரண்டு தனிச் சிறு சந்நிதிகளாகப் பெரிய கோயில் வெளிச்சுற்றில் மேல்புறம் காணப்படுகின்றன. ஏனைய மூர்த்திகளையும், கோயில்களையும் கண்டு, புதுக்கி, அங்கங்கேனும் அல்லது ஒரு சேரத் திருக்கோயிலி லேனும் அமைப்பித்து வழிபாடு நிகழச் செய்வது சிறந்த சிவபுண்ணியமாகும். அவ்வாறே இராகு முதலிய கோள்களும், தேவர்களும் பூசித்த கோயில்களும் இலமா யுள்ளவற்றைப் புதுப்பித்து வழிபடவைத்தலும், பிற நினைவுக்குறிகளையும், பழஞ்சரிதம் காட்டும் கல்வெட்டுக்களையும் காப்பாற்றிப் பலரறிய வைத்தல் பெருஞ் சிவபுண்ணியச் செயல்களாம்.

---

## பின் சேர்க்கை - 3

**கற்பனை :—**

(1) சிவச்சார்பிலே நிலைபெற்ற சைவத்துறையில் வழிவழி தவறாது வந்த குடியாக நின்று உலகுபுரத்தல் சோழமரபின் சிறப்புரிமை; அவ்வாறு வழிவழி வருதல் அரசர் மரபுச் சிறப்பு: (1900)

(2) நாயன்மார்களது சரிதமயமாக நின்று அக்கண்கொண்டு பார்க்கும் பெரியோர்களுக்கு அவ்வந்நாடு நகரத் தாவர வளங்கள் அவ்வச்சரித சம்பந்தமான செயல்களுடையனவாகவே காட்சிப்படும். (1905 = 1907)

(3) அவ்வம் மரபிலும் பெற்றோர்களது செயல்களைப்பார்த்து அச்செயல்களே தமது விளையாட்டுச் செயல்களாகக் கொண்டு பழகுவது சிறார்களது இயல்பு. (1909)

(4) ஒரு நகரம் பல பெயர்களைக் கொண்டு விளங்குதல் அதன் பழஞ்சரிதப் பெருமையினைக் காட்டும். (1912)

(5) மரபிரண்டும் சைவநெறி வந்த கேண்மையுடன் சிவனடி மறவாத சிந்தையோடு திருநீற்றன்பு பாலிக்கும் தன்மையுடன் மனைவாழ்க்கை நடாத்துதல் அந்தணர்களுள் சிறப்பு. (1915)

(6) புறச்சமயப் பொய்கள் மிகுத்துத் திருநீற்றின் விளக்கம் போற்றப்பெறு தொழியக்கண்டு இடருழந்து வருந்துதல் பெரியோர் செயல். (1916)

(7) அவ்வாறு வருந்தி அந்நிலையினைத் தவிர்க்குமகவே தமது மனைவாழ்க்கைக்குரிய மகவாகப்பெற வரங்கிடந்து இறைவனை வழிபட்டுத் தவம் புரிதல் மிகப்பெருஞ் செயல். (1917)

(8) நன்மகப்பேறு உளதாதல் சிவனருளால் வருவது. (1918)

(9) ஒரு பதியில் ஒரு குடியில் ஒரு சிறந்த மகப்பேறுளதாயின் அது அப்பதி முழுதும் களிப்புறும் நற்செய்தியாகும். (1926)

(10) மகவுபிறந்து பத்து நாட்களிலும் மறைநூல் விதிச்சடங்குகள் செய்து சாதகருமம், நாமகரணம், பாலூட்டல், காப்பணிதல் முதலியவை செய்தல் அந்தணர் மரபு. (1933—1941)

(11) திருநீற்றுக் காப்பே முதற்காப்பு. (1941) அதனினும் சிறந்த காப்பு வேறில்லை.

(12) செங்கீரை - தாலம் - சப்பாணி - வருகை முதலியானவை பிள்ளைப் பருவத்துக்குரிய கொண்டாட்ட வகைகள். (1942—1948)

(13) முன்னைத் தவமுதிர்ச்சியுடைய குழவிகள் இப்பிறவியில் சிலசமயங்களில் முன்னை நினைவு கொள்ளுதலும் இயல்பு. (1953)

(14) தமது குழவிகளுக்குத் தமது காவலினும் இறைவரது காவல் பெரிது என்றெண்ணிக் கடனாற்றுதல் பெரியோர் தன்மை. (1918)

(15) எங்கும் கொள்ளத்தக்கதென எண்ணவரும் பால்தானும், இடம், கொள் கலம் முதலியவற்றின் தூய்மை நோக்கிக் கொள்ளற்பாலது: அப்படி நோக்கிக் கொள்வது குழவிகளின் உடல்நலக் குறைவிற் கேதுவாகும். (1970)

(16) முன்னைத் தவமுதிர்ச்சியுடைய குழவிகளின் அழுகை முதலிய செயல்கள் கீழைச் சார்பாகிய உலகியல் நிகழ்ச்சிபோலத் தோற்றினும், சிலபோது தமது மேலைச் சார்பினால் நிகழும்; அது பின்னை நிகழும் அருள்வெளிப் பாட்டினால் அறியத்தக்கது. (1961—1969)

(17) அபர பர ஞானங்களுக்கு மேலாகிய முற்றுமுணரும் சிவஞானம் தவ முதிர்ந்த வழிவரும் இறைவரது திருவருளினாலன்றி அடைதற்கரிது. (1967 1968)

---

பின் சேர்க்கை - 4

## பெயர் விளக்கம்

### எண்கள் பாட்டு எண்கள்

**அருக்கன்** - 1920 ஞாயிறு; கோள்கள் ஒன்பதனுளொன்று.

**ஆதிரை** - 1920 திருவாதிரைநாள்; பிள்ளையார் திருவவதாரஞ் செய்த நாள்: சிவனுக் குகந்த நாள். பிள்ளையாரமுது பாலுண்டு ஞானம்பெற்ற நாளுமாம்.

**ஆளுடைய பிள்ளையார்** - திருஞான சம்பந்தர் 1899; சிவப் பெருக்கும் பிள்ளையார் 1924; புகலிப் பிள்ளையார் - 1943; பிள்ளையார் 1959; சிவஞான சம்பந்தர் 1967; சம்பந்தர் - 1968; இருக்குமொழிப் பிள்ளையார் - 1978;

சேயபொருட் டிருமறையுந் தீந்தமிழுஞ் சிறக்கவரு நாயகன் 1942; சடைமுடியார் ஞானமளித்திடவுரியார் 1945; எங்கள் பிரான் 1951; தெய்வஞானக் கன்று 1892; பைந்தொடியாள் திருமுலையின் பாலரு மதுரமொழிப் பவளவாயர் 1996; சேம வுதயப் பரிதியிற் றிகழ்பிரான் 1939; ஏழிசையும் பலகலையும் எவ்வுலகுந் தனித்தனியே, வாழ வருமவர் 1946; பண்டு திருவடிமறவாப் பான்மையோர் - தொண்டினிலைதர வருவார் 1953; புண்ணியக்கன் றனையவர் - 1960; தவ முதல்வர்

1968 ; பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார் 1970 ; சிறிய பெருந்தகையார் 1971 ; மறைச்சிறு போதக மன்னர் 1982 ; ஞானத்தமுதுண்டார் 1885.

உமை அம்மையார் - ஆளுடையாள் 1919 ; பெருமலை பயந்த கொடி 1940 ; மங்கை 1951 ; பொன்மலைவல்லி - பைந்தொடியாள் 1996 ; உடையவள் 1973 ; மலைக்கொடி 1964 ; சீரணங்கு 1965 ; உமையம்மை 1966 ; உமை 1986 ; ஏழிசை மொழியாள் 1989 ; சுந்தரப்பொற் றோணிமிசை யிருந்தபிரா னுடனணைந்த துணைவி யாகும் பைந்தொடியாள்.

கவுணியர் - ஆளுடைய பிள்ளையார் அவதரித்த குடிப் பெயர். கவுணியர் கோத்திரம் 1913 ; கவுணியர் குலம் 1926.

கழுமலம் 1900 ; சீகாழியின் 12 பெயர்களுள் 12-வது பெயர்.

சாமம் 1907 ; நால் வேதத்துளொன்று. வேதப் பொதுமையுமாம்.

சிவபாத விருதயர் 1913 ; ஆளுடைய பிள்ளையாரது தந்தையார் 1960, 1992.

சிவபெருமான் - சென்னிவளர் மதியணிந்த சிலம்பணி சேவடியார் 1900 ; புகலித் திருத்தோணி வீற்றிருந்தார் 1918 ; திருத்தோணி யமர்ந்தபிரான் 1923 ; நம்பர் 1936 ; விண்ணோர் நாயகன் 1938 ; பரமர் 1940, 1953, 1973 ; ஆறலவு செய்ய சடை ஐயர் 1941 ; பெருமழுவர் 1943 ; கங்கைநதி தவழுஞ் சடைமுடியார் 1945; மங்கையோ டுடனுகி வளர்தோணி வீற்றிருந்த திங்கள்சேர் சடையார் 1951 ; சேவாண்ட கொடியவர் 1952 ; தம் பெருமான் 1954 ; தேவியொடுந் திருத்தோணி வள்ளலாரிருந்தார் 1959, 1997 ; செம்மேனி வெண்ணீற்றர் 1961 ; அருட்கருணை யெழுகின்ற திருவுள்ளத் திறையவர் 1964 ; சிவபெருமான் 1965, 1975 ; அங்கணர் 1966 ; யாவர்க்குந் தந்தை தாயெனுமவர் 1967 ; சிவன் 1968 ; ஈசன் 1969 ; ஆளுடையார் 1969; கண்ணுதலான் - அண்ணல் 1975, 1982 ; வேதகாரணர் - வெண்பிறைசேர் செய்யசடை நாதர் 1977 ; அருட்கருணைத் திருவாளன் 1978 ; அங்கணர் 1981 ; புண்ணியர் 1982 ; தாணு 1984; துப்புறழ் வேணியர் 1985 ; பிரான் 1988 ; வானோர் தனிநாதன் 1989 ; இறைவன் 1990 ; எண்ணிய பொருளாய் நின்றவர் 1991 ; சுந்தரப்பொற் றோணிமிசை யிருந்தபிரான் 1996.

சீகாழி - 12 பெயர்பிரமபுரம், சண்பை முதலியன 1912, 1924, 1931, 1995 ; காழி 1928 ;

திருத்தோணி 1923 ; சீகாழியில் தோணியப்பர் பெரியநாயகியாருடன் எழுந்தருளியிருக்கும் தோணிவடிமாயமைந்த கோயில். இது விமானம் சிகரத்துடன் கூடியது ; இங்குத் தோணியப்பரை வழிபட்டுச் சிவபாத விருதயர், பிள்ளையாரை மகவாகப் பெற்றனர். இங்கு இறைவர் குருவடிவாயெழுந்தருளியிருப்பர் என்பது மரபு 1956 ; திருத்தோணிச் சிகரம் 1961, 1962 ; பொற்றோணி 1986 ;

திருமகள் - 1952 இலக்குமி.

பகவதியார் - 1914 ஆளுடைய பிள்ளையாரது தாயார்.

பெரிய நாச்சியார் - 1918 பெரிய நாயகியம்மையார். திருத்தோணியில் தோணியப்பருடன் எழுந்தருளியுள்ளவர்.

பொன்னி - 1900 காவிரி.

---

# மேற்கோள் நூலகராதி

## (1—100 பாட்டுக்கள்)

(எண்கள் பாட்டு வரிசை எண் குறிப்பன)


அற்புதத் திருவந்தாதி 1969
ஆகமங்கள்
பவுட்கராகமம் 1968
வாதுளம் 1972
ஆளுடையபிள்ளையார்திருந்தொகை 1981
ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை வகை. பக். ரு ; 1899, 1981
ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி வகை. பக். ரு
உண்மை விளக்கம் 1961
உபநிடதம் 1941
கந்தபுராணம் 1915, 1939, 1964
கந்தர்கலி வெண்பா 1967
காஞ்சிப்புராணம் 1960
சங்கற்ப நிராகரணம் 1939
சிலப்பதிகாரம் 1939, 1959
சிவஞான சித்தியார் 1899, 1966, 1967, 1968
சிவஞானபோதம் 1945, 1976
சிவஞானமாபாடியம் 1967
சிவப்பிரகாசம் 1968
சீவக சிந்தாமணி 1982
சுந்தரமூர்த்தி நாயனர் தேவாரம் 1922, 1942, 1963, 1972, 1975, 1987
சேக்கிழார் பிள்ளைத்தமிழ் 1937
தக்கயாகப்பரணி 1975, 1982, 1990
தாயுமானவர் பாடல் 1966
திருக்குறள் 1917, 1940, 1947, 1957, 1959, 1970
திருக்கோவையார் 1911, 1960
திருஞானசம்பந்தர் தேவாரம் 1903, 1911, 1912, 1913, 1921, 1922, 1923, 1924, 1943, 1950, 1953, 1959, 1963, 1964, 1967, 1969, 1970, 1972, 1976, 1978, 1981, 1988.
திருத்தணிகைப் புராணம் 1968
திருத்தொண்டர் புராண வரலாறு 1920
திருநாவுக்கரசு நாயனர் தேவாரம் 1899, 1920, 1945, 1953, 1958, 1961, 1976, 1989.
திருப்புகழ் 1899
திருமந்திரம் 1899, 1923
திருமுருகாற்றுப்படை 1915, 1937, 1939, 1968
திருவாசகம் 1899, 1953, 1957, 1958, 1972, 1975, 1981, 1989
திருவிசைப்பா 1960
திருவிளையாடற் புராணம் 1911, 1915, 1971
தொல்காப்பியம் 1920, 1933, 1937, 1989
நாலடியார் 1900
பட்டினத்தார் பாடல் 1961
புறம் 1905, 1958
மலைபடுகடாம் 1958
முத்தொள்ளாயிரம் 1920

பின் சேர்க்கை - 6

# அருஞ்சொற்றொடரகராதி

## (1—100 பாட்டுக்கள்)

(எண்கள் பாட்டு வரிசை எண் குறிப்பன)

அகமருடம் 1956
அடையாளங்கள் 1973
அந்தர துந்துபி - தேவவாத்தியம் 1995
அந்திமாலை 1906
அருட்கருணைத் திருவாளன் 1978
அறுவை யுத்தரியம் - மேலாடை 1993
ஆகுதி வேட்கும் 1905
இருக்கு மொழி 1978
இருதாளின்புணை 1981
உச்சம் - கிரகநிலையின் உயர்வு (சோதிடம்) 1920
உரோம முகிழ்வு - மயிர்க்கூச்சு 1985
உறை நீர்த்துளி 1981
ஐயவி(ப்புகை) 1937
ஓமதூமத் திரவு வேள்விப்புகை யினால் உளதாகும் இருள் 1904
ஓரை-காலக் கூறுபாடு - 2½ நாழிகை கொண்டது 1920
கத்தவழ 1945
கருவிலங்கு 1976
கலைஞானம் 1968
காப்பு 1941
கிடை - அந்தணச்சிறுவர் மறைபயி லிடம் பள்ளி 1901
குதுகலிப்ப 1960
கோள் - (நவக்கிரகம்) 1920
சப்பாணிக்கொட்டினார் - (பிள்ளைப் பருவம்) 1944
சாதகமுறைப்பலசடங்கு 1933
சாமம்பாடும் 1907
சிவஞான சம்பந்தர் 1966
சிவஞானம் 1968
சிறுமணித்தேர் 1950
சூதநிகழ் மங்கலவினை 1933
செங்கீரையாடினார்-பிள்ளைப்பருவம் 1942
செங்கின்று 1948
செய்தவத்தின் அங்குரம் 1951
செவ்வொளிய மதியம் 1906
தருபித்து 1958
தலைக்கீடு 1959
தலைப்பாடு 1986
தழல்வேதி - யாகத்திண்ணை 1908
தளர்நடையிட்டருளினார் 1948
தளர்நடையி னசைவு 1949
தனிவெள்ளம் பலவிரிக்குங் கருப்பம் 1956
தாணு - இறைவர் - நிறையானவர் 1984
தாமரை மிசைத்தனி முதற்குழவி 1939
திருக்கடைக்காப்புச் சாத்தி 1978
துப்பு - பவளம் 1985
துப்புரவில்லார் 1969
தெய்வஞானக்கன்று - மாடங்களின் 1992
தெய்வமணம் 1937
நாசி - முன்புறம் நீண்டவாயில் 1910
நாமகரணம் (சடங்கு) 1939
நாவாண்ட பலகலை 1951
நிம்பமுதலானகடி நீடுவினை 1936
நிரந்தபோது 1992
நிலத்தேவர் - பூசுரர் - மறையவர் 1994
நெய்யணி விழா 1933
பதணம் - மதில்மேடை 1902
பியல் - தோள் 1992
பூதபரம்பரை - உயிர்களின்வழிவழி 1899
பூதிசாதனம் 1916
போதமூலை 1998
மணற்சிற்றில் 1950
மலையமாருதம் - தென்றல் 1928
மரைச்சிறுபோதகம் 1982
மறைமுதன்மெய் 1973
மாறு - சிறுகோல் 1971, 1983
மிகுசைவத்துறை 1899
முன்னிலைமைத் திருத்தொண்டு 1961
முன்னுணர்வு மூள 1989
முறைபுரிந்த 1959
மேலைச்சார்பு 1961
மேற்செலவுகைத்து 1948
வடமீன் - அருந்ததி 1907
விண்ணிறைந்த பெருகொளி 1972
விதிதவறுபடும் 1945
வெண்முளைய பாலிகை 1935
வெருக்கொண்டாற்போல் 1953
வேள்வி புரிசடங்கு 1919
வெளியே தாங்கரிய மெய்ஞ்ஞானம் 1998

# திருஞானசம்பந்த நாயனார் புராணம்

## பாட்டு முதற்குறிப்பகராதி


| | பாட்டு வரிசை | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| **அ** | | | |
| அங்கண்விழ | 1931 | ௩௩ | ௪௩ |
| அணைவுறவந்தெழும் | 1981 | ௮௩ | ௧௦௧ |
| அண்ணலணைந்தமை | 1982 | ௮௪ | ௧௦௩ |
| அந்நிலையில் | 1962 | ௬௪ | ௬௯ |
| அப்பதிதான் | 1901 | ௩ | ௯ |
| அப்பதியின் | 1913 | ௧௫ | ௨௪ |
| அப்பொழுதுபொற் | 1925 | ௨௭ | ௩௯ |
| அப்பொழுதங்க | 1985 | ௮௭ | ௧௦௫ |
| அரியயனே | 1902 | ௪ | ௧௦ |
| அருக்கன்முதல் | 1920 | ௨௨ | ௩௧ |
| அவம் பெருக்கும் | 1924 | ௨௬ | ௩௨ |
| அழுகின்ற | 1964 | ௬௬ | ௭௨ |
| **ஆ** | | | |
| ஆயபல | 1938 | ௪௦ | ௪௪ |
| ஆரணமும் | 1965 | ௬௭ | ௭௨ |
| ஆளுடையாள் | 1919 | ௨௧ | ௩௦ |
| ஆறலவு | 1941 | ௪௩ | ௫௦ |
| **இ** | | | |
| இரும்புவனம் | 1932 | ௩௪ | ௪௪ |
| இன்னிசை | 1987 | ௮௯ | ௧௦௮ |
| **ஈ** | | | |
| ஈறில்பெருந் | 1983 | ௮௫ | ௧௦௪ |
| **உ** | | | |
| உளங்கொண்மறை | 1904 | ௬ | ௧௨ |
| **எ** | | | |
| எச்சின்மயங்கிட | 1971 | ௭௩ | ௮௪ |
| எண்ணரிய | 1966 | ௬௮ | ௭௨ |
| எப்பொருளும் | 1969 | ௭௧ | ௮௨ |
| எல்லையிலா | 1973 | ௭௫ | ௮௪ |
| என்றினையபல | 1992 | ௯௪ | ௧௧௩ |
| **ஐ** | | | |
| ஐயவி | 1937 | ௩௯ | ௪௪ |
| **க** | | | |
| கடையுகத்தில் | 1956 | ௫௮ | ௮௪ |
| கண்மலர்கணீர் | 1960 | ௬௨ | ௬௬ |
| **கா** | | | |
| காதலுடன் | 1998 | ௧௦௦ | |
| காதல்புரி | 1933 | ௩௫ | ௪௪ |
| காமர் திருப் | 1907 | ௯ | ௧௬ |
| காழியர்தவமே | 1989 | ௯௧ | ௧௦௬ |
| **சி** | | | |
| சிவனடியே | 1968 | ௭௦ | ௭௮ |
| சிவனருள் | 1926 | ௨௮ | ௩௯ |
| சிறுமணித்தேர் | 1950 | ௫௨ | ௫௮ |
| **சீ** | | | |
| சீர்மறையோர் | 1970 | ௭௨ | ௮௪ |
| **சு** | | | |
| சுண்ணமொடு | 1935 | ௩௭ | ௪௪ |
| **சூ** | | | |
| சூழவரும் | 1940 | ௪௨ | ௫௫ |
| **செ** | | | |
| செம்பொன் முதல் | 1936 | ௩௮ | ௪௪ |
| செம்மைபெற | 1974 | ௭௬ | ௮௪ |
| சென்னிவளர் | 1900 | ௨ | ௮ |
| **த** | | | |
| தந்திருமாளிகை | 1996 | ௯௮ | ௧௧௪ |
| **தா** | | | |
| தாணுவினை | 1984 | ௮௬ | ௧௦௪ |
| தாதியர்தம் | 1949 | ௫௧ | ௫௮ |
| தாயர் திரு | 1942 | ௪௪ | ௫௧ |
| தாளுடைய | 1923 | ௨௫ | ௩௧ |
| **தி** | | | |
| திசையனைத்தின் | 1922 | ௨௪ | ௩௧ |
| திருநகையால் | 1947 | ௪௯ | ௫௫ |

| | பாட்டு வரிசை | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| திருப்பதிகம் | 1978 | ௮௦ | ௯௪ |
| திருமறைநூல் | 1963 | ௬௫ | ௭௧ |
| **தூ** | | | |
| தூமணிமாளிகை | 1997 | ௯௯ | ௧௧௭ |
| **தோ** | | | |
| தொண்டர் மனம் | 1921 | ௨௩ | ௩௧ |
| தொழுவார்க்கே | 1976 | ௭௮ | ௯௧ |
| **நா** | | | |
| நாமகரணத்து | 1939 | ௪௧ | ௪௮ |
| நாமறியோம் | 1944 | ௪௬ | ௫௩ |
| நாவாண்ட | 1952 | ௫௪ | ௫௯ |
| **நீ** | | | |
| நீடுதிருக் | 1994 | ௯௬ | ௧௧௩ |
| நீராடி | 1958 | ௬௦ | ௬௬ |
| **ப** | | | |
| பண்டு திருவடி | 1953 | ௫௫ | ௬௧ |
| பயன்றருவ | 1930 | ௩௨ | ௪௩ |
| பரந்தவிளை | 1905 | ௭ | ௧௩ |
| **பி** | | | |
| பிரமபுரம் | 1912 | ௧௪ | ௨௨ |
| பிள்ளையார் | 1957 | ௫௯ | ௬௫ |
| பின்சென்ற | 1955 | ௫௭ | ௬௩ |
| **பு** | | | |
| புண்ணியமுதலே | 1991 | ௯௩ | ௧௦௯ |
| புனைவார்பொன் | 1908 | ௪௦ | ௧௭ |
| **பூ** | | | |
| பூதகண | 1929 | ௩௧ | ௪௨ |
| பூமுகை | 1927 | ௨௯ | ௪௦ |
| **பெ** | | | |
| பெருத்தெழும் | 1918 | ௨௦ | ௨௯ |
| பெருமலை | 1940 | ௪௨ | ௪௯ |
| **பே** | | | |
| பேணியவர் | 1988 | ௯௦ | ௧௦௯ |
| **பொ** | | | |
| பொங்கொளி | 1986 | ௮௮ | ௧௦௬ |

| | பாட்டு வரிசை | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| **ம** | | | |
| மங்கல தூரியம் | 1995 | ௯௭ | ௧௧௪ |
| மங்கையோடு | 1951 | ௫௩ | ௫௮ |
| மடையெங்கும் | 1911 | ௧௩ | ௨௦ |
| மண்ணுலகில் | 1975 | ௭௭ | ௯௦ |
| மரபிரண்டும் | 1915 | ௧௭ | ௨௬ |
| மறைகள் கிளர்ந்து | 1980 | ௮௨ | ௧௦௦ |
| மறைமுனிவர் | 1959 | ௬௧ | ௬௭ |
| மறைவளர் திரு | 1990 | ௯௨ | ௧௦௯ |
| மற்றவர் தம் | 1914 | ௧௬ | ௨௬ |
| மனையறத்தின் | 1917 | ௧௯ | ௨௮ |
| **மா** | | | |
| மாமறை | 1934 | ௩௬ | ௪௪ |
| மாமறையோர் | 1993 | ௯௫ | ௧௧௪ |
| **மெ** | | | |
| மெய்ம்மேற்கண் | 1961 | ௬௩ | ௬௩ |
| **மே** | | | |
| மேதகைய | 1954 | ௫௬ | ௬௬ |
| மேதினிமேல் | 1916 | ௧௮ | ௨௩ |
| மேலையிமை | 1928 | ௩௦ | ௪௧ |
| **யா** | | | |
| யாவருக்கும் | 1967 | ௬௯ | ௭௬ |
| **வ** | | | |
| வந்தெழும் | 1979 | ௮௧ | ௯௫ |
| வருமுறைமை | 1943 | ௪௫ | ௫௨ |
| வளம்பயிலும் | 1903 | ௫ | ௧௧ |
| வளர் பருவம் | 1948 | ௫௦ | ௫௭ |
| **வி** | | | |
| விண்ணிறைந்த | 1972 | ௭௪ | ௮௪ |
| விடுசுடர் நீண் | 1910 | ௧௨ | ௧௯ |
| விதிதவறு | 1945 | ௪௭ | ௫௪ |
| **வே** | | | |
| வேதகாரணர் | 1977 | ௭௯ | ௯௨ |
| வேதநெறி | 1899 | ௧ | ௩ |
| வேலையழல் | 1906 | ௮ | ௧௫ |
| வேள்விபுரி | 1909 | ௧௧ | ௧௮ |

பின்சேர்க்கை - 8

# திருத்தங்கள் சில

## பாட்டு 100 வரை—IV. பக். க-கஉ௦

| பக். | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| க௦ | 4 | சோலைகள் | சோலைகளும் |
| கக | 6 | திரை எறிந்த | எறிந்த திரை |
| ,, | 15-16 | பாம்பு சுற்றியதனையும் | சுற்றிய பாம்பினையும் |
| ,, | 40 | கடலுக்கும்...பரிதிக்குமாக | கடலும்...பரிதியுமாக |
| க௪ | 12 | முற்றுருவகம் | ஏகதேச வுருவகம் |
| ,, | 42-43 | ஆல் - மூன்றனுருபு | (நீக்குக) |
| ,, | ,, | ஒழுகுதலால்...வந்தது | (ஷை) |
| க௬ | 23 | இசைபோல | இசையால் |
| ,, | 42 | எழுதிவது | எழுவது |
| க௭ | 8 | போன்ற ஒலிபெற | யாகிய ஒலியால் |
| ,, | ,, | உவம உருபு | கருவிப் பொருளில் வந்த மூன்றனுருபு |
| ,, | 13 | அணியும் | அணிந்த |
| க௮ | 21 | யுள்ளன | யிருக்கப் பெற்றுள்ளன |
| உ௦ | 11 | அவர்தற் | அலர்கற் |
| ,, | 12 | அக்கொடிகளின் சூழல் விளங்கிற்று | விளங்கின |
| உக | 20 | கயலின் கூட்டம் என்பாருமுண்டு | வெள்ளம் - கூட்டம் |
| ௫௫ | 22 | 3¾ | 2½ [வாறே |
| ௬௫ | 17 | முற்றெச்சம். | முற்றெச்சம்; ஏனையவு மிவ் |
| ௮உ | 2 | 1969 | 1869 |
| ௯உ | 22-23 | எய்யாமையே அறியாமையே (தொல்) | (நீக்குக) |
| ௯௫ | 24 | எண்ணின்கண் | சிறப்பின்கண் |
| க௦௩ | 38-39 | போதகம்......குறிப்பு | (நீக்குக) |
| ககக | 8-10 | இனிக்......என்றலுமாம் | (நீக்குக) |
| கக௩ | 16 | முடிக்கண் | முடிகண் |
| கக௪ | 21 | முடியிற் | முடிகளிற் |
| ,, | ,, | தாம்சென்று | (நீக்குக) |
| ,, | 22 | அணேந்து - தாமே முன் சென்று அணேந்து | (நீக்குக) |
| ,, | ,, | தாதையார் | சென்றணேந்த தாதையார் |
| ,, | ,, | தந்தையா | அருகினிற் சென்றணேந்த தந்தையா |
| ,, | 37 | வாழ்த்தியும் | வாழ்த்தி |

| | | | |
|---|---|---|---|
| ககசு | 2 | செல்லுதல் | செல்லுதற்குச் |
| ,, | ,, | சிவமும் ஆனந்தமும் | சிவானந்தமாகிய ஆறு |
| ,, | 2 | செல்வதற்கும் | செல்வதும் |
| ,, | 3 | கீழிறங்குதல் | கீழிறங்குதற்கு |
| ,, | 4 | இறங்குதலுக்கும், ஆர்த்தல் | இறங்குதலும், ஆர்த்தலுக்கு |
| ,, | 5 | இரைச்சலுக்கும் | இரைச்சலும் |
| ,, | 32 | செல்லுதல் உவமம் | செல்லுதல் |
| ,, | ,, | மின்னுவதெல்லாம் | மின்னுக்கெல்லாம் |
| ,, | 36 | கூறப்பட்டது | கூறப்பட்டன. |
| ககஎ | 35 | பெரிய | அச்சம் விளைக்கின்ற |
| ககஅ | 17 | பெரிய, அகரவீற்று | அச்சம்; ஈறுதிரிந்த |
| கஉ0 | 8 | அவ்வூரில் | அவ்வூரின் |
| | 36 | எல்லாமும் | எல்லாம் |

## பிழை திருத்தம்

முன் சேர்க்கை - 1.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| ii | 25 | சங்கம் | சங்கமம் |
| iii | 16 | கைகூடும்படித் | கைகூடும்படி |

முன் சேர்க்கை - 3.

| | | | |
|---|---|---|---|
| vi | 12 | தாதையோடு | தாதையொடு |
| ,, | 16 | திருளை | திரளை |
| ,, | 19 | தோடுடைய | தோஒடுடைய |
| ,, | 20 | பீடுடைய | பீஇடுடைய |

பின் சேர்க்கை - 3.

| | | | |
|---|---|---|---|
| கஉரு | 9 | முதலியானவை | முதலாயினவை |
| ,, | 16 | நோக்கிக் | நோக்காது |

பெயர் விளக்கம்

| | | | |
|---|---|---|---|
| ,, | 30 | சிவப் | சிவம் |

Printed at the Sadhu Press, Royapettah, Madras Paper Issue Card No. M. S. 115
for C. K. Subrahmanya Mudaliar, 41, Broadway, Madras
Paper Issue Card No. M. S. 272—Copies 2000—8-3-47.